# சிவனொளி

## ஆன்மீக சிற்றிதழ்



2009
தொகுப்பு
12
இதழ்கள்

ஆசிரியர்
திருமலை சுந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஒளி

## ஆன்மீகச் சிற்றிதழ்கள்

12

ஆசிரியர்

- திருமலை சுந்தா -

வெளியீடு - 13

அம்மா பதிப்பகம்

172, பிரதான வீதி, திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின்...



சிவனொளி சிற்றிதழ்கள் பன்னிரண்டு 2009ம் ஆண்டில் வெளிவந்துள்ளது.

பன்னிரண்டு பக்கங்கள் விலை பத்து ரூபாய், பிரதிகள் இருநூற்றிஐம்பது.

என்னுடைய ஆக்கங்களும் , எழுத்தாள நண்பர்களின் ஆக்கங்களும் நூல்களில் இருந்து பெறப்பட்ட ஆக்கங்களும் சிவனொளி பக்கங்களை அலங்கரித்துள்ளன.

கூடிய பக்கங்கள்-கூடியவிலை விற்பனை பலம் - ஆக்கங்களின் வரவு இவற்றினை எல்லாம் கருத்தில் கொண்ட தனிமனித முயற்சியாக சிவனொளி வெளிவந்திருக்கின்றது.

இப்பொழுது சிவனொளி 2010ல் காலடி வைத்துள்ளது தொடர்ந்தும் வெளிவர வாசகர்கள் இருப்பது பலமாக மகிழ்ச்சியாக இருக்கின்றது.

எழுத்தாள நண்பர்களின் படைப்புகளை எதிர்பார்க்கின்றேன்.

வாசக பெரு மக்களின் முழுமையான ஆதரவையும் வேண்டி நிற்கின்றேன்.

2010ல் சிவனொளியின் மூலம் ஆன்மீகம் பேசுவோமே!

---


- **சிற்றிதழ்கள் : (12)** • **திருமலை சுந்தா**
- 31.12.2009 • **பிரதிகள் : 100**
- **பதிப்பு : சி. சுந்தரலிங்கம், அம்மா பதிப்பகம்**
  172, **பிரதான வீதி, திருகோணமலை.**
- **அச்சு : அஸ்ரா பிறிண்டஸ், திருகோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனொளி
# ௨00௭ - சிற்றிதழ்கள்

1


2


3


10


11


4


9


12


5


8


7


6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனொளி

## ஆன்மீக சிற்றிதழ்

1



ஆசிரியர்

திருமலை சுந்தா

10/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையை அதுவரும் விதத்தில் ஏற்று பிறகு அதை உன் முயற்சியின் மூலம் விரும்பும் விதத்தில் மாற்று

- சாது -

அட்டைப்படம் : சிசு



அன்பு செய்
ஆனந்தித்திரு

# சிவனொளி

172, பிரதான வீதி, திருக்கோணமலை

சிற்றிதழ் – 1

2009 – பங்குனி

இதழில்....

ஆசிரியரின்......... 2

ஸ்ரீநந்திகேஸ்வர அஷ்டோத்திர சத நாமாவளி......3

கடவுளை காண முடியுமா...9

யோகம் என்றால் என்ன....10

[illegible] படைப்பாளிகளே பொறுப்பு

## ஆசிரியரின்....

"ஆன்மீக இதழ்" வெளியிட வேண்டும் என்பது எம்மை வாழ்த்துவோரின் ஆசை "சிவனொளி" - மானுடம் சிற்றிதழின் சகோதர இதழாக வெளிவருகின்றது.

எம்மால் முடிந்த ஆன்மீக சிந்தனைகளை ஊட்டுவோம். தருவோம்.

மானுடத்திற்கு எந்த அளவு ஆதரவு தந்தீர்களோ அதேயளவு "சிவனொளி" சிற்றிதழுக்கும் தாருங்கள்.

அனைத்து காரியங்களுக்கும் முழு முதலான ஏகன் எம்மோடு இருக்கட்டுமே...

உங்களின் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

நீங்களும் எழுதலாம்.

அச்சு: அஸ்ரா பிரிண்டர்ஸ்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீநந்திகேஸ்வர அஷ்டோத்திர சத நாமாவளி

1. **ஓம் நந்திகேசாய நம:-** நந்திகேஸ்வருக்கு வணக்கம்
2. **ஓம் ப்ரஹ்ம ரூபிணே நம:** பரப்பிரம்ம சொரூபமான நந்திகேஸ்வருக்கு வணக்கம்.
3. **ஓம் சிவத்யான பாராயணாய நம:-** சிவனை தியானிப்பதையே லட்சியமாகக் கொண்டவருக்கு வணக்கம்.
4. **ஓம் தீர்கஷ்ஷிணங்கேசாய நம:** நீண்ட புருவரோமத்தை உடையவருக்கு வணக்கம்.
5. **ஓம் வேதபாதாய நம:** வேதத்தின் பாதமாக இருப்பவருக்கு வணக்கம
6. **ஓம் விரூபாய நம:** உருவமற்றவராக இருப்பவருக்கு வணக்கம்
7. **ஓம் வ்ருஷபாய நம:** எல்லா தேவதைகளிலும் மிக சிறந்தவரானவருக்கு வணக்கம் (அல்லது) காளையின் உருவமாக உள்ளவருக்கு வணக்கம்.
8. **ஓம் துங்க சைலாய நம:** உயர்ந்த மலை போன்றவருக்கு வணக்கம்
9. **ஓம் தேவதேவாய நம:** எல்லா தேவர்களுக்கும் தேவராக இருப்பவருக்கு வணக்கம்.
10. **ஓம் சிவப்ரியாய நம:** சிவபெருமானுக்கு மிகவும் பிரியமானவருக்கு வணக்கம்
11. **ஓம் விராஜமானாய நம:** ஒளி நிறைந்தவருக்கு வணக்கம்
12. **ஓம் நடநாய நம:** நடனமாடுபவருக்கு வணக்கம்
13. **ஓம் அக்னிரூபாய நம:-** அக்னி உருவமானவருக்கு வணக்கம்
14. **ஓம் தனப்பிரியாய நம:** ஞானமாகிற செல்வத்தில் பிரியமுள்ளவருக்கு வணக்கம்.
15. **ஓம் ஸித சாமர தாரிணே நம:** வெண்மையான சாமரத்தை அணிந்திருப்பவருக்கு வணக்கம்.
16. **ஓம் வேதாங்காய நம:** வேதத்தின் அங்கமாய் இருப்பவருக்கு வணக்கம்
17. **ஓம் கநக ப்ரியாய நம:** தங்க ஆபரணங்களை அணிவதில் பிரியமுள்ளவருக்கு வணக்கம்.
18. **ஓம் கைலாஸவாஸினே நம:** சிவபெருமானின் இருப்பிடமாகிற கைலாசத்தில் இருப்பவருக்கு வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. ஓம் தேவாய நம: கடவுளாகப் போற்றப்படுகின்றவருக்கு வணக்கம்.
20. ஓம் ஸ்தித பாதாய நம: உறுதியான பாதங்களை உடையவருக்கு வணக்கம்.
21. ஓம் ஸ்துதி ப்ரியாய நம: ஸ்தோத்திரத்தில் பிரியமானவருக்கு வணக்கம்
22. ஓம் ச்வேதோபவீதினே நம: வெண்மையான பூணூல் தரித்தவருக்கு வணக்கம்.
23. ஓம் நாட்ய நந்தகாய நம: நாட்டியக் கலையில் களிப்பவருக்கு வணக்கம்.
24. ஓம் கிங்கிணீ தராய நம: க்ணிங் க்ணிங் என்று ஒலிக்கும் மணிகளைத் தரித்தவருக்கு வணக்கம்.
25. ஓம் மத்த ச்ருங்கிணே நம: வலுவான கொம்புகளை உடையவருக்கு வணக்கம்.
26. ஓம் ஹாட கேசாய நம:- பொன்றிறமுள்ள தலைமுடியை உடையவருக்கு வணக்கம்
27. ஓம் ஹேம பூஷணாய நம:- நம: தங்க ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவருக்கு வணக்கம்.
28. ஓம் விஷ்ணு ரூபிணே நம: எங்கும் பரவியுள்ள சொரூபமாயுள்ளவருக்கு வணக்கம்
29. ஓம் ப்ருத்வீ ரூபிணே நம: பூமி வடிவைக் கொண்டவருக்கு வணக்கம்.
30. ஓம் நிதீசாய நம: எல்லாவிதமான பொக்கிஷங்களுக்கும் ஈச்வரனாக இருப்பவருக்கு வணக்கம்.
31. ஓம் சிவ வாஹனாய நம: சிவபெருமானின் வாகனமாக இருப்பவருக்கு வணக்கம்.
32. ஓம் குள ப்ரியாய நம: வெல்லம் (கரும்புச் சக்கரையை) உண்பதில் விருப்பமுள்ளவருக்கு வணக்கம்.
33. ஓம் சாருஹாஸாய நம: அழகான சிரிப்புடையவருக்கு வணக்கம்.
34. ஓம் ச்ருங்கிணே நம: அழகான கொம்புகளை உடையவருக்கு வணக்கம்.
35. ஓம் நவத்ருண ப்ரியாய நம: புதிதான புல்லைத் தின்பதில் பிரியமுள்ளவருக்கு வணக்கம்.
36. ஓம் வேதஸாராய நம: வேதத்தின் சாரமாய் உள்ளவருக்கு வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. ஓம் மந்திர ஸாராய நம: மந்திரங்களின் சாரமாய் உள்ளவருக்கு வணக்கம்

38. ஓம் ப்ரத்யக்ஷாய நம: நேரில் கண்டு தொழும்படி உள்ளவருக்கு வணக்கம்.

39. ஓம் கருணாகராய நம: பக்தர்களுக்குக் கருணையை அருள்பவருக்கு வணக்கம்.

40. ஓம் ஸ்ரீகராய நம: பக்தர்களுக்குச் செல்வத்தை அளிப்பவர்களுக்கு வணக்கம்.

41. ஓம் லலாம கலிகாய நம: நெற்றியில் அழகான கோடுகளால் அலங்கரிக்கப்பட்டவருக்கு வணக்கம்.

42. ஓம் சிவ யோகினே நம: சிவனையே தியானிப்பதால் அவருடன் ஒன்றி இருப்பவருக்கு வணக்கம்

43. ஓம் ஜலாதிபாய நம: புண்ணிய தீர்த்தங்களுக்கு அதிபதியாக இருப்பவருக்கு வணக்கம்.

44. ஓம் சாரு ரூபாய நம: அழகிய உருவமுள்ளவருக்கு வணக்கம்.

45. ஓம் வ்ருஷேசாய நம: விருஷபங்களுக்கு ராஜாவாக இருப்பவருக்கு வணக்கம்.

46. ஓம் ஸோமஸூர்யாக்னி லோசனாய நம: சந்திரன், சூரியன், அக்னி இவர்களை இடது, வலது, நெற்றிக்கண்களாக உடையவருக்கு வணக்கம்.

47. ஓம் சுந்தராய நம: அழகானவருக்கு வணக்கம்.

48. ஓம் ஸோம பூஷாய நம: பிறைச் சந்திரனை அணிந்திருப்பவருக்கு வணக்கம்.

49. ஓம் ஸுவக்த்ராய நம: அழகான முகத்தை உடையவருக்கு வணக்கம்.

50. ஓம் கலிநாசநாய நம:- கலியின் தோஷங்களை நாசம் செய்பவருக்கு வணக்கம்.

51. ஓம் ஸுபடரகாசாய நம: நல்ல ஒளியுடன் பிரகாசிப்பவருக்கு வணக்கம்

52. ஓம் மஹாவீர்யாய நம: பெரும் வீரியம் பொருந்தியவருக்கு வணக்கம்.

53. ஓம் ஹம்ஸாய நம: ஞானத்தின் (விவேகத்தின்) உருவமாக இருப்பவருக்கு வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. ஓர் அக்னிமயாய நம: தீ வடிவமாகித் தீயதை எல்லாம் எரித்து விடும் தன்மையாய் உள்ளவருக்கு வணக்கம்.

55. ஓம் ப்ரபவே நம: எல்லோருக்கும் தலைவராயிக்கும் நந்திகேச பகவானுக்கு வணக்கம்.

56. ஓம் வரதாய நம: பக்தர்களுக்கு வேண்டிய வரம் அளிப்பவருக்கு வணக்கம்.

57. ஓம் ருத்திரரூபாய நம: எதிரிகளை எல்லாம் தண்டித்துக் கதற வைக்கும் திறமை உடையவருக்கு வணக்கம்.

58. ஓம் மதுராய நம: பக்தர்களிடம் இனிமையாயுள்ளவருக்கு வணக்கம்

59. ஓம் காமிக ப்ரியாய நம:- தன்னை நேசிக்கும் பக்தர்களிடம் பிரியமானவருக்கு வணக்கம்.

60. ஓம் விசிஷ்டாய நம: மேன்மை படைத்தவருக்கு வணக்கம்.

61. ஓம் திவ்ய ரூபாய நம: ஒளி பொருந்திய உருவமுள்ளவருக்கு வணக்கம்

62. ஓம் உஸ்வலினே நம: பிரகாசமாக உள்ளவருக்கு வணக்கம்.

63. ஓம் ஜ்வால நேத்ராய நம: நெருப்பு போல் பிரகாசிக்கும் கண்களை உடையவருக்கு வணக்கம்.

64. ஓம் ஸம் வர்த்தாய நம:- பிரபஞ்ச லயத்திற்கும் கிருஷ்டிக்கும் காரணமானவருக்கு வணக்கம்.

65. ஓம் காலாய நம: யமனாக இருப்பவருக்கு வணக்கம்

66. ஓம் கேசவாய நம: விஷ்ணுவாய் இருப்பவருக்கு வணக்கம்.

67. ஓம் ஸர்வ தைவதாய நம: எல்லா தேவைகளின் உருவமாகவும் இருப்பவருக்கு வணக்கம்.

68. ஓம் ச்வேத வர்ணாய நம: வெண்மை நிறமாய் உள்ளவருக்கு வணக்கம்.

69. ஓம் சிவாஸீநாய நம: அமர்ந்துள்ள சிவனைத் தாங்குவருக்கு வணக்கம்.

70. ஓம் சின்மயாய நம: மெய்யறிவானவருக்கு வணக்கம்.

71. ஓம் ச்ருங்கபட்டாய நம: கொம்பில் கீரிடம் போல் ஆபரணங்களை உடையவருக்கு வணக்கம்.

72. ஓம் ச்வேத சாமர பூஷாய நம: வெண்சாமரத்தால் அலங்கரிக்கப் பட்டவருக்கு வணக்கம்

73. ஓம் தேவராஜாய நம: தேவர்களுக்கெல்லாம் ராஜாவாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பவருக்கு வணக்கம்.

74. **ஓம் ப்ரபா நந்தினே நம:** ஒளி பொருந்திய நந்தி பகவானுக்கு வணக்கம்.

75. **ஓம் பண்டிதாய நம:** நல்ல வித்வானாக இருப்பவருக்கு வணக்கம்

76. **ஓம் பரமேச்வராய நம:** பரமேச்வரனாய் இருப்பவருக்கு வணக்கம்.

77. **ஓம் நிரூபாய நம:** களங்கமறற ரூபமுள்ளவருக்கு வணக்கம்.

78. **ஓம் நீராக பராய நம:** முற்றிலும் ஆசையற்றவருக்கு அல்லது ஆசையற்றவர்களிடம் பிரியமுள்ளவருக்கு வணக்கம்.

79. **ஓம் சின்ன தைத்யாய நம:** அசுரர்களை ஒட்ட அழித்தவருக்கு வணக்கம்

80. **ஓம் நாஸா ஸூத்ரிணே நம:** மூக்கணாங்கயிறு பூண்டவருக்கு வணக்கம்.

81. **ஓம் அநந்தேசாய நம:** எல்லையற்ற ஈச்வரனாக இருப்பவருக்கு வணக்கம்.

82. **ஓம் தில தண்டுல பக்ஷணாய நம:** எள், அரிசி முதலியவற்றை உண்பவருக்கு வணக்கம்.

83. **ஓம் வர நந்தினே நம:** சிவனைக் களிக்கச் செய்பவர் அல்லது சிவனுக்கு மிகப் பிரியமானவருக்கு வணக்கம்.

84. **ஓம் ஸாரஸாய நம:** பிரபஞ்சத்திலுள்ள அனைத்தின் சாரமாக, உயிராக விளங்கும் நந்திகேஸ்வரருக்கு வணக்கம்.

85. **ஓம் விமலாய நம:** மாசற்றவருக்கு வணக்கம்

86. **ஓம் பட்ட ஸூத்ராய நம:** பட்டாடையை வஸ்திரமாக அணிந்திருப்பவருக்கு வணக்கம்.

87. **ஓம் கால கண்டாய நம:** கருப்பு நிறமான கழுத்தை உடையவருக்கு வணக்கம்.

88. **ஓம் சைலாதினே நம:** சிலாதாரன் என்ற பெயர் கொண்டவருக்கு வணக்கம்.

89. **ஓம் சிலாதன ஸூநந்ததாய நம:** தானியங்களைப் பிரித்து உண்டு களிப்பவருக்கு வணக்கம்.

90. **ஓம் காரணாய நம:** (சிருஷ்டிக்கு) காரணமாக இருப்பவருக்கு வணக்கம்.

91. **ஓம் ஸ்ருதி பக்தாய நம:** சிவனை எப்போதும் பாடும் பக்தனாக இருப்பவருக்கு வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

92. ஓம் வீர கண்டாய நம: கம்பீரமான கழுத்தை உடையவருக்கு வணக்கம்.

93. ஓம் தன்யாய நம: சிவபெருமானுக்கு எப்போதும் தொண்டாற்றும் பாக்கியவானுக்கு வணக்கம்

94. ஓம் விஷ்ணு நந்தினே நம: விஷ்ணுவுடன் இருக்கும் போது மகிழ்பவருக்கு வணக்கம்.

95. ஓம் சிவஜ்வாலாக்ராஹினே நம: சிவனது உக்கிரமான தேஜஸைத் தான் ஏற்று மட்டுப்படுத்துபவருக்கு வணக்கம்.

96. ஓம் பத்ராய நம: மங்களமானவருக்கு வணக்கம்.

97. ஓம் அநகாய நம: பாவமற்றவருக்கு வணக்கம்.

98. ஓம் வீராய நம: வீரராய் இருப்பவருக்கு வணக்கம்.

99. ஓம் த்ருவாய நம: திட சித்தமுள்ளவராய் இருப்பவருக்கு வணக்கம்.

100. ஓம் தாத்ரே நம: எல்லோருக்கும் ஆதாரமாக இருப்பவருக்கு வணக்கம்.

101. ஓம் சாச்வதாய நம: என்றும் நிலைத்தவராய் இருப்பவருக்கு வணக்கம்.

102. ஓம் ப்ரதோஷ ப்ரியரூபிணே நம: பிரதோஷ காலங்களில் பக்தர்களுக்கு மிகப் பிரியமானவருக்கு வணக்கம்.

103. ஓம் வ்ருஷாய நம: காளை வடிவாக இருப்பவருக்கு வணக்கம்.

104. ஓம் குண்டல த்ருதே நம: குண்டலங்கள் அணிந்தவருக்கு வணக்கம்.

105. ஓம் பீமாய நம: எல்லோரையும் தம்மிடம் பயந்து நடுங்கச் செய்பவருக்கு வணக்கம்.

106. ஓம் ஸிதவர்ண ஸ்வரூபிணே நம: வெள்ளை நிற உருவமுள்ளவருக்கு வணக்கம்.

107. ஓம் ஸர்வாத்மனே நம: எல்லோருடைய உள்ளத்திலும் ஆத்மாவாக உறைபவருக்கு வணக்கம்.

108. ஓம் ஸர்வவிக்யாதாய நம: உலகெலாம் பெயர் பெற்றவருக்கு அல்லது எல்லோராலும் புகழப்படுபவருக்கு வணக்கம்.

**இதி ஸ்ரீநந்திகேச்வர அஷ்டோத்தர சத திவ்ய நாம ஸ்தோத்திரம் ஸம்பூர்ணம்**

**தமிழாக்கம்: வீ. ஆர். கணேசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளைக் காண முடியுமா?

''கடவுளைக் காணமுடியுமா?'' என்று கேட்டார் ஒரு அன்பர்.

''முடியும்: நிச்சயமாக முடியும். அடிக்கடி தனிமையில் இருப்பது: பகவானின் நாமத்தையும் பெருமைகளையும் மீண்டும் மீண்டும் பாடுவது: எது உண்மைப் பொருள் என்று ஆராய்ந்து காண்பது போன்ற முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

''அதோடு, தாங்க முடியாத தாபத்துடன், அவனையே நினைந்து நினைந்து, உருகி உருகி, கண்களில் நீர் சொரிய மிக மிக ஏங்கி அழுதால், அவனைக் காணமுடியும். மனைவி மக்களுக்காக ஆசைப்பட்டு மக்கள் குடம் குடமாய் கண்ணீர் சிந்துகின்றனர்.

''ஆனால், அந்தோ! இறைவனுக்காக யார் அழுகிறார்கள்? இரவு முடிந்து சூரியன் உதிப்பது போல, இடைவிடாது இறைவனுக்காக ஏங்கும் ஏக்கத்துக்குப் பிறகே இறைக்காட்சி கிட்டும்.

''ஒரு தாய்க்குத் தன் குழந்தையிடம் இருக்கும் பாசம், கற்புள்ள மனைவிக்குத் தன் கணவன்மீது இருக்கும் காதல், உலகப் பற்று மிகுந்த மனிதனுக்குப் போகப் பொருள்கள் மீத இருக்கும் ஆசை - இந்த மூன்று விதமான கவர்ச்சிகளும் ஒன்று சேர்ந்தால் எத்தகைய வலிமையுள்ள நேசம் பிறக்குமோ அத்தகைய வலிமை கொண்ட நேசத்தை, அன்பைக் கடவுள் மீது காட்டினால் ஒருவன் நிச்சயமாகக் கடவுளைக் காணமுடியும்.

''தாய்ப் பூனை, குட்டியை வாயில் கவ்விக் கொண்டு எங்கு கொண்டு போய் வைக்கிறதோ அது சமையற்கட்டோ, பஞ்சு மெத்தையோ, குப்பைத் தொட்டியோ, அங்கேயே குட்டி திருப்தியுடன் உள்ளது. குட்டிக்கு ஏதேனும் துன்பம் வந்தால், அது 'மியாவ், மியாவ்' என்று கத்தித் தாயைக் கூப்பிடும்.

இப்படிக் கத்துவதைத் தவிர அதற்கு வேறொன்றும் தெரியாது. இந்தக் கதறலைக் கேட்ட அக்கணமே, தாய்ப்பூனை எங்கிருந்தாலும் குட்டியைத் தேடி ஓடோடி வந்து விடும். இதுபோலவே நாம் இறைவனுக்காக ஏங்கி அழுதால் அவனும் ஓடோடி வருவான்.'' என்று அருளினார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

**நன்றி: ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகம் என்றால் என்ன?

(ஆன்மீக வினா - விடை)

- **கேள்வி: யோகம் என்றால் என்ன?**
- பதில் : 'யோகம்' என்றால் 'இணைப்பது' என்று பொருள் எல்லையற்ற இறைவனை நாம் எட்டிப் பிடிக்கச் செய்பவை அனைத்தும்: இறைவனுடன் நமக்குள்ள உறவை வலிமைப்படுத்திக் கொள்வதற்கு உதவும் வழிமுறைகள் அனைத்தும் இறைவனை நாம் நெருங்குவதற்கு உதவுபவை அனைத்தும் யோகங்களே.
- **கேள்வி: மனித இயல்பு எது? மிருக இயல்பு எது? சுருக்கமாகப் பதில் கூறுங்கள்.**
- பதில் : தனக்கு உரியவற்றைப் பிறருடன் பகிர்ந்து வாழ்வது மனித இயல்பு. பிறருக்கு உரியவற்றைப் பறித்து வாழ்வது விலங்கு இயல்பு.
- **கேள்வி: சிலரிடம் அம்மனை 'மகமாயி' என்று குறிப்பிடும் வழக்கம் உள்ளது. 'மகமாயி' என்றால் என்ன?**
- பதில் : மகமாயி என்பதற்கு மகத்தான தாய், மகிமை பொருந்திய தாய் என்பது பொருள்.

  ஜகமாயையில் உள்ள நம்மை, மகமாயியாக இருந்து முக்திக்கு ஜகன்மாதா அழைத்துச் செல்கிறாள்.
- **கேள்வி: முக்தி - வீடுபேறு பெறுவதற்கு இறைவனை எந்த வடிவத்தில் வழிபடுவது சிறந்தது?**
- பதில் : இறைவனைப் பக்தி சிரத்தையுடன் எந்த வடிவத்தில் வழிபட்டாலும் முக்தி பெற முடியும்.
- **கேள்வி: 'அறிவுடமை' எது?**
- பதில் : உடைமை என்பதற்குச் 'சொத்து', 'கொண்டிருத்தல்' ஆகிய இரு பொருள்கள் உண்டு. அறிவுடமை என்பதற்கு அறிவுச்செல்வம் அறிவு கொண்டிருத்தல் ஆகிய பொருள்கள் உண்டு.

  நமக்கு என்ன என்ன தெரியும் என்றும், என்ன தெரியாது என்றும் தெரிந்து வைத்திருப்பது அறிவுடமையாகும்.
- **கேள்வி: ஸ்ரீராமர் - சீதை ஆகியவர்கள் உணர்த்தும் தத்துவம் என்ன?**
- பதில் : ஆண்கள் எப்படி வாழவேண்டும் என்பதை ராமனும், பெண்கள் எப்படி வாழ வேண்டும் என்பதை சீதையும் வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டினார்கள்.

வேதாந்த ரீதியில் ஸ்ரீராமர் பரமாத்மாவையும், சீதை ஜீவாத்மாவையும் உணர்த்துகிறார்கள்.

- **கேள்வி: கருடனைத் தரிசிப்பதற்குரிய விசேஷமான நாள் எது?**
- பதில் : வியாழக்கிழமை மாலையில் ஆகாயத்தில் கருடனைத் தரிசிப்பது விசேஷம்.

- **கேள்வி: மனிதன் பந்தத்தில், தளைகளில் இருப்பதற்கு என்ன காரணம்?**
- பதில் : கரும்பு என்று நினைத்து இரும்பைக் கடிப்பது போல், இன்பம் என்று எண்ணித் துன்பம் தருவதையே விஷயப் பற்றுள்ளவன் நாடுகிறான். இது அவனை மேலும் பந்தத்தில் ஆழத்தும். எந்த அளவுக்கு ஆசைகள் நம்மிடம் உள்ளனவோ, அந்த அளவுக்கு நாம் பந்தங்களால் பிணைக்கப்பட்டிருக்கிறோம். ஆசைத்தீயில் மனிதர்களாகிய நாம் வெந்து கொண்டிருக்கிறோம். ஆதலால் உலகப் பொருளின் மீது அளவுக்கதிகமாக ஆசை வைக்க வேண்டாம்.

  கடினமான தவமுயற்சியின் மூலம் நம்மை நாமே பந்தங்களிலிருந்து விடுவித்துக் கொள்ள வேண்டும்.

- **கேள்வி: விதி - நிஷேதம் என்றால் என்ன?**
- பதில் : இங்கு 'விதி' என்பது செய்ய வேண்டியவை என்ற பொருளிலும் 'நிஷேதம்' என்பது செய்யக் கூடாதவை என்ற பொருளிலும் அமைந்துள்ளன.

  சாஸ்திரங்கள், செய்ய வேண்டும் என்று கூறுபவைகளை நாம் ஈசுவரார்ப்பணமாகச் செய்ய வேண்டும். சாஸ்திரங்கள், செய்யக் கூடாதவை என்று கூறுபவைகளை நாம் செய்யாமல் தவிர்க்க வேண்டும். (விதி நிஷேதங்கள் ஆகியவை, மருந்து - பத்தியம் போன்றவை) இந்த இரண்டும் சேர்ந்தது தான் கர்மயோகம். வாழ்க்கையில் விட வேண்டியவற்றை பற்ற வேண்டும். இதுவே விவேகமும் ஆகும்.

**- சுவாமி கமலாத்மானந்தர் -**

---


- அமைதியைத் தரும் சாத்வீக உணர்வே தியானத்துக்கு ஏற்றது
  - ரமண மகரிஷி -
- புகழுக்காக நேர்மையை மறக்காதே - சாது -

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உள்ளத் தூய்மையே ஒழுக்கத்தின் உயிர்நாடி - மகா வீரர் -
- எதிர்காலத்தை எண்ணி அஞ்சாதவனே நிகழ்காலத்தை நுகரலாம்
  - சைரஸ் -
- எங்கு அன்பு உள்ளதோ அங்கே வாழ்வு இருக்கின்றது
  - மாஜினி -



- வெறுப்பு அழிவுக்கு முன்னோடி - மாஜினி -
- பறவைகள் உன் தலையின் மேல் பறப்பதை உன்னால் தடுக்க முடியாது. ஆனால் அவை உன் தலையின் மேல் கூடு கட்டுவதைத் தடுக்க முடியும். - சாது -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனொளி

## ஆன்மீக சிற்றிதழ்

2




ஆசிரியர்
திருமலை சுந்தா

10/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களின்
விருப்பத்திற்கேற்பவே
காட்சிகள் மலர்கின்றன.
- சாது -

அட்டைப்படம் : சிசு



அன்பு செய்
ஆனந்தித்திரு

# சிவனொளி

172, பிரதான வீதி, திருக்கோணமலை

சிற்றிதழ் – 2
2009 – சித்திரை

இதழில்....


- ஆலயவழிபாடுகள்..... 3
- எது பண்பாடு.... 5
  எது ஆன்மீகம்.....
- ஆன்மீக வினாவிடை 9
- தெய்வங்களுக்குள்ளும்..11
  (நெறிக்கதை)


ஆக்கங்களுக்கு படைப்பாளிகளே பொறுப்பு



## ஆசிரியரின்....

சிவனொளி: இதழ் –2 மலர்ந்துள்ளது. வாழ்த்துக்கள். எங்கள் மனதை குளிர்விக்கின்றன.

சிவனொளியை தேடி வந்து கேட்டு பெற்றுச் செல்லும் அன்பர்களை நினைக்கும் போது எங்கள் மேலேயே எங்களுக்கு கோபமாக இருக்கின்றது.

'சிவனொளியை மாதம் இருமுறை வெளியிடலாமே' – என்ற கருத்தும் எம்மேல் போடப்பட்டுள்ளது.

முடியாதென்பதல்ல..... 'திருப்தியாக சிவனொளி அமைய வேண்டுமே என்ற அவாவும் எம்மிடம் மேலோங்கி உள்ளது.

எல்லாமே உங்கள் கரங்களில் தான் .... மறு இதழில் பேசுவோமே.

அச்சு: அஸ்ரா பிரிண்டர்ஸ்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடுகள்

- ஜகத்குரு சங்கராசாரிய சுவாமிகள் -

உதவி பெற்றதற்கு நன்றி செலுத்துவது ஒரு சிறந்த கடமை. ஒரு சிறு புல்லைக்கூட சிருஷ்டிக்கத் திறனற்ற மனிதனுக்கு இத்தனை உணவும், உடையும், மற்ற உபகரணங்களும் வழங்கும் ஆண்டவனுக்கு நன்றி காட்டுவது நமது கடமை. இவ்வாறு நன்றி கூறும் அடையாளமாகவே நாம் உண்பதை அவனுக்கு முன் காட்டி நிவேதனம் செய்ய வேண்டும். அவனுக்குக் காட்டிவிட்டுப் பிறகு நாம் தான் உண்ணப் போகிறோம். நாம் பலவிதமான ஆடை ஆபரணங்கள் அணிவதற்கு அருள் செய்யும் ஆண்டவனுக்குத் திரு ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். எல்லோரும் இவ்விதம் வீட்டில் பூஜை செய்து திரவியங்களை ஈசுவரார்ப்பணம் செய்ய இயலாது. எனவே, சமுதாயம் முழுதும் சேர்ந்து இப்படி சமர்ப்பணம் பண்ணும் படியான பொது வழிபாட்டு நிலையங்களாக ஆலயங்கள் எழுந்துள்ளன.

ஆதியில் மகரிஷிகள் மந்திரசக்தியால், எங்கும் நிறைந்த பரம்பொருளைச் சில விக்கிரகங்களில் விசேஷ சாந்நித்தியம் கொள்ளச் செய்தனர். அப்படிப்பட்ட மூர்த்திகளைச் சுற்றிக் கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன.

வீட்டில் பூஜை செய்கிறவர் உள்பட அனைவரும் கோயிலுக்குப் போவது என்று கட்டுப்பாடாகப் பழக்கம் வைத்துக் கொண்டால்தான் அங்கு பூஜைகள் குறைவர நடக்கும். நான் கோயிலுக்குப் போகிறேன் என்றால் எனக்காகவாவது கோயிலைச் சுத்தமாக வைக்கிறார்கள். விளக்குகள் போடுகிறார்கள்: நைவேத்தியம் சுத்தமாகச் செய்கிறார்கள்; வஸ்திரம் அழுக்கில்லாமல் கட்டுகிறார்கள்.

சின்னஞ் சிறிய சூட்சமமான தர்மங்களை எல்லாம் மறந்து விட்டோம். நமக்கு உணவு தருபவனுக்கு நல்ல படி நிவேதனம் நடக்க வேண்டும், நமக்கு உடை தருபவனுக்கு நல்ல வஸ்திரம் இருக்க வேண்டும் என்பதையெல்லாம் கவனிக்கத் தவறுகிறோம். இப்போது ஓர் ஊரில் யார் ரொம்ப அழுக்குத்துணி கட்டிக் கொண்டிருக்கிறார் என்று பார்த்தால் ஸ்வாமிதான் என்று தெரிகிறது. நம் ஊர் கோயிலில் ஸ்வாமியின் வஸ்திரம் சுத்தமாயிருக்கிறதா என்பதில் மனசைச் செலுத்தி விட்டோமானால் நம் மனசின் அழுக்கும் போய்விடும். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று', 'அரனை மறவேல்', 'திருமாலுக்கு அடிமை செய்' என்றெல்லாம் புண்ணிய மொழிகள் வழங்கும் இந்த நாட்டில் ஒவ்வோர் ஊரிலும் உள்ள ஈச்வரன் கோயிலையும், பெருமாள் கோயிலையும் நல்ல நிலையில் வைத்திருந்து வழிபாடு நடக்கச் செய்ய வேண்டும். இது நம் முதல் கடமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது ஆலய வழிபாட்டுக் கிரமங்களில் என்ன வேண்டுமானாலும் மாறுதல் செய்யலாம் என்று எண்ணப்படுகிறது. எங்கேயும் உள்ள மின்சாரத்தை வெளிப்படுத்த ஆங்காங்கே மின்சக்தி ஸ்தாபனம் (Power House) இருப்பது போல், எங்கும் உள்ள ஈசுவர சக்தியை வெளிப்படுத்த ஆங்காங்கே மந்திர பூர்வமாக, ஆகமபூர்வமாக ஆலயங்கள் எழுப்பப்பட்டு, அவற்றின் பூஜாக்கிரமங்கள் உருவாகியுள்ளன. மின்சக்தி இயந்திரத்தில் நாம் தாறுமாறாகக் குறுக்கிட்டால் தேகம் போய்விடும். அதுபோலவே ஆத்ம ஷேமத்துக்கான ஆலய யந்திரத்தில் குறுக்கிட்டால் தேகம் போய்விடும். அதுபோலவே ஆத்ம ஷேமத்துக்கான ஆலய யந்திரத்தில் குறுக்கிட்டால் ஆத்மா போய்விடும்.

'குருக்கள் அநுஷ்டானம் இல்லாதவராக இருக்கிறாரே அதனால் சாந்நித்தியம் போகவில்லை என்றால் நாமும் எதைச் செய்தால் என்ன?' என்கிறார்கள். அதாவது பாக்கி இருக்கிற ஸ்வாமியையும் வெளியே அனுப்பிவிடலாம் என்றார்கள். ஓரளவு அநாசாரத்துக்கும் தாக்குப்பிடிக்கிற சக்தி கோயில்களில் இருக்கிறது. அதற்காக முழுக்க அநாசாரமாக்குவோம் என்று கிளம்பினால் நமக்குத்தான் பயன் நஷ்டமாகும். ஸ்வாமிக்கு ஒரு நஷ்டமும் இல்லை. கோயிலில் இப்போதுள்ள ஆசாரக்குறைவை நிவிருத்தி செய்ய வேண்டுமேயன்றி, ஆகமத்தில் இல்லாத புது விஷயங்களைப் பின்பற்றி, அத்தனை பேரும் கோயிலுக்குப் போவது என்று ஏற்பட்டால் குருக்களும் தானே சரியாகி விடுவார்.

ராஜீய விவகாரங்களின் பொருட்டு மத விஷயங்களை மாற்றக்கூடாது. புதிது ஸ்திரமாக இராது. ஆடிமாதம் வெள்ளம் வரும்போது கரையைச் சில இடங்களில் இடிக்கும். அதுபற்றிக் கவலைவேண்டாம். புது ஆவேசத்தைப் பற்றிக் கோபம் கொள்ள வேண்டாம். ஜனங்களிடம் நாம் நியாயத்தை விளக்கினால் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள். நம் சாஸ்திரங்களைப் படிக்கவில்லை. அதனால் கோபம் அடைகிறார்கள். அதற்காக நாமும் கோபம் கொள்ளலாகாது. எதிர்க்கட்சியிடத்திலும் நமக்குப் பிரியம் வேண்டும். ஆகமத்தின் கருத்தை நாம் அவர்களுக்குப் பிரியமாக எடுத்துச் சொல்லி விளக்க வேண்டும்

இந்தக் கோயில்களைக் கட்டிய மன்னர்களின் காலத்திலிருந்து இன்று வரை அவற்றில் பின்பற்றப்படும் நியதிகளை அப்படியே காக்க வேண்டும். நாம் சரியாக இருந்து, உண்மையான பக்தியுடன் வழிபாடு செய்து, உண்மையான அன்புடன் எடுத்துச் சொன்னால் எல்லோரும் கேட்பார்கள். இன்று கோயில்கள் விஷயம் இப்படியானதற்கு நாமே காரணம் என்று உணர்ந்து, முதலில் நம்மைத் திருத்திக் கொள்வோமாக!

– நன்றி. தெய்வத்தின் குரல் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது பண்பாடு?
# எது ஆன்மீகம்?

– தமிழருவி மணியன் –

ஆன்மீகமும் பண்பாடும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள், எந்த மண்ணில் ஆன்மீகம் உரமாக விழுகிறதோ, அந்த மண்ணில்தான் பண்பாடு மரமாக எழும்.

'ஆயிரம் கடவுள்களை நம்புவதைவிட, உன்னை நீ நம்புவதே முக்கியம். உன்னை நம்பாமல் ஆயிரம் கடவுள்களை நம்பினால் உன்னைவிட நாத்திகன் வேறு எவனுமில்லை' என்றவர் சுவாமி விவேகானந்தர்.

உலகில் எந்தத் துறவியிடமிருந்தும் நாம் இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்டிருக்கவே முடியாது.

ஏன் தன்னை ஒருவன் நம்ப வேண்டும்? சுவாமிஜி சொல்கிறார். உன்னுள் இருக்கும் ஆன்மாவை நம்பு. அந்த ஆன்மாவிலேதான் இறைவன் இருக்கிறான். உன்னுள் உள்ள ஆன்மாவை நீ நம்பினால், அதனுள் உறையும் ஆண்டவனை நீ நம்புகிறாய் என்று பொருள். உன்னை நீ நம்பாது போனால் ஆண்டவனையே நம்பாமல் போகிறாய்.

சமுதாயம் ஒழுக்கம் சார்ந்து வாழ வேண்டும். சுவாமிஜியின் அருளுரை அமுதமும் அதுதான். இம்மண்ணில் விதைத்துள்ள பண்பாட்டுப் பயிர்தரும் கனியும் சுவையும் அதுதான்.

மனித வாழ்க்கையின் பக்கங்கள் இரண்டு. ஒன்று உண்மையாயிருத்தல், மற்றொன்று அன்பாயிருத்தல் இந்த இரண்டுமே ஒவ்வொருவனும் மேற்கொள்ள வேண்டிய விரதங்கள். உண்மையாக உள்ளவனிடம் அன்பு உள்ளுக்குள்ளே சுடர்விடும். எனவே உண்மையாயிருப்பதும் அன்பாயிருப்பதுமே முக்கியம்.

ரிஷிகள் வழங்கிய வாசகங்கள் இவை. 'சத்யம் வத, தர்மம் சர' – உண்மை பேசு; தர்மத்தின் வழி நட.

உண்மையைப் பேசி அறம் சார்ந்து நடப்பதுதான் ஒவ்வொரு மனிதனும் செய்ய வேண்டியது. நல்ல எண்ணங்கள் உருவாக வேண்டும். 'எண்ணிய முடிதல் வேண்டும்' என்ற பாரதி உடனே அடுத்துச் சொல்கிறார். 'நல்லவே எண்ணல் வேண்டும்' 'திண்ணிய நெஞ்சம் வேண்டும். தெளிந்த நல்லறிவு வேண்டும்.'

இதைவிட வேறு யார் நல்லுரை கூற முடியும்?

'தெளிந்த நல்லறிவு முதலில் தேவை. அறிவு வேறு. ஒழுக்கம் வேறு என்று பிரித்துப் பார்க்கலாகாது. சிலர் 'அவன் நல்ல அறிவாளி. ஆனால் ஒழுக்கம் கெட்டவனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறானே' என்பார்கள். நல்ல அறிவுள்ளவன் ஒழுக்கமற்றவனாக இருக்கவே முடியாது. அதனால்தான் 'நல்லறிவே நல்லொழுக்கம்' என்றார் சாக்ரடீஸ்.

அறிவு என்பது எது? நல்லதின் நலமும், தீயதின் தீமையும் உள்ளுக்குள்ளே உணர்த்துவது எதுவோ, அதுவே அறிவு. இது நம் மண்ணின் சம்பிரதாயம்.

அப்படியென்றால் அறிவைப்பெற்றவன் நல்லதின் நலன் அறிவான். எனவே நல்லதைநாடிச்செல்வான். தீயதின் தீமை அறிவான் அதைவிட்டு விலகி நிற்பான். நல்லதை நாடுவது என்றால் தீமையிலிருந்து விலகுவது. அது ஒரு மனிதனுக்குள்ளே உருவெடுப்பதற்கு அடிப்படைக் கருவியாக இருப்பது அறிவு என்றால், அந்த அறிவைப் பெற்றிருக்கும் எவனும் ஒழுக்கம் தவறி வாழவே முடியாது.

சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களை நீங்கள் தேடித்தேடி ஆழக்கற்றால் உங்களுக்கு ஒரு ரகசியம் புரியும். இந்தியாவின் ஆன்மா மதத்தில உள்ளது என்றார் சுவாமிஜி. மதம் என்பது எது?

சுவாமிஜி கண்ட மதம், அவர் பேசும் சமயம் அன்பு சார்ந்தது. எல்லா உயிர்களிலும் ஆண்டவனைப் பார்க்கக்கூடியதுதான் ஆன்மீகம். உயிர்கள் அனைத்தையும் ஆரத்தழுவி, அரவணைத்துக் கொள்ளவதுதான் ஆன்மீகம். விவேகானந்தரின் பாஷை பாரதிக்குப் புரிந்தது. அதனால் பாரதி பேசுகிறார்.

'மயிலும் குயில் வகை மட்டுமன்றி பார்க்கின்றபொருளெல்லாம் தெய்வம் கண்டேன்' உயிரோடு இருப்பவை மட்டும் தெய்வம் என்று பாரதி கூறவில்லை. கல்லும் தெய்வம், மண்ணும் தெய்வம் மரமும் எனக்குத் தெய்வம் ஏன் தெரியுமா?

எல்லாவற்றிலும் இறைவன் இருக்கிறான். இந்தப் புரிதலுக்குப் பெயர்தான் ஆன்மிகம். இப்புரிதல் என் உள்ளத்துக்குள்ளே வந்து சேர்ந்துவிட்டால் எனக்குள்ளே விருப்பு, வெறுப்பு, பகை, பேதம், பிளவு, பிணிக்கு எதுவும் கிடையாது.

வாழ்க்கை என்பது எதற்காக? தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு, ஊர், சம்பாத்தியம் மற்றும் தான் உண்டு என்று சுயநலத்தில் வாழ்வதல்ல வாழ்க்கை.

ஒழுக்கம் என்பது எது? சுயநலமற்று இருப்பது தான் ஒழுக்கம் என்று சுவாமிஜி சொல்கிறார். எவன் ஒருவன் சுயநலத்தோடு நிற்கிறானோ, அவனுக்குள்ளே ஒழுக்கம் வராது. பாவப் பாழ் மண்டபத்தின் முதல் படிக்கட்டே சுயநலம் தான்.

ஒழுக்கமாக இருத்தல் என்பது சுயநலமற்று இருத்தல்தான். சுயநலமற்று இருக்க செய்ய வேண்டியது என்ன? பிறர் துயரங்களைத் துடைப்பது. ஒரு மனிதனின் கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீரும் வராமல் காப்பது தான்.

உலகில் எதுவுமே நிலையற்றது. என் உடம்பு, என் வாழ்வு, நான் தேடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட உறவுகள் எதுவுமே நிலையில்லை' என்று கூறும் பட்டினத்தார் கூறுகிறார். 'ஒன்றென்றிரு'.

'ஒனறென்றிரு!' எது? தெய்வம் உண்டென்றிரு. தெய்வம் ஒன்றுதான். எத்தனை மதங்களாக இருந்தாலும், எத்தனை வடிவங்களில் இறைவனை மக்கள் வணங்கினாலும் உள்ளுக்குள் இருக்கக்கூடிய தெய்வம் ஒன்றுதான். அந்த இறைவனை இல்லையென்று ஒருபோதும் கருதாதே. இறைவன்தான் இந்த உலகை இயக்குகிறான் என்பதை நம்பு.

'ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு உயர் செல்வமெல்லாம் அன்றென்றிரு' – கோடி, கோடியாக நீ சேர்த்து வைத்தாலும் அச்செல்வம் உன்னோடு சேர்ந்து வராது என்பதைப் புரிந்துகொள்.

'பசித்தோர் முகம்பார்' – பசித்தவனுக்கு முன்னே கடவுளைப் பற்றிப் பேசாதே என்று சொன்ன ஒரே ஞானி சுவாமிஜியைத் தவிர வேறு யாரும் கிடையாது. பசித்தவனின் முகம் பார்த்து, கரம் நீட்டி உதவுகின்றவனாக நீவா என்கிறார்.

அருணகிரிநாதரின் அழகான பாடல்... கடவுளைக் கைகூப்பி வணங்கிக் கண்ணீர் மல்க நிற்பதாலேயே கடவுளின் கருணை உனக்கு வந்து சேராது. நீ என்ன செய்ய வேண்டும்?

ஏழைக்கு நோயுற்றவனுக்கு வறுமைப் பள்ளத்தில் வாடிக் கிடப்பவனுக்குத் தேடிச்சென்று, மையிற் கதிர்வேலனை வாழ்த்தி வறிஞர்க்கு என்றும் நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள்' , கொடு என்று கூறவில்லை பகிர்ந்து கொள் என்கிறார்.

ஈட்டிய பொருளை நான் மட்டுமே துய்க்கிறேன் என்றால் விலங்கிற்கும் எனக்கும் வித்தியாசமே கிடையாது. ஈட்டியதைத் துய்ப்பதோடு நில்லாமல் சமூகத்திற்குப் பகிர்ந்து கொடுக்கிறேன். இந்தப் பொருளாதாரத் தத்துவத்தைத்தான் அருணகிரிநார் கூறுகிறார்.

எந்த மதத்திலாவது கடவுளை, பிச்சை எடுப்பவனாக நீங்கள் பார்த்ததுண்டா? இந்து சமயத்தில் மட்டுமே சிவனை பிச்சாண்டியாகப் பார்க்கிறோம்.

அவன் எங்கே இருக்கிறான்? மாடமாளிகையில் அல்ல, மயானத்தில் இருக்கிறான். சுட்டெரித்துச் சாம்பலாக்கும் இடத்தில்தான் சிவம் நிற்பான். உன் இதயத்தில் இருக்கும் ஆணவம், கன்மம், மாயை என்கிற அனைத்தையும் நீ சுட்டெரித்தால் உனக்குள்ளே சிவன் வந்து திருநடம் புரிவான்.

சிவன் ஏன் பிச்சாண்டியாக வருகிறான் என்று சிந்தித்தால் ஒரு உண்மை தெரியும். மனிதன் எப்போதுமே வேண்டியதை வைத்துக்கொண்டு வேண்டாததை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவனுக்குப் பிச்சையிடுவான். இதை இறைவன் அறிந்திருக்கிறான். அவனே பிச்சாண்டியாக வந்து ஒவ்வொருவர் வீட்டு வாசலிலும் நிற்கிறான்.

ஆணவம், கன்மம், மாயை மூன்றும் உனக்கு வேண்டாதவை. அவற்றை என் பிச்சைப் பாத்திரத்தில் போட்டுவிடு, உனக்கு வேண்டிய அன்பையும் கருணையையும் கொண்டு நீ வாழ் என்று கூறுவதுதான் பிச்சாண்டிக் கோலத்தின் தத்துவம்.

மனித சாதியின் மகத்துவம் என்ன? வெயிலுக்கு 'ஒதுங்க உதவா உடம்பின்' இறைவனுடைய படைப்பில் மனிதப் படைப்புதான் 'மகத்துவம்' மிக்கது என்கிறோம்.

ஆனால் ஒரு மரத்திற்கு இருக்கும் பெருமைகூட மனிதனுக்குக் கிடையாது. கோடை வெயில் தாள முடியாமல் தேடி ஓடி வரும் மனிதர்கள் மரத்தை நாடி வருகிறார்கள். இளைப்பாறலாம்.

ஆனால் மனிதன்? அருணகிரியார் கேட்கிறார். 'வெயிலுக்கு.... உன் நிழலில் நீயெ ஒதுங்க முடியாதே?' – இதுதான் நீ என்பதைப் புரிந்து கொள்.

எல்லாம் மனிதனுக்காக இருக்க மனிதன் மட்டும் தான் சுயநலமாகத் தனக்கென்றே இருக்கிறான். சுயநலத்திலிருந்து விடுபட்டு சகமனிதர்களின் நலனை நோக்கி நடப்பது எதுவோ அதுதான் பண்பாடு. அந்தப்பண்பாட்டைக் கற்றுத் தருவது எதுவோ அது தான் ஆன்மீகம்.

**விரோதி**
**புத்தாண்டே...**

புத்தாண்டுகள்
பூமி உருளும் வரை
வரலாம்...
மனுவும் வாழ்த்தி..
வாய் சிரிக்கலாம்
வேறென்ன...
புரிதல் இல்லாதவரை
சத்தானே
விரோதியே!!
– 2009 –


- நாளைக்கு என்பதை இன்றைக்குச் சொல்லாதே.
- பகையும், பொறாமையும் வட்டியும் முதலுமாய் திரும்பிவரும்.
- போதிப்பவனை விட சாதிப்பவன் மேல்
- ஆயிரம் முறை தோல்வி யுற்றாலும் மீண்டும் முயன்று பார்.

– சாது –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக வினாவிடை



- **கேள்வி:** மாமனிதர்களின் தகுதி என்ன?
- **பதில்:** சுயநலமற்றவர்களையே மாமனிதர்கள் என்று உலகம் போற்றுகிறது.

- **கேள்வி:** கருணை எனப்படுவது எது?
- **பதில்:** எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் மனப்பூர்வமாகப் பிறரிடம் இரக்கம் கொள்வதே கருணையாகும்.

- **கேள்வி:** 'த்வயம்' என்று வைணவம் கூறும் கருத்தின் விளக்கம் என்ன ?

- **பதில்:** 'த்வயம்' மந்திரங்களில் ரத்தினம் போன்றது என்ற கருத்தில், 'மந்திர ரத்தினம்' என்று வைணவம் கூறும். 25 அட்சரங்களைக் கொண்ட 'த்வயம்' வருமாறு:

**'ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே ஸ்ரீமதே நாராயணாய நம:'**

இம்மந்திரத்தை ஜபிப்பவர்கள் மோட்சம் உட்பட எல்லாப் பலன்களைப் பெறலாம். இம்மந்திரம் சரணாகதியைக் குறிப்பது. எம் பெருமானின் திருவடிகளை சரணடைவதை முதல் வரியும், அவனுக்குச் சேவை புரியும் பாக்கியமே அச்சரணாகதியின் பலன் என்பதை இரண்டாவது வரியும் குறிக்கும்.

- **கேள்வி:** அரக்கர்கள் யார்?

- **பதில்:** பொறாமை போன்ற தீய குணங்களின் ஒரு குறியீடுதான் அரக்கர்கள். இரக்கம் இல்லாத நெஞ்சினர் அனைவரும் அரக்கர்களே. இதை, 'இரக்கமென்றொரு பொருளிலாத நெஞ்சினர் அரக்கரென்றுளர் சிலர் அறத்தினீங்கினார்.' என்று கம்பராமாயணம் குறிப்பிடுகிறது.

- **கேள்வி:** 'யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே' என்ற திருமூலரின் கருத்தை விளக்குக.

- **பதில்:** இனிமையாகப் பேசுதல் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டியது. இதையே திருமூலர், 'யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டிருக்கிறார்.

கபீர்தாசரும், 'காக்கையை வெறுக்கிறோம். குயிலை விரும்புகிறோம். அதுபோல் வன்சொல் பேசுபவரை வெறுக்கிறோம் இன்சொல் பேசுபவரை மக்கள் விரும்புகிறார்கள்' என்று கூறியுள்ளார்.

கடுஞ்சொல் பேசும் முட்டாளின் இதயம் அவன் வாயில் உள்ளது. முகத்தைக் கடுகடுப்புடன் வைத்துக்கொண்டிருப்பவர்களையும், கடுஞ்சொற்கள் கூறுபவர்களையும் மற்றவர்கள் மதிக்க மாட்டார்கள். இன்சொல் பேசுபவர்களையே, மக்கள் உயர்வாகப் போற்றுகிறார்கள்.

- **கேள்வி:** 'கனவு மெய்ப்பட வேண்டும்' என்று பாரதியார் கூறியதற்கு விளக்கம் தருக?
- **பதில்:** 'கனவு மெய்ப்பட வேண்டும், கைவசமாவது விரைவில் வேண்டும்' என்ற பாரதியின் வாக்கு, 'பெரியோர் எண்ணும் நல்ல எண்ணங்கள் செயல் வடிவம் பெற்று சமுதாயம் நன்மைபெற வேண்டும்' என்ற பொருளைக் கொண்டுள்ளது.

  இன்றைய கனவு நாளை நனவாக வேண்டும். கனவு என்பதற்குக் குறிக்கோள் என நாம் பொருள் கொள்ள வேண்டும். இன்றைய சிந்தனை நாளைய வாழ்க்கை ஆகிறது. எனவே இளைஞர்கள் நல்ல கனவுகள் காண வேண்டும்.

- **கேள்வி:** மனதை ஏன் சமநிலையில் வைக்க வேண்டும்?
- **பதில்:** மனம் சமநிலையில் இல்லாதபோது பொறாமை, கோபம், பழி வாங்கும் குணம் போன்ற தீய குணங்கள் தலையெடுக்கும். அப்போது நாம் பேசும் பேச்சும், எடுக்கும் முடிவுகளும் தவறாகி விபரீத விளைவுகளே ஏற்படும்.

  மனம் சமநிலையில் இருக்கும்போது ஒருவன் விவேகத்துடன் நடந்து கொள்கிறான். ஆன்மீக வாழ்க்கையில் மனதைச் சமநிலையில் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்கு ஒரு முக்கிய இடம் இருக்கிறது.

  மனம் சமநிலையில் இல்லாமல் இருப்பது கோழைகளுக்கு உரியது. மனம் சமநிலையில் இருப்பது சான்றோருக்கு உரியது.

– சுவாமி கமலாத்மானந்தர் –

– நன்றி: ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தெய்வங்களுக்குள்ளும்....

அக்காச்சி அவசர, அவசரமாக கோவிலுக்கு வெளிக்கிட்டுக் கொண்டிருந்தா. நான் கல் அட்டியலையும், ஒரு சோடி காப்பையும் வேண்டா வெறுப்பாக கொடுத்தேன்.

கோயிலுக்கு, விதம் விதமான நகை நட்டுகளும் அரை மணித்தியால அலங்காரமும், விதம் விதமான சேலை தினிசுகளும்.... என்னை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன.

ஆம்! இருந்தாலும் இவைகள் எல்லாவற்றையும் விட இன்னுமொரு... அந்த கூரிய முள்ளொன்று.... இவர்கள் கோவிலுக்கு வெளிக்கிட வெளிக்கிட என்னுள்.... என்னுள் என் உடம்பே பற்றிக் கொண்டிருந்தது.

"ஏனடி.. நீ... கோவிலுக்கு போகவில்லையா? அவள் தான் நாளைக்கு கலியாணம் ஆகிறவள் நீ வெறும் சங்கிலியோட போகலாம்........."

அக்காச்சியையும், தம்பியையும் கோவிலுக்கு அனுப்பி விட்டு முடியஇருக்கும் சமையலை முற்றாக முடித்து விட்டு தான் வருவதாக இருந்த அம்மா என்னிடம் சொன்னா.

அம்மாவின் மேல் எனக்கு கோபம், கோபமாக வந்தது. பெற்ற பிள்ளையின் மனதை சரியாக உணராத தாயாக இருக்கின்றாளே இவள். இவளா என்தாய்? கல் அட்டியல் போடவில்லையென்று நான் கோவிலுக்கு போகவில்லையாம்....... என்ன கற்பனை. என்னுள் அந்த அரக்க முள் மாய உருவம் பெற்று நீண்டு.... நீண்டு வான் நோக்கி வளரத் தொடங்கியது.

அந்த கூரிய முள்ளின் விலாப் பக்கங்களில் இருந்தும் பாம்புகள் போல் சீறிக்கொண்டு பக்க முட்களும் நீளத் தொடங்கின.

நான் அம்மாவின் முன் போய் நின்றேன்.

அவள் முகத்தைப் பார்த்தேன் தலையாட்டினேன் மெல்ல சிரித்தேன்.

அம்மாவின் பல்லவி நீண்டது. மூச்சை இழுந்து... அந்த விஷவாயுக்கள் என்னை சூழ தொடங்கின.

"கொப்பனைப் போல நீ கோயில் இல்லை குளம் இல்லை... சாமி இல்லை.... தெய்வம் இல்லை பக்தி இல்லை... பயம் இல்லை.. என்னன்டு தான் போற இடத்தில் வாழப் போறியோ" வருகிறவனும் வளர்த்த வளர்ப்பென்று என்னைத்தான் திட்டித் தீர்க்கப் போறான்....?

அம்மா என்னுள் வளர்ந்து கொண்டிருந்த அந்த முள்ளை அறுக்க முயன்று கொண்டிருந்தாள். அறுக்கப்பட்ட முள் பல அம்புகளை விட்டு இன்னும்.... இன்னும் என்னுள்....

ஆடாமல். அசையாமல்.... கண்களையும் அப்படியே நிறுத்தி அதில் புரண்டு வரும்' கண்ணீர் சுடு வெள்ளத்தை அந்த முட்களுக்குள் அந்த முட்களுக்குள்....... பாத்தி கட்டி... இந்த... நிமிடத்தில் விளையாடிக்கொண்டா.... நிற்கிறேன்..... என்னைப் பார்த்து.... என் கண்களில் நெளியும் அந்த முட்களின் கூர்மையை... உணராது எப்போதும்.... பேசி... பேசியே பழகிக் கொண்ட அம்மா... இப்போது.... என்னைப் பார்த்து.... என் கண்களை துளைத்து நிற்கும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அந்த முட்களைப் பார்த்தது...

அதுதான்.... ஆம் அது தான்... அந்த ஒரு தேவைக்காகத் தான்... என்னை உணரக் கூடிய அந்த தேவையொன்றுக்காகத் தான் நான்.... நான்....

"என்னடி.... உன்னைப் பார்க்க...... எனக்கு என்னமோ போல லதா அம்மா... என்ன... உனக்கு....? அம்மா இப்போது என்னை நெருங்கி.... நெருங்கியே வந்து கொண்டிருந்தாள்.

அவள் நெருங்க... அவள் நெருங்க.... என்னுள் முந்தி நிற்கும் அந்த முட்கள்... நான் அழுது கொண்டே சிரித்தேன் அம்மாவின் கரங்கள் என்னை இறுக அணைத்தன. உடம்பை... தடவின கண்ணீரைத் துடைத்தன.

அம்மா.....? ஆசையாகவே கூப்பிட்டேன்.

என்னம்மா... நான் சொன்னதில் நீ....?

இல்லையம்மா... நான் கல் அட்டியலுக்கு ஆசைப்பட்டுத்தான் கோவிலுக்கு போகவில்லை என்று சொன்னியே அது அது தான்? நான் விக்கினேன்.

என்னுள் குத்தி நின்று நகங்களாக சீறிக் கொண்டிருந்த அந்த முட்களின் வழிப்படுத்தலிலேயே நான் பேசிக் கொண்டிருந்தேன்.

அப்ப நீ.... அதைச்சொல்லன்... எப்ப பார்த்தாலும் கோவில் என்றவுடன்... நீ... நீ...?

அம்மா அந்த முட்களின் நுனிக்கு வந்து விட்டாள் இனி... இனி பயமில்லை... மெதுவாக ஏற்ற வேண்டியதுதான்.

முள் குத்தியே, குத்தியே காயப்பட்ட என் உடம்பு எனக்கு கட்டளை இட்டது.

அம்மா நீங்களெல்லாம் அந்த கோயில் இந்தக் கோயில் என்று போறீங்க... சரி ஆனா அந்த அம்மன் கோயிலுக்கும், அந்த பிள்ளையார் கோவிலுக்கும் எப்பவாவது ஒரு நாள் ஒரே ஒரு நாள் போய் இருக்கிறீங்களா?

முட்களை அம்மா மேல் ஏற்றத் தொடங்கினேன் அம்மா என்னைப் பார்த்தார்.

நீங்கள் போறதில்லை. ஏன் அம்மா போறதில்லை மனிசங்கள் கூட பிரிச்சுப் பார்த்திங்க அம்மா... ஏன் அம்மா சாமி தெங்வங்களிட்டையும் சாதி பார்க்கிறீங்க உங்கட சாதி தெய்வங்களிட்டயும் இருக்கா அம்மா அம்மா ... சொல்.... அம்மா.....சொல்..?

அந்த முட்கள் பாம்புகள் போல வளைந்து வளைந்து அம்மாவை சூழத் தொடங்கின.

நான் கோவிலுக்கு போறதில்லை ஏன்.... நீங்க தெய்வங்களிட்டையும் சாதி பார்க்கிறதால எப்ப நீங்க இதை விட்டு விடுறீங்களோ அப்பதான் நான்.... கோயிலுக்கு போவன்.

அம்மாவை அந்த முட்கள் துளைத்தெடுக்கத் தொடங்கின. அந்த முட்களின் கூர்மை அம்மாவின் உடலை.... உடலை....

அம்மா எதுவமே பேசாதவளாக....

என் முகத்தை... என் கண்களை.....

அதில் குத்தி நின்ற முட்களை... அதன் காயங்களை...... அம்மாவின் கரங்கள், என்மேல் குத்தி நிற்கும் அந்த முட்களை பிடுங்கி... எறிவதற்காகவா என்னை நோக்கி நீளுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனொளி

## ஆன்மீக சிற்றிதழ்

3



ஆசிரியர்
திருமலை சந்திரா

10/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்கும் அஞ்சாத திறமை இருப்பினும் அன்பின் உணர்ச்சிக்கு ஆட்பட்டால் தலை தாழத்தான் வேண்டும்.

-காண்டேகர்-

அட்டைப்படம் : சிசு



அன்பு செய்

ஆனந்தித்திரு

சிவனொளி

172, பிரதான வீதி, திருக்கோணமலை

சிற்றிதழ் – 3

2009 – வைகாசி

இதழில்....


- பிரதோஷ விரதம்....... 3
- அதன் பெயர் லட்சியம்.. 5
- புகழ் பூத்த பெரியார்..... 6
- அந்த இரண்டு பேர்......7
- ஆன்மீக வினாவிடை 8
- தாம்ரவர்ண விநாயகர்....10
- ஸ்ரீகோகுலாஷ்டகம்.....5


ஆக்கங்களுக்கு படைப்பாளிகளே பொறுப்பு



# ஆசிரியரின்....

சிவனொளி: சிற்றிதழ் –3 மலர்ந்துள்ளது. புதுவருஷ தினத்தன்று இதழ்:2 முழுவதும் சிவன் தேவஸ்தானத்திலேயே விற்பனையாகி விட்டது.

பிரதிகள் கேட்டு பலர் தேடி வருகிறார்கள். முகம் அறியா நல்ல உள்ளங்கள். சிவனொளியின் எண்ணிக்கையை கூட்ட வேண்டும். அல்லது பக்கங்களின் எண்ணிக்கையை கூட்ட வேண்டும்.

இந்த இரண்டு விடயங்களும் எம் மனதை குடைகின்றன. 'சிவனொளி' திருக்கோணமலை பகுதியில் மூலை முடுக்கெல்லாம் செல்ல வேண்டும் என்பது எமது முதல் விருப்பம். அதன்பிறகு மற்றெல்லாம்.

முயற்சிக்கின்றோம் 'விரோதி ' புது வருஷம் பிறந்து விட்டது. மானுட வாழ்வினில் அன்புநெறி தழைத்து மகிழ்ச்சி பொங்கட்டும். அடுத்த இதழில் பேசுவோமே!!...

அச்சு: அஸ்ரா பிரிண்டர்ஸ்

திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதோஷ விரதம்

– தொகுப்பு க. சிவசங்கரநாதன் –

எத்தனை எத்தனை தெய்வங்கள் இருந்தாலும் அவை அனைத்தும் சிவனருளால் வந்தவையே. ஈசனை எல்லாத் தினங்களிலும் முறையாக வழிபாடு செய்ய வேண்டும். இறைவனின் பேரருளைப் பெற்று இனிதே வாழப் பலவகையான பூஜைகள் நடத்தப்படுகின்றன. அவற்றுள் மிகச் சிறப்பாக கருதப்படுவது பிரதோஷ நாள் வழிபாடாகும். உணவை எப்பொழுது உண்டாலும் பலனுண்டு அதற்கென்று குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் உண்கின்ற போது தான் முழுப்பயனையும் அடைய முடியும். அதுபோல இறைவனை எப்பொழுதும் பூஜித்தாலும் பலன் உண்டு என்றாலும் சிலகுறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட நேரத்தில் பூஜித்தால் முழுப்பலனையும் அடைய முடியும் என்பது உண்மையாகும். இது அனுபவத்தால் தெளிவாக அறிந்த ஒன்றாகும்.

பலர் பிரதோஷ வழிபாட்டின் மூலம் பலவகைத்தடைகள் விலகப்பெற்று பெறுதற்கரிய செல்வங்களைப் பெற்று மகிழ்ந்திருக்கிறார்கள். இவ்வுண்மையைப் புராண வரலாறு நமக்கு விளக்குகிறது. பொதுவாகப் பிரதோஷ காலம் என்றால் பகல் முடியும் நேரம் தொடங்கி இரவுக்கு அடையாளமாக வானில் சந்திரனும் நட்சத்திரங்களும் தோன்றும் நேரம் வரை என்று கூறுவர். இதை மிகவும் துல்லியமாக கணக்கிட்டு மாலை 5.45 மணிக்கு மேல் 6.30 மணிக்கு என்று பிரதோஷ காலத்தை சாஸ்திர அறிஞர் குறிப்பிட்டுள்ளனர்.

ஒவ்வொரு மாதமும் அமாவாசையில் இருந்து 13ம் நாளும் பௌர்ணமியில் இருந்து 13ம் நாளும் திரயோசித திதியாகும். அன்றுதான் பிரதோஷ நாள். ஆக மாதத்திற்கு இரண்டு பிரதோஷ நாட்கள் வருகின்றன.

**வழிபடும்முறை –** பிரதோஷ நாளன்று அதிகாலை எழுந்திருத்தல் வேண்டும். காலைக்கடன்களை முடித்து சிறப்பாக இறைவன் நாமாவளிகளைக் கூறி பூசித்தல் வேண்டும் எதுவும் உண்ணக்கூடாது. ஆலயம் சென்று லிங்கமூர்த்திக்கும் அம்பாளுக்கும் சிறப்பு அபிஷேகம் ஆராதனை செய்யலாம். எப்போதும் இறைவனையே சிந்தை செய்யவேண்டும். சிவபுராணத்தை சொல்லிக் கொண்டிருத்தல் மிகவும் நல்லது. சிறப்பாக நேர்த்திக்கடன் செய்ய விரும்புவோர் ஆலயம் சென்று மாலையில் சிவபிரானுக்கு ரிஷப தேவருக்கும் அபிஷேகம் செய்தல் வேண்டும். ரிஷப தேவருக்கும் [அறுகம்புல் மாலை சாத்தி, மாவினால் அகல் விளக்கு செய்து பசு நெய் விட்டு விளக்கு ஏற்றல் வேண்டும். பச்சை அரிசியில் சர்க்கரை கலந்து] படைத்தல் வேண்டும். ரிஷபதேவரின் கொம்புகளுக்கு இடையே பார்த்து சிவபிரானை தரிசித்தல் வேண்டும்.

பிரதோஷ காலத்தில் மட்டும் வழமையாக வலம் வருவது போல் ஆலயப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதட்சனம் வருதல் கூடாது அபரதட்சனம் வருதல் வேண்டும். இதைச் சோமசூத் ரபி ரதட்ணம் என்பர்.

இடப தேவரைத் தரிசித்து அங்கு நின்றும் இடமாக சென்று சண்டேசுவரைத் தரிசித்து சென்ற வழியே திரும்பி வந்து மீண்டும் இடப தேவரைத் தரிசித்து அங்கு நின்றும் வலமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்து கோமுகியைக் கடவாது முன்சென்ற வழியே திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுரைத் தரிசித்து அங்கு நின்று திரும்பி இடபதேவரைத் தரிசியாது வலமாகச் சென்று கோமுதியைச் சேர்ந்து அங்கு நின்றும் திரும்பி வந்து இடபதேவரை தரிசித்து இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து திரும்பி இடபதேவரைத் தரிசித்து அவருடைய இரண்டு கொம்பினடுவே பிரணவத்தோடு கூட ஹரஹர என்று சொல்லி சிவபெருமானை தரிசித்து வணங்குதலும் வேண்டும் இது பிரசுதஷணம் ஆகும். இதுபோல் மூன்று முறை பிரதஷ்ணம் செய்தல் வேண்டும்.

பின்னர் சிவபிரான் உமாதேவி யாருடன் ரிஷபாரூடராய் பிரதோச நாயகராய் பிரதோச காலத்தில் (5.45 முதல் 6–30) வரை ஆலய வலம் வரும் பொழுது கண்டு தரிசித்தல் மிகப்பெரிய புண்ணியமாகும். வேறு சில நூல்களில் பிரதோஷ நேரம் $4\frac{1}{2}$ மணிமுதல் மாலை $6\frac{1}{2}$ மணிவரை எனவும் குறிப்பிட்டும் உள்ளனர். வேத பாராயணத்துடன் முதலிலும் திருமுறை பாராயணத்துடன் இரண்டாவதும் நாதசுர மங்கல இசையுடன் மூன்றாவதுமாக மூன்று முறை ஆலயவலம் நடைபெறும். இரண்டாவது வலம் வரும் பொழுது இறைவனையும் இறைவியையும் ஈசானதிக்கத்தில் இருந்தருளச் செய்வார்கள். அப்பொழுது காட்டும் கற்பூர ஆர்த்தியைக் கண்டு தரிசிப் போருக்கு மிகுந்த பலனுண்டு. தரிசனம் செய்த பின்னர் வீடு சென்று ஒருவர் இருவர்க்கு அன்னமிட்டு பிறகு தாமும் உண்டு பிரதோஷ விரதத்தை நிறைவு செய்ய வேண்டும்.

சனிப்பிரதோஷ தரிசனத்தில் தனிச்சிறப்பும் பலனும் உண்டு. அதை மகாப்பிரதோஷம் என்பர். பிரதோஷ வரும் கிழமைகள் கூட தனித்துவம் வாய்ந்தவையாக உள்ளன.அதேபோல பன்னிரு மாதத்திலும் பிரதோஷம் வரும் தினங்களில் இறைவனுக்கு படைக்கும் பிரசாத நிவேதனங்கள் மூலம் பலன்களை அடையலாம். பிரதோஷ காலம் என்றாலே பாவங்களை போக்கி நல்ல பலன்களைத் தரும் புண்ணியகாலமாகும். அக்காலத்தில் சந்திரமௌலீசுரரைத் தரிசிப்பதால் தோஷங்கள் எதுவாக இருந்தாலும் உடனே நீங்கும் பயவுணர்வு அச்சம் குழப்பம் தீராப்பிணிகள் மறையும். மனநலம் உடல்நலம் வாக்கு நலம் வளம்பெறும். வருகின்ற செய்திகள் எல்லாம் நல்லதாகவே வரும் மங்கல செயல்கள் தொடரும். சாதனைகளை புரிய வாய்ப்பு வல்லமையும் உண்டாகும். சிவவிரதங்களில் பிரதோஷ மிகச்சிறப்பானது. சிவனுக்கு பிரதோஷ நாட்களில் தரிசனம் செய்வது அபிஷேகம் செய்வது மிகவும் நல்லவிடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதன் பெயர் லட்சியம்

– கண்ணதாசன் –

அலை கடலில் அந்தக் கப்பல் மிதந்து கொண்டிருந்தது.

ஆறு மாத காலமாகவே அது மிதந்து கொண்டு தான் இருந்தது.

கருங்கடலில் இருப்பதாகக் கருதப்பட்ட ஒரே தீவைக் கண்டுபிடிக்க அது போய்க் கொண்டிருந்தது.

அந்தத் தீவு மட்டும் கண்டுபிடிக்கப்பட்டு விட்டால், அந்தக் கப்பலில் பயணம் செய்த இருநூறு பேருக்கும் வளமான ஒரு நாடே கிடைத்து விட்டதாக அர்த்தம்.

கப்பல் தலைவன் கெட்டிக்காரன்; நம்பிக்கைக்குரியவன்.

அப்படி ஒரு தீவு இருப்பதை அறிந்தே அவன் பயணம் தொடங்கியிருந்தான்.

வாழ வழி இல்லாதவர்கள் இருநூறு பேருக்கு வளமான வாழ்வை உருவாக்குவதே அவன் திட்டம்.

அதற்கென அவன் குறித்த இலக்கே அந்தத் தீவு.

பல வகைக் கடல்களையும் தாண்டிக் கப்பல் போய்க் கொண்டிருந்தது.

கடல் கொந்தளிப்பினாலும், பருவக் கோளாறினாலும், மூன்று மாதங்களில் அடையலாம்' என்ற கணக்குத் தவறி விட்டது. ஆறு மாதங்கள் ஓடி விட்டன.

தேவைக்கெனச் சேமித்து வைத்திருந்த உணவுப் பொருட்களும், வசதிகளும் வெகுவாகக் குறையத் தொடங்கின. ஒருநாள் அவை அறவே இல்லாமற் போய்விட்டன.

கப்பல் தலைவனோ பசியையும், தூக்கத்தையும் பொருட்படுத்தாமல் சுக்கானைப் பிடித்தபடி இருந்தான்.

பயணம் செய்தவர்களுக்குப் பசி எடுக்க ஆரம்பித்தது.

'எப்படியும் நாம் அந்தத் தீவை அடைந்து விடுவோம்' என்று தலைவன் ஆறுதல் சொன்னான்.

அந்த ஆறுதலால் அவர்கள் பசி அடங்கவில்லை.

'எங்களுக்குப் பசிக்கிறது! பசிக்கிறது!' என்று அவர்கள் சத்தமிட்டார்கள்.

"நாம் விரைவில் அந்தத் தீவை அடைந்து விடுவோம்; அங்கே காய்களும், கனிகளும் கேட்பாரின்றிக் குவிந்து கிடக்கின்றன. பசிக் கொடுமையைக் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். கடலில் நிறைய மீன்கள் கிடைக்கின்றன. குறிப்பிட்ட இலக்கை அடையும்வரை அந்த மீன்களை மட்டுமே உணவாகக் கொண்டு நாம் வாழ்ந்து விட முடியும். நிரந்தர இன்பத்துக்காகத் தற்காலிகத் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுங்கள். நாம் ஒரு லட்சியத்தை நோக்கிப் பயணம் செய்கிறோம் என்பதை மட்டும் மறந்து விடாதீர்கள். சோதனைகளைக் கட்டுப்பாட்டோடு சகித்துக் கொள்வதன் மூலம்தான் ஒளிமயமான எதிர்காலத்தை நாம்பெற முடியும்.

"உழுகின்ற காலத்தில் அரைவயிறுதான் கிடைக்கும்; சமயங்களில் கிடைக்காமலும் போகும். அறுவடைக்குப்பின் அற்புதமான சாப்பாடு கிடைக்கும். நாம் நமது லட்சியத்தை அடைகிற வரையில் தயவுசெய்து பொறுமையாக இருங்கள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவன் எவ்வளவோ கெஞ்சினான் ஆனால் அவர்களோ வெறும் மீனை மட்டும் சாப்பிட்டுக் கொண்டிருக்கத் தயாராயில்லை.

"எங்களுக்கு இந்த உணவு அலுத்துப் போய்விட்டது. வேறு வகை உணவு வேண்டும்" என்று கத்தினார்கள்.

அவர்கள் பொறுமையோடு இருக்கச் சக்தி அற்றவர்களானார்கள்.

எல்லோருமாகச் சேர்ந்து கப்பல் தலைவனை உதைத்தார்கள். அடி தாங்காமல் அவன் மரணம் அடைந்தான்.

கப்பல் திக்குமுக்காடத் தொடங்கிற்று. திசை தடுமாறி ஓடத் தொடங்கிற்று.

பயணம் செய்தவர்களுக்குப் பசியை உணரத் தெரிந்ததே தவிர, கப்பலை ஓட்டத்தெரியவில்லை.

சூறாவளியில் சிக்கிக் கப்பல் மூழ்கத் தொடங்கிற்று.

அவர்கள் தங்கள் தலைவனை எண்ணி அழத் தொடங்கினார்கள்.

என்ன செய்வது; அவன் இனி வரமாட்டான்!

கப்பல் மூழ்கி விட்டது; இனி அவர்களுக்குப் பசியே எடுக்காது.

நம்பிக்கை வைத்து ஒருவனைப் பின் தொடரும் போது நீ அவசரக்காரனாக இருந்தால் அதுவரையில் பட்ட கஷ்டம் வீணாகி விடும்.

ஒட்டகத்தில் ஏறியவன் ஊர் போய்ச் சேரும் வரை அதைக் கொன்றுவிடக்கூடாது.

அரசாங்கக் கப்பலையும் ஒரு தலைமை ஓட்டிக் கொண்டிருந்தது.

ஆன்மீகக் கப்பலையும் ஒரு தலைமை ஓட்டிக் கொண்டிருக்கின்றது.

குறிப்பிட்ட இலக்கை அடையும் வரையில் கொடுமைகளைத் தாங்கிக் கொள்வதே வெற்றிக்கு வழி.

# புகழ் பூத்த பெரியார்கள்

1



## -ஆறுமுகநாவலர்-

யாழ்ப்பாணம் தந்த சிறந்த அறிஞர்கள் தமிழ் மொழிக்கு அரிய பல பணிகளை செய்தவர்களுள் நாவலர் முன்னிற்கிறார். நாவலரின் சைவ சமய தொண்டுகள், தமிழ்க்கல்வி, தமிழ் மொழி வளர்ச்சி, தமிழிலக்கியம், கல்விக்கூடங்கள் அமைத்தல், நூல்கள் அச்சிட்டு வெளியிடல் என்பவை மிக முக்கியமானவை. 1822ஆம் ஆண்டு பிறந்த நாவலர் 1879ஆண்டு இறைவனடி சேரும்பொது அவருக்கு வயது 57 தான். எனினும் இந்த குறுகிய காலத்தில் எவ்வளவோ பல விடயங்களை அவர் எமக்காக தந்து விட்டு போயிருக்கிறார் எனலாம். பேச்சாற்றலுக்குப் பேர் போனதால் நாவலர் என போற்றப்பட்டார்.

உரை நடையில் திறமை மிக்கவராக இருந்தாராகையால் வசன நடை கைவந்த வள்ளலார் என அழைக்கப்பட்டார். மனிதாபிமானம், தேசாபிமானம், தன்மானம் என்பவற்றை ஊட்டி வளர்த்தார். இவருக்கு கௌரவம் செய்யுமுகமாக 1969ஆம் ஆண்டு சிலை வைக்கப்பட்டது. 1971ஆம் ஆண்டு நினைவு முத்திரை வெளியிடப்பட்டது. நாவலர் ஆங்கிலம் கற்ற பீட்டர் பேர்சிவர் பாதிரியார் தனது பைபிள் மொழி பெயர்ப்புக்கு இவரையே தமிழ்ப் பண்டிதராக நியமித்தார். 1848ஆம் ஆண்டு வண்ணார் பண்ணை சைவப்பிரகாச வித்தியாலயத்தை ஆரம்பித்தார். இப்படியான பல வழிகளில் தமிழையும், சமயத்தையும் வளர்த்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரை போற்றி புகழ்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த இரண்டு பேர்



புத்த மடாலயத்திலிருந்து இளம் பிட்சுக்களின் குரல் ஓங்கி ஒலித்தது.

"புத்தம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி
தர்மம் சரணம் கச்சாமி"

புத்தன் மடாலகத்துக்குள் நுழைந்தான். சிஷ்யர்களெல்லாம் அமைதியாக அமர்ந்திருந்தார்கள். புத்தன் ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்தபடி தேவதாசி ஆம்ரபாலி உள்ளே நுழைந்தாள்

திரண்டெழுந்த அங்கங்கள்: இறுக்கிக் கட்டிய கச்சை; அள்ளி முடித்த கூந்தல்; முழங்கால் வரையில் ஆடை; மின்னி எழுந்த கண்கள்? மெதுவாகத் துடிக்கும் இதழ்கள்; ஆம்ரபாலியின் நடனம் ஆரம்பமாயிற்று. மடாலயத்தில் காம நடனமா?

சிஷ்யர்களுக்கு ஒரே உற்சாகம்!

ஆட்டம் தொடர்ந்தது.

மேலும் சில சிஷ்யர்களைப் புத்தன் தன்பக்கம் அழைத்துக் கொண்டான்.

ஆட்டம் முடிந்த போது இரண்டு பேர் மட்டுமே அமர்ந்திருந்தார்கள்.

சுமார் ஐம்பது பேரில் நாற்பத்தெட்டுப் பேர் நின்று கொண்டிருந்தார்கள்.

புத்தன் அவர்களைப் பார்த்துச் சொன்னான்.

"உங்கள் முகத்திலிருக்கும் வியர்வையைத் துடையுங்கள். குளிர்ச்சியான இடத்தில் முகம் வியர்க்கிறதென்றால் ஆன்மா அலைகிறதென்று பொருள். எவனுடைய உடம்பை ஆன்மா ஆள்கிறதோ, அவன் யோகி. எவனுடைய உடம்பு ஆன்மாவை ஆள்கிறதோ, அவன் போகி.

"ஒரு பெண்ணின் முழு நிர்வாணத்தில் எவன் சபலப்படவில்லையோ, அவனே மகா நிர்வானத்துக்கு லாயக்கானவன். அந்த இரண்டு பேர் எனக்குப் போதும்!"

ஆம்ரபாலி ஆடைகளை எடுத்துத் தன் உடம்பை மூடிக் கொண்டாள்.


'புத்தம் சரணம் கச்சாமி' என்ற குரல் மீண்டும் எழுந்தது.

அதை ஐம்பது பேர் சொன்ன போது இல்லாத கம்பீரம், அந்த இரண்டு பேர் சொன்னபோது இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக வினாவிடை



- **கேள்வி:** திருவாசகத்திலுள்ள சிவபுராணத்தைத் தினமும் சொல்லும் வழக்கம் பலரிடம் இருக்கிறது. இவ்விதம் சிவபுராணம் சொன்னால் என்ன கிடைக்கும்?

- **பதில்:** சொல்லற்கரிய இறைவனை சிவபுராணம் கூறும் 'சொல்லிய பாட்டின் பொருள் உணரந்து சொல்பவர்' இறைவன் திருவடியின் கீழ் நிலைத்திருப்பார்கள்.

- **கேள்வி:** வால்மீகி ராமாயணமும், கம்ப ராமாயணமும் எந்தெந்த நூற்றாண்டில் இயற்றப்பட்டன?

- **பதில்:** கி.மு. 3ஆம் நூற்றாண்டில் வால்மீகி ராமாயணம் இயற்றப்பட்டது என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். ஆனால் இந்துக்களாகிய நாம் கி.மு. 3ஆம் நூற்றாண்டிற்கும் மிக நீண்ட காலம் முன்பே வால்மீகி ராமாயணம் இயற்றப்பட்டிருக்கும் என நம்புகிறோம்.

  மேலை நாட்டினர் போல், முறையாக வரலாற்றையும் காலத்தையும் குறித்து வைக்கும் வழக்கம் இந்தியாவில் இருந்ததில்லை என்பது நமது ஒரு பெரும் குறைபாடு. எனவே வால்மிகி ராமாயணத்தின் காலத்தை உறுதியாகக் கூறுவதற்கில்லை.

  கம்ப ராமாயணம் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது.

- **கேள்வி:** ஜாதியின் பெயரால் துர்போதனை செய்பவர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

- **பதில்:** தீண்டாமை போன்றவற்றைப் போதிக்கும் நூல்களுக்கும், அவற்றைப் போதிப்பவர்களுக்கும் இறைவனின் அங்கீகாரம் கிடையாது.

- **கேள்வி:** நான் உண்மையைத்தான் சொல்கிறேன். என்றாலும் அதை மற்றவர்கள் நம்ப மறுக்கிறார்கள். இந்நிலையில் நான் என்ன செய்வது?

- **பதில்:** மகாத்மா காந்திஜியின் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சி இது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்திஜி மாணவனாக இருந்தபோது, ஒருநாள் பள்ளியில் உடற்பயிற்சி வகுப்பு நடந்தது. அந்த வகுப்புக்குச் சிறுவனாக இருந்த காந்திஜி செல்லவில்லை.

எனவே தலைமையாசிரியர், "நீ ஏன் உடற்பயிற்சிக்கு வரவில்லை?" என்று காந்திஜியிடம் கேட்டார்.

அதற்கு காந்திஜி, "என் தந்தை நோய்வாய்ப்பட்டிருந்தார். அவருக்கு நாள் சிகிச்சை அளித்தேன். மேக மூட்டம் இருந்ததால் எனக்கு நேரம் தெரியவில்லை அதனால் உடற்பயிற்சி வகுப்புக்கு வரமுடியவில்லை" என்று தெரிவித்தார். அவர் உண்மையைத்தான் கூறினார்.

ஆனால் தலைமையாசிரியர் காந்திஜி கூறியதை நம்பாமல், "நீ பொய் பேசுகிறாய்" என்று கோபத்துடன் கூறினார்.

தலைமையாசிரியர் கோபமாகப் பேசியதைக் கேட்டு உண்மை பேசிய காந்திஜி மிகவும் மனம் வருந்தினார்.

அப்போது காந்திஜிக்கு ஓர் உண்மை புரிந்தது: 'உண்மை பேசினால் மட்டும் போதாது; அந்த உண்மையைப் பிறர் ஏற்கும் வகையிலும் - புரிந்து கொள்ளும் வகையிலும் பேசத் தெரிய வேண்டும்.'

- **கேள்வி:** 'ஆன்மீக உணர்வு' என்றால் என்ன?

- **பதில்:** உங்கள் கேள்விக்குப் பதில், வெவ்வேறு நிலையிலிருந்து வெவ்வேறு விதமாக அமையும். இங்கு ஒரு பதில் சுருக்கமாகத் தரப்படுகிறது.

இறைவனிடம் - ஆன்மாவில் - உள்ளம் ஒடுங்குவதால் ஏற்படும் சூட்சுமமதான ஓர் உயர்ந்த நிலையை ஆன்மிக உணர்வு எனலாம். ஆழமான ஆன்மீக உணர்வு, மனம் கடந்த நிலை அல்லது மனம் அழிந்த நிலை என்றும் கூறப்படுகிறது.

தாயுமானவர் தமது பராபரக்கண்ணியில், ஆன்மீக உணர்வு பற்றி இவ்விதம் கூறுகிறார்.

"சிந்தனைபோய் நான் எனல் போய்த் தேக்க இன்ப மாமழையை
வந்து பொழிந்தனை நீ வாழி பராபரமே"

-சுவாமி கமலாத்மானந்தர் -

---

- **சுயநலம்; பேராசை; கோழைத்தனம் ஆகியவையே நம் சுதந்திரத்தை இழக்கச் செய்யும் ஜென்ம சத்ருக்கள்.**

**- ஷேக்ஸ்பியர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூம்ரவர்ண விநாயகர்

**– டாக்டர். கே. சந்தானராமன் –**

சிவகுடும்பத்தாரைச் சேர்ந்த கணபதி, முருகன், சக்தி, சிவன் ஆகியோர் தாய் வயிற்றில் பிறப்பதில்லை. அவர்கள் வேண்டிய வடிவங்களை, வேண்டியபோது எடுத்தக் கொள்வார்கள்.

முழுமுதற் கடவுளான விநாயகரும் பல்வேறு வடிவங்களை ஏற்றுக் கொண்டு, பக்தர்களுக்கு அருள் புரிகிறார்.

சூரியன் உயிர்களுக்கு ஆற்றலைத் தருகிறான். ஒளி வழங்கி உதவுகிறான். ஆகவே, அவனை ஆதித்யன் (முதன்மையானவன்) என்று போற்றுகின்றனர்.

அந்த முதன்மைப் பதவி சூரியனுக்கு அகந்தையை ஏற்படுத்தியது. 'நான்' என்னும் ஆணவம் தோன்றியது.

அந்த ஆணவத்திலிருந்து ஒரு குமாரன் தோன்றினான். சூரியனின் அகந்தையின் விளைவாக, அகந்தையின் வடிவாகவே தோன்றிய அம்மகன், பூவுலகில் வந்து விழுந்தான். தனது அகந்தையிலிருந்து ஒரு மகன் தோன்றியதும், அவன் பூமியில் விழுந்ததும் சூரியனுக்குத் தெரியாது.

அசுரகுரு சுக்கிராச்சாரியார் சூரிய குமாரனைக் கண்டார். அசுர எண்ணங்களுடனும், வலிமையான உடலுடனும் உள்ள சூரிய குமாரனை அசுர குரு, தேவர்களை வெல்லத்தக்க ஆற்றல் பெற்றவனாக மாற்றிட விரும்பினார்.

அவனுக்கு விநாயகரின் பதினாறு எழுத்து மந்திரத்தை உபதேசித்தார். அத்துடன், கணபதியை நோக்கித் தவம் புரிய ஆசி கூறியும் அனுப்பி வைத்தார்.

ஆயிரம் ஆண்டுகள் தவம் புரிந்த சூரிய குமாரனை அசுரகுரு பாராட்டினார். அவனுக்கு, 'அஹமாசுரன்' (அகந்தை அவுணன்) என்று பெயரும் சூட்டினார்.

அவனுக்கு அசுரர்குல அரசாட்சியை அளித்துப் பட்டாபிஷேகம் செய்து வைத்தார் சுககிராச்சாரியார். அஹமாசுரன் 'விஷயப்ரியம்' என்ற நகரத்தை ஏற்படுத்திக் கொண்டு அரசாண்டான்.

மமதை என்ற பெண்ணை மணந்து கர்வசிரேஷ்டர்கள் (செருக்கில் சிறந்தோர்) என்ற இருபது குழந்தைகளையும் பெற்றான்.

சுக்கராச்சாரியாரின் ஆலோசனைப்படி, அவன் தேவர்களை வென்று ஏவல் கொள்ளத் தொடங்கினான். தேவர்கள் பயந்து ஒளிந்தனர். அஹமாசுரன் தேவர்களை அழிக்க எண்ணினான். ஒளிந்திருந்த தேவர்களைத் தேடி அழிக்கும்படி, தன்னிடமிருந்த மோகாஸ்திரத்தை விடுத்தான். அந்த அஸ்திரம் தீயைக் கக்கிக் கொண்டு தேவர்களைத் தேடிப் புறப்பட்டது.

தேவர்கள் மரணமற்றவர்கள். ஆதலால் மோகாஸ்திரம் அவர்களை அழிக்கவில்லை. ஆனால், அது தேவலோகப் பெண்களை இழுத்து வந்தது.

அஹமாசுரன் தேவருலகத்து அழகிகளுடன் இன்பம் அனுபவிக்கத் தொடங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால், கணேசமூர்த்தியை முற்றிலுன் மறந்து விட்டான்.

அந்த நிலையில் அதர்மநாயகன் என்ற அசுரன் அஹமாசுரனிடம் வந்தான்.

உலகில் நடக்கும் பூஜைகள், யாகங்கள், பிற தர்மச் செயல்களால் தான் அமரர்கள் நன்கு வாழ்கிறார்கள்; நீ அந்த நற்செயல்களை நசித்துவிடு தேவர்கள் வலுவிழந்து விடுவார்கள்" என்றான்.

அஹமாசுரன் அதர்மநாயகனைப் பெரிதும் பாராட்டினான். உலகில் நடைபெறும் நற்செயல்களைத் தடுத்து நிறுத்தம் பொறுப்பை அதர்மநாயகனிடமே ஒப்படைத்தான்.

அதர்மநாயகன் கோயில்களில் இருந்த தெய்வமூர்த்தங்களை அகற்றிவிட்டு, அஹமாசுரன் சிலைகளை வைத்தான். தீர்த்தங்களின் புனிதத்தன்மையை அழித்தான். அறநூல்களை எரித்தான். அழிவுச்செயல்கள் பல புரிந்தான். முனிவர்களும் சான்றோர்களும் ஓடி ஒளிந்தனர். குகைகளில் பதுங்கினர். அங்கிருந்தபடி தவம் புரிந்தனர்.

பிரமன், திருமால், இந்திரன் முதலியவர்கள் சிவபெருமானை அணுகி அஹமாசுரனை அழித்து உலகைக் காக்க வேண்டினர்.

அஹமாசுரனுக்கு அரிய வரங்களை அளித்த கணேசமூர்த்தி மட்டுமே அவனை வதைக்க இயலும் என்று சிவபெருமான் கூறினார்.

அனைவரும் கணபதியை நோக்கி தவம் புரிந்தனர். கணபதி அஹமாசுரனின் கனவில் தோன்றி அவனுடைய அழிவைக் குறிப்பால் உணர்த்தினார்.

அசுரன் அதைப் பொருட்படுத்தவில்லை. விநாயகர், அஹமாசுரனின் அழிக்கத் திருவுள்ளம் கொண்டார். அஹமாசுரனின் நகரத்தை முற்றுகையிட்டார்.

அரசியல் முறைப்படி, விநாயகர் நாதரைத் தூதுவராக அஹமாசுரனிடம் அனுப்பினார். ஆணவத்தின் உச்சியில் இருந்த அஹமாசுனை் தான் சரணடையப் போவதில்லை என்றான். வேண்டுமானால், விநாயகர் தன்னிடம் சரணடையட்டும் என்றான்.

விநாயகர் தமது பாசாயுதத்'தை விடுத்தார். அது பல ஆயுதங்களாகப் பிரிந்து, விரிந்து சென்றது. அசுரர்கள் அனைவரையும் வதைத்தது. அஹமாசுரனின் இருபது பிள்ளைகளும் போரிட்டு மடிந்தனர்.

இறுதியில் அஹமாசுரனையும் தூம்வர்ணர் என்ற கோலத்தில் இருந்த கணேசமூர்த்தி வதைத்தார். தேவர்கள் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்றனர். உலகில் மீண்டும் தருமச் செயல்கள் இனிதே நடைபெற்றன.

'நான்' என்ற ஆணவம் இக்கதையில் அஹமாசுரனாக உருவகம் செய்யப்பட்டுள்ளது. 'எனது' என்ற மமதை ஆணவத்துடன் இணைந்தே இருக்கும். அவ்விரண்டும் சேர்ந்தால் செருக்கு தோன்றும். மமதை என்ற மனைவியிடம் அஹமாசுரன் இருபது கர்வசிரேஷ்டர்களைப் பெற்றான்.

அகந்தை + மமதை + பத்து இந்திரியங்கள் = இருபது குற்றங்கள்

உலகியல் இன்பம் விஷயப் பிரியம் என்ற நகரமாக உருவகிக்கப்பட்டது. தெய்வம் இவற்றை வதைக்கும் என்பது மையக் கருத்து. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீகோகுலாஷ்டகம்

ஸ்ரீமத் கோகுல ஸர்வஸ்வம்
ஸ்ரீமத் கோகுலமண்டனம்|
ஸ்ரீமத் கோகுலத்ருக்தார: ஸ்ரீமத்
கோகுலஜீவனம்||

**ஸ்ரீகோபாலன் ஸ்ரீதேவியுடன் கூட நந்தகோகுலத்திற்கு எல்லாப் பொருளாயும் இருப்பவர், ஸ்ரீயுடன் கூடிய நந்தகோகுலத்திற்கு அலங்காரமாய் இருப்பவர், நந்தகோகுலத்தில் உள்ளவர்க்ளின் கண் கருவிழி போன்றவர். ஒளியுடன் கூடிய கோகுலத்திற்கு உயிராக இருப்பவர்.**

ஸ்ரீமத் கோகுலமித்ரேச:
ஸ்ரீமத்கோகுலபாலக:|
ஸ்ரீமத்கோகுலலீலாப்தி
ஸ்ரீமத்கோகுல ஸம்ச்ரய||

**ஸ்ரீயுடன் கூடிய நந்தகோகுலத்திலுள்ள அன்பர்களுக்கு ஈசன், ஒளியுடன் கூடிய நந்தகோகுலத்தைக் காப்பவர், ஸ்ரீகோகுலத்தில் நடந்த லீலைகளுக் கெல்லாம் காரணமானவர், ஸ்ரீநந்த கோகுலத்திற்கு ஆஸ்ரயமாய் இருப்பவர்.**

ஸ்ரீமத் கோகுலஜீவாத்மா
ஸ்ரீமத் கோகுலமானஸ|
ஸ்ரீமத்கோகுலதுக்கன:
ஸ்ரீமத்கோகுலவீக்ஷித:||

**ஸ்ரீகோகுலத்திற்கு உயிரளிக்கும் ஆத்மாவாக இருப்பவர், ஸ்ரீகோகுல வாசிகளின் மனதிற்கு இருப்பிட மானவர், ஸ்ரீகோகுலத்தின் துக்கத்தைப் போக்குகிறவர், ஸ்ரீகோகுலவாசிகளால் அன்புடன் தரிசிக்கப்பட்டவர்.**

ஸ்ரீமத்கோகுலஸௌந்தர்ய
ஸ்ரீமத்கோகுலஸத்பலம்|
ஸ்ரீமத்கோகுலகோப்ராண:
ஸ்ரீமத்கோகுலகாமத||

**ஸ்ரீகோகுலத்திற்கு அழகை அளிப்பவர், ஸ்ரீகோகுலத்தின் புண்ணிய பலனாய் இருப்பவர், ஸ்ரீகோகுலத்திலுள்ள பசுக்களின் உயிராக இருப்பவர், ஸ்ரீகோகுலத் திற்கு இஷ்டத்தை அளிப்பவர்.**

ஸ்ரீமத்கோகுலராகேச:
ஸ்ரீமத்கோகுலதாரக:|
ஸ்ரீமத்கோகுலபத்மாளி:
ஸ்ரீமத்கோகுலஸம்ஸ்துத:||

**ஸ்ரீகோகுலத்திற்குச் சந்திரன் போன்றவர், ஸ்ரீகோகுலத்தைத் துக்கத்திலிருந்து காரையேற்றுபவர், கோகுலமாகிற தாமரையில் வண்டாக இருப்பவர், ஸ்ரீகோகுல வாசிகளால் துதிக்கப்பட்டவர்.**

**-தொடரும் -**

**- நன்றி. இராமகிறிஸ்ண விஜயம் -**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனொளி

## ஆன்மீக சிற்றிதழ்

4







ஆசிரியர்

திருமலை சுந்தா

10/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுத்தமான மனசாட்சி
உள்ளவன்
அடக்கத்தோடும்
அமைதியோடும் இருப்பான்.
-சாது-

அட்டைப்படம் : சிசு



அன்பு செய்
ஆனந்தித்திரு

# சிவனொளி

172, பிரதான வீதி, திருக்கோணமலை

சிற்றிதழ் –4

2009 – வைகாசி

இதழில்....


- கோயிலுக்குப் போவது எப்படி 3
- விரும்பி வழிபடவேண்டிய தெய்வம் .........5
- ஆன்மீக வினாவிடை...... 6
- புகழ் பூத்த பெரியார்கள் ......7
- எல்லாமே விதிப்படிதானோ...8
- குடும்ப வாழ்வினில் துறவறம்...9
- உங்களுக்கு பதினாறு பேறும் வேண்டுமா ...... 10


நற்றுணையாவது நமச்சிவாயவே

## ஆசிரியரின்....

சிவனொளி: சிற்றிதழ் –4 மலர்ந்துள்ளது. விமர்சனங்கள் எம்மை ஆனந்திக்க வைக்கின்றன. சிவனொளியை மெருகூட்ட பல யோசனைகள் எம்மீது போடப்படுகின்றன.

விமர்சனங்கள், யோசனைகள் தந்து எம்மை பிரமிக்க வைத்த அன்பர்களுக்கு நன்றிகள்.

சிவனொளியை பொறுத்த வரை அதன் 'இலக்கு' எப்பவோ தீர்மானிக்கப்பட்ட விடயம். அந்த இலக்கு நோக்கியே சிவனொளி தன்னை நகர்த்திச் செல்லும்.

'புகழ் கௌரவம்' எல்லாமே அதன் காலடியில், எல்லோருடனும் சேர்ந்து அமர்ந்திருந்து 'ஆன்மீகம்' பற்றி பேசவே விரும்புகின்றது சிவனொளி.

'ஆன்மீக வித்து இந்த மண்ணில் நல் விருட்சங்களை செழிக்க வைக்க வேண்டும் என்பதே' – சிவனொளியின் இலக்கா? என பலர் கேட்பது எமது காதுகளுக்குள் இன்னும் இரைகின்றது.

மகிழ்ச்சி அடுத்த இதழில் நிமிட நேரம் பேசுவோமே!!.....

அச்சு: அஸ்ரா பிரிண்டர்ஸ்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிலுக்குப் போவது எப்படி...



எந்த விஷயத்துக்கும் இப்படித்தான் செய்ய வேண்டும் என்ற நியதி உண்டு. இந்த விதி கோயிலுக்கும் பொருந்தும், அள்ளி அள்ளித் தருகிற ஆண்டவனை எதிர்நோக்கி கோயிலுக்குச் செல்கிறபோது, அதற்கே உரிய முறைகளோடு வழிபட்டால் பலன் நிச்சயம்! இந்த முறைகளைப் பின்பற்றாமல் வழிபட்டு விட்டு 'ஆண்டவனை வணங்கினேன். ஆனால் பலன் கிடைக்கிவில்லை' என்று புலம்புவது எந்த விதத்தில் நியாயம்?

எல்லோரும் அறிந்து கொள்ளும் விதத்தில் கோயிலுக்குச் செல்லும் போது கடைப்பிடிக்க வேண்டிய முறைகளைத் தொகுத்தளித்துள்ளோம். இதன்படி செய்தால் பலன் கட்டாயம் உண்டு.

- கை, கால்களை சுத்தம் செய்து கொண்டு கோயிலுக்குள் செல்லவேண்டும்.
- சரீரத்தில் உணர்ச்சியுடன் கோயில் புகக்கூடாது. (சரீர உணர்ச்சி என்பது சிறுநீர் முதலியன கழிக்க ஏற்படும் உணர்வு)
- கோபுரத்தைக கண்டதும் கைகூப்பித் தொழவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ கோபுரவாசல் கொடிக்கம்பம் (த்வஜ ஸ் த ம் ப ம்) திருமுற்றம். திருவாசல் பகுதிகளில் வணங்கி விட்டுக் கோயிலுக்குள் புக வேண்டும்.
- ❖ பலிபீடத்துக்கும் சன்னிதிக்கும் இடையே செல்லக்கூடாது.
- ❖ திருச்சுற்று வரும்போது பலிபீடத்தை சுற்றியே வரவேண்டும்.
- ❖ இறைவனை வணங்கிக் கொண்டிருப்போருக்கு எதிரே நிற்கக்கூடாது. கருவறைக்கு நேர் எதிர் வழியாகச் செல்லக்கூடாது.
- ❖ கோபுர விமானத்தின் நிழலை மிதிக்காமல் சுற்றி வர வேண்டும்.
- ❖ வேறு காரியத்துக்காக வாங்கிய பொருளை இறைவனுக்குக் காணிக்கையாக இடக்கூடாது.
- ❖ மணமில்லாத பூக்களை இறைவனுக்கு சமர்ப்பிக்கக் கூடாது.
- ❖ கோயில் விளக்கில் ஆமணக்கு விளக்கெண்ணெயை இடக்கூடாது.
- ❖ இலுப்பை எண்ணெய் இடுவது சாலச் சிறந்தது.
- ❖ அர்ச்சகர்கள் சடாரியை (முடி) தலைமீது வைக்கும் போது தன்யோஸ்மி, தாஸோஸ்மி ப்ருதயோஸ்மி என்று கூறிக் கொண்டே இரு கைகூப்பி தலையில் ஏற்க வேண்டும்.
- ❖ கோயில் பிரசாதங்களை கீழே சிந்த விடக்கூடாது.
- ❖ திருமால் முன்பு தோப்புக்கரணம், கன்னத்தில் போட்டுக் கொள்ளுதல், தன்னைத்தானே சுற்றிக் கொள்ளுதல் கூடாது.
- ❖ திருமால் கோயிலுக்குச் சென்றால் ஸ்ரீபாத தீர்த்தம், சடாரி, துளசி இவைகளை ஏற்றுக் கொள்ளாமல் வரக்கூடாது.
- ❖ திருமாலுக்கு செம்பருத்திப் பூவை சமர்ப்பிக்கக்கூடாது.
- ❖ துளசியை நீரால் கழுவி எடுத்துச் செல்லக்கூடாது.
- ❖ துளசி தவிர மற்றப் பொருளை கழுவியே எடுத்துச் செல்ல வேண்டும்.
- ❖ கருவறையிலிருந்து திரும்பும் போது இறைவனுக்கு முதுகு காட்டி வரக்கூடாது. விளக்கு இல்லாக் கோயிலுக்குச் செல்லக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரும்பி வழிபட வேண்டிய தெய்வம்



உலகம் தோன்றிய நாள் முதல் இன்று வரை கடவுள் உண்டு என்போரும் – கடவுள் இல்லை என்று வாதிடுவோரும் உள்ளனர். கடவுள் இல்லை என்று கூறுபவர்களே கடவுளைப் பற்றி அதிகம் நினைக்கின்றனர். கடவுள் இல்லை என்று வாதிட பல ஆதாரங்களை தேடி அலைந்து – கடவுள் பற்றி அதிகம் சிந்தனை செய்கின்றனர். கடவுள் இல்லை என்று அறுதியிட்டுக் கூறும் பகுத்தறிவு சிந்தனையாளனும் – நம்மை விட மிஞ்சிய 'இயற்கை' என்னும் ஓர் சக்தி உள்ளது என்பதை ஒப்புக் கொள்கின்றான் விஞ்ஞான யுகத்தில் விண்வெளியில் பயணம் செய்ய புறப்படும் மனிதன் கூட இறைவனை மனதில் நினைத்து வணங்கி விட்டுத்தான் ராக்கெட்டில் ஏறுகிறான்.

எந்தெந்தக் காரியங்களுக்கு எந்தத் தெய்வத்தை வழிபட வேண்டும் என்பதற்கு ஒரு கணக்கு உண்டு. அதன்படி செய்தால் பலன் நிச்சயம்.

1. பகைவரை வெல்ல – காளி
2. திரண்ட செல்வத்தைப் பெற – சண்டி
3. அரசர்களை மயக்க அரசு அனுகூலம் பெற – சாம்பவி
4. இன்னல் தீர, போரில் வெற்றி பெற – துர்க்கை
5. தீராத நோய்கள் நீங்கி நலம் பெற – ரோகிணி
6. நீண்ட ஆயுளுடன் வாழ – சிவபெருமான்

ஒருவரது ஜாதகப்படி 12 ராசிகள் இருந்தாலும் அதில் ஆட்சி செய்வது ஒன்பது நவக்கிரகங்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆன்மீக வினாவிடை

- **கேள்வி:** கோவிலுக்குச் சென்று 'சுவாமி' பெயருக்கே அர்ச்சனை செய்வது சரிதானா?
- **பதில்:** உங்களுக்கு காச்சல் வந்து டாக்டரிடம் போகிறீர்கள். டாக்டர் ஊசியில் மருந்தை ஏற்றியதும் டாக்டரிடமே 'நீங்கள் ஊசி போட்டுக் கொள்ளுங்கள். எனக்கு உடம்பு சரியாகி விடும்' என்று கூறுவது போலத்தான் பலர் ஆலய தரிசனம் செய்கின்றனர்.

  'இந்த நட்சத்திரத்தில் இந்த பூமியில் பிறந்தவர்கள் உன் அருளால் நலம் பெற வேண்டும்? என இறைவனை வழிபடுவதே அர்ச்சனை. கோவிலுக்குச் சென்று சுவாமியை தொழுது நலம் பெற வேண்டி தன்பெயர் கூறி அர்ச்சனை செய்ய வேண்டும். அதற்கு முன் உங்கள் நாம நட்சத்திரங்களைத் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

- **கேள்வி:** சாதனை செய்ய எவை தேவை?
- **பதில்:** சாதிக்க நினைக்கும் அனைவருக்கும் மன ஒருமை மன வலிமை – மன அமைதி தேவை.

  சாதாரண மனிதர்கள் விரும்பும் மன அமைதி மந்தமானது. கண்ணை மூடிக் கொண்டு உலகம் இருள் என்று நினைக்கும் பூனை போல, வாழ்வைச் சரியாக வாழாதவர்களின் முறை இது.

  மன ஒருமையைத் தராத மன வலிமை பயனற்றது.

  இவை மனவலிமை தராத மன ஒருமையும் பயனற்றது.

  இவை இரண்டும் இல்லாமல் எதிர்பார்க்கும் மன அமைதி நீடிக்காது.

  மன வலிமையும் மன ஒருமையும் இழந்து விட்டுத் தேடும் மன அமைதி, போதை மருத்து அடிமையானவர்கள் அனுபவிப்பது

  ஒருமை–வலிமை–அமைதி ஆகிய இந்த மூன்றும் இருந்து விட்டால் உன் மனம் உனக்குச் சொத்து. உலகிற்கு நீயே சொத்து

- **கேள்வி:** கவர்ச்சியில் முன்னணி வகிக்கும் அரசியல்வாதிகள், சினிமாக்காரர்கள், விளையாட்டு வீரர்கள் இவர்களில் தலைமைத்துவ பண்பு யாரிடம் உள்ளது?
- **பதில்:** வாழ்க்கையில் தரம் தாழ்ந்தவர்களை நீ நம்பினால், தடுமாறுவது நிச்சயம் கூடு கட்டத் கறையானை வீட்டில் விடுவார்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணமானவர்களை நம்பு, அது ஒரு காலத்தில் கொண்டு வரலாம் வம்பு! கைக்கு எட்டும் இடத்தில், அதன் இஷ்டத்தில் தேன்கூடு கட்ட விடுவாயா? தரமானவர்களை நம்பு; உன்னதம் அடைவது நிச்சயம்! அந்த நம்பிக்கை உச்சி மரத்தேன் கூடு.

மெல்லத்தடியால் தட்டிவிட்டுத் தள்ளி நின்றால்; தேன் கொட்டாது. தேனீ கொட்டும் எனத் தெரிந்து கொள். **- ஆன்மீகன் -**

# புகழ் பூத்த பெரியார்கள்



**-தேசாபிமானி மாசிலாமணி** 2

ஈழநன்னாடு அரசியற் துறையிலே முன்னேறவும், தாய்மொழியில் சிறந்தோங்கவும், தமிழ்ப் பண்பாட்டிலே வழுவாதிருக்கவும் வேண்டுமென்ற பெருநோக்கோடு 'தேசாபிமானி' என்ற பத்திரிகை மூலம் அருஞ்சேவை செய்தவர்தான் ஈழத்து ரிபி. மாசிலாமணிப்பிள்ளை அவர்கள்.

திருவாங்கூர் உயர் நீதிமன்றத்து நீதி அரசராய் விளங்கிய செல்லப்பா பிள்ளையின் மரபு வழிவந்தவர் இம்மணி . அடிமை வாழ்க்கையை அறவே வெறுத்துச் சுதந்திர புருடராய் வாழ விரும்பிய இவரின் உள்ளம் பத்திரிகைத் துறையை நாடியது. கொழும்பிலே 'தி பீப்பிள்ஸ் மகசீன்' (T.P.M) எனும் ஆங்கில வாரப்பத்திரிகையையும், யாழ்ப்பாணத்திலே 'தேசாபிமானி' என்ற வாரமிரு முறைப்பத்திரிகையையும் நடத்தினார். கேலிச்சித்திரங்களையும், தீவிரமான அரசியற் - சமூக அபிப்பிராயங்களையும், வெளியிட்டதனால் 'தேசாபிமானி' ஒரு நிகரற்ற பத்திரிகையாக விளங்கிற்று. தேச ஊழியர் சங்கம், தமிழ் மகளிர் கழகம், சங்கீத சமாஜம் ஆகிய சபைகளை நிறுதி மக்களிடையே தேச பக்தியையும், கலா ரசனையையும் வளர்ச்சியுறச் செய்தமையில் மாசிலாமணிப் பிள்ளைக்குப் பெரும்பங்குண்டு. மாதவி வாசித்த மகரயாழைக் கண்டுபிடித்த பெருமை இவருக்குமுரியது. இரசாயன சாஸ்திரம், கிருக பரிபாலனம், தென்னிந்திய சங்கீதம், வாழ்க்கை நூல் என்பன அவரது எழுது கோலீந்த பெரு நிதியங்கள். மகளிர் முன்னேற்றங் கருதி உழைத்த பெருமகனாருக்கு அவர்தம் மனைவியார் அமைத்த ஞாபகச்சின்னம் 'தமிழ் மகள்' அதை வாழ்விப்பது அவரைப் போற்றுவதாகும். **- வள்ளிமைந்தன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாமே விதிப்படிதானோ?

**விதிப்படிதான் எல்லாம் நடக்கும் என்றால், தனிமனிதனின் முயற்சியும்-அறிவாற்றலும் எப்படிப் பயன்படும்? இவை ஏதும் பயன்படாது என்றால், உலகத்தின் மக்களின் வளர்ச்சிக்காக விஞ்ஞானத்திலும், மெய்ஞ்ஞானத்திலும் கூடப் பலர் செய்யும் முயற்சிகளுக்குப் பொருளே இல்லாமல் போய்விடுமோ?**

ஆற்றோடு மிதந்து செல்லும் ஒரு மரத்தண்டை எடுத்துக்கொள்ளுங்கள். ஆறு, மணிக்கு இரண்டு மைல் தூரம் ஓடுகிறது. அந்த மரத்துண்டும் அதே வேகத்தில் ஓடுகிறது. அந்த மரத்துண்டை ஒரு மோட்டார் படகுடன் சேர்த்துக் கட்டிவிடுவதாக வைத்துக்கொள்வோம். அந்தப் படகு மணிக்கு இருபது மைல்கள் வேகத்தில் சென்றால், அதே ஆற்றல் அந்த மரத்துண்டு மணிக்கு இருபது மைல்கள் வேகத்தில் செல்லும்! அதுவே அப்படி ஆற்றின் ஓட்டத்தை பதிலளிக்கிறது.

எதிர்த்துச் சென்றால், அதே ஆற்றில் மணிக்குப் பதினெட்டு மைல்கள் வேகத்தில் செல்லும். அது ஆற்றின் ஓட்டத்தை ஓட்டியோ, எதிர்த்தோ செல்லலாம். வலது கரை ஓரமாகவோ, இடதுகரை ஓரமாகவோ, ஆற்றின் நடுவிலோ செல்லலாம். ஆனால் அது ஆற்றின் ஓட்டத்தின் வேகத்திலிருந்து விடுபட முடியுமா? முடியாது.

யோசித்துப் பாருங்கள். தாவர இனங்களும் மிருகங்களும்கூட நம்மைப் போலவே உயிர் வாழ்பவை. விதியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை. ஆனால் அவை ஆற்றில் சும்மா மிதந்து செல்லும் மரத்துண்டப் போன்றவை. அவற்றால் மாறுபட்ட வேகத்திலோ, எதிர்த்திசையிலோ வேறு திசையிலோ, குறிப்பிட்ட நோக்கத்துக்காகவோ செல்ல முடியாது. விதியை அப்படியே நம்பி மட்டும் வாழ்பவனின் வாழ்க்கையும் இதைப்போலத்தான் அமைய முடியும்.

ஆனால் புத்திசாலியாகவும், முயற்சியுடனும் வாழ்க்கையில் ஈடுபடும் மனிதன், மோட்டார் படகுடன் தன்னை இணைத்துக் கொள்ளும் மரத்துண்டைப் போன்றவன். அவனுக்கு அந்த விசையைப் போலக்கிடைத்த அறிவு, அவனுடையை இஷ்டப்படி, சௌகரியப்படி, நன்மைக்கு கந்தபடி, வேகத்தையும் திசையையும், செல்லும் பகுதியையும், குறிப்பிட்ட நோக்கத்தையும் மாற்றிக்கொண்டு போக உதவுகிறது. ஆயினும், அவனும் இந்த இருவகை மரத்துண்டுகளும் செல்லப் பயன்படும் ஒரே ஆற்றைப் போல உலக நியதிக்கும் உட்பட்டுத்தான் வாழுகிறான்.

வாழ்க்கையில் நமக்கு முன்வினைப் பயனாகக் கிடைப்பது பிராப்தம். அதையே விதி என்கிறோம். நாம் மேற்கொள்ளும் நல்ல வாழ்க்கையும், செய்யும் நல்வினைகளும், மரத்துண்டுக்கு விசைப்படகு உதவுவதைப்போல நமக்கு உதவி, நன்மை தரக்கூடிய வழியில் நம்மை அழைத்துச் செல்கின்றன. இதையே நம் புருஷார்த்தம் என்கிறோம். அதையே உபநிடதங்கள் கூறுகின்றன.

– சுவாமி சின்மயானந்தர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப வாழ்வினில் துறவறம்

**குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தவர்கள் மனப்பக்குவம் பெற வீட்டைவிட்டு வெளியே செல்லத்தான் வேண்டுமா? துறவறத்தை மேற்கொள்ளாமல், குடும்பத்தில் இருந்த படியே பக்தி மார்க்கத்தைக் கடைப்பிடிக்க ஓர் எளிய வழியைக் கூறமுடியுமா?**

உங்கள் வீட்டில் குடும்பத்துடன் இருந்தபடியே நீங்கள் கடவுளைப்பற்றிய சிந்தனையில் ஈடுபடலாம். பெற்றோர், மனைவி, குழந்தைகள் எல்லோரிடமும் நீங்கள் அன்பு காட்டலாம். ஆனால் அவர்கள் உங்களுடையவர்கள் அல்ல என்ற பற்றற்ற தன்மையை நீங்கள் மெல்ல மெல்ல வளர்த்துக்கொள்ள வேண்டும். கடவுள் ஒருவர் தாம் உங்களுடைய நிரந்தரமான துணை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

பணக்கார வீட்டில் வேலை செய்யும் பணிப்பெண் அங்கே உள்ள வசதிகளை அனுபவிக்கிறாள். அந்த வீட்டுக் குழந்தைகளை, "என் கண்ணா!" என்றும் – "என் ராஜா!" என்றும் கூறிக் கொஞ்சி மகிழ்கிறாள். ஆனால் அவளுக்கு அவை எதுவுமே தனக்கு உரியது அல்ல என்பது தெரியும். தன்னுடைய மண் குடிசையும், அங்கே உள்ள குழந்தைகளுமே தன்னைச் சார்ந்தவை என்பதை முழுமையாக உணர்ந்துகொண்டே அப்படிப் பழகுவாள். அதைப்போல நாமும் உலக வாழ்க்கையில் இருந்தபடியே அதிலிருந்து ஒதுங்கி வாழும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பலாப்பழத்தின் சுளையை எடுக்குமுன் கைக்கு எண்ணெயைத் தடவிக்கொள்ள வேண்டும். அப்போதுதான் கையில் பிசுக்கு ஒட்டாமல் இருக்கும். அதைப்போல இந்த மனப்பக்குவத்தை மெல்ல உருவாக்கிக்கொண்டு குடும்பத்துடன் இருக்கலாம். பந்தபாசம் உங்கள் மனத்தில் ஒட்டிக் கொள்ளாது மனம் இறைவன் வழியில் ஈடுபட, அமைதியான தியானம் தேவை. மோரைக் கடைந்தாலும் வெண்ணெய் திரளும்போது கடைவதை நிறுத்திவிடுகிறோம். அதேபோல மனப்பக்குவம் வரும்போது, குடும்ப வாழ்க்கையில் ஈடுபடும் செயல்கள் குறைந்து அடங்கிவிட வேண்டும். வீட்டிலேயே தனியான ஓரிடத்தில் அமர்ந்து தியானம் செய்ய வேண்டும்.

பணத்தை உபயோகப்படுத்தும் பொறுப்பை விட்டுவிட வேண்டும். பொன்னும் பெண்ணும் தொடர்பு உள்ள வரையில் ஆசையை வளர்க்கத் தூண்டும். ஆகையால் இந்த ஒழுக்கம் மிக அவசியம். பணத்தால் என்ன செய்ய முடியும்? உணவையும், உடையையும் இருக்க நிழலையும் பெற முடியும். அவ்வளவுதானே? இந்த அடிப்படை கிடைத்த பின் பணத்துக்காக அலையாதீர்கள். பணம் நமக்கு ஆண்டவனை அடைய உதவாது. பணம் ஆசைகளை வளர்க்கும். பணம் பக்தி மார்க்கத்திலிருந்து நம்மைப் பிரித்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்படிக் குடும்பத்தில் இருந்தபடியே, ஆசைகளைத் துறந்து, பற்றுக்களை விட்டு விலகி வாழக் கற்றுக்கொள்ளுங்கள். தாயைத்தேடும் குழந்தையைப்போல், சக்தியை நாடும் உணர்வை வளர்த்துக்கொள்ளுங்கள். அன்னை உங்களைத் தாயைப்போலப் பரிந்தோடி வந்து அழைத்துக் கொள்ளுவாள். பூனைக்குட்டி கத்தினால் போதும்; தாய்ப்பூனை எங்கிருந்தோ வந்துவிடுகிறது மனம்விட்டுப் பிரார்த்தனை செய்து கண்ணீர்விடுங்கள். அன்னை உங்கள் அழைப்பை ஏற்று வந்து விடுவாள்.

–பகவான் ராமகிருஷ்ணர்

'The Condensed Gospel of Sri Ramakrishna

என்ற நூலிலிருந்து

# உங்களுக்குப் பதினாறு பேறும் வேண்டுமா?



சகல செல்வங்களுக்கும் தரும் இமயகிரிராஜ
தனயை மாதேவி! நின்னைச்
சத்யமாய் நித்ய முள்ளத்தில் துதிக்கும் உத்
தமருக்கு இரங்கி மிகவும்
அகில மதில் நோயின்மை கல்விதனை தானியம்
அழகு புகழ் பெருமை இளமை
அறிவுசந்தானம் வலிதுணிவு வாழ்நாள் வெற்றி
ஆகுநல்லூழ் நுகர்ச்சி
தொகைதரும் பதினாறு பேறும் தந்தருளி நீ
சுகானந்த வாழ்வளிப்பாய்
சுகர்த குணசாலி! பரிபாலி! அனுகூலி! திரி
சூலி! மங்கள விசாலி!
மகவுநான் நீதாய் அளிக்கொணாதோ? மகிமை
வளர்திருக் கடவூரில் வாழ்
வாமி! சுபநேமி! புகழ்நாமி! சிவசாமிமகிழ்
வாமி! அபிராமி உமையே!

–அபிராமி பட்டர் –

நன்றி. ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபராமி பட்டர், அபிராமி அந்தாதியைத் தவிர, அபிராமி அம்பிகை மீது இரு பதிகங்கள் பாடியுள்ளார். இரண்டாவது பதிகத்தின் நிறைவுப் பாடலான மேற்கண்ட பாடலில் மக்கள் விரும்பும் பதினாறு பேறுகளைப் பட்டியலிடுகிறார்.

தமக்கென்று கேளாமல் சத்தியமாய்த் துதிப்போர்க்குப் பதினாறு பேறுகளை இப்பூவுலகில் அளிக்க அவர் விண்ணப்பிப்பது குறிப்பிடத்தக்கது.

1. நோயற்ற வாழ்வு இருந்தால் மட்டுமே பிற பெறுகளை அனுபவிக்க இயலும் ஆகவே நோயின்மையை முதலில் குறிப்பிட்டார்.

2. பொருளீட்டவும் அதனைக் காக்கவும் கல்வியறிவு தேவை.

3. அடுத்த இன்றியமையாத தேவை உணவு. அரிசி, கோதுமை, துவரை, கடலை போன்ற தானியங்கள் உணவுக்கு மூலாதாரம்.

4. தானியம் வாங்கப் பணம் வேண்டும். ஆகவே தனம் வேண்டினார். பொன், பொருள், பிறசெல்வங்கள் தனம் என்ற பேற்றில் அடங்கும்.

5. முதலில் நான்கு விதமான அடிப்படைத் தேவைகளைக் கேட்ட பிறகு மற்ற பேறுகளைக் கேட்கிறார். இயற்கை-செயற்கை அழகு அக-புற அழகு போன்றவை நமக்குச் சிறப்பு சேர்ப்பவை.

6. உயிரைக் கொடுத்தும் மக்கள் புகழடைய விரும்புகிறார்கள். 'தன்னுயிர் புகழ்க்கு விற்ற சடாயு' என்று பாடுகிறார். 'Seeking the buble reputation even in the cannon's mouth' (பீரங்கி வாயிலும் நீர்க்குமிழி போன்ற புகழ் பெற விரும்புவர்) என்கிறார் ஷேக்ஸ்பியர்.

7. நற்குடியில் பிறந்ததாலும், கல்வியாலும், சமுதாயத்தில் பெற்ற அந்தஸ்தாலும் பெருமை கொள்ளலாம் ஆனால் அவற்றால் ஆணவம் கூடாது.

8. பல்லாண்டு நீடித்த இளமையுடன் இருத்தல் ஒரு பேறு. உடலாலும் மனதாலும் இளமையுடன் இருத்தல் சிலருக்கே வாய்க்கும்.

9. மனதைத் தன் வழியில் செல்லவிடாமல் நற்செயல்களில் செலுத்துதலே அறிவு என்பார் வள்ளுவர். அதவே ஒரு பேறாகும்.

10. நன்மக்களைப் பெறுதல் மிகச் சிறந்த பேறு.

11. உடல் மற்றும் உள்ளத்து வலிமையை இங்கு 'வலி' என பட்டர் குறிப்பிடுகிறார்.

12. அடுத்ததாகத் துணிவு ஒரு பேறாகும். மன்னன் விக்கிரமாதித்தனிடம் எட்டு லட்சுமிகளும் வசித்தனர். ஒருநாள் அவர்கள் அவனை விட்டு நீங்குவதாகக் கூறினார்கள் என்றாலும், அவன் பெரிதும் விரும்பும் ஒரு லட்சுமி மட்டும் நிலைத்திருக்கத் தயார் எனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினார்கள். விக்கிரமாதித்தன் தைரியலட்சுமியே தன்னுடன் தங்க வேண்டும் என்றான். அவனது பதிலால் மகிழ்ந்து அஷ்ட லட்சுமிகளும் நிலைத்து வாழ்ந்தனர் என்பர். இதனால் துணிவின் சிறப்பு தெளிவாகிறது.

13. வாழ்நாள் என்பது நீண்ட ஆயுளைக் குறிக்கும். என்றும் பதினாறு என்ற ஆயுளை மார்க்கண்டேயருக்குச் சிவபெருமான் அளித்தது போல் நமக்கும் அபிராமி அன்னை நீண்ட ஆயுளை அருள வேண்டும்.

14. எடுத்த செயல்கள் யாவினும் வெற்றி எய்வதும் ஒரு பேறு அதையும் அன்னை அபிராமி அருள்வாள்.

15. வள்ளுவர் ஊழியனை, ஆகூழ், போகூழ் என இரு வகைப்படுத்தினார். ஒருவனுக்கு ஆகூழால் சுறுசுறுப்பும், போகூழல் சோம்பலும் தோன்றும் என்கிறார். ஆகவே அபிராமி பட்டரும் ஆகுநல்லூழ் வேண்டும் என்கிறார்.

16. மேற்சொன்ன பதினைந்து பேறுகளையும் அனுபவிக்கும் வாய்ப்பை நுகர்ச்சி என்பர். வள்ளுவரும் 'வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது' என்றார். அத்தகைய துய்க்கும் நுகர்ச்சியை அபிராமியே நல்குவாள். அவற்றை அருளும் அபிராமியின் சிறப்புகளைப் படலின் நிறைவுப் பகுதியில் உரைக்கிறார் அபிராமி பட்டர். அவள் நற்குணங்கள் உடையவள் உலகைப் பரிபாலிப்பவள். பக்தர்களுக்கு அனுகூலம் செய்பவள். முத்தலைச் சூலம் தாங்கியவள். மங்களம் நிறைந்தவள்.

மகிமை வளர் திருக்கடவூரில் வாழ்பவள். அழகானவள். நல்ல ஆக்ஞா சக்கரம் உடையவள். புகழ் பெற்றவள். சிவனுக்கு மகிழ்ச்சி அளிப்பவள். சிவனின் வாம (இடப்) பாகத்தில் இருப்பதால் வாமி எனப்படுபவள்.

நாமும் இப்பாடலைப் பாராயணம் செய்து பதினாறு பேறுகளும் பெறலாம்!



## சிவன் தேவஸ்தான பிரமோற்ஸவம்

| | |
|---|---|
| கொடியேற்றம் | : 20.06.2009 சனிக்கிழமை |
| மஞ்சத் திருவிழா | : 26.06.2009 வெள்ளிக்கிழமை |
| திருச்சூரகத்திருவேட்டை | : 27.06.2009 சனிக்கிழமை |
| சப்பறத் திருவிழா | : 27.06.2009 சனிக்கிழமை |
| தேர்த்திருவிழா | : 28.06.2009 ஞாயிற்றுக்கிழமை |
| தீர்த்த உற்ஸவம் | : 29.06.2009 திங்கட்கிழமை |
| வருஷாபிஷேகம் | : 02.07.2009 வியாழக்கிழமை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஒளி

ஆன்மீக சிற்றிதழ் 5



- சிவன் தேவஸ்தான கொடியேற்ற உற்சவம் - 2008 -
- திருக்கோயிற் பூசை
- மகோற்சவம்

ஆசிரியர்
திருமலை சுந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாதையை விதைப்பவன்
நட்பை அறுவடை
செய்வான்
அன்பைப் பயிர் செய்பவன்
அருளைப் பெறுவான்
-சாது-

அட்டைப்படம் : சிசு



அன்பு செய்
ஆனந்தித்திரு

# சிவனொளி

172, பிரதான வீதி, திருக்கோணமலை

சிற்றிதழ் –5
2009 – ஆனி

இதழில்....


- திருக்கோயிற்பூசை ........3
- மஹோற்ஸவம் ..........6
- கொடியேற்ற உற்ஸவம் ....8
- வாகனத் திருவிழா ...........10
- தேர்த் திருவிழா..............10
- தீர்த்தத் திருவிழா..............11
- கொடியேற்றத்தைத் ......11

தொடர்ந்து.............


நற்றுணையாவது
நமசிவாயவே

## ஆசிரியரின்....

சிவனொளி: சிற்றிதழ் –5 சிவன் தேவஸ்தான பிரமோற்ஸவ இதழாக மலர்ந்துள்ளது. 'மகோற்ஸவம்' பற்றிய முழுக் குறிப்புக்களும் சுருக்கமாக தரப்பட்டுள்ளன.

இந்து மதம் என்ன சொல்கிறது? என்ற 'திருமதி ஞானம் ஞான சேகர ஐயர் அவர்களின் நூலில் இருந்து இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

ஆசிரியர் திருமதி ஞானம் ஞானசேகர ஐயர் அவர்களுக்கு எங்கள் நன்றிகள்.

இந்து சமயத்தின் பெருமைகளை கோட்பாடுகளை உட் கருத்துக்களை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்பது எமது விருப்பத்தில் ஒன்றென்பதை நீங்கள் அறிவீர்கள்.

'ஆன்மீக உணர்வு' ஏற்பாட்டால் 'மானுடம் பிரகாசமாகும்' என்பது சிவனொளியின் நம்பிக்கை.

அந்த நம்பிக்கை ஏற்பட உங்களுடன் கை குழுக்கிக் கொண்டிருக்கின்றோம்.

அச்சு: அஸ்ரா பிரிண்டர்ஸ்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# • திருக்கோயிற்பூசை

# • மஹோற்ஸவம்

- திருமதி ஞானம் ஞானசேகர ஐயர் -



## திருக்கோயிற்பூசை

### திருக்கோயிற்பூசை:

ஆலயத்தில் இடம்பெறும் பூசைகள் மூன்று பிரிவுகளாக வகுக்கலாம். அவை நித்தியபூசை, நைமித்திகபூசை (விசேட தினங்களில் இடம்பெறும் பூசை), காமிகபூசை (பயன்கருதிச் செய்யும் பூசை) என்பனவாம்.

### நித்தியபூசை

திருக்கோயில்களில் இடம்பெறும் நித்திய பூசைகள், அவ்வக்கோயில்களின் வசதிக்கும் வழக்கத்திற்கும் ஏற்ப நிகழும். இவை முறையே, திருவனந்தல் (அதி விடியற்காலை), காலைச்சந்தி (சூரிய உதயத்தின்பின்), உச்சிக்காலம் (நடுப்பகல்), மாலை (சாயரட்சை), இரண்டாங்காலப்பூசை, அர்த்தசாமப்பூசை (இறுதியில் இடம் பெறுவது) என வழங்கும்.

பூசையாற்றும் அர்ச்சகர் அதிகாலையில் நீராடி நித்தியு கருமங்களை முடித்து, ஆலயத்தையடைவர். அங்கு துவார பாலகரைப் பிரார்த்தனை செய்து தலமூர்த்திக்குரிய ஊர்தியை வழிபட்ட அநுமதிபெற்றபின் மண்டபத்தை அடைவர். பின்பு பூசைக்குத் தம்மைத் தயாராக்கிய பின் பைரவர் ஆலயம் சென்று, முதல்நாள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்படைக்கப்பட்ட கோயில் திறப்பினை அங்குச முத்திரையால் எடுத்து, இறைவனுக்குத் திருப்பள்ளியெழுச்சிபாடி, மூல மூர்த்தத்திற்குரிய மந்திரத்தை உச்சரித்தபடி கதவைத் திறப்பர்.

திருக்கோயிலிற் பகற்பூசை சூரியவழிபாட்டுடனும் இரவுப்பூசை சந்திர வழிபாட்டுடனும் ஆற்றப்படும்.

தினந்தோறும் ஆற்றப்படும் பூசையில் விசேட கிரியைகள் நிகழ்வதில்லை. அபிடேகம், நைவேத்தியம், பூசை என்பன மட்டும் நடைபெறும்.



## நைமித்திகபூசை

- வாரத்துக்கு ஒருமுறை நிகழ்வன.

சோமவாரம், சுக்கிரவாரம்.

- இருவாரத்துக்கொருமுறை நிகழ்வன

பிரதோஷம்

- மாதத்துக்கு ஒரு முறை நிகழ்வன:

மாதப்பிறப்பு, சதுர்த்தி, அமாவாசை, பௌர்ணமி, சஷ்டி

- வருடத்துக்கொருமுறை நிகழ்வன

தைபூசம், தைப்பொங்கல், சிவராத்திரி, பங்குனி உத்தரம், சித்திரை வருடப்பிறப்பு, சித்திரா பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடிப்பிறப்பு, ஆடிச்செவ்வாய், ஆடிப்பூரம், ஆவணி ஞாயிறு, ஆவணிச் சதுர்த்தி, புரட்டாதிச் சனி, நவராத்திரி, ஐப்பசி வெள்ளி, கேதாரகௌரி விரதம், கந்தசஷ்டி, கார்த்திகைத்திங்கள், திருக்கார்த்திகை, விநாயகர், விரதம், மார்கழித்திங்கள், திருவெம்பாவை, மகோற்சவம் என்பனவாம்.

- பன்னிரண்டு வருடத்துக்கொருமுறை நிகழ்வன:

கும்பாபிஷேகம், மாசிமகம் என்பனவாம்.

தினமும் நடைபெறும் பூசைகளில் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்யும் முகமாகவே நைமித்திகபூசை இடம்பெறும். இதில் சுவாமியை திருமுழுக்கிட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஸ்திரம் சாத்தி ஆபரணங்கள் அணிவித்து பலவகை மாலைகளினால் அர்ச்சகர் அலங்கரிப்பர். பின்னர் சகல உபசாரங்களோடும் அர்ச்சகர் சுவாமியை வந்தனை செய்வார். இப்பூசையில் கிரியைகள் விரிவாக நிகழ்த்தப்படும். நைமித்திக பூசை ஒன்றின் ஒழுங்கு பின்வருமாறு அமைந்திருக்கும்.

- ஆவாகனம்:இறைவனை விக்கிரகத்திலே எழுந்தருளும்படி மந்திர உச்சாடனத்தால் வேண்டுவார்.
- ஆசனம் : இறைவனுக்கு ஆசனம் நல்குதல்
- பாத்தியம் : அவரது திருப்பாதங்களை விளக்குதல்.
- அர்க்கியம் :இறைவனுக்கு சந்தனச்சாந்தும் அரிசியும் மரியாதைக் கையுறைகளாக வழங்குதல்.
- உபவீதம்: சுவாமிக்கு பூணூல் தரித்தல்
- சந்தனம் : இறைவனுக்குச் சந்தனச்சாந்து பூசுதல்
- புஷ்பம் : இறைவனுக்கு மலர்கள் இடுதல்
- தூபம் : எழுந்தருளிய இறைவனுக்கு தூபம் காட்டுதல்




- தீபம் : பல்வகைப்பட்ட தீபங்களைக் காட்டுதல்
- நைவேத்தியம்:அமுது நிவேதித்தல்
- தாம்பூலம்: வெற்றிலை, பாக்கு, பழம் வழங்குதல்
- சோடசோபசாரம்: கண்ணாடி குடை, சாமரம், விசிறி, கொடி ஆலவட்டம் முதலிய பதினாறு உபசாரப் பொருட்களைக் காட்டுதல்.
- கற்பூர நீராஞ்சனம் : கற்பூரம் காட்டுதல்
- சுவர்ண புஷ்பம் : தங்கம், காச கையுரையாக வைத்தல்.
- தினந்தோறும் இடம்பெறும் (நித்திய) பூசையில் இவையாவும் ஆற்றப்படமாட்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகோற்ஸவம்



– சிவன் தேவஸ்தானம் 2005 –

நைமித்திக கிரியைகளில் மகோற்சவம் சிறப்பானதொரு கிரியையாகும். இது இறைவனின் ஐந்தொழில்களை நினைவூட்டுகிறது. கொடிமரம் உள்ள ஆலயங்களிற் கொடியேற்றம். தேர், தீர்த்தம் போன்ற உற்சவங்களும், கொடிமரமில்லா ஆலயங்களில் அலங்காரத் திருவிழாக்களும் இடம்பெறும்.

ஆலயத்தில் மகோற்சவம் தொடங்கி விட்டால் மக்கள் வாழ்க்கையிலும் ஓர் உயிர்த்துடிப்பு ஏற்படுகிறது. இயந்திரமயமான வாழ்க்கை வாழுகின்ற மக்களது மனத்தின் சலிப்பையகற்றி, உற்சாகத்தையூட்டி, மனப்பூரிப்பை ஏற்படுத்தி, வாழ்க்கையிற் பிடிப்பு ஏற்பட இது வழி வகுக்கின்றது.

**மக்கள் ஒன்று சேர்ந்து கோயிலையும் வீதிகளையும் சுத்தம் செய்து, குலை வாழைகள் நாட்டி, தோரணங்கள் தொங்க விட்டு, அலங்கரிப்பர். வீடுகளைச் சுத்தம் செய்வதுடன் விரதமும் மேற் கொள்வர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகோற்சவம் தொடங்குவதற்கு முன் இடம்பெறும் கிரியைகள்:**

# அநுஞ்ஞை – அநுமதி பெறல்

கொடியேற்ற உற்சவம் செய்யும் ஆச்சாரியார் ஒரு தட்டிற் பச்சையரிசி பரப்பித் தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, சந்தனம், மஞ்சள், சுவர்ணபுஷ்பம், பூ, மாவிலை, தர்ப்பை என்பவற்றை வைத்து தீர்த்தம் தெளித்து பூசை நிகழ்த்துவார். பின்பு அங்கு வந்திருக்கும் ஏனைய ஆச்சாரியார்களிடம் ஆசி பெற்று, பிள்ளையார், மூல மூர்த்தி, அஸ்திர தேவர், உற்சவ மூரத்தி ஆகிய தெய்வங்களுக்குப் பூசை ஆராதனை ஆற்ற உற்சவத்தை நன்முறையில் நடத்த அநுமதியும் ஆசியும் தந்தருளுமாறு வேண்டுவார்.

## கிராம சாந்தி

தீய சக்திகளாற் பெருவிழாவிற்கு இடையூறு ஏற்படாமல், மங்களம் உண்டாகும்படி காவற்கடவுளரான பைரவ மூர்த்திக்கு ஆற்றப்படும் கிரியை.

## வாஸ்து சாந்தி

நிலத்திலுள்ள குற்றங்குறைகளை நீக்குவற்காக ஆலய மண்டபத்தில் அக்கினி காரியத்துடன் செய்யப்படும கிரியை. வைக்கோல், தர்ப்பை முதலியவற்றாற் செய்யப்பட்ட வாஸ்து புருஷனைப் பூசித்து சிவாக்கினியில் எரியச்செய்தபின், அவ்வுருவத்தை ஆலய மண்டபங்கள், வீதிகள் முதலிய இடங்களில் இழுத்து வந்து ஈசானத்தில் (வடகிழக்கு மூலையில்) போட்டு விடுவார். வெட்டிய நீற்றுப் பூசனிக்காயிற் குங்குமம் பூசப்பட்டு இதனுடன் எடுத்துச் சென்று போடப்படும், இக்கிரியையினால் இடசுத்தி ஏற்படுகிறது.

## மிருத் சங்கிரகணமும் – அங்குரார்ப்பணமும்

மண்ணை மந்திர சகிதமாகப் பெறுவதே மிருத் சங்கிரகணமாகும். (மிருத் – மண், சங்கிரகணம் – சேர்த்தல்) நற்காரியங்களைத் தொடங்கும் போது நவதானியம் இடுதல் முக்கியமாகச் செய்யப்படும். இதனைப் 'பாலிகையிடுதல்' என்பர். ஆலயத்தின் வடகிழக்கு அல்லது வடக்கு திசையில் இது செய்யப்படும். அங்குரார்ப்பண முறையானது நன்கு செழித்து வளர்ந்தால் நாட்டிலே தானிய விருத்தி சிறக்குமென்பது ஐதீகம். (அங்குரம் – முளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இரட்சாபந்தனம்

விழாக்கள் இடையூறின்றி நிறைவேற வேண்டமென வேண்டுதல் செய்து, ஆச்சாரியார் தனக்கும் உற்சவ மூர்த்திகளுக்கும் காப்புக் கட்டுவார்.

இதனை தொடர்ந்து உலகெங்கும் நன்மை உண்டாக வேண்டி ஆச்சாரியார் மேளமடிப்பார்.

மேற்கூறப்பட்ட கிரியைகள் யாவும் கொடியேற்ற விழா நடைபெறுவதற்கு முதல் நாள் இரவு நடாத்தப்படும் கிரியைகள் ஆகும்.

## கொடியேற்ற உற்சவம்

கொடியேற்ற உற்சவம் மூலமூர்த்திக்குரிய ஊர்தியின் முன்னால் இடம்பெறும். கொடிச்சீலையில் தலமூர்த்திக்குரிய ஊர்தி, அடையாளம் முதலியவற்றோடு கண்ணாடி, சூரிய சந்திரர், பூரணகும்பம் முதலியனவும் வரையப்பட்டிருக்கும்.

**மூலமூர்த்திகளும் அடையாளங்களும்**

**சிவாலயம் எனில் : ரிஷபமும் சூலமும்**

விநாயகர் ஆலயம் எனில்: மூஷிகமும் அங்குசமும்

சுப்பிரமணியர் ஆலயம் எனில் : மயூரமும் வேலும்

கொடியேற்ற தினத்தன்று உற்சவமூர்த்தியை அலங்கரித்து கோயிலை வலம் வந்து கொடித்தம்பத்திற்கு முன்னால் எழுந்தருளச் செய்வர். ஆச்சாரியார் ஒருவராற் கொடிச்சீலை உள்வீதி வலமாகக் கொண்டுவரப்பட்டதும் மூலமூர்த்தியின் சந்நிதானத்தில் பூசை வழிபாடு ஆற்றப்படும். அதன்பின்னர் கொடித்தம்பத்திலுள்ள கயிற்றுடன் கொடிச்சீலையை இணைத்து வேதபாராயணத்துடன் கிரியைகள் ஆற்றுவர்.

கொடியேற்றும் ஆச்சாரியார் தேவர்கள் யாவரையும் அழைத்து, தீர்த்தவிழா இடம்பெறும் வரை விக்கினங்கள் நிகழாது அருள் புரிய வேண்டுமென வேண்டுதல் செய்வர்.

சகல வாத்திய ஒலிகளுடனும் ஆச்சாரியார்களின் வேதபாராயணத்துடனும் கொடியைக் கொடித்தம்பத்தில் ஏற்றுவர். கொடிச்சீலையின் மறுமுனையைக் கொடித்தம்பத்தில் வலமாகச் சுற்று வந்து, தம்பத்தின் அடியிற் கட்டுவர். அவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டும் போது தம்பத்தின் அடியைச் சுற்றிலும் தர்ப்பைகளைப் பரப்பி இணைத்துக் கட்டுவர்.

இதனைத் தொடர்ந்து அலங்காரம் இடம்பெறும். பின் அவிப்பொருள் பலியிடப்பட்டதும், கொடித்தம்பத்திற்குத் தூபதீப ஆராதானைகள் இடம்பெறும்.

கொடியேற்றம் ஆச்சாரியார் திக்குப்பாலகரைத் தியானித்து, அவர்களுக்குரிய வேதமந்திரம், ராகம், பண், தாளம், வாத்தியம், நிருத்தம் முதலியவற்றுடன் இறையருளைக் கொடித்தம்பத்தில் ஆவாகிப்பர்.

தீர்த்த உற்சவம் இடம்பெறும் வரை தினமும் இரு வேளைகளிற் கொடித்தம்பத்திற்கு அபிடேக பூசையாராதனைகள் ஆற்றப்படும்.
உற்சவ மூர்த்திக்கும் விசேடமான அலங்காரத்துடன் ஆராதனைகள் இடம்பெறும். வேதபாராயணம், திருமுறையோதல் என்பவற்றுடனும், தீவர்த்தி, கொடி குடை முதலிய அலங்காரங்களுடனும் உள்வீதியுலா நிகழும். உற்சவமூர்த்தி ஈசான மூலையை அடைந்தவுடன் யாகசாலையிற் பூர்ணாகுதியும் ஆராதனையும் நடைபெறும். அதன்பின்னர் அடியார்களுக்கு யாகரட்சை வழங்கப்படும். இதன் பிற்பாடு உறசவமூர்த்தி வெளிவீதியுலா வருவர். உற்சவமூர்த்தி வீதியுலா வரும்போது தீட்சை பெறாதோர் மூரத்தியைத் தரிசிப்பதாற் 'சாம்பவ தீட்சை' எனும் தீட்சையைப் பெறுவர்.

உற்சவ காலத்திற் சுவாமி வீதியுலா வரும் வாகனங்கள் நாளுக்கு நாள் வேறுபடும். எந்தநாளில் எந்த வாகனத்தில் திருவுலா நடைபெறும் என்பதற்கும் அந்நாட்களில் உற்சவமூர்த்திக்கு எவ்வகை அலங்காரம் உரியது என்பதற்கும் நியதிகள் உண்டு. எனினும் அவ்வக்கோயில்களுக்குரிய ஐதிகத்துக்கும் வழமைக்கும் ஏற்ப இவற்றை அனுசரித்துக் கொள்வதை வழக்கிற் காண்கிறோம்.

கொடியேற்றம் தொடக்கம் தீர்த்தத் திருவிழா நிகழும்வரை நடைபெறும் உற்சவங்கள் இறைவனின் பஞ்சகிருத்தியங்களைக் குறிப்பன.

**கொடிறேற்றம் - படைத்தல்**

அங்குரார்ப்பணம், இரட்சாபந்தனம், கொடியேற்றம், திருக்கல்யாணம், ஆகியன இறைவனின் படைத்தல் தொழிலைக் குறிப்பன.

உயிர்களுக்கு நிலைக்களனான உடம்பு, உணர்வுக்கு வேண்டிய கருவி கரணங்கள், வாழ்க்கை நடாத்துவதற்கான இடங்கள், நுகர்ச்சிக்கு வேண்டிய பொருட்கள் ஆகியவற்றை இறைவன் உயிர்களுக்காகப் படைக்கின்றான். (தனு, கரண, புவன போகங்கள்) தனு என்பது உயிர்களின் கவசமான உடம்பு; கரணம் என்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பில் உள்ள கருவிகள்; உயிர்கள் வசிக்க வேண்டிய உலகம் (புவனம்); உடம்பில் நின்று உயிர் அனுபவிக்கும் சுக துக்க அநுபவங்கள் (போகம்)

கொடிமரம் பதியையும், அதிற் சுற்றப்பட்ட சீலை பசுவையும் (உயிர்களையும்) சீலையைச் சுற்றியுள்ள கயிறு பாசத்தையும் குறிக்கும். ஆசைகள் சம்பந்தமாக ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் இடையேயுள்ள தொடர்பைக் கொடிமரம், கயிறு சுற்றிய சீலை ஆகியன காட்டுகின்றன. கொடியேற்றம் என்பதன் தத்துவப் பொருள், ஆணவம், வலிமை இழந்து, ஆன்மா ஆசைநீக்கம் பெறுதற் பொருட்டு திருவருளாகிய கொடியை ஏற்றுதல் என்பதாகும்.

**வாகனத் திருவிழா – காத்தல்**

வாகனத் திருவிழா,அக்கினிகாரியம், பலி என்பன காத்தல் தொழிலைக் குறிப்பனவாகும். வாகனத் திருவிழா நடக்கும் நாட்களில் உற்சவ மூர்த்திகள் உரிய ஊர்திகளில் திருவுலா வருவர். (தோன்றி உலகங்களையும், உடம்பெடுத்த உயிர்களையும் உரிய கால எல்லை வரையிற் காப்பாற்றிக் கன்ம நுகர்ச்சிக்குத் துணை செய்தலே காத்தல் திதி – எனப்படும்.)

**தேர்த்திருவிழா – அழித்தல் (சங்காரம்)**

தேர்கள் பலவகைப்பட்ட சில்லுகளையும் உறுப்புகளையும் கொண்டு விளங்குவன. இவை நான்கு பிரிவுக்குள் அடக்கப்படும். சதுரவடிவமான தேர் நாகரம் எனவும், எண்கோண வடிவமான தேர் திராவிடம் எனவும், வட்டவடிவினது வேசரம் எனவும், அறுகோண வடிவிணதான தேர் அந்தரம் எனவும் வழங்கப்படும்.

தேர்த்திருவிழா, சூர்ணோற்சவம் என்பன அழித்தல் தொழிலைக் குறிப்பனவாம். பல பிறவிகளிற் பிறந்திருந்து உழலும் உயிர்களை இளைப்பாற வைத்தல் அழித்தல் எனப்படும்.

சூர்ணோற்சவம் என்பது தீர்த்த உற்சவம் நிகழுமுன் மஞ்சள் முதலிய திரவியங்களை உரலில் இடித்துப்பெறும் தூளை, சாணம், தைலம், நெய் முதலியவற்றுடன் சுவாமிக்குச் சாத்துதலாகும். சங்காரத் தொழிலை ஆற்றிய இறைவனைச் சாந்தப்படுத்துவதற்காகவே இக்கிரியை இடம்பெறும்.

**மௌன உற்சவத் திருவிழா – மறைத்தல்**

உயிர்களிடம் இருவினையொப்பு (நன்மை தீமை இரண்டையும் ஒன்றாக எண்ணு மனநிலை) வருவித்து, மலங்களை முதிர்விக்கும் அருட்செயல், மறைத்தல் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீர்த்தத் திருவிழா – அருளல்**

உற்சவ மூர்த்தி அஸ்திர தேவருடன் தீர்த்தம் நிகழும் இடத்திற்கு எழுந்தருளுவர். தீர்த்த உற்சவம் நிகழும் இடத்தில் அஸ்திர தேவருக்கு முறைப்படி அபிடேகம் நடைபெறும். முதலில் ஆச்சாரியாரும் அஸ்திர தேவரும் தீர்த்தமாடுவார். உயிர்கள் பக்குவ நிலையில் ஆசைகளை ஒழித்து வீடுபேறு எனப்படும் முத்தியை அடைதலை இது குறிக்கும்.

**திருக்கல்யாணம்**

தீர்த்தத் திருவிழாவையடுத்து இடம்பெறும் உற்சவம் திருக்கல்யாணம் ஆகும். இது நம் போன்ற சாதாரண மக்கள் செய்யும் கல்யாணம் போன்றதன்று என்பதை நாம் உணர வேண்டும்.

திருக்கல்யாணம் என்பது, அருள்வடிவவான சக்தி அறிவுமயமான இறைவனோடு கலந்து பிரபஞ்சத்தை (உலகை) இயங்க வைப்பதைக் குறிக்கும்.

**பூங்காவனம்**

திருக்கல்யாண உற்சவம் இடம்பெற்றதன் மறுநாள் பூங்காவன உற்சவம் இடம்பெறும். மக்களிடம் உள்ள கலையாற்றலை வெளிப்படுத்துவதற்காகவும் அதனால் மக்களின் மனதில் உற்சாகத்தை ஏற்படுத்துவதற்காகவும் இவ்வுற்சவம் இடம்பெறும். இவ்விழாவில் உற்சவ மூர்த்திகளை எழுந்தருளச் செய்து பூசை ஆராதனைகள் நிகழ்த்துவர். இதனைத் தொடர்ந்து கலை நிகழ்சிகளும் இடம்பெறும். கடவுள் எங்கும் நிறைந்தவர் என்பதனை இவ்வுற்சவம் குறிக்கின்றது.

## கொடியேற்றத்தைத் தொடர்ந்து....

கொடியேற்றத்தைத் தொடர்ந்து பத்து நாட்கள் நிகழும் திழுவிழாக்கள் தனித்தனி தத்துவங்களை உணர்த்துகின்றன.

| | | |
|---|---|---|
| **முதல் நாள் விழா** | : | தூல உடம்பை நீக்குவதற்காக |
| **இரண்டாம் நாள் விழா** | : | தத்துவமயமான உடம்பை நீக்குவதற்காக |
| **மூன்றாம் நாள் விழா** | : | மூவினை (சஞ்சிதம், பிரத்துவம், ஆகாமியம்) முக்குணம் (இராட்சதம், தாமதம், சத்துவம்) முப்பற்று (மண், பொன், பெண் ஆசைகள்) முக்குற்றம் (காமம், வெகுளி, மயக்கம்) என்பவற்றை நீக்குவதற்காக. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நான்காம் நாள் விழா:** நாற்கரணம் நீங்க (தனு, கரண, புவன, போகம்) நால்வகைத் தோற்றம் நீங்க (ஊர்வன, பறப்பன, விலங்கு, மனிதன்)

**ஐந்தாம் நாள் விழா :** ஐம்பொறிகளின் இயக்கம் நீங்க; ஐந்தவம் (சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரீயம், துரீயாதீதம் நீங்க.

**ஆறாம் நாள் விழா :** ஆறு குற்றம் (காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம்) நீங்க.

**ஏழாம் நாள் விழா :** எழுவகைப் பிறப்பு நீங்க

**எட்டாம் நாள் விழா :** இறைவனின் எண்குணங்கள் விளங்க

**ஒன்பதாம் நாள் விழா:** முக்கிருத்தியம் மூலவடிவம் மூவிடத்துறைதல் என்பவற்றைக் குறிக்கும்.

**பத்தாம் நாள் விழா :** சிந்தையும் மொழியும் செயலும் தன்னியல்பில் சொல்லாவிடத்து, பரமானந்தக்கடலில் மூழ்கும் பொருட்டு செய்யப்படுவதாகும்.

கோயில்களிற் பத்து நாள் திருவிழாவே நடைபெறும். எனினும் மாவிட்டபுரம், நல்லூர் போன்ற முருகன் கோயில்களில் இருபத்தைந்து நாள் விழா நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. பத்து நாள் திருவிழாக்கள் சுட்டும் தத்துவத்தை மகோற்சவ விளக்க நூல் தனித்தனி விபரித்துக் காட்டியுள்ளது.

ஆலயங்களில் இடம்பெறும் திருவிழாக்கள் ஊர் மக்களை ஒன்று சேர்க்கின்றன. மக்கள் மனதில் நற்பண்புகளை வளர்க்கின்றன. சொந்தக் கவலைகளை மறந்து அமைதியான வாழ்வை வாழச் செய்கின்றன. ❀

❀❀❀❀❀❀❀❀❀❀❀❀

---

**அன்பே சிவம்**

அன்பும் சிவமுமிரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்த பின்
அன்பே சிவமாயமர்ந்திருந்தாரே. —திருமூலர்—


---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனொளி

ஆன்மீக சிற்றிதழ் 6



ஆசிரியர்
திருமலை சுந்தா

- தேர்த் திருவிழா
- சிவன் தேவஸ்தானம்

10/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுக்கை அழுக்கு
சொல்லும்
இழுக்கை இழுக்கு
கொல்லும்
-சிாதுு-

அட்டைப்படம் : சிசு



அன்பு செய்
ஆனந்தித்திரு

# சிவனொளி

172, பிரதான வீதி, திருக்கோணமலை

சிற்றிதழ் -6

2009 - ஆனி

## இதழில்....


- தேர்த் திருவிழா...........03
  -கோப்பாய் சிவம்-
- தேரின் அமைப்பும், தத்துவமும்..........10
  -த. சிவகுமாரன்-
- இரதங்களும் அவற்றின் தன்மைகளும்..9 , 12


நற்றுணையாவது நமசிவாயவே



## ஆசிரியரின்....

சிவனொளி சிற்றிதழ் - 6 மலர்ந்துள்ளது.

சிவன் தேவஸ்தான 'தேர்த்திருவிழா' வினை நினைந்து 'தேர்' சம்பந்தப்பட்ட கட்டுரைகள் சிவனொளி பக்கங்களை அலங்கரிக்கின்றன.

'கோப்பாய் சிவம்' தமிழருவி த.சிவகுமாரன் முதலியோரின் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

மகோற்ஸவ ரதோற்ஸவ மூர்த்தம் தீமையின் பொருட்டு எழுந்தருளி மனிதருக்குள் இருக்கும் காமம், குரோதம், லோபம் மோகம், மதம் ஆச்சார்யம் ஆகிய தீய எண்ணங்களை அழித்து பொறுமை, பக்குவம், அமைதி, சமாதானம் ஆகியவைகளை ஏற்படுத்தி மனித வாழ்வின் மேம்பாட்டையும் பண்பாட்டையும் கூறி நிற்கின்றது.


மானுட நேயம் மலர ஆன்மீகம் பாதை போடட்டும்.

அடுத்த இதழில் பேசுவோமே!

அச்சு: அஸ்ரா பிரிண்டர்ஸ்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேர்த்திருவிழா

## -வரலாற்று நோக்கும் தத்துவ விளக்கமும் -

● ப. சிவானந்தசர்மா (B.A (Hons)
(கோப்பாய் சிவம்)

தேர் மிகப் புராதனமானது. தமிழர் வாழ்வோடும், இந்துப் பண்பாட்டோடும் ஐக்கியமானது. வேத இலக்கியங்களிலே தேர் பற்றிய செய்திகளைக் காணமுடிகிறது. கடையாணி முதலிய தேரின் நுண்ணிய பாகங்கள் பற்றிய குறிப்புக்கள் இருக்கு வேதத்திலேயே காணப்படுகின்றன.

யஜுர் வேதத்திலே ஸ்ரீ ருத்ரமானது இறைவனை இவ்வாறு துதிக்கிறது.

**"ரதேப்யோ ரதேப்பயஸ்ச் சவோ நமோ நம:**
**ரதேப்யோ ரதிபதிப்யஸ்ச் சவோ நமோ நம:**
**க்ஷத் ருப்ய: ஸங்க்ரஹீ த்ருப்யஸ்ச் சவோ நமோ நம:**
**தக்ஷப் யோ ரதகாரேப்யஸ்ச் சவோ நமோ நம:"**

(ஸ்ரீ ருத்ரம் 4, 1, 4, 2)

**இதன் பொருள்:-**

"தேரில் செல்பவர்களாகவும் தேரில்லாதவர்களாகவும் உள்ள உங்களுக்கு நமஸ்காரம். தேர்களாகவும் தேர்களின் தலைவர்களாகவும் உள்ள உங்களுக்கு நமஸ்காரம். தேர்களை ஓட்டுபவர்களாகவும் இழுத்துப்பிடித்து நிறுத்துபவர்களாகவும் உள்ள உங்களுக்கு நமஸ்காரம். தச்சர்களாகவும் தேர் செய்கிறவர்களாகவும் உள்ள உங்களுக்கு நமஸ்காரம்."

மிகப் பழைய உபநிடதமாகிய கடஉபநிடதத்தில் குதிரை பூட்டிய தேராக இவ்வுடல் உருவகிக்கப்படுகிறது.

**"ஆத்மானம் ரதினம் வித்தி சரீரம் ரதமேவது.**
**புத்திம் து சாரதிம் வித்தி மன: ப்ரக்ரஹமேவச.**
**இந்த்ரியாணி ஹயானாஹுர் விஷயாம்ஸ் தேஷு கோசரான் ஆத்மேந்த்ரிய மனோயுக்தம்**
**போக்தேத் - யாஹுர் மநீஷிண:"**

(கடோபநிடதம் 3, 3, 3, 4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதன் பொருள்:-**

"சரீரத்தைத் தேராகவும் மனத்தைக் கடிவாளமாகவும் புத்தியைச் சாரதியாகவும் ஜீவனைத் தேரில் வீற்றிருப்பவனாகவும் அறி. இந்திரியங்களைக் குதிரைகள் என்றும் விஷயங்களை அவை செல்லும் பாதைகள் என்றும் கூறுவர்.

இதிகாசங்களிலே மன்னர்கள் பயன்படுத்தும் தேர்களைப் பற்றிய பல செய்திகள் வருகின்றன. தேரைப் பயன்படுத்தி வீரப்போர் புரிவோருக்கு அதற்கேற்ற வகையில் பல்வேறு பட்டங்கள் வழங்கப்பட்டிருந்தன.

அதிரதன் - எண்ணிறந்த வீரர்களுடன் பெருந்தேரிலிருந்து போர்செய்பவன்.
மகாரதன் - தானொருவனாய் பதினாயிரம் வீரரை எதிர்த்துப் போர் செய்பவன்.
சமரதன் - வேறொரு தேர்வீரனோடு சமமாகப் போர் செய்பவன்.
அர்த்தரதன் - போர் புரிந்து பின்னடையும் தேர்வீரன்.

இராமபிரானின் தந்தையாகிய சத்தியவிரதனுக்கு அவரது சொந்தப் பெயரே மறைந்துவிடுமளவுக்கு தசரதன் என்ற அவரது பெயர் நிலைத்துவிட்டது. பத்துத் திக்குகளிலும் தேர் செலுத்த வல்லவர் என்பது இப்பெயரின் கருத்து.

பகவான் கண்ணன் அர்ச்சுனனின் தேர்ச்சாரதியாக அமர்ந்து தேரிலிருந்தபடியே கீதையை உபதேசம் செய்தான்.

புராணங்களிலும் தேர்கள் பற்றிய பல்வேறு செய்திகள் இடம்பெறுகின்றன. பூமியையே தேராகக் கொண்டு சிவன் முப்புரங்களை எரிக்கப் புறப்பட்ட செய்தி முக்கியமான ஒன்று. பிற்காலத் தமிழ்ப் புராணங்களிலும் திருமுறைகளிலும் இது பெரிதும் கூறப்படுகிறது.

ஆகமங்களைப் பின்பற்றியெழுந்த சிற்ப சாஸ்திர நூல்களிலே 'மானசாரம்' என்பது குறிப்பிடத்தக்கது. ஆலயங்களில் பயன்படுத்த வேண்டிய தேரின் இலக்கணங்கள் பற்றி இந்நூல் விரிவாக எடுத்துக் கூறுகின்றது. இரண்டு முதல் ஒன்பது வரையிலான எண்ணிக்கை கொண்ட சக்கரங்களை உடைய பலவகையான தேர்கள் பற்றி நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

சைவ சித்தாந்த நூல்களிலும் தேர் உருவக விளக்கங்களாகப் பயன்படுத்தப்படுகிறது. உயிரானது உடலை இயக்கும் தன்மை ஒரு பெரிய தேர் தரையில் ஊர்ந்து செல்லுதல் போன்றது எனச் சிவஞானச்சித்தியார் கூறுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"தோற்பாவைக் கூத்தும் தொல்லை
மரப்பாவை இயக்கமும், சீர்த்
தேர்ப்பாரிற் செலவும் வேறாய்ச்
செலுத்துவோர் செய்தி தானும்
பார்ப்பாய வேடம் கட்டி
ஆடுவோர் பரிசும் போலும்
ஆர்ப்பாய காயம் தன்னை
ஆன்மாநின்று ஆட்டுமாறே"

(சித்தியார் - 214)

"படைகொடு பவனி போதும்
பார்மன்னர் புகும்போது இல்லில்
கடைதொறும் விட்டு விட்டுக்
காவலும் இட்டுப் பின்னர்
அடைதரும் தனியே அந்தப்
புரத்தினில் அதுபோல் ஆன்மா
உடலினில் அஞ்சவத்தை
உறும் உயிர் காவல் ஆக."

(சித்தியார் - 222)

இதில் முதலாம் பாடல் உயிரானது உடலை இயக்கும் தன்மை ஒரு பெரிய தேர் தரையில் ஊர்ந்து செல்லுதல் போன்றது என உருவகிக்கிறது. இரண்டாவது பாடல் உயிரை அரசனாக உருவகித்து உடலாகிய தேரில் அவன் போவதாக வர்ணிக்கிறது.

"ஞானாமிர்தம்" என்னும் சைவசித்தாந்த நூல் ஆன்மாவானது உடலாகிய தேரை ஊர்ந்து நின்று உலகமாகிய மாடவீதிகளில் உழன்று திரிகிறது என உருவகித்துக் கூறுகிறது.

பாரதத்தில் பல ஆலயங்களிலே கற்றேர்ச் சிற்பங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பல்லவர் காலத்தில் மாமல்லபுரத்தில் அமைக்கப் பெற்ற எட்டு ரதக்கோவில்கள் குறிப்பிடத்தக்கன. பஞ்ச பாண்டவர் ரதங்கள் கணேசரதம் முதலிய இவை தனிக்கற்களில் உருவாக்கப்பட்டவை.

மனுச் சோழனுடைய கற்றேர்ச்சிற்பம் குறிப்பிடத்தக்கது. இது திருவாரூரிலே சோழர் காலத்தில் பத்தாம் நூற்றாண்டளவில் உருவாக்கப்பட்டது. ஒரிசா மாநிலத்திலுள்ள 'கொனாரக்' சூரியனார் கோயிலில் பன்னிரண்டு சக்கரங்களையும் ஏழு குதிரைகளையும் கொண்டதாக அமைக்கப்பட்டிருக்கும் கற்றேர்ச் சிற்பம் 14 ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டுக்குரியதென்பர்.

விஜயநகர மன்னர்களால் 15ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்ட ஒரு கற்றேர் ஹம்பி என்ற இடத்திலுள்ளது.

பழைய சில ஆலயங்களில் கருவறை அல்லது அதற்கடுத்த மண்டபம் தேர் போன்ற அமைப்புடன் காணப்படுகிறது. திருவதிகை, திருக்கடம்பூர்க் கோயில்கள் இத்தகையன. இன்னும் சில சிவாலயங்களில் நவக்கிரக சந்நிதானம் தேர் போன்ற அமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளது. (உ - ம் சுன்னாகம், கதிரைமலை சிவன் தேவஸ்தானம்)

இத்தகைய வரலாற்றுப் பின்னணியும் தத்துவ அடிப்படையும் இன்றைய நமது ஆலயங்களில் மஹோற்சவ காலங்களில் ரதோற்சவம் என்னும் தேர்த்திருவிழாவை நடத்துவதற்குக் காரணமாக அமைந்திருக்கின்றன. மஹோற்சவம் ஐந்தொழில் விளக்கம் என்ற வகையில் படைத்தலைக் குறிக்கும் அங்குரார்ப்பணம், காத்தலைக் குறிக்கும் ரக்ஷா பந்தனம் முதலிய கிரியைகளுடன் ஆரம்பித்து அழித்தல்தொழிலைக் குறிப்பதாக ரதோற்ஸவம் நடைபெறுகிறது.

இத்தொடர்பிலே புராணங்கள் குறிப்பிடும் திரிபுரதகனம் இங்கு நினைவுகூரப்படலாம். சிவபிரானிடம் பெற்ற வரபலத்தினால் பொன், வெள்ளி, இரும்புக் கோட்டைகளில் உலா வந்து தேவர் முனிவர்களுக்குத் தொந்தரவு செய்துவந்த முப்புர அரக்கர்களை அழிப்பதற்காக இறைவன் தேரில் பவனி வருகிறான். அக்காட்சி புராணங்களில் மிகச் சிறப்பாக வர்ணிக்கப் படுகிறது.

உலகமே தேர். சூரிய சந்திரர்கள் அதன் சக்கரங்கள். நான்கு வேதங்களுமே குதிரைகள். பிரம்மா சாரதி. மேருமலையே வில். வாசுகி என்னும் பாம்பே நாண். விஷ்ணுவே அம்பு. இவ்வாறு அவர் புறப்படும்போது விநாயகரை வழிபடாது புறப்பட்டதால் அத்தேரின் அச்சு முறிந்தது. விநாயகரை வழிபட்டே யாவரும் நற்கருமம் தொடங்கவேண்டும் என்று தாமே உருவாக்கிய கட்டளையைத் தாம் கடைப்பிடிக்காமையால் விக்கினம் நேர்ந்தது எனக் காட்டுவதன்மூலம் உலகில் சட்டதிட்டங்கள் நியதிகள் யாவருக்கும் பொது என்பதைச் சிவபிரான் எடுத்துக் காட்டுகிறார்.

இக்காட்சியை அருணகிரியார்

"முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா"

என வர்ணிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே சம்பவத்தில் 'ஆணவம் அழிவிற்கு வித்து' என்பதையும் எடுத்துக் காட்டிய பின்னரே திரிபுர தகனத்தைச் சிவனார் மேற்கொள்கிறார்.

அதாவது அம்பாக இருக்கின்ற விஷ்ணு தம்மால்தான் திரிபுர அரக்கர்களின் அழிவு நடைபெறப்போகிறது என இறுமாப்படைந்தார். இது இறைவனுக்குச் சிரிப்பை ஊட்டியது. அட்டஹாசம் எனப்படும் அந்தச் சிரிப்பினாலேயே முப்புரங்களும் சாம்பராகின. அன்பு பயன்படவே இல்லை.

இங்கு கூறப்பட்ட புராணக்கதையின் தத்துவ உட்பொருள் விளக்கத்தை திருமூலர் தமது திருமந்திரத்தில் தருகிறார்.



அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரம் என்பது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை ஆர் அறிவாரே

தேரானது அண்டத்தின் சின்னம். அதனை இயக்குபவன் ஆண்டவன். இத்தத்துவத்தைப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு விளக்குகிறார்.

"இந்த உடம்பு ஒப்பற்றதொரு தேர். உயிரானது உடம்பை இயக்கிக் கொண்டிருக்கிறது. உடல் வெறும் சடம். உடலாகிய தேர் தன்னை இயக்கிக்கொண்டிருப்பது உயிர் என்பதை அறிவதில்லை. உயிரும் ஒரு தேரே. உயிரை உயிருக்குயிர் இயக்கிக் கொண்டு உயிராகிய தேரில் வீற்றிருக்கிறது. உயிருக்குயிர்தான் கடவுள்.

இந்தப் பூமியும் இறைவனுக்கு ஒரு தேரே. பூமியாகிய தேரில் இறைவன் எழுந்தருள் புரியும் உண்மையை உணர்பவர்களுக்கு இவ்வுலகில் யாதுமோர் குறைவில்லை. பூமிக்குக் கீழே ஏழு உலகம். பூவுலகு உட்பட மேலே ஏழு உலகம். அப்பால் வைகுண்டம், சத்தியலோகம் முதலியன. அதற்குமப்பால் சிவலோகம். இவையனைத்தும் அடங்கியது ஓர் அண்டம். இவ் அண்டத்தை ஞாபகப் படுத்துவது தேர்.

பூவுலகம் அண்டமாகிய தேரின் நடுத்தட்டு. அங்கு இறைவன் எழுந்தருளி ஆன்மாக்களை இரட்சிக்கிறான்."

தேரின் நான்கு சக்கரங்களும் சரியை, கிரியை, யோகம், ஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் நான்கு நெறிகளைக் குறிக்கின்றன. இந் நெறிமுறைகளில் வாழும் உலகியல் வாழ்வைக் காட்டும் வகையில் தேரின் கீழ்ப்பகுதி அமைகிறது. ஆசாபாசங்களும் உலகியல் வாழ்க்கைக் காட்சிகளும் இதிஹாச, புராண, தலபுராணச் செய்திகள் இங்கு சிற்ப வடிவில் காட்டப்படுகின்றன.

நன்நெறியில் செல்லாது தடுமாறும்போது சரியான வழியில் திசைதிருப்பிவிடும் திருவருட் சக்தியின் செயற்பாட்டைச் சறுக்குக் கட்டை போடுதல் விளக்கி நிற்கிறது.

இதயத்தைக் குறிப்பதாயுள்ள நடுத்தட்டு மேலேழு உலகங்களுக்கும் கீழேழு உலகங்களுக்கும் இடையில் காணப்படும் பூவுலகத்தைக் குறிப்பதாயும் அமைகிறது.

தேரின் மேற்பகுதி ஆன்மாவின் இலட்சிய நோக்கங்களையும் உன்னத குறிக்கோள்களையும் குறித்து நிற்கிறது. மேல்நோக்கிக் குவிந்து செல்லும் இதன் அமைப்பு மன ஒருமைப்பாட்டையும் சுட்டுகின்றது.

இந்த உயர்லட்சியங்களின்மூலம் கிட்டும் உயர்பதவியாகிய வீட்டின்பம், அங்கு கிட்டும் மனச்சாந்தி ஆகியவற்றைக் கலசமும் குடையும் காட்டுகின்றன.

தேர்த்திருவிழாவானது மன்னர்களுக்குரிய ராஜோபசாரங்கள் போல தேவோபசாரமாக அமைகிறது எனப் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் விபரிக்கிறார்கள்.

"அரசனுக்குச் செய்யும் உபசாரங்கள் பல. இவை அரசன் கொலுவீற்றிருக்கும் வேளை நிகழ்ந்ததாக நூல்கள் வர்ணிக்கின்றன. ஆஸ்தான மண்டபத்தில் அரசன் சிங்காசனத்தில் கொலுவீற்றிருத்தல் அரச மரியாதைகளில் முதன்மையானது. குதிரை, ரத, கஜ, பதாதி அணிவகுப்புக்கள், யானை, ஒட்டகம் முதலியன முன்செல்ல அரசன் பவனி வருதல் தனிச் சிறப்பு வாய்ந்தது. இவ்வகை உபசாரங்களில் முதன்மையானது அரசன் தேரில் பவனி வருதல், இவ்வுபசாரங்கள் கோவிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனுக்கும் நிகழக் காண்கிறோம்.

தேரானது அசைந்து பவனிவரும் அமைப்பைக் கொண்ட கோவில் என்று சொல்லலாம். கோவில் கருவறைபோல விமானம் தூபி முதலிய அம்சங்களைத் தாங்கி எழில்மிகுந்து விளங்குவது கவனிக்கத்தக்கது.

**தேர்த்திருவிழாவிலே சமூகவியல் பெறுமானமும் பொதிந்திருக்கிறது. ஊர்நடுவே கோவிலிலே தேர்த்திருவிழா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் ஊர் முழுக்கப் புனிதம் அடையும். தூய்மையும் அழகும் பொலியும், எல்லோர் மனங்களிலும் உற்சாகமும் மகிழ்ச்சிப் பிரவாகமும் பொங்கும். தம்முள் பகைமறந்து 'ஊர்கூடித் தேர் இழுப்பர்'.

இவ்வாறு தத்துவ உட்பொருளும் வரலாற்றுச் சிறப்பும் கலைநயமும் மிக்க ரதோற்ஸவமானது யாவரது உள்ளங்களிலிருந்தும் அழுக்குகள் போக்கி ஆன்மீக ஒளியேற்றி அன்பு மலர் தூவி இன்பத்திலாழ்த்தட்டும்.

●●●●●●●●●●●●●

# இரதங்களும் அவற்றின் தன்மைகளும்

இரதங்கள் என்பது இறைவன், அரசர் முதலானவர்கள் பவனி வருவதற்கு பயன்படுத்தப்படுபவை. இந்து சமயத்தில் கோவில்களில் நடைபெறுகின்ற மகோற்சவ காலங்களில் தேர் திருவிழாவானது முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

இரதோற்சவமானது அழித்தல் தொழிலாகிய சம்கார தொழிலைக் குறிக்கின்றது. இது இறைவன் ஆன்மாக்களினுடைய மனதில் ஏற்படுகின்ற ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் தனது ஞானாக்கினி மூலமாக எரித்து ஆன்மாக்களை புனிதப்படுத்தும் செயலாகும்.

இரதத்தின் அமைப்பை நாம் கூர்ந்து நோக்குவோமானால், ஓர் அக்கினி ஜுவாலை விட்டு எரிகின்ற தோற்றத்தை உணர்த்துகிறது. அக்கினியானது எரிகின்ற பொழுது அடியில் சிறுத்தும், நடுப்பகுதி அகன்றும், மேற்பகுதி ஒடுங்கியும் காணப்படும். இது போன்றே தேரின் அமைப்பும் காணப்படுகின்றது.

தேரின் வடிவங்கள் பலவகையாக காணப்படுகின்றது. இரத லட்சணம் எனும் நூலில் கூறப்பட்டதற்கிணங்க இரதங்களானது 7 வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் சதுர வடிவான தேரை நபஸ்வ பத்திரகம் என்று கூறுவர். இது விநாயகப் பெருமானுக்குரியது. அறுகோண வடிவமானது, பிரபாஞ்சன பத்திரகம் எனப்படும். இது சிவனுக்கும் முருகனுக்கும் உரியதாக விளங்குகிறது. எண்கோண வடிவ விஷ்ணுவுக்கு உரியதாகும். வட்டவடிவமான இரதம் வேசரம் எனப்படும். இது சக்தி வடிவங்களுக்குரியது.

தொடர்ச்சி 12ம் பக்கம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரின் அமைப்பும் தத்துவமும்

● தமிழருவி - த. சிவகுமாரன்
B.A. (Hons)

ஆலய மஹோற்சவ காலத்திலே தேர் திருவிழா முக்கியமானதாகும். இறைவனை வருடம் முழுவதும் நாம் சென்று வழிபாடு செய்து வருகின்றோம். ஆனால் ஆண்டவனோ 10 தினங்கள் எங்களைப் பார்க்கும் பொருட்டு எங்களைத் தேடி வருகின்றான். அதில் முக்கியத்துவம் பெறும் விழா தேர் திருவிழாவாகும்.

இறைவன் தேர்மீது ஆரோகனித்து வரும் அழகு தனித்துவமானது. எந்தத் திருவிழாவினை காணாதவராயினும் ஒருவர் தேர் திருவிழாவை முக்கியம் காணவேண்டும். ஏனெனில் சைவர்களாக பிறந்த ஒவ்வொருவரும் தீட்சை பெற்றிருக்காவிட்டாலும் அவர்களுக்கு ஒருவருஷம் தீட்சை பெற்ற பலனை அளிப்பது தேர்திருவிழா பார்த்த புண்ணியமாகும்.

ஏனெனில் தேரிலே இறைவன் வரும்போது அவரின் அருள்பார்வை படும்படி நிற்பார்க்கு இறைவனால் சாம்பவ தீட்சை வழங்கப்படுகின்றது. அது சிவதீட்சையின் பலனைக் கொடுக்கும். அடுத்தவருடத் தேர்த்திருவிழாவரையும் அத்தீட்சை வலிவுடையது. ஆகையால் தேர்த்திருவிழா காண்பது அவசியமானதாகும். இறைவன் தேரில் ஆரோகனிக்கும்போது அழித்தல் தொழிலைச் செய்கின்றான். ஆனால் தீயவற்றையும் தீய குணங்களையும் மட்டுமே இதில் முதன்மையானதேர் - திரிபுரங்களை தகனம் செய்யும் பொருட்டு தேவர்களால் அமைத்து சிவனுக்கு தரப்பட்டதாகும்.

இத்தேரை பிரம தேவன் செலுத்தினார். அதற்கு பூட்டப்பட்ட நான்கு குதிரைகளும் நான்கு வேதங்கள். (இருக்கு - யசுர் - சாமம் - அதர்வனம்) குதிரையை செலுத்தப் பயன்படும் சாட்டை ஓம் எனும் பிரணவம். அத்தேரின் இரண்டு சக்கரமும் சூரியனும் சந்திரனும். அதில் தொங்கும் மணிகள் - உபநிடதங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்காலத்தில் பலவிதமான தேர்கள் அரசர்களால் பல்வேறு தேவைகட்கும் பயன்படுத்தப்பட்டன. அவை ரதம் - அதிரதம் - மஹாரதம் - மஹா அதிரதம் என நான்கு வகைப்பட்டன. இவை மன்னர்களுக்கு எதிரிகளை அழிப்பதற்காக போருக்காக பயன்படுத்தப்பட்டவை. தேர் - ரதம் இவை இரண்டு சொற்களையும் நாம் இன்று ஒரே பொருளில் பயன்படுத்துகிறோம். ஆனால் ரதம் என்பது ஓர் தேவைக்காக நிரந்தர வடிவில் அமைக்கப்பட்டது. ஆனால் தேர் என்பது பீடமும் அதன் கீழ் பகுதியும் நிலையானதாக இருக்க அதன் மேல் பகுதி தேவைக்கேற்ப தேர்வு செய்து அமைக்கப்படுவதாகும். அதனால் தான் அதை தேர் என அழைக்கப்படுகின்றது. இதனால்தான் கட்டுத்தேர் எனவும் அழைக்கப்பட்டது. ரதம் என்பது உருவத்தில் சிறியது. தேர் என்பது பெரியதாகும்.

இறைவன் தேரேறி திருவீதிவரும்போது வினைகளின் வேரோடும் இத் தேர் அளப்பெரிய ஆன்மீகத் தத்துவங்களை எடுத்துச் சொல்கிறது. மனிதன் உடலில் மூன்று பகுதிகள் உள்ளன. அவையானவை இடுப்பின் கீழ் அக்கினி மண்டலம் இடுப்புக்கும் கழுத்துக்கும் இடையே சூரிய மண்டலம் கழுத்துக்கு மேலே சந்திர மண்டலம். இதன்படியே தேரின் அமைப்பும் உள்ளது. சுவாமி இருக்கும் பீடம் வரை அக்கினி மண்டலமாகவும் இறைவன் எழுந்தருளி இருக்கும் இடைப்பாகம் சூரிய மண்டலமாகவும் அதன் மேல் முடிப்பகுதி சந்திர மண்டலமாகவும் இருக்கின்றது. மனித உடலில் சூரிய மண்டலப் பகுதியிலே இதயப்பகுதி. அதிலே இறைவன் உறைவது போலே தேரின் நடுப்பகுதியான சூரிய பகுதியிலே இறைவன் அமர்கிறான்.

தேரின் கீழ்ப்பகுதி ஒடுங்கி நடுப்பகுதி அகன்று மேற்பகுதி மீண்டும் ஒடுங்கி வானத்தை நோக்கி இருப்பது போன்று மனிதனும் மண்ணிலே பிறந்து தேவைக்காக நடந்து ஓடி வாழ்ந்து மீண்டும் வானத்தில் உறைய வேண்டும் என்பதே தேர்குறித்து நிற்கின்றது.

ஓடுகின்ற தேருக்குத்தான் மதிப்பு. தேர்முட்டியில் நிற்பதை யாரும் மதிப்பதில்லை. அதேபோல்தான் உழைக்கின்ற மனிதனுக்குத்தான் மதிப்பும் வீட்டில் படுத்திருப்பவனை இல்லாளும் வேண்டாள், ஈன்றவளும் வேண்டாள். தேரின் முடிவில் அமைந்திருக்கும் கலசத்தின் மேலே ஒரு வெள்ளிக் குடை பொருத்தப்பட்டிருக்கும் அது அழகுக்காக மட்டுமல்ல அது இவ்வளவு பெரிய தேருக்கு நிழல் தந்து விடுவதற்கு மட்டுமல்ல இது இறைவனின் திருவடி தரும் நிழலினை குறிக்கின்றது. அதாவது ஆன்மா இறைவனின் திருவடியின் நிழலிலே இருக்க வேண்டும் என்பதையே குறிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் கூடி தேர் இழுத்தல் என்று சொல்கிறோம். இது ஓர் வாழ்வியல் ஒற்றுமைப் பண்பைக் காட்டுகின்றது. ஊரில் இருந்து கருத்து வேறுபட்டு நிற்பவர்களும்கூட. தேரினை இழுக்கும் போது ஒன்றுபட்டு வடம்பிடித்து இழுக்கும் போது ஊர் ஒற்றுமை, ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற நிலையையும் உணர்த்தி நிற்பதுடன் நாம் அனைவரும் சேரும்போது மிகப்பெரிய பலம் கிடைத்து பெரிய தேரினையே இழுக்கும் சக்தி பெறுகிறோம் என்பதையும் உணர்த்துகின்றது.

தேரின் வர்ணமும் ஏறக்குறைய பொதுவாகவே சிவப்பு நிறத்தைக் கொண்டிருக்கும் இது அழித்தல் தொழிலை இரத்தத்தையும் குறித்து நிற்கின்றது. இவ்வாறு பல தத்துவங்களையும் சிந்தனைகளையும் விளக்கி நிற்கும்தேர் தேர்த்திருவிழா காண்பதும் இழுப்பதும் மிகவும் பெரும் பலனையும் பாக்கியத்தையும் கொடுக்கும்.

●●●●●●●●●●●●●

9ம் பக்க தொடர்ச்சி......

மேலும் விதான பத்திரகம், பவன பத்திரகம், பிருஷத பத்திரகம், சந்திர பத்திரகம் அநில பத்திரகம் என்பன ஏனைய இறைவனது மூர்த்தங்களுக்கும், அம்பாளின் மூர்த்தங்களுக்கும், ராஜாக்களுக்கும் உரியனவாக கூறப்படுகின்றது. மேலுமட சதுர வடிவ இரதத்தை நாகரம் என்றும், அறுகோண வடிவ இரதத்தை அந்திரம் என்றும் கூறும் மரபுண்டு.

மகோற்சவத்திற்குரிய இரதத்திற்கு 6 முதல் 10 வரையிலான சில்லுகள் இருக்கலாம். இதையொட்டி தேரின் வேதிகைகளின் எண்ணிக்கைகளும் வேறுபடுகின்றது. விநாயக், முருகன் போன்ற தெய்வங்களுக்க 3 முதல் 5 வேதிகைகளும், சிவனுக்குரிய இரதத்திற்கு 5 முதல் 9 வேதிகைகளும் கூறப்பட்டுள்ளது.

தேரின் மேற்பகுதி மயிற் பீலிகைகளாலும், சாமரங்களாலும், தோரணங்களாலும், நல்லோசை தரும் சிறிய மணிகளாலும், ஒளி பொருந்திய கண்ணாடிகளாலும் மாலைகளாலும் அலங்கரிக்கப்படல் வேண்டும்.

கீழ்ப் பகுதியனது அந்தந்த தெய்வங்களுக்குரிய அவதாரங்கள், திருவிளையாடல் உருவங்கள் செதுக்கப்பட வேண்டும். கீழே அதிஸ்டானத்தில் சிங்கங்கள், யாழிகள், யானைகள், மகரங்கள், நடனமாடுவோர், பூதகணங்கள், யட்சகர்கள் ஆகியோரது உருவங்கள் செதுக்கப்படல் வேண்டும்.

இவ்வகையான இரதங்களை சாலவிருட்சம், நாவல், சாரம், சரணம், மகிழ், புளி, பார்புரம், கருங்காலி, கிருசரம் வன்னி ஆகிய மரங்களை கொண்டு செய்வது உகந்தது என்று சிற்ப சாஸ்திரம் கூறுகின்றது.

நன்றி: சிவனாரின்
சித்திரத்தேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனொளி

ஆன்மீக சிற்றிதழ் 7



ஆசிரியர்
திருமலை சுந்தா

ஸ்ரீவள்ளி - தேவானை
சமேத
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி

10/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கிற காற்றுக்கும்
பெய்கிற மழைக்கும்
பயப்படு

-சாது-

**அட்டைப்படம் : சிசு**



அன்பு செய்
ஆனந்தித்திரு


# சிவனொளி

172, பிரதான வீதி, திருக்கோணமலை

**சிற்றிதழ் -7**

**2009 - ஆடி**


**இதழில்....**


- மெய்ஞான முத்துக்கள் ....3
- மனித விழுமியங்கள்...... 6
- இறைவன் ஒருவனே....... 7
- ராமாயணம் கூறும் ...... 8
- கல்யாணத்தில்....... 9
- உருத்திராக்கம் .... 10
- ஆசுகவி வேலுப்பிள்ளை.... 12


நற்றுணையாவது
நமசிவாயவே



## ஆசிரியரின்oooo

சிவனொளி சிற்றிதழ் - 7 மலர்ந்துள்ளது.

பரம பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி அவர்களின் 'மெய்ஞான முத்துக்கள்' அன்பை போதிக்கின்றன.

திரு. குமாரசாமி சோமசுந்தரம் அவர்களின் 'மனித விழுமியங்கள்' மானுட நேயத்தை அலசுகின்றது.

'உருத்திராக்கம்' பற்றி அறிந்து கொள்ள தகவல்கள் தந்துள்ளோம்.

அத்தோடு வழமையான சிவனொளி பக்கங்கள் ஆன்மீக விழிப்புணர்வுக்கு உங்களை அழைத்து செல்வன.

'சிவனொளியை' மாதமிருமுறை வெளியிட யோசிக்கின்றோம்.

எல்லாம் அவன் செயல்

அடுத்த இதழில் சந்திப்போம்

பேசுவோம். மகிழ்ச்சி தானே... வாசகர்களே!

**அச்சு: அஸ்ரா பிரிண்டர்ஸ்**

**திருக்கோணமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மெய்ஞான முத்துக்கள்

-பரம பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி -

ஒருவர் அன்பில் வயப் பட்டால் திரும்பத் திரும்ப அவர் பெயரைச் சொல்லி அழைப்பது போல் முழுமையான அன்பு ஏற்படும் நிலையில் தான் ஜெபம் ஆரம்பமாகும். இந்நிலை ஏறபடாத வரை ஜெபம் அர்த்தமற்றதாகும்.

- எழுச்சி பெற்ற ஒருவரது இறைவணக்கம் மிக ஆழ்ந்த அன்பில் மலர்ந்ததாகும். அது அதிக அசைவுகளைக் கொண்ட, ஆனால் எங்கும் செல்லமுடியாத கடலைப் போன்றதாகும். இதுவே பரம்பொருள் விரும்பும் இறைவணக்கமாகும். இந்த இறைவணக்கத்தில் படைப்பில் உள்ள ஒவ்வொன்றும் மகிழ்ச்சியில் ஆர்ப்பரிக்கின்றன.

### கண்டுணர்தல்

- இருக்கும் யாவும் அப்படியே இருக்கின்றன. நீங்கள் தான் அவற்றை அழகு என்றும் கோரம் என்றும் பெயரிடுகிறீர்கள்.
- உங்கள் கருத்துக் கணிப்புப்படி மக்களையும், சம்பவங்களையும் பார்க்கிறீர்கள். உங்கள் கருத்தும், ஞாபக சக்தியும் உண்மையான நிலையை நீங்கள் உணரமுடியாத படி தடை செய்கின்றன. ஒவ்வொரு கருத்தும் ஒரு எண்ணப் பதிவாகிறது. ஒரு கண்ணாடி எல்லாவற்றையும் பிரதிபலிக்கின்றது. கண்ணாடியை நீங்கள் நகர்த்தியதும் உருவம் இடம் மாறிவிடுவதால் பிரதிபலித்த பிம்பங்கள் மறைகின்றன. அங்கு எவ்வித பதிவுகளும் இல்லை.
- உங்களுக்கு ஓர் அனுபவம் ஏற்படும் போது ஒரு கருத்தும் உருவாகிறது. இது உங்கள் மனதை மறைப்பதுடன் எவை எப்படி இருக்கிறதோ அவற்றை அப்படியே பார்க்க முடியாமலும் செய்து விடுகிறது. அது கண்ணாடியில் ஓர் உருவம் பதிந்து இருக்கும் போது அதில் மற்றொரு பிம்பம் முழுமையாக பிரதிபலிக்க முடியாதது போலாகும். ஆதனால் எதைப்பற்றியும் ஒரு கருத்து அல்லது எண்ணப்பதிவுகளை வைத்துக் கொள்ளாதீர்கள். எதுவாயினும் அது அப்படியே இருக்கிறது.
- நீங்கள் எதைக் கண்டுணர்ந்தாலும், அதை உங்கள் கடந்த காலத்தை வைத்து பார்த்துத்தான் உணர்கிறீர்கள்.
- நாம் ஒரு தவறு செய்தால் ஏதோ ஒரு தவறு நடந்து விட்டது என்கிறோம். வேறு யாராவது இது போன்ற தவறு செய்தால் அதன் பின்னணியில் உட்கருத்து இருப்பதாக கருதுகிறோம். வேண்டுமென்றே செய்ததாக நினைக்கிறோம். அவர் எப்படி இருக்கிறாரோ அவரைத் தெளிவாக நாம் பார்ப்பதில்லை. அவர் மன உளைச்சலாலும், மன அழுத்தத்தினாலும் தவறிழைக்கிறார். அது ஒரு குறிப்பிட்ட பாணியில் அவரிடமிருந்து வருகிறது. இதே வழியில் நீங்கள் மற்றவரது தவறுகளைப் பார்த்தீர்களானால் உங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சஞ்சலம் இருக்காது. பாச உணர்வு ஏற்படும்.

• தேசங்கள், மற்றும் உள்ள பிரிவுகள் அனைத்தும் மனித செயலாகும். இது இறைவனால் ஏற்படுத்தப்பட்டதல்ல. பறவைக்கு எல்லை ஏதுமில்லை. ரஷ்யாவிலிருந்து, அமெரிக்கா செல்ல பறவைக்கு 'விசா' பாஸ்போர்ட்' ஆகியவை தேவையில்லை பணக்கார தேசம், ஏழ்மையான தேசம் என்று அது பாகுபாடு பார்ப்பதில்லை. நீங்களும் இந்தத் தடைகளை எல்லாம் கடந்து செல்லுங்கள் அதுவே உண்மை.

## பற்றார்வம், ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் நல்லிணக்கம்

• சிரத்தையை ஏற்படுத்துவது உண்மைதான் நம்பிக்கை அல்ல!

• சிரத்தையின் அடிப்படையில் நீங்கள் இயங்கினால், யாவும் இயல்புடன் நடக்கும், மனம் மற்றும் அறிவின் அடிப்படையில் நீங்கள் இருப்பின், அதன் வரம்புக்குட்பட்ட நிலையில் மகிழ்ச்சி தராத அனுபவங்கள் வந்து போய்க்கொண்டிருக்கும். தன்னுணர்வின் சக்தியினால் அவற்றை அப்படியே ஒத்துக் கொள்ளுங்கள்.

• போராட்டத்திற்கு ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. சண்டையிடுவதும் ஒத்துழைப்பின் ஒரு பெரிய விளையாட்டாகும்.

• சண்டையிடும் திறன் அதிகமாக இருப்பின், சண்டை இடுவதற்கான ஆர்வமானது குறையும். அதிகாரம் அதிகமாயிருப்பின் எதிர்க்கும் திறன், குறைவாக இருக்கும். எதிர்க்கும் திறனற்ற தன்மையே அஹிம்சையாகும்.

• விவசாயி தெய்வத்தின் மீது நம்பிக்கை வைத்து விதைகளை விதைக்கிறார். கையில் வைத்திருக்கும் விதைகளை இழப்பதால் அதிக இலாபத்தைப் பெறுகிறான் உங்கள் கடமைகளை இறை நம்பிக்கையில் விதையுங்கள். அமோக அறுவடையை இறைவன் வழங்குவார்.

• உங்களுக்குத் தெளிவாகத் தெரியவரும் போது சிரத்தை ஏற்படுகிறது. உங்களுக்குத் தெரியாமல் போகும் போது நம்பிக்கை தோன்றுகிறது.

## மனம் மற்றும் அகந்தையைக் கடந்து செல்லுதல்

• மனம் என்பது மூளையல்ல. மனம் தலையின் வரையறைக்கு மட்டும் உட்பட்டதல்ல. அது எல்லா இடங்களிலும் எல்லாப் பொருட்களிலும் பரவிக்கிடக்கிற பேரறிவாகும்.

• மனிதர்கள் உள்ளத்தில் எதுவும் இல்லையெனில், வெளியே வீண் பகட்டோடு நடந்துகொள்வர். வெளியே வீண் பகட்டு காட்டும் மனிதர்கள், உள்ளத்தில் ஏதும் இல்லாதவர்கள்.

• அதிகாரப்பசி இருக்கும் மனிதனிடம் தாழ்வு மனப்பான்மை இருக்கும். அதிகாரப் பசியும், தாழ்வு மனப்பான்மையும் ஒன்றோடொன்று தொடர்புடையது ஒன்று உள்ள இடத்தில் மற்றதும் இருக்கும்.

• அகந்தை மிகுந்த மனிதர்கள் தங்களைச் சுற்றி கோழையான, பலவீனமான மனிதர்கள் இருப்பதையே விரும்புகின்றனர். அப்போது தான் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகமாக இருப்பதாக உணர்கிறார்கள்.

- எந்த அளவுக்கு அதிகமாக சண்டையிடுகிறீர்களோ, அந்த அளவு உங்களுக்குப் பாரம் அதிகரிக்கிறது. பாரம் அதிகம் ஆகும் போது நீங்கள் அதில் விழுந்து விடுகிறீர்கள். அகந்தை என்பது பாரம். உங்கள் பாரத்தால் நீங்கள் மற்றவரை புண்படுத்துகிறீர்கள். பாரம் இல்லாத மனிதரே நல்லவர். அஹிம்சை அப்போது தான் ஏற்படுகிறது. ஒரு பறவை மிக உயரத்தில் பறக்கும் போது மிக லேசாக மிதக்கிறது. முழுமையாக ஒத்துக்கொள்வதன் மூலம் வாழ்க்கையில் நீங்கள் லேசாகி மிதக்க வேண்டும்.

## பெருமகிழ்ச்சி

- சிரியுங்கள், மற்றவர்களையும் சிரிக்க வையுங்கள். அதுவாழ்வின் நோக்கம் நீங்கள் சிக்கலில் மாட்டிக் கொள்ளாதீர்கள். மற்றவர்களையும் மாட்டிவைக்காதீர்கள் அதுவே சிரத்தை!
- நன்றியுணர்வு இல்லாத மக்கள் அதிர்ஷ்டம் இல்லாதவர்கள் நன்றியுணர்வு வாழ்க்கையின் செயல் நோக்கத்தை நிறைவு செய்கிறது. அது மகிழ்ச்சியைத் தருகிறது. நீங்கள் உங்கள் முழுமையான தன்மையை உணர்கிறீர்கள்.

## ஆசை மற்றும் பற்றற்று இருத்தல்

- ஒவ்வொரு ஆசையும் சுட்டெரிக்கிறது. இங்கு ஒவ்வொருவரும் சுட்டெரிக்கப் படுகிறார்கள். ஆனால் யாரும் அதை உணர்வதில்லை. நான் அதை உணர்ந்த போது அலறிவிட்டேன். நீங்களும் உணர்ந்தால் கவலைகளை சுட்டெரித்து விடலாம்.
- உங்களுக்கு பல குறிக்கோள்கள் இருக்கலாம். ஆனால் அவற்றை செய்து முடித்த பின்பு ஒரு முழுமையான தன்மையை நீங்கள் உணர்கிறீர்களா? ஆம் என்றால், நீங்கள் முழுமை பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்று பொருள்.
- ஒன்றிடம் ஏற்படும் ஆசை மாற்றம் பெற்று வேறொன்றாக மாறிக்கொண்டே இருக்கிறது. இப்படி அதிகரிக்கும். ஆசைகளுக்கே குழப்பம் என்று பெயர்.
- முயற்சிகள், தேடுதல், ஆசைகள் எல்லாவற்றையும் அப்படியே போக விடுங்கள். ஆழ்ந்த அமைதியிலும் , அசையாத தன்மையிலும் தான் இறைவனை உணர முடியும்.

## எழுச்சி பெற்ற நிலையில் செயல்கள்

- எதையும் செய்பவராகவும் செய்யாத வராகவும் இருக்காதீர்கள். அதாவது பற்றில்லாமல் கடமை புரிபவராகத் திகழுங்கள்.
- உயிர்சக்திக்கு செயலாற்ற வழி காட்டுவது தொலைநோக்கு ஆகும். தவறு என்பது தொலைநோக்கிலிருந்து நீங்கள் நழுவவிடாதீர்கள்.
- மன்னிப்புகள் வேண்டாம் அதே வேளையில், பிறர்மீது குற்றம் சொல்வதும் வேண்டாம்.

போராட்டம் இல்லாத வெற்றி என்பது மனத் துணிவு இல்லாத வெற்றியாகும்.

- உங்கள் சக்திக்குட்டபட்ட எந்தச் செயலும் உங்கள் பொறுப்பு ஆகும். உங்கள் பொறுப்புகளையும் உங்கள் வரம்புகளையும் நீங்களே முடிவு செய்யுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவு மற்றும் சுதந்திரம்

- உங்கள் பக்திபூர்வ வழிபாட்டின் பெரும்பகுதி மகிழ்ச்சியற்ற அனுபவத்திலிருந்து தப்பிக்க நினைக்கும் செயலாகும். வாழ்க்கையின் எந்த விஷயத்திலும் தப்பித்தல் இல்லை. அதுதான் சுதந்திரம்.
- உண்மையை விபரித்துக்கூறும் நடைமுறை உண்மையை உண்மையற்றதாக ஆக்கிவிடுகிறது. வார்த்தைகளை உருவாக்கும் போது அவை இழக்கப்பட்டு விடுகின்றன. எதைத் தெரிந்து கொள்ள முடியுமோ அதை ஆழ்ந்த மௌனத்தில் தான் தெரிந்து கொள்ள முடியும்.
- வார்த்தைகளின் பயனற்ற தன்மையை நீங்கள் உணர்ந்து கொள்ளா விட்டால் நீங்கள் மேலோட்டமாக வாழ்ந்ததை அது காட்டுகிறது நீங்கள் வாழவில்லை என்று அர்த்தம் ஒரு பாட்டின் முக்கியத்துவம் என்ன பாடப்பட்டது என்பதில் இல்லை. எப்படி பாடப்பட்டது என்பதில் தான் உள்ளது.
- உறைந்து போன இறுகலான மௌனம் ஒரு விழிப்புணர்வு ஆயிரம் மணி நேரப் பேச்சு ஓர் பார்வைக்கு ஈடாகாது நூறு பார்வைகள் ஒரு நிமிட மௌனத்திற்கு ஈடாகாது.
- மொழியின் வரம்புகளிலிருந்தும் கடப்பது என்பது ஓர் அருமையான கலை. அப்படிச் செய்தவர்கள் எல்லோரும் கடவுள் ஆவார். உங்கள் செயலாற்றலை அதிகப்படுத்தி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துங்கள். நமது விழிப்புணர்வு நிலையை உயர்த்த, மனத்தளர்ச்சி, மன அழுத்தத்தைப் போக்க, மற்றவரோடு பழகும் விதம், அணுகுமுறை மேம்பட ஞாபகசக்தி அதிகரிக்க உடல் நோய்கள் விலக, மன அமைதியும் சமநிலையும் அடையும்.

# மனித விழுமியங்கள்

**-குமாரசாமி சோமசுந்தரம் -**

மிகச் சிறந்த ஒரு மனித விழுமியப் பண்பாகக் கரிசனை விளங்குகின்றது. கரிசனை தன்மீதும் இருத்தல் வேண்டும். பிறர் மீதும் அமைதல் வேண்டும். கரிசனை கொள்வதறகுத், தான். தமர், பிறர் என்ற வேறுபாடோ; வேண்டியவர், வேண்டாதவர்; நண்பர், பகைவர் என்னும் பேதங்களோ இருத்தல் ஆகாது. சாதி, சமயம், இனம், குலம், கோத்திரம், சமூகம், தேசியம் என்னும் பாகுபாடுகள் பார்த்துக் கரிசனை காட்டுதல். விழுமியப் பண்பு அன்று.

தன்மீது மாத்திரம் கரிசனை காட்டுபவர்கள் பலர் உள்ளனர். அது சுயநலம், தன்னுடைய நலனுக்காக எதையும் செய்யத் துணிவர். பிறர் எக்கேடு கெட்டால் நமக்கென்ன; நாம் மட்டும் சௌகரியமாக, வசதி வாய்ப்புக்களுடன் வாழ்ந்தால் போதும் என்பது இவர்களின் நினைப்பு, தனது சுயநலத்திற்காக, நல்ல மனித உறவுகளுக்குக் கூட உலை வைப்பதற்குத் தயங்காத பேர்வழிகளாகச் சுயநலக்காரர் விளங்குகின்றனர். சொல்லப் போனால், சுயநலப் போக்குடையவர்களும் பயங்கரவாதிகளே. மனித விழுமியங்களை, மனிதப் பண்புகளை மதிக்காமல். அவற்றை உதாசீனம் செய்துவிட்டு, குறுக்குவழியில் சென்றோ, கொள்ளை அடித்தோ, நம்பிக்கையீனம் புரிந்தோ, ஊழல்கள் ஓம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருபவர்கள் அச்சத்திற்கு உரியவர்களே. இவர்கள் தீங்கினர்கள் இவர்களின் கண்களுக்குப் புலப்படாதவாறு, இவர்களிடமிருந்து விலகியிருத்தலே, நல்ல நெறியாகும். இவர்களுடன் சேர்ந்திருத்தல் என்பது அவர்களின் பாவங்களில் பங்கு போடுதலுக்குச் சமம் ஆகும். அதனாலேயே தீயார் ஒடு இணங்கியிருப்பதுவும் தீது என்று கொண்டு அவர்களை விட்டு நீங்கிவிடுதலே மேலான அறச்செயல் என்று நம்முன்னோர் கூறியுள்ளனர்.

தம்மீது கரிசனை கொள்ளுதல் கூடாது என்று சொல்வதற்கில்லை.

"தன்னைத் தான் காதனாயின் எனைத் தொன்றும் துன்னற்க தீவினைப்பால்"

என்கிறார். வள்ளுவப் பெருமான். தன்னைத்தான் அன்பு செய்வது, நேசிப்பது காதலிப்பது மனியத இயல்புதான். அது வேண்டாத ஒன்றல்ல. ஆனால், தன்னல நோக்கில் தன்னை மட்டும் நேசிக்கின்ற பாங்கும், அதே வேளை, பிறரை வெறுத்து ஒதுக்கின்ற தன்மையும் கொண்டிருத்தல் தான், கேட்டினை விளைவிக்கும் என்று சொல்லப்படுகிறது. தன் நலனின் உண்மையான கரிசனையும், விருப்பமும் கொண்ட எவரும், பிறர் நலனினும் கரிசனையுடையோராக இருந்தால் மட்டுமே, தன் நலனைப் பேணமுடியும்.

"மறந்தும் பிறன்கேடு சூழற்க" என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

மற்றையோரின் நலனுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய வகையில் சிந்தித்தல், பேசுதல், செயற்படுதல் என்பனவற்றால், அவ்வாறு செயற்படுபவர்களுக்கே கேடுகள் விளைவிக்கப்படுகின்றன. இது அறச் செயலா?. அவ்வாறாயின், தன் வாழ்விற்காக, தன் நலனுக்காக, தனது சுய மேம்பாட்டிற்காகப் பிறரைக் கருவறுத்தல், வஞ்சித்தல், ஏமாற்றுதல் என்பவற்றில் தீவிரமாக ஈடுபடுபவர்கள், நிச்சயம், தமது நலத்தின் மீது கரிசனை கொள்ளாதவர் ஆகிவிடுகின்றனர். இந்த உண்மையை நாம் ஒவ்வொருவரும் மனதில் பதித்துக் கொள்ளும் அவசியம். தன் நலனகின் மீது உண்மையான கரிசனை இருந்தால், பிறர் நலனிலும் உண்மையான கரிசனை இருந்தால், பிறர் நலனிலும் உண்மையான கரிசனை இருந்தால், பிறர் நலனிலும் உண்மையான கரிசனை கொள்ள வேண்டும் என்பது இதிலிருந்து உறுதியாகின்றது.

## இறைவன் ஒருவனே

இந்து போற்றும் பரம் பொருளாம்
இறைவன் சிவனும் சக்தியுமே
இந்து மதத்தின் பழமையிது
இருக்கும் சான்று தொல் பொருளே
சிந்து வெளியின் நாகரிகம்
செப்பிடும் மதமே இதுவாகும்
எந்த மதத்தின் இறுதியினும்
இருக்கும் இறைவன் ஒன்றாகும்.

– கவிஞர் வ. யோகானந்தசிவம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமாயணம் கூறும் பாவங்கள்

பரதன் வாயிலாக வால்மீகி முனிவர் எவை எல்லாம் கொடிய பாவங்கள் என்று உணர்த்துகிறார். பார்ப்போமா?



- பசுவைக் காலால் உதைப்பது.
- சூரியனைப் பார்த்தவாறு இயற்கை உபாதைகளைத் தணித்துக் கொள்ளுதல்.
- நன்கு பரிபாலனம் செய்யும் மன்னனைக் குறை கூறுவது, வெறுப்பது.
- ஆறில் ஒரு பங்கு வரி வசூல் செய்த பின்னும் மக்களுக்கு மன்னன் நன்மை செய்யாமல் இருப்பது.
- யாக, யக்ஞாதிகள் செய்யும் புரோகிதர்களுக்கு நிர்ணயித்த உதவிகளைத் தராமல் விடுவது.
- பால் பாயாசம் போன்ற ருசியான உணவு வகைகளை பித்ருக்களுக்கும், இறைவனுக்கும் தாம் அர்ப்பணிக்காமலேயே உண்பது.
- பெரியோர் வரும்போது இருக்கையில் இருந்து எழுந்து மரியாதை செய்யாமல் இருப்பது.
- நம்பிக்கைத் துரோகம் (அதாவது ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டிய விஷயத்தைப் பிறருக்கு வெளியிடுவது) செய்வது.
- பிறருடன் பகிர்ந்து கொள்ளாமல் திண்பண்டத்தைத் தின்னுதல்.
- அரக்கு, தேன், மது, மாமிசம், விஷம் இவற்றை விற்பனை செய்வது.
- பிறன் மனை விழைதல்.
- போரில் புறமுதுகிட்டு ஓடுவது.
- தனக்கு விதிக்கப்பட்ட கர்மானுஷ்டானங்களைச் செய்யாமல் இருப்பது.
- தாய், தந்தையரை அவமதித்தல், அலட்சியம் செய்தல்.
- உதவி வேண்டி வருபவர்களுக்குத் தன்னால் இயன்ற உதவியைச் செய்யாமல் இருப்பது.
- கோள் மூட்டுவது
- கன்று ஈன்ற பத்து நாட்களுக்குள் அந்தப் பசுவின் பாலை அருந்துவது.
- கிணற்று நீர், ஏரி, குளம் மற்றும் நீர் நிலைகளின் நீரை அசுத்தம் செய்து பாழ் செய்வது.

இவையனைத்தும் கொடிய பாவங்களாகக் கருதப்பட்டன.

'ஸ்ரீராமர் காடு செல்வதைத் தான் விரும்பியிருந்தால், மேற்கூறிய பாவங்களைச் செய்பவர்கள் அடையும் கதியை அடைவேனாக; என்று பரதன் ஸ்ரீராமரின் தாய் கௌசல்யாதேவியிடம் கூறினான்.

— துறவி —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்யாணத்தில் அம்மி மிதிப்பது, அருந்ததி பார்ப்பது

வானத்தின் வடக்கே சப்தரிஷி மண்டலம் தெரியும். இதை ஆங்கிலத்தில் 'Ursa Major' என்று கூறுவார்கள். இது ஏழு நட்சத்திரங்கள் கொண்டது. இதில் நான்கு ஒரு நாற்கரமாக அமைந்துள்ளது. மற்ற மூன்றும் ஒரு பட்டத்தின் வால் போல அமைந்திருக்கிறது. இந்த ஏழு நட்சத்திரங்களுமே ஒளி மிகுந்தவை. வாலின் நடுவில் உள்ளதை நாம் வசிஷ்டர் அல்லது Mizar என்கிறோம். தன் வெகு அருகில் ஒளி மங்கிய அருந்ததி அல்லது Alcor என்ற நட்சத்திரம் உள்ளது. இவை இரண்டுமே பொதுவான ஒரே புவிஈர்ப்பு மையத்தை (Centre of Gravity) கொண்டு சுற்றுகின்றன. ஆகவே, இந்துக்களின் திருமணங்களில் புதுமணத் தம்பதியர் கருத்தொருமித்து இணைபிரியாமல் ஒன்றாக வாழ வேண்டும் என்பதையும்; இவருடைய வாழ்க்கைக் குறிக்கோளும் நோக்கங்களும் ஒரேவிதமான ஈர்ப்பு கொண்டவையாக இருக்க வேண்டும் என்பதையும் இந்த இரட்டை நட்சத்திரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அம்மி மிதிப்பது-அசையாத கல் உறுதியாக நிற்பதைப்போல, வாழ்க்கையில் எந்தவிதமான சோதனைகள் ஏற்பட்டாலும் அதற்குக் கணவனும்-மனைவியும் ஒன்றாக இருந்து ஈடுகொடுக்க வேண்டும் என்பதையும், தளராத மன உறுதியுடன் செயற்பட வேண்டும் என்பதையும் காட்டுகிறது.

நன்றி. 'இந்து சமயம் ஒரு விஞ்ஞானப் பார்வை'

## சாஷ்டாங்க நமஸ்காரம்

நம் உடலில் உள்ள எட்டு அங்கங்களும் நிலத்திற்படும்படி விழுந்து வணங்குவது சாஷ்டாங்க நமஸ்காரம் என்று சொல்லப்படும்.

தமிழில் 'தண்டனிடுதல்' என்பர். ஆதாரமில்லாத ஒரு துண்டம் (தடி) எப்படி விழுமோ; அது போல விழுந்து இறைவனையே அடைக்கலம் என்று அடைவதற்குத்தான் இந்தப்பெயர்.

இறைவனை முழுவதுமாகச் சரண் அடையும் உள்ளத்தின் வெளிப்பாடே (சக அஷ்ட அங்க) 'சாஸ்டாங்க' நமஸ்காரம் எனப்படும்.

– நன்றி: 'சமயக் களஞ்சியம்' –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உருத்திராக்கம்



1

உருத்திராக்கம் என்பது
தெய்வீக சக்தி கொண்ட புனிதமான
ஒரு பொருளென்ற நம்பிக்கையில்
அனேகமான இந்துப் பெருமக்கள் போற்றி அணிகின்ற மதச் சின்னமாகும். ஒருவகை விருட்ஷத்தில் இருந்து கிடைக்கப் பெறுகின்ற விதையே உருத்திராக்க மணி என்கிறோம். உண்மையில் அது தனியான ஒரு வித்து அல்ல. வித்துக்கள் பலவற்றை உள்ளடக்கிய ஒரு பழமாகும். பச்சை நிறமாக இருக்கும் பழம் காய்ந்து உலர்ந்ததும் கறுப்பு, சிவப்பு, மஞ்சள், ஊதா, பழுப்பு நிறங்களை அடைகின்றன. அவற்றையே உருத்திராக்க மணி எனக் கூறுகின்றோம். ஆசியாவின் தெற்கு மற்றும் தென் கிழக்கு பிரதேசங்களில் உள்ள பல நாடுகளில் உருத்திராக்கம் விளைகின்றது. இந்தோனேசியாவின் ஜாவா, சுமாத்திரா, போர்னியோ, பாலி, திமோர் தீவுகளிலேயே உருத்திராக்க வகைகளின் வனங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. அதற்கு அடுத்தபடியாக மலைப்பாங்கான நேபாள நாட்டின் வனங்களிலும் உருத்திராக்க விருட்சங்கள் ஓரளவிற்குக் காணப்படுகின்றன. இந்தியாவில் இமயமலைப் பிரசேங்களிலும், தென் பிராந்தியத்தில் மைசூர் வனம் போன்ற சில வனங்களிலும், ஈரான், மலேசியா நாடுகளிலும் ஏன் நமது இலங்கையிலும் கூடச் சிலவகை உருத்திராக்க விருட்ஷங்கள் காணப்படுகின்றன. உலகின் பாவனைக்குத் தேவையானஉருத்திராக்க மணிகளில் சுமார் 70 வீதம் இந்தோனேசியாவில் இருந்தும். 20 சதவீதம் நேபாளத்திலிருந்தும், மிகுதி 5 வீதம் இந்தியாவிலும் மற்றைய நாடுகளிலிருந்தும் கிடைக்கப்பெறுகின்றன.

உருத்திராக்க மரத்தின் தாவரவியல் பெயர் எலியோ காப்பஸ் கனிஸ்றஸ் றொக்ஸ்ப்" (ELAEO CAPPUS GANITRUS ROXB) அதை ஆங்கிலத்தில் "யுற்றசம் பீட் றீ" (Utrasum Bead Tree) எனக் கூறுவர்.

உருத்திராக்கம் என்று தமிழில் வழங்கப்படுகின்ற பதம் 'ருத்திராக்ஷ' (Rudraksha) என்ற சமஸ்கிருதத்தில் இருந்து பிறந்தது. அதன் அர்த்தம் 'உருத்திரனின் கண்ணீரத் துளி' என்பதாகும்! 'ருத்திராக்ஷ' என்ற பதத்தைப் பிரித்துப் பார்த்தால் ருத்திரம்-உருத்திரம் அக்ஷ-கண்ணீரத்துளி" என அர்த்தப்படுகின்றது.

இந்த மணியின் தோற்றம் பற்றிப் பல புராண இதிகாசங்களில் பல இடங்களில் பேசப்படுகின்றது. மதம் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு மாத்திரமன்றி, வைத்தியம், மாந்திரீகம், ஜோதிடம் போன்ற விடயங்களுக்கும், உருத்திராக்கம் பாவிக்கப்படுகின்றது. தற்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்காரத்தேவைகளுக்காக ஆபரணமாகச் செய்து அணியப்படுவதையும் காணக்கூடியதாக உள்ளது. பல வகையான நோய்களைக் கண்டிக்கக் கூடிய மருத்துவத் தன்மை அதில் அடங்கி உள்ளதாகவும், மாந்திரீக சக்தி படைத்ததாகவும் ஆயுர்வேத, சித்த வாகடங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிரக தோஷங்களை நீக்கவல்ல சக்தி உருத்திராக்கத்தில் பொதிந்துள்ளதாகவும் ஜோதிட நூல்கள் கூறுகின்றன.

இதன் தோற்றம் பற்றிய கதையொன்று "தேவி பாகவத புராணத்தில்" கூறப்பட்டுள்ளது. 'மாயன்' என்னும் ஓர் அசுரன் கடுமையான தவமியற்றி அபரிமிதமான தெய்வீக சக்தியைப் பெற்றுப் பலமாக ஆட்சி செய்து வந்தான். அவன் தற்பெருமை கொண்டு மூவுலகங்களையும் தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என பேராசைப்பட்டான். அதற்கு அவனுடைய இரு சகோதரர்களும் ஆதரவாக இருந்தனர்; அவர்கள் மூவரும் ஒன்று சேர்ந்து பலமான மூன்று கோட்டைகளை நிர்மானித்தனர். ஒரு கோட்டையைத் தங்கத்தாலும், மற்றையதை வெள்ளியாலும் மூன்றாவதை இரும்பாலும் மிக்க பலமுள்ள அரண்களாக நிர்மாணித்தனர். அவற்றை 'திரிபுரங்கள்' என்பர். மூன்று அசுரர்களையும் 'திரிபுரசுரர்கள்' என அழைத்தனர். அவர்களுடைய அழிவு காலம் நெருங்கவே, அவர்களுக்கு அதிகார வெறி தலைக்கேறவும், காட்டாட்சி நடத்த முற்பட்டனர். தேவர்களோடு போர் புரிந்து அவர்களைச் சிறைப்பிடித்து துன்புறுத்தத் தொடங்கினர். தேவேந்திரனோடும் சமர்புரிந்து தேவலோகத்தையே கதிகலங்கவைக்கத் தலைப்பட்ட சமயத்தில், இந்திரன் பிரமதேவனிடம் முறையிட்டான். தனது சக்தியைக் கொண்டு திரிபுரசுரர்களை எதிர்க்க தன்னால் முடியாதென அவர் கூறிவிட்டார். எல்லோரும் மகா விஷ்ணுவிடம் சென்று முறையிட்டனர். அந்த அசுரர்களுடைய பலத்தை எதிர்த்து நிற்கத் தன்னாலும் முடியாதென்று கூறவும் எல்லோரும் சேர்ந்து சிவபிரானிடம் சென்று சிவனை வணங்கித் தங்கள் விண்ணப்பத்தை அவர் முன் வைத்தனர்.

அசுரர்களை அழித்துத் தேவகுலத்தைக் காப்பதற்கு அவர் அனுக்கிரகம் புரிந்தனர். அசுரர்களோடு போர் புரிவதற்குத் தனக்கு ஒரு விசேடமான ஊர்தி தயாரிக்க வேண்டுமெனக் கட்டளையிட்டார். அதன் பிரகாரம் பூமியை ரதமாகவும், சூரிய சந்திரர்களை அதன் சக்கரங்களாகவும் கொண்டு போருக்கான ஊர்தி தயாரிக்கப்பட்டது. சிவதனுவில் ஏற்றுவதற்கு மகா விஷ்ணுவை அம்பாக ஆக்கிக் கொண்டார். ரதத்தைச் சாரத்தியம் பண்ண பிரம தேவனை நியமித்தார். தேவர்கள் புடைசூழச் செருக்களம் புகுந்த சிவபிரான் ஆவேசம் கொண்டு ருத்திர ரூபியாக தாண்டவம் புரிந்து 'முப்புரங்களையும் எரித்து. திரிபுராசுரர்களையும் அழித்தொழித்துத் தேவகுலத்தைக் காத்தருளினார். பின்னர் கைலையங்கிரிக்குச் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களை மூடிச் சிலகாலம் நிட்டையில் அமர்ந்தார். நிஷ்டை முடித்து அவர் தமது கமலக் கண்களைத் திறந்த பொழுது அதிலிருந்து கண்ணீர்த் துளிகள் பூமியில் விழுந்தன. அக்கண்ணீர்த் துளிகள் உருண்டோடிச் சென்று 'சித்செயில்' என்னும் மலைக் குன்றில் தங்கின. சிறிது காலத்தின் பின்னர் அவை மரங்களாக வளர்ந்து உருத்திராக்க மரம் என்று பெயர் பெற்றன. உருத்திராக்கம் பற்றித் 'தேவி பாவத புராணம்' கூறுகின்ற கதை இதுவே.

மேலும் 'சிவமஹா புராணத்தில் வேறு விதமான கதையொன்று கூறபபட்டுள்ளது. ஒருமுறை சிவ சக்தியானவர் பார்வதிதேவி உருத்திராக்கத்தின் பூர்வீகம் பற்றித் தெளிவுபடுத்துமாறு சிவபிரானை வேண்டிக்கொண்டார். தான் ஆயிரம் ஆண்டுகளாக நிஷ்டையில் இருந்ததாகவும் அத்தனை நீண்ட காலம் நிஷ்டையில் மூடப்பட்டடிருந்த கண்கள் சோர்வுற்ற நிலையில் அவற்றிலிருந்து கண்ணீர்த் துளிகள் தோன்றிப் பூமியில் வீழ்ந்ததும், அவை விருட்சங்களாக வளர்ந்து மனித குலத்தின் நலன் கருதி உருத்திராக்க மணிகளை ஈன்று கொடுககத் தொடங்கின எனக் கூறினார். இறைவனின் ஆணையின் படி உருத்திராக்கம் மனித குலத்திற்கு அரும்பெரும் வஸ்துவாக இன்றுவரை விளங்கி வருகின்றது. உருத்திராக்கம் பற்றி இவை போன்ற இன்னும் பல கதைகள் புராணங்களில் உள்ளன.

**சி.வ. இரத்தினசிங்கம்.**

## ஆசுகவி வேலுப்பிள்ளை



'அச்சமென்பதிருப்பினும் இல்லாமை சொல்லேன். அதிகநிதி வழங்கினும் இல்லாமை சொல்லேன். பசுத்துக்காயும் நானிலாமை சொல்லேன், பரிகசிப்பவரைத் துணிந்து பரிகசிப்பேன்' என்று தலைநிமிர்ந்து இறுமாப்போடு பாடுங் கவிஞர் யார் தெரியுமா? கல்லடி வேலுப்பிள்ளை என்று பிரசித்தமுற்ற வயாவிளான். ஆசுகவி வேலுப்பிள்ளையாவார். வலிந்து கேட்போரைத் தாக்கும்படி நகைச்சுவையுடன் விடை கூறுவதிலும், அப்படியான பாடல்களைப் பாடுவதிலும் அவருக்கு நிகர் அவரே. அவரைப் பற்றிய கதைகள் கிளைவிட்டுப்பரந்து கற்பனைகளோடு சேர்த்து கிராமங் கிராமமாகப் பல படி பேசப்படுகின்றன. 'யதார்த்தவாதி வெகுஜன விரோதி' என்ற இலட்சியத்தைக் கடைப்பிடித்துக் கடைப்பிடித்துச் 'சுதேச நாட்டியம்' என்ற பத்திரிகையை நடத்தி எதிரிகளைக் கதிகலங்க அடித்தார் அவர். அவரது 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி மிகப் பிரசித்தமான நூலாகும். பிற்காலத்தில் 'உன் சித்தாந்தமென்ன', 'கதிரை வேலவர் பதிகம்' என அவர் பாடியுள்ள பாக்கள் மனதை உருக்கக்கூடியன. நகைச்சுவை செறிந்த அவரது வாழ்க்கையை எடுத்துக் காட்டும் அரிய வரலாறும் இனிய பாக்களின் தொகுதியும் இப்போது எழுதப்டாவிட்டாற் பிற்சந்ததியார் அவரை எப்படி நினைவில் வைத்திருக்கப்போகிறார்கள்? அவரைப்பற்றி நீங்கள் நினைவில் வைத்திருக்க இதோ ஒரு பாடல்.

"தீவிர விவேகவிடை செப்பவிரண்டர்த்த மொழி கூற வெதிரிகணா வைக்குறுக்க–மேவிடி போற் கண்டனங்கீ றக்கல் லடியானைப் போலொருவருண்டென் றெவருமுறை யார்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனொளி

ஆன்மீக சிற்றிதழ் 8



ஆசிரியர்
திருமலை சுந்தா

● ஆடி,
அமாவாசை
சிறப்பிதழ்

20/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் செய்த பாவங்களை பிறரிடம் கூறுவதால் பாவம் குறையும்
- கிருபானந்தவாரியார்

அட்டைப்படம் : சிசு



அன்பு செய்
ஆனந்தித்திரு

# சிவனொளி

172, பிரதான வீதி, திருக்கோணமலை

சிற்றிதழ் - 8
2009 - ஆடி

**இதழில்....**

- சைவ அபரக்கிரியை
- மரணச்சடங்கு
- எட்டுக்கிரியை
- நவசிராத்தம்
- வருட சிராத்தம்
- அபரக்கிரியைபற்றிய பொது விடயங்கள்

நற்றுணையாவது நமசிவாயவே

## ஆசிரியரின்....

சிவனொளி சிற்றிதழ் - 8 "ஆடி அமாவாசை" சிறப்பிதழாக மலர்ந்துள்ளது.

"சைவ அபரக்கிரியை" சுருக்கமாக தரப்பட்டுள்ளது.

என்னால் தொகுக்கப்பட்ட 'சடங்கு' என்ற நூலில் இருந்து இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

மிகவும் சுருக்கமாக தரப்பட்ட தரவுகள் நிச்சயமாக உங்களின் சந்தேகங்களுக்கு தீனிபோடுமென நம்புகின்றோம்.

அறிவோம். அறிந்தவற்றை பலரிடம் தெரிவிப்போம்.

வரலட்சுமி பூஜை சிறப்பிதழோடு அடுத்த இதழில் பேசுவோமே.

அச்சு: அஸ்ரா பிரின்டர்ஸ்
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ அபரக்கிரியை

எல்லாச் சமயங்கட்கும் அவற்றிற்கெனத் தனித்தனியே பல சமயச் சடங்குகள் இருப்பதை நாமறிகின்றோம்.

சைவராகிய எமக்கு பிறப்பு முதல் இறப்பு வரையும் இறப்பின் பின்னரும் பல சமயச் சடங்கள் நடைபெறுகின்றன. இவையாவும் சிவாகமங்கள் விதித்தபடி நடபெறுகின்றன. அப்படியே நடைபெற வேண்டியது இன்றியமையாதது. சைவர் ஒருவரின் மரணத்தின் பின்னர் நடைபெறும் சடங்குகள் அபரக்கிரியை எனப்படும். (அபரம் - பிந்தியது) இக்கிரியைகளின் மூலமாக பயனை அந்த ஆன்மா பெறுகின்றது. பிதிர்கள் பரமனால் படைக்கப்பட்டவர்களாகும். இக்கிரியைகளைச் செய்பவர்கள் தன, தானிய சம்பத்து, புத்திரலாபம் முதலிய ஐஸ்வரியங்களும் பெற்று வாழ்தலுடன் மறுமையில் நற்கதியையும் அடைவார்கள். அவர்களுக்கு தீவினையும் வறுமையும் இடரும் நீங்கும் செய்யாது விடின் ஏழுபிறப்பிலும் பிதிர் தோஷம் ஏற்படும்.

அபரக்கிரியையில் சூர்யோத்ஸவம், தகனம், அஸ்திசஞ்சணனம் (கடாற்று), அந்தியேட்டி, பாஷாணபூசை (கல்லெப்பு) ருத்திரபலி, (பிரபூதபலி) நவசிராத்தம், ஏகோத்திரவிருத்தி சம்கிதை இடபதானம் வதரணிகோதனம், சபிண்டீகரணம் (வீட்டுக்கிரியை) சிராத்தம் முதலிய கிரியைகள் நடைபெறுகின்றன.

இவற்றில் விசேட அந்தியேட்டி நிருவான அந்தியேட்டி ஆகியவை பிரேதத்திலேயே (கட்டையிலே) தகனத்திற்கு முன்னர் நடைபெறும் மச்சமாமிச போசனமற்ற நாலாம் வருணத்தாருக்கும் பிரேதத்தில் சமய அந்தியேட்டி தகனத்திற்கு முன் செய்யப்படும்.

மேற்குறிப்பிட்ட கிரியைகளைக் கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்த ஆசாரியாரைக் (குரு) கொண்டு செய்விக்க வேண்டும். இவற்றைச் செய்விப்பவர்களும் (கர்த்தா) கிரியைகளின் தத்துவங்களையும் அவற்றின் பலன்களையும் அறிந்து பக்தி சிரத்தையுடன் அன்புடனும் செய்தால் நன்மை பயக்கும் இக்கிரியைகளில் பல தானங்கள் செய்யப்படுகின்றன. தானம் என்பது நற்பயன் குறித்துச் செய்யப்படுபவை. எனவே இத்தானத்தை சற்புத்திரருக்கு (கல்வி, அறிவு, ஒழுக்கமுற்றவர்) செய்தாற் தான் குறித்த பயனைப் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலாம் வருணத்தாருக்கு சைவாகம விதிப்படியே சைவக்கிரியைகள் நடைபெறவேண்டியது. எமது அபரக்கிரியைகளில் கூர்ணேத்சம் தொடக்கம் பாஷாண பூசை வரையுள்ள கிரியைகளை சைவ ஆசாரியார்களும், சபிண்டீகரணம் சிராத்தம் முதலிய கிரியைகளைப் பிராமண ஆசாரியர்களும் செய்து வைக்கிறார்கள்.

சமய தீட்சை பெற்று நாலாம் வருணத்தாருக்கும் முப்பது நாள் ஆசௌசமுடையவர்களுக்கும் உரிய கிரியைகளையும் அதன் தத்துவங்களையும் விளக்கங்களையும் ஓரளவு விளக்கிக் காட்டியுள்ளோம். கிரியை செய்யும் முறைகள் அவற்றுக்குரிய மந்திரங்கள் ஆகியவை இடம்பெறவில்லை.

ஒருவர் நோய்வாய்ப்பட்டு அல்லது வயோதிபமடைந்து மரணப்படுக்கையில் இருக்கும்பொழுது அவரது பாவங்கள் நீங்கி நற்கதி அடையும் பொருட்டு கோ(பசு)தானம் செயயப்பட வேண்டும். இதனை உத்திராந்தி தானம் என்பர், இது உயர் உடலை விட்டுப்பிரியும் போது செய்யும் கிரியையாகும் பின்னர், திருமுறைகள் ஓதவேண்டும். திருநீறு அணிவித்து, புண்ணிய தீர்த்தம் அல்லது பால், பருக்கி, வலது காதில் பஞ்சாட்சர மந்திரம் ஓதவேண்டும். மரணித்தவரை குளிப்பாட்டி அலங்காரம் செய்து தர்ப்பைப்புல் பரப்பி தெற்கு பக்கம் தலை வைத்தக் கிடத்தல் வேண்டும். தலைப்பக்கம் விளக்கேற்றி வைக்கவேண்டும்.

## மரணச்சடங்கு - கூர்ணோத்சவம்

தந்தை தாயாருக்கு, மூத்த புதல்வனே கிரியை செய்ய வேண்டும். தந்தைக்கு சிரேஷ்ட புத்திரனும், தாயாருக்கு கனிஷ்ட புத்திரனும், கிரியை செய்யும் வழக்கம் உண்டு. புத்திரர் தவிர்ந்த பின்வருவோருக்கும் கிரியை செய்ய உரிமை உடையவர்.

1) புத்திரன் 2) மனைவி 3) மகள் 4) தமையன் 5) இளையசகோதரர் 6) சகோதரன் புதல்வன் 7) பிதா 8) தாய் 9) மருமகன் 10) சகோதரி 11) சகோதரி புத்திரன் 12) பிதாவழிச் சபிண்டன் 13) சமானோதகன் 14) தாய்வழிச் சபிண்டன் 15) தாயின் சமானோதகன் 16) சீடன் 17) குரு 18) மகள் கணவன் 19) தோழன் 20) அரசன் இவர்களுள் புத்திரனே பிரதானமானவன். பிரதானகர்த்தா இல்லையானால் அடுத்தவர் வரிசையாகப் பிரதானமானவர். சில நூல்களில் 32 பெர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்டுள்ளன. புத்திரன் அல்லாத ஒருவர் கர்த்தாவாகக் கிரியை செய்வதாகில் அவர் தனது பெற்றோரில் ஒருவருக்காவது கிரியைசெய்தவராக இருத்தல் வேண்டும்.

புத்திரர் இங்கில்லாத காரணத்தினால் மரணக்கிரியை வேறு ஆசௌச வழியிலுள்ள ஒருவர் செய்தால் புத்திரர் பின்னர் வருவாராகில் எஞ்சிய கிரியைகளைப் புத்திரர் செய்யலாம் அதேபோல் புத்திரர் மரணக்கிரியைகளை செய்து மற்றைய கிரியைகளுக்கு நிற்கமுடியாது விட்டால் மற்றைய கிரியைகளை வேறு ஒருவர் கர்த்தாவாக இருந்து செய்யலாம். ஆனால் இவரையும் ஆரம்பக் கிரியையிலே கர்த்தாவுடன் சேர்த்து கிரியைகள் செய்யவேண்டும்.

அந்தியேட்டி கிரியை மாத்திரம் 21 நாட்களுக்கு மேலும் 31 நாட்களுக்குள்ளும் செய்யலாம். புத்திரர் வெளியூர் போக வேண்டும். என்பதற்காக இத்தினங்கட்கு முன்னதாக அந்தியேட்டி சபீண்டீகரணம் முதலியவற்றை செய்யமுடியாது. மரணக்கிரியை நடைபெற உள்ள இடத்தில் மண்டபம் அமைத்து வெள்ளை கட்டி மாவிலை தோரணம் பூச்சரம் முதலியவற்றால் அலங்கரித்து அந்த இடத்தை கோமயத்தினால் மெழுக வேண்டும். மரணக்கிரியையின் போது (பக்தி ஸ்தோத்திரம்) திருமுறைகள் ஓதல் வேண்டும்.

மரணக்கிரியையில் சூர்ணோத்சவம் செய்யப்படும் நடுவில் ருத்திர கும்பமும் அதனைச் சுற்றி அட்டதிக்குப் பாலகர் கும்பமும் மேற்கு பக்கத்தில் புண்ணியாகவாசன கும்பமும் கிழக்கு பக்கத்தில் உரல் உலக்கை கும்பம் ஆகியவை வைக்கப்படும் இக்கும்பத்தை மயானத்திற்கு கொண்டு செல்வது வழக்கமாகவுள்ளது. குரு உரியகிரியைகள் பூசைகள் வழிபாடுகள் செய்வார்.

அபிஷேகம் முதலியன செய்யும் பொருட்டு பிரேதத்தை வீட்டின் தென்புறத்தில் வடக்கு நோக்கிக் (தெற்கு பக்கம்) கிடத்த வேண்டும். பின்னர் கர்த்தா அரப்பு எண்ணெய் முதலியன சிரசில் வைப்பார். ஆஸௌசகாரர்களும் அரப்பு எண்ணெய் முதலியன வைப்பார்கள். பின்னர் அரிசிமா, மஞ்சள்மா, அபிஷேக கூட்டு (ஆலமகம்) பால், தயிர், இளநீர் முதலியவற்றால் அபிஷேகம் செய்யவேண்டும். கர்த்தா மேற்கு முகமாக நின்று சங்காரக்கிரமமாக அதாவது கீழிருந்து மேலாக கர்த்தாவின் புறங்கையினால் வேறு ஒருவர் உதவியுடன் இவ்வபிஷேகம் நடைபெறுதல் வேண்டும். பின்னர் கும்ப அபிஷேகம் நடைபெறும் அதாவது பன்னிர் போன்ற வாசனைப் பொருட்கள் முதலியவற்றைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரசில் சாத்த வேண்டும். பின்னர் பிரேதத்தை அலங்கரித்து மண்டபத்திற்குக் கொண்டு வந்து தெற்குப் பக்கமாக தலையை வைத்து திருநிறு சங்காரக் கிரமமாக சாத்த வேண்டும் பின்னர் சுண்ணம் இடிக்கப்படும்.

அறுகு, மஞ்சள்பொடி என்பவற்றை உரலில் இட்டு மணியடித்து 81 பத மந்திரம் சொல்லி எட்டு தரம் இடித்து பின்பு திருப்பொற்சுண்ணப் பாட்டு பாடி சுண்ணமிடிக்க வேண்டும். பின்னர் சுண்ணப்பொடியை கர்த்தா பிரேதத்தின் இரு கண்களிலும் சாத்தி நீருடன் சேர்த்து பிரேதத்தின் முழு உடலிலும் தெளித்தல் (புரோட்சித்தல்) வேண்டும். இது தற்காலம் நடைபெறும் முறையாகும். சுண்ணமிடித்து சுண்ணப் பொடியும் சேர்த்து பிரேத அபிஷேகம் நடைபெற வேண்டும் என்பது சாஸ்திர விதியாகும்.

பின்னர் பெண்கள் வாய்க்கரிசி இட்டு பிரேதத்தின் வாய், கை, கால், விரல்கள், ஆகியவற்றைக் கட்டி பூத உடலை வஸ்திரத்தால் மூடிக்கட்டி பாடையில் வைத்து காலை முன்பக்கமாக மயானத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். கர்த்தா நெருப்புச் சட்டியுடன் பூத உடலுக்கு முன்பாகவும், துடக்கு உரிமையாளர்கள் பூத உடலுக்குப் பின்பாகவும் செல்ல வேண்டும். துடக்கு இல்லாதவர்கள் பின் செல்லல் கூடாது மயானத்தை அடைந்து தெற்கே சிரசாக முதலில் தலைப்பக்கமும் பின்னர் கால் பக்கமுமாக இறக்கி மயானத்தில் வடக்குத் தெற்காக விறகுகளை அடுக்கி அதன் மேல் பூத உடலை வைத்து சுற்றத்தார் வாய்க்கரிசி போடுதல் வெண்டும். பின்னர் கர்த்தா மட்குடத்தை இடது தோளில் வைத்து சிதையை (அப்பிரதட்சணமாக) இடப்பக்கமாகச் சுற்றி வந்து குடத்தைத் தலைப்பக்கத்தில் வைத்து சிதையை (அப்பிரதட்சணமாக) இடப்பக்கமாகச் சுற்றி வந்து குடத்தைத் தலைப்பக்கத்தில் வைத்து கும்பஜலம், அசிரி, சொர்ணம், (பவுண்) அல்லது காசுடன் வாயக்கரிசியிட்டு பின்னர் குடத்தை முன்போல இடத்தோளில் வைத்த கொள்ளியைக் கையில் கொண்டு சிதையை இடப்புறமாக மூன்று முறை சுற்றி வரவேண்டும். ஒவ்வொரு சுற்றுக்கும் குடத்தில் கத்தி நுனியால் துவாரமிட்டு குடநீர் ஒழுகும்படி செய்து மூன்றாவது சுற்று முடித்து தலைப்பக்கத்தில் தெற்கு முகமாக நின்று பின் புறமாக பிரணவம் சொல்லிக் கொள்ளியை பிரேதத்தின் சிரசில் வைத்த குடத்தை முன் புறமாக உடையும்படி போட்டு விட்டு பின்பு கால் மாட்டில் சென்று பவித்திரம் பூணூல் ஆகியவற்றை சிதையில் போட்டு (தனக்கு மூத்தவராகில்) விழுந்து நமஸ்கரித்து திரும்பிப் பாராமற் செல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணித்தவரும், கர்த்தாவும் மச்ச மாமிச போசனம் இல்லாதவர்களாயின் இறந்தவருக்கு உடன் மயானத்திலே அந்தியேட்டிக் கிரியை செய்து தகனம் செய்யப்படும்.

தகனத்திற்கு அடுத்த நாள் அல்லது மூன்றாம், ஐந்தாம், ஏழாம், ஒன்பதாம் நாள்கள் ஒன்றில் அஸ்தி சஞ்சயணம் செய்க. தகனம் செய்யப்பட்ட இடத்தை கால் பக்கமாக இருந்து தலைப்பக்கமாக தண்ணீர் ஊற்றி அக்கினியை அணைக்கவும். தலைப்பக்கத்தில் விளக்கேற்றி கும்பம் வைத்து பூசை அபிஷேகம் திரவியங்களை வைக்கவும் மண்கலசத்தில் பால் ஊற்றி அதை தலைப்பக்கத்தில் ஒரு முக்காலியில் வைக்கவும் தகிக்கப்பட்ட உடல் எலும்பு மேனியில் (சங்காரக் கிரமமாக) அபிஷேக திரவியங்களால் அபிஷேகம் செய்க.

கர்த்தா மேற்கு நோக்கி நின்று புறங்கையால் இன்னொருவரின் உதவியுடன் அபிஷேகம் செய்யவேண்மும் பின்னர் முழங்கால்கள் (சத்தியோசதம்) நாபி (வாமதேவம்) மார்பு (அகோரம்) நெற்றி (தற்புருஷம்') தலை (ஈசானம்) ஆகிய ஐந்து இடங்களில் விபூதி, சந்தணம், புஸ்பம் வைத்து தூபதீபம் காட்டி பூசித்து மேற்குறிப்பிட்ட ஐந்து இடங்களில் உள்ள எலும்புகளில் ஒவ்வொன்றையும் கிரமப்படியே எடுத்து தலைமாட்டில் உள்ள பாலுள்ள கலசத்தில் வைத்து அக்கலசத்தை வஸ்திரத்தால் மூடவும் பின்னர் மிகுதி எலும்புகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஒரு கடகத்தில் எடுத்து வைக்கவும். பின்னர் அவ்விடத்தை சுத்தம் செய்து பண்படுத்தி நவதானியம் விதைத்து நெற்பொரி, மாஅடை, தாம்பூலம், பழம் முதலியவைகளைப் பூதம் பிரேத பைசாசங்களின் பொருட்டு பலியிட்டு முன்னர் கலசத்தில் எடுத்த அஸ்தி சாம்பலையும் புண்ணிய தீர்த்தம் சமுத்திரம் ஆகியவற்றில் கர்த்தா வடக்குமுகமாக நின்று தெற்குப் பக்கமாக போட்டுக் கரைத்து விடவும் பின்னர் கர்த்தா அந்த நீர் நிலையில் ஸ்நானம் செய்து அங்கு நக்கினப் பிரசாதனம் என்னும் நக்கின தானம் செய்ய வேண்டும். ஒரு குடத்தில் பச்சை அரிசியை நிரப்பி அக்குடத்தைச் சுற்றி வஸ்திரம் கட்டி வெங்கலப்பாத்திரத்தில் (விளக்கு) நெய்யூற்றி குடும்பஸ்தராக உள்ள சிவப்பிராமணருக்கு சிவனைத் தியானித்துத் தானமாகக் கொடுக்கவும் இறந்தவரின் நிருவாணம், பசி, தாகம் 'இருள்களை நீக்கும் பொருட்டு இத்தானம் செய்யப்படுகின்றது. அஸ்தியின் ஒரு பகுதியை அந்தியேட்டிக் கிரியைக்காகவோ அல்லது காசி கங்கை முதலிய புண்ணிய திர்த்தங்களில் கரைப்பதற்காகவோ எடுத்து வைப்பது தவறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஸ்தி சஞ்சனம் - காடாற்று - சாம்பல் அள்ளல்.

தகனத்திற்கு அடுத்த நாள் அல்லது மூன்றாம், ஐந்தாம், ஏழாம், ஒன்பதாம் நாள்கள் ஒன்றில் அஸ்தி சஞ்சயனம் செய்க. தகனம் செய்யப்பட்ட இடத்தை கால் பக்கமாக இருந்து தலைப்பக்கமாக தண்ணீர் ஊற்றி அக்கினியை அணைக்கவும். தலைப்பக்கத்தில் விளக்கேற்றி கும்பம் வைத்து பூசை அபிஷேகம் திரவியங்களை வைக்கவும் மண்கலசத்தில் பால் ஊற்றி அதை தலைப்பக்கத்தில் ஒரு முக்காலியில் வைக்கவும் தகிக்கப்பட்ட உடல் எலும்பு மேனியில் (சங்காரக் கிரமமாக) அபிஷேக திரவியங்களால் அபிஷேகம் செய்க.

கர்த்தா மேற்கு நோக்கி நின்று புறங்கையால் இன்னொருவரின் உதவியுடன் அபிஷேகம் செய்யவேண்டும் பின்னர் முழங்கால்கள் (சத்தியோசதம்) நாபி (வாமதேவம்) மார்பு (அகோரம்) நெற்றி (தற்புருஷஸம்) தலை (ஈசானம்) ஆகிய ஐந்து இடங்களில் விபூதி, சந்தணம், புஸ்பம் வைத்து தூபதீபம் காட்டி பூசித்து மேற்குறிப்பிட்ட ஐந்து இடங்களில் உள்ள எலும்புகளில் ஒவ்வொன்றையும் கிரமப்படியே எடுத்து தலைமாட்டில் உள்ள பாலுள்ள கலசத்தில் வைத்து அக்கலசத்தை வஸ்திரத்தால் மூடவும் பின்னர் மிகுதி எலும்புகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஒரு கடகத்தில் எடுத்து வைக்கவும் பின்னர் அவ்விடத்தை சுத்தம் செய்து பண்படுத்தி நவதானியம் விதைத்து நெற்பொரி, மா அடை, தாம்பூலம், பழம் முதலியவைகளைப் பூதம் பிரேத பைசாசங்களின் பொருட்டு பலியிட்டு முன்னர் கலசத்தில் எடுத்த அஸ்தி சாம்பலையும் புண்ணிய தீர்த்தம் சமுத்திரம் ஆகியவற்றில் கர்த்தா வடக்குமுகமாக நின்று தெற்குப் பக்கமாக போட்டுக் கரைத்து விடவும் பின்னர் கர்த்தா அந்த நிர நிலையில் ஸ்நானம் செய்து அங்கு நக்கினப் பிரசாதனம் என்னும் நக்கின தானம் செய்ய வேண்டும். ஒரு குடத்தில் பச்சை அரிசியை நிரப்பி அக்குடத்தைச் சுற்றி வஸ்திரம் கட்டி வெங்கலப்பாத்திரத்தில் (விளக்கு) நெய்யூற்றி குடும்பஸ்தராக உள்ள சிவப்பிராமணருக்கு சிவனைத் தியானித்துத் தானமாகக் கொடுக்கவும் இறந்தவரின் நிரவாணம், பசி, தாகம், இருள்களை நீக்கும் பொருட்டு இத்தானம் செய்யப்படுகின்றது. அஸ்தியின் ஒரு பகுதியை அந்தியேட்டிக் கிரியைக்காகவோ அல்லது காசி கங்கை முதலிய புண்ணிய திர்த்தங்களில் கரைப்பதற்காகவோ எடுத்து வைப்பது தவறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எட்டுக்கிரியை

இக்கிரியை பற்றி பத்திரகைகளிலோ, ஆகமங்களிலோ எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் இது ஒரு நாட்டு வழக்கமாக வந்துள்ளது. தகனத்தினம் தொடக்கம் சபிண்டீகரண வரை இறந்தவரது படத்தை வீட்டில் ஒரு இடத்தில் வைத்து விளக்கேற்றி, தண்ணீர், இளநீர் வைத்து தாம் உண்ணும் உணவில் ஒரு சிறிய பகுதியை அங்கு படைத்து தூப தீபம் காட்டி பூசித்துவரும் வழமை உண்டு. அஸ்தி சஞ்சயனத்தின் பின் எட்டாம் நாளுக்கு முன்னர் ஒரு தினத்தில் இறந்தவர் விரும்பிச் சாப்பிட்ட எல்லாப் பண்டங்களும் (உண்பன, தின்பன, பருகுவன) படைத்து தூப தீபம் காட்டி பூசித்து எட்டுக்கிரிகையை முடிப்பார்கள். (சில ஊர்களில் மச்சமாமிசம் உண்பவர்களாக இருப்பினும் அந்தியேட்டி முடியும்வரை மச்சமாமிசம் படைப்பதில்லை) துடக்குகாரர்கள் அங்கு சாப்பிடுவார்கள். (இவை பிரபூதபலி என்ற கிரியைக்கு சமனாக நடைபெறுகிறது.)

## அந்தியேட்டி - கல்லெடுப்பு

அந்தியேட்டி, சமய அந்தியேட்டி, விசேட அந்தியேட்டி, நிருவான அந்தியேட்டி என மூன்று வகைப்படும். இங்கு சமய அந்தியேட்டி பற்றிய விபரங்களே தரப்படுகின்றன. விசேட அந்தியேட்டி பிரேதத்தில் (கட்டையில்) தகனத்திற்கு முன்னர் செய்யப்படும். மச்சமாமிசம் புசியாதவர்க்கும் சமய அந்தியேட்டி பிரேதத்தில் செய்யப்படும். அந்தியேட்டி இறந்த 21ம் நாளின்மேல் 31 ஆம் நாளின்மேல் 31ஆம் நாள்களுக்குள் செய்யலாம் புத்திரன் அல்லாத வேறு ஒருவர் கர்த்தாவாக இருப்பின் சுபநாள் பார்த்து அந்தியேட்டி செய்ய வேண்டும். நதிக்கரை, குளக்கரை, நந்தவனம், வீடு ஆகிய இடங்களில் அந்தியேட்டி செய்யலாம். அந்தியேட்டி என்பது இறுதியிற் செய்யும் யாகம் எனப் பொருள்படும். பிரேத சரீரத்திற்குப் பதிலாக தர்ப்பையினால் சிறு உருவம் செய்யப்பட்டு அந்தியேட்டி கிரியை செய்யப்படும். சூர்ணோத்தவக்கிரியை எல்லாம் முடித்து உருவத்தை தகனம் செய்வார்கள். இதைப் புனர்தகனம் எனக் குறிப்பிடுவர். பின்பு அங்கு பாஷாணம் (கல்லு) ஸ்தாபித்து அதற்கு அபிஷேகம் பூஸை முதலிய செய்து தர்ப்பணம், பிண்டம், ருத்ரபலி, பிரபூதபலி (முன்னர் எட்டுக்குச் செய்தது போன்று) செய்யப்படும். இங்கு 30 பிண்டங்கள் இடப்படும். இப்பிண்டங்கள் பச்சை அரிசிச்சாதம், கறிவகைகள், பலகார வகைகள், பழவகைகள், பட்சணங்கள் ஆகியவை சேர்த்துப் பிசைந்து உருட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடவேண்டும். வாஸோதகம் (சீலையோடு சேர்த்துத் தர்ப்பணம்) கிலோதகம் (எள்ளோடு சேர்த்து தர்ப்பணம்) செய்யப்படும். இங்கு 525 தர்ப்பணம் செய்யப்படும். இவை ஏகோத்திரவிருத்தி என அழைக்கப்படும். ருத்ரபலி சிவப்பிரீதியின் பொருட்டு செய்யப்படுவது. பின்னர் பாஷாணத்துக்கு தூபதீபம் காட்டி புஶ்ரீசை முடித்து, கும்பம், பாஷாணம், பிண்டம் ஆகியவற்றை அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் வைத்து மங்கல வாத்தியத்துடன் எடுத்துச் சென்று நீர்நிரையடைந்து பிண்டத்தை ஒருவரும், அவர்பின் கும்பத்தை ஒருவரும், அவர்பின் பாஷாணத்தை ஒருவருமாக எடுத்துச் சென்று கர்த்தா இடுப்பளவு தண்ணீரில் வடக்கு மகமாக நின்று தலைக்கு டிதற்கு பக்கமாக பண்டத்தை முன்னும், பின்னர் கும்பத்தை வடக்கு பக்கமாகவும், பாஷாணத்தை தலைக்கு மேலாகவும் தெற்குப் பக்கமாக ஜலத்தில் விட்டு ஸ்நானம் செயதுவிட்டு, வீட்டு வாசலை அடைந்து வேப்பிலை தின்று, அக்கி, சாணம், மண், வெண்கடுகு ஆகியவற்றை ஸ்பரிசித்து (தொட்டு) கல்லின் மேல் கால்வைத்து (வீட்டிற்குள் செல்லவும். கர்த்தாவுக்கு ஆரத்தி எடுப்பதும் உண்டு. உலக்கையை கடந்து செல்லும் வழக்கமும் உண்டு. இவை வைதீகக்கிரியை முறையாகும்)

## வீட்டுக் கிரியை - சபிண்டீகரணம்

வீடு கழுவிச் சுத்தம் செய்து புண்ணியாகவாசனம் செய்த பின்னர் வீட்டுக் கிரியை செய்ய வேண்டும். அந்தியேட்டி கிரிகையை முப்பதாம் நாளும் வீட்டுக் கிரிகையை முப்பத்தோரம் நாளும் நம்மவர்கள் செய்வது வழமையாக உள்ளது. எமக்கு துடக்கு முப்பது நாள்கள் அதாவது முப்பத்தோராம் நாள் காலையில் தான் துடக்கு நீங்கும். அதன் பின்னர்தான் புண்ணியாகவாசனம் செய்ய வேண்டும். முப்பதாம் நாள் அந்தியேட்டி செய்து அன்று புண்ணியாவாசனம் செய்து வீட்டுக்கிரியை சமையல் ஆயத்தங்கள் செய்ய முடியாது. எனவே முப்பத்தோராம் நாள் புண்ணியாவனம் செய்து முப்பத்தி இரண்டாம் நாள் வீட்டுக்கிரியை செய்யலாம். (முப்பத்தோராம் நாள் அந்தியேட்டி செய்து அன்று மாலை புண்ணியாகவாசனம் செய்வதும் நல்லது)

வீட்டுக்கிரியை பிராமண ஆசாரியரைக் கொண்டு செய்தல் வேண்டும். தானம் ஏற்கும் தகுதி பிராமணருக்குத்தான் உண்டு முதலில் விக்கினேஸ்வர பூசை கிரியைகளைச் செய்து நவசிராத்தம், ஏகோசிராத்தம், ஏகோத்திர விருத்தி, சம்கிதை, இடபதானம், ஏகோதிட்டம், மாசிகங்கள், சோதகும்ப சிராத்தம், சபிண்டீகரணம் ஆகிய கிரியைகள் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவசிராத்தம்

நவம்-புதியது: எனவே முதலில் செய்யும் சிராத்தம், நவசிராத்தத்தினால் பிரேதத்தன்மை நீங்கும். சந்தனம், புஸ்பம், தூபதீபமின்றி பச்சை அரிசி, காய்கறி வகைகள், தானம் செய்வது நவசிராத்மாகும்.

## ஏகோத்தம் விருத்தி

இதை இங்கு இரணிய தானமாகச் செய்யவும் - விபரம் அந்தியேட்டிக் கிரியையில் சொல்லப்பட்டுள்ளது.

## சம்கிதை - சங்கிதை சிராத்தம்

இச்சிராத்தம் செய்வதால் தீட்சை பெற்றுக்கொண்டபின் ஆசாரத்தில் வந்த குற்றம் நீங்கும்.

## இடபதானம் - இடபோத்சர்ணம்

எருதுக்கு அலங்காரம் செய்து அதனைப் பூசித்தது தானம் செய்தல், இறந்தவருடைய தானதரும பலன்களைத் தரும் வடிவிலான இடபத்தின் மூலம் சிவபெருமானிடத்தில் சேரப்பித்தல். ஆன்மாவை இறைவனது திருவருள் வழியின் கண் நிற்குமாறு செய்தலாகும். இடபதானத்திற்கு எருது கொடுக்க வசதியில்லாதவரகள் ஒரு தாம்பாளத்தில் அரசியைப் பரப்பி அதிலே இடபதேவரை ஆவாகனம் செய்து பூசித்து வழிபாடு செய்த பின்னர் கர்த்தாவானவர் தமது இருகரங்களாலும் இடபதேவரைப் பற்றி ஒவ்வொரு திக்கிலும் கொண்டு சென்றதாகப் பாவித்து அதற்குரிய மந்திரங்களைக் கூறி வழிபாடு செய்து அதனை தட்சணை முதலியவற்றுடன் தானமாகக் கொடுக்கவும்.

## ஏகோதிட்டம்

இது இறந்தவரைக் குறித்து செய்யப்படும் தானமாகும். சற்புத்திரரான ஒரு குருவை மேற்கு முகமாக இருக்கச்செய்து ஆசனம் கொடுத்து, சந்தனம், புஷ்பம், எள்ளு ஆகியவை கொடுத்து உபசாரங்கள் செய்து கர்த்தாவின் சக்திக்கு தக்கவாறு தானங்கள் கொடுக்க வேண்டும். ஏகோதிட்டத்திற்கு இருபத்து நான்கு தானங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்பட்டுள்ளன. அவையாவன பவித்திரம், பூணூல், கமண்டலம், உருத்திராக்கம், பாதுகை, (மிதியடி) தண்டம், கௌபீனம், விபூதிப்பை, யோகபட்டம், குடை, குல்லாய், மேல்வஸ்ரம், (சால்வை) வஸ்திரம், பொன், ரத்தினம், நெய், வெண்ணெய், பசு, பூமி, போசனத்திற்கு வேண்டிய பொருட்கள், இவற்றில் சர்வதானியங்கள், சர்வ அலங்காரப் பொருட்கள், இவற்றில் சிலவற்றை இரணியதானம் (காசு), ஆகவும் கொடுக்கலா். பின்னர் ஏகோதிட்டம் ஒரு பிண்டமிட்டு அதற்கு சந்தன புத்திர புஸ்பம் சாத்தி தூப தீபம் காட்டி பூசிக்கவும், ஏகோதிட்டக் குருவை வழியனுப்பி அந்த இடத்தைச் சுத்தி பண்ணி கர்த்தஸ்நானம் செய்யவேண்டும். ஆசாரியர் மீண்டும் புண்ணியாவாசனம் செய்த பஞ்சகவ்வியத்தினாலே தன்னையும் கர்த்தாவையும் இடத்தையும் பொருளையும் சுத்தம் செய்து கொள்வார். ஏகோதிட்டம் ஏற்கும் குருவை இறந்தவராக வரித்துச் செய்வதினால் அங்கு ஆசௌசம் ஏற்படுகின்றது. இதனாலேதான் மேற்கூறியவாறு சுத்திகள் செய்யப்படுகின்றன.

## மாசிகங்கள்

மாசிகங்கள் முதல் வருடம் முழுவதும் இறந்த திதியின் செய்யப்படும் சிரார்த்தமாகும். ஏகோதிட்டதோடு முதல் மாசிகம் முடிவுற்றதாக கருதப்படும் எஞ்சியிருப்பது பதினொரு திகதியில் வரும் மாசிகமாகும். இவற்றுடன் இடைக்கால மாசிகங்கள் நான்கு சேரந்து பதினைந்து மாசிகங்கள் கொள்ளப்படும். இறந்த திகதியிலிருந்து 27ம் நாளுக்குமேல் 30ம் நாள்களுக்குள் செய்வது ஊன மாசிகம். 40 நாள்களுக்குமேல் 45ம் நாள்களுக்குள் செய்வது ஊன திரிபட்ச மாசிகம். 170ம் நாள்களுக்கு மேல் 180ஆம் நாட்களுக்கிடையில் செய்வது ஊனஷான மாசிகம். 350ஆம் நாள்களுக்கு மேல் 365ம் நாள்களுக்குள் செய்வது ஊன ஆப்தீக மாசிகம். இந்த இடைக்கால நான்கு மாசிகங்கட்கும் திதி நியமம் கொள்ளப்படுவதில்லை. செய்யும் தினம் சுப தினமாக இருக்க வேண்டும். இந்தப் பதினைந்து மாசிகங்களையும் ஒன்றுசேர்த்து ஏகோதிட்டத்திற்குப் பின்னர் செய்வது வழக்கம். மாசிகதானம் செய்து ஒரு மாசிகத்திற்கு ஒரு பிண்டமாக பதினைந்து பிண்டப்பட்டு சந்தனம் பத்திர பஸ்பம் சாத்தி தூபதீபம் காட்டிப் பூசித்து தர்ப்பணம் செய்யவேண்டும். மேற்குறிப்பிட்டப்படி 15 மாசிகங்களையும் ஒன்றாகச் செய்தாலும் அந்த மாசிகங்களையும் மாதாந்தம் அந்தந்த திதியில் செய்வது முறையாகும். சபிண்டிக்குப் பின்மாதா மாதம் செய்யப்படும். மாசிகங்கட்கு நிமித்தல் பிண்டம் தேவையில்லை பிரதிர்களுடன் ஒன்றாகவே கொண்ட மூன்று பிண்டம் இடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோதகும்ப சிரார்த்தம் - சொர்க்கபாதேயம்

நீர் நிறைந்த பாத்திரத்தை அனைத்துடன் தானம் செய்யவும் இச் சிரால்த்தத்தால் பசி, தாகம் தீரும்.

## வைதரணி கோதானம்

பசுவை தானமாகக் கொடுக்கவும். இது இரணிய தானமாகவும் செய்யலாம். வறியவர்கள் தட்டமொன்றில் அரிசி அல்லது நெல் பரப்பி பசுவின் படம் வரைந்து அதனை தானமாகவும் கொடுப்பர்.

## சபிண்டீகரணம்

சபிண்டீகரணம் செய்வதன் பொருள் ஆத்மாவின் பிரேதத்தன்மை நீங்கி பிதிர்த்துவ தன்மை அடைதலாகும். அதன் மூலம் இறந்த உயிர் தன் பிரேதத்துவ தோஷம் முற்றாக நீங்கி பிதிர்த்துவத்தை அடையினும் அடையும். அல்லது தேவத்துவடையினும் அடையும் தனக்குத் தகுதியுண்டேல் சிவத்துவத்தை அடையும். இக்கிரியையில் தேவர் பொருட்டு நந்தி மாகாளர் என இருவரும், பிதிரர் பொருட்டு கந்தர். சண்டர் காணாதீசர் என மூவரும் அதிதி ப்பியாகதர் என இருவரும் நிமித்தர் ஒருவரும் (இறந்தவரின் பொருட்டு நியமிக்கப்படுவர்) ஆகிய எண்மர் சபிண்டியில் அமர்த்தப்படுவர். தேவர் இருவரும் மேற்குப்பக்கத்தில் வடக்கு முகமாகவும், நிமித்தர் கிழக்குப் பக்கத்தில் மேற்குமுகமாகவும், மற்றைய இருவரும் நிமித்தருக்கு வடக்கெ மேற்கு முகமாகவும் அமர்த்தப்படுவர். இவர்களுக்கு ஆசனம் கொடுத்து உபசாரங்கள் செய்து பூசைகள் முடித்து தானங்கள் கொடுத்து பின்னர் சபிண்டீகரணம் நடைபெறும். குறிப்பிட்ட உபசாரங்கள் பூசைகள் தேவர்கள் பொருட்டு இருத்தப்பட்ட குருமாருக்குச் செய்யும் பொழுது கர்த்தா பூணூலை வலது பக்கமாக அணிய வேண்டும். சபிண்டியில் பிண்டதானம் ஒரு முக்கிய அம்சமாகும். வாழையிலையை தெற்கு முகமாக போட்டு தெற்கு முகமாக இரு தர்ப்பைகள் வைத்து மேற்கு தர்ப்பையில் இறந்தவர் தந்தையாகில் பிதா, பாட்டன், பூட்டன் ஆகியோருக்கும் கிழக்கு பக்கத் தர்ப்பையில் இறந்தவரக்காக (நிமித்தர்) பெரிய அளவு பிண்டம் இடவேண்டும். இறந்தவர் தாயாராகில் இதே போன்று தாய், பாட்டி, பூட்டி ஆகியோருக்கு பிண்டம் இடவேண்டும். பிண்டம் வடக்கிலிருந்து தொடங்கிய வரிசையாக தெற்கு நோக்கி இடல்வேண்டும். தெற்குநோக்கி இருந்து இடது முழங்காலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊன்றியிருந்து பிண்டம் நோக்கி தர்ப்பணம் இடவேண்டும். பின்னர் பிண்டத்திற்கு மஞ்சள், சந்தனம், பத்திரபுஷ்பம் முதலியன சாத்தி தூபதீபம் காட்டிப் பூசிக்க வேண்டும்.

நைவேத்தியங்கள் வைத்து பூசைவழிபாடு செய்து திருமுறை ஓதி சமரகவிபாடி தர்ப்பணம் செய்த கர்த்தாவும் உறவினர்களும் வணங்கி முடிவில் நிமித்த பிண்டத்தில் சாத்தப்பட்ட பத்திர புஷ்பங்களை எடுத்து பிதிரர் பிண்டத்தோடு சேர்த்தல் மூலம் இறந்த நிமித்தர் பிதிரர்களோடு ஒன்றானார் என்று கருதப்படுகிறது. நிமிர்த்த பிண்டத்தை மூன்று பகுதயாக பாகம் செய்து பிதிரர் பிண்டங்களுடன் தனித்தனி சேர்க்கும் முறையும் உண்டு. சபிண்டியில் தகப்பன் அல்லது தாய் பிள்ளைகளுக்கு செய்தலும் தமையன் தம்பிக்கு செய்தலும் தாய்மாமன் மருமகளுக்குச் செய்தலுமாகிய மூத்தோர் இளையோருக்கு பிண்டம் இடும்பொழுது நிமித்தர் பிண்டம் மாத்திரம் இட்டுக் கிரியைகளை முடிக்குக.

பச்சை அரிசிமா, உழுத்தம்மா, பால், தயிர், நெய், தேன், எள்ளு இவை பிண்டத்திற்கு சேர்க்கப்படும் பொருள்களாகும்.

இங்கு ஒரு விடயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். புத்திரன் அல்லது புத்திரி அல்லாத ஒருவர் கிரியை செய்தால் பிண்டம்போடும் போது இறந்தவருக்கு (பிதிரருக்கு) மட்டும் பிண்டம் போடவேண்டும். இது ஏகோதிட்ட விதானம், பிதா, பாட்டன், பூட்டன் ஆகியோருக்கு பிண்டம் போடக்கூடாது. புத்திரனி புத்திரி பிண்டம்போடும் பொழுது பாட்டன், பாட்டி உயிருடன் இருந்தால் அவர்கட்கு பிண்டம் பொடக்கூடாது. ஆசாரியாருக்கு பாட்டன் பாட்டி உயிருடன் இருக்கும் விடயத்தை தெரிவிக்காது விட்டால் தவறுகள் ஏற்படும்.

கிரியை முடித்த பின்னர் குருமாருக்கு தட்சணை கொடுத்து வணங்கி ஆசீர்வாதம் பெற்று அவர்களை வலப்பக்கமாகப் பின் தொடர்ந்து சென்று வழியனுப்புக. தட்சணை என்பது அவரவர் வசதிக்கேறப அமையலாம். பிண்டத்தைப் பசுவுக்கு கொடுக்கவும் அல்லது புண்ணிய தீர்த்தத்திலே போடவும்.

## ஆப்திக சிராத்தம்

இதை ஆட்டைத்திவசம் எனக்கூறுவர். முதலாவது வருட முடிவில் இறந்த திதியிற் செய்யப்படும் சிரார்த்தம். இதில் நிதித்தருக்குப் பிண்டம் இல்லை இதுவே அபரக்கிரியைகளின் பூர்த்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருட சிராத்தம்

வருடா வருடம் இறந்த திதியிற் சிராத்தம் செய்யப்படும் என்பது சிரத்தையுடன் செய்யப்படுவது எனப்பொருள்படும். மகன் தந்தைக்குச் சிராத்தம் செய்யும் பொழுது தகப்பம், பேரன், புஶீட்டன் ஆகிய மூவருக்கும் பிண்டங்கள் கிழக்குப் பக்கமாக உள்ள தர்பையிலும் வம்சத்திலும் வம்சத்தில் உள்ள பிதிரர்கள் எல்லோருக்குமாக ஒரு பிண்டத்தை மேற்குப் பக்கமாக உள்ள தர்ப்பையிலும் இடப்படல வேண்டும். மகன் தாயாருக்குச் செய்யும் சிராத்தத்தில் தாய், தகப்பனுடைய தாய், பேரனுடைய தாய் ஆகிய மூவருக்கும் மூன்று பிண்டங்களும் வம்சபிண்டம் ஒன்றும் இடுதல் வேண்டும்.

பிள்ளையில்லாத கணவனுக்கு அல்லது மனைவிக்கு இருப்பவர் ஒருவர் சிராத்தம் செய்யலாம். அப்படி எவரும் செய்யாது போனாலும் பாவம் இல்லை.

தாய் தகப்பன் இருவருக்கும் ஒரே தினத்தில் சிராத்தம் வந்தால் இரு சிராத்தங்களையும் செய்யலாம். (ஆளெச காரணத்தினால் இப்படி வரலாம்)

மறதியில் சிராத்தம் செய்யத் தவறின் வேறு தினத்தில் ஆச்சிராத்தம் செய்யக்கூடாது. எதிர்வரும் அமாவாசைத் தினத்தில் அச்சிராத்தத்தை செய்யலாம். சிராத்தம் கர்த்தாவுக்கு இயலுமான காலம் வரை செய்ய வேண்டும்.

## சிராத்தம் செய்யுமிடம்

தன் வீடு, திருநந்தவனம், மலை புண்ணிய தீர்த்தக்கரை, திருக்கோயில், குருவின்மனை ஆகிய இடடங்களில் சிராத்தம் செய்யலாம்.

## சிராத்தம் செய்யும் காலம்

சூரியன் உதயம் முதல் ஆறு நாழிகை வரை (0600-08-24) பிராதக் காலம். அதற்குமேல் 12 நாழிகைவரை (8.24-10.48) சங்ககாலம் அதற்கு மேல் 18 நாழிகைவரை (10.48 - 1.12) மத்தியான காலம் அதற்கு மேல் 24 நாழிகை வரை (1.12 - 3.36) அபராஃன்ன காலம் அதற்குமேல் 30 நாழிகைவரை (3.36 - 6.00) சாயாரண காலம் மத்தியான காலத்தில் (10.48 - 1.12) ஏகோதிட்டமும் அபரன்ன காலத்தில் (1.12 - 3.36) பிதிர் சிராத்தமும் செய்க. (சூரிய உதயம் 6 மணிக்கு பிந்தினால் அங்ஙனம் பிந்திய நிமிடத்தைக் காட்டுக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிராத்த தினத்தில் செய்யத்தக்கவைகள்.

சிவன்கோயிலில் அபிஷேகம், பூசை முதலியவை செய்யலாம் வறியவர்களுக்கு அன்னதானமும் கொடுக்கலாம்.

## சிராத்த தினத்தில் செய்யத் தகாதவைகள்

நெல்குத்துதல், பிச்சையிடுதல், தயிர்கடைதல், நெய் முதலிய பொருள்களை வாங்குதல், கொடுத்தல் வீண் பிரச்சனைகளில் ஈடுபடல் முதலியன தகாதவை.

## சிராத்தத்திற்குரிய திரவியங்கள்

எள்ளு, பச்சை அரிசி, கோதுமை, பயறு, உழுந்து, சர்க்கரை, தேன், பசுவின்பால், தயிர், நெய், எண்ணெய், உப்பு, புளி, மிளகு, சீரகம், மஞ்சள், கடுகு, இஞ்சிக்கிழங்கு, வாழையிலை, வாழைத்தண்டு, வாழைக்காய், வாழைப்பழம், தேங்காய், இளநிர், புடலங்காய், பயற்றங்காய், அவரைக்காய், பாகற்காய், எலுமிச்சங்காய், நெல்லிக்காய், சிறுகிழங்கு, வள்ளிக்கிழங்கு, கீரை, முல்லையிலை, முசுட்டையிலை, காரையிலை, பிரண்டை, கருவேப்பிலை, வெற்றிலை, பாக்கு, ஏலம், சுக்கு, கராம்பு, சாதிக்காய், சாதிபத்தரி, முதலியனவாம். (மிளகாய், பூசனிக்காய், கத்ததரிக்காய், முதலியன சேர்க்கலாம் எனச் சில நூல்களில் சொல்லப்பட்டுள்ளது.

## ஆகாத திரவியங்கள்

கடலை, பீர்க்கங்காய், நீற்றுப்பூசணிக்காய், சுரைக்காய், கத்தரிக்காய், அத்திக்காய், முருங்கைக்காய், வாழைப்பூ, வெங்காயம், வெள்ளைப்பூண்டு, கொவ்வை, எருமை, ஆடு ஆகியவற்றின் பால், தயிர் முதலியனவாம்.

## சிராத்தத்தக்கு உபயோகமாகும் பத்திர புட்பங்கள்

துளசி, வில்வம், தாமரை, சண்பக், அறுகு, புண்ணை, நந்தியாவர்த்தம், எள்ளுப்பூ, மருக்கொழுந்து, வெட்டிவேர் முதலியன.

## ஆகாத பத்திர புட்பங்கள்

மகிழம்பூ, தாழம்பூ. அலரிப்பூ, சிறுசண்பகப்பூ முதலியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹாளயம்

புரட்டாதி மாதத்து அபட்சம் (அமாவாசைக்கு முன் 15 நாட்கள்) பிதிரர்களின் திருப்தி வேண்டி இச்சிராத்தம் செய்யப்படும். வருட சிராத்தம் செய்ய இயலாதவர்கள் மஹாளயமாவது செய்ய வேண்டும். மற்றைய சிராத்தங்களில் ஏற்படும் குறைகளுக்கு இது சாந்தியாக அமையும். தந்தை தாய் இருவரும் இறந்திருப்பின் இருவருக்குமாக பிண்டமிடல் வேண்டும் இது பிதிர்களுக்கு இராப்போசனமாகும்.

அமாவாசை நாளில் விரதமிருந்து பிதிர் திருப்திக்காக எள்ளும் தண்ணீரும் இறைத்தல் தந்தை தாய் வர்க்கம் இரண்டினுக்கும் இது நன்மை பயக்கும் இவை ஆண்டுத்திதியின் பின் செய்யப்படும்.

## தநிஷ்ட பஞ்சமி

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களில் மரணித்தால் பஞ்சமி தோஷமுண்டு. இறந்த வீட்டில் கும்பம் தீபம் ஜலம் இவைகளை வைத்து பசுமாடு கட்டிவைத்த வீட்டில் நெற்பொரி நவதானியம் தூவுதல் வேண்டும். அவிட்ட நற்சத்திரத்திற்கு மூன்று மாதமும் பூரட்டாதி நட்சத்திரத்திற்கு ஒரு மாதமும் ரேவதி நட்சத்திரத்திற்கு அரைமாதமும் தோஷமாம் நீங்க பஞ்சமி சாந்தி செய்ய வேண்டும்.

## துர்மரணம்

துர்மரணம் அல்லது தவமிருந்து அடைந்தவருக்கு கிரியை செய்யாது தகனம் செய்யவேண்டும். துர்மரணமடைந்தவருக்கு அங்கமெதுவிதிலும் குறைவுபடாமலிருந்தால் ஆறு மாதத்தின் மேல் இறந்த திதியிலே அந்தியேட்டி முதலிய கிரியைகளைச் செய்யலாம். அங்கங்களில் குறைவுபட்டிருந்தால் ஒரு வருடத்தின் பின்னர் இறந்த திதியில் கிரியைகளைச் செய்யலாம். வைரவ சாந்தி செய்து கிரியை செய்யவும்.

## நந்தி சிராத்தம்

விவாகம் முதலியன சுபகாரியங்கள் நடைபெறும் தினம் அல்லது அதற்கு முன்தினம் பிதிரர்களுடைய ஆசீர்வாதம் பெறும் பொருட்டு இரணிய தானமாக (காசு) இவை செய்யப்படும். பிதிர் வழிபாடு செய்யாது எந்த நற்காரியமும் செய்யக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தர்ப்பணம்

வலது கையில் எள்ளையும் தர்ப்பையும் வைத்து வலது கைக்ட்டை விரலுக்கும் சுட்டு விரலுக்கும் நடுவாக விழும்படி தர்ப்பணம் செய்யவேண்டும்.

## பிண்டம் இடுதல்

பிண்டம் இடும்பொழுது கர்த்தா தெற்கு முகமாக முழங்காலை ஊன்றிக்கொண்டிருந்து வலதுகைப் பெருவிரலிடையினால் பிண்டம் இடுதல் வேண்டும்.

## தசதானம்

இத்தானம் அந்தியேட்டியில் செய்யப்படும் தானமாக வழக்கத்தில் வந்துள்ளது. ஆனால் இத்தானத்தை ஒருவர் உயிருடன் உள்பொழுது கொடுப்பது மிகச்சிறந்ததாககும். ததானம் வருமாறு பசு, பூமி, எள்ளு, காசு, நெய், வஸ்திரம், நெல்லு, வெல்லம், வெள்ளி, உப்பு இதிற் சிலவற்றை இரணிய தானமாகக் கொடுக்கலாம்.

## ஆசௌசம்வரின் செய்யும் விதி

பிறப்பு இறப்பு ஆசௌத்திலே சிராத்தம் வந்தால் ஆசௌனம் நீங்குடம். அதே தினத்தில் சிராத்தம் செய்தல் வேண்டும். சிராத்தம் தொடங்கிய பின்னர் ஆசௌசம் வந்தால், அச்சிராத்தம் முடியும் வரை அது கர்த்தாவைப் பற்றாது.

## சைவருக்கு உரிய ஆசௌசம்

சிவதீட்சை உடையவருக்கு சைவர் என்ற பெயர் உண்டு. சிவதீட்சையுடைய பிராமணரல்லாத ஏனைய மூன்று வருணத்தார் விபுரீதி, உத்திராக்கம் அணிந்து சிவபூசையுடன் புலால் முதலியவை உண்ணாதவரையும் இருப்பின் அவர்களுக்கு ஆசௌசம் பதினைந்து நாட்களாகும்.

## அபரக்கிரியை பற்றிய பொது விடயங்கள்

புண்ணிய தீர்த்தமாடும் காலத்தில் பிண்டதானம், தர்ப்பணம் செய்தால் பிதிர்களின் ஆசி கிடைக்கும். தானங்களுக்கு பச்சை அரிசி கொடுப்பது நன்று (பிராமணர்கள் புழுங்கள் அரிசி சாப்பாட்டுக்குப் பயன்படுத்தக்கூடாது என்ற வழமையும் உண்டு) புரோகிதர் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரியர் ஒரு நாளைக்கு ஒரு தானம் தான் பெற வேண்டும். இவர்கள் ஒரு சிராத்தம் தான் செய்யவேண்டும். அபரக்கிரியைகள் செய்யும் பொழுது ஆசாரியர் கர்த்தா ஆகிய இருவரும் இடப்பக்கமாக பூணூல் அணிய வேண்டும். பவித்திரம் காட்டுதல் வேண்டும். கர்தா கௌபீனம் தரித்து இரண்டு வஸ்திரம் தரித்திருக்க வேண்டும். தென்புலத்தாருக்கு செய்யும் கிரியைகள் யாவும் தெற்கும் மேற்கும் நோக்கியபடி செய்யவேண்டும். மரணக்கிரியையில் ஆசாரியாரோ அல்லது கர்த்தாவோ உருத்திராட்ச மாலை அணியக்கூடாது.

முக்தித்தலம் ஏழினில் முதலாவதாகிய காசித்தலம் சென்று அங்கு அபரக்கிரியைகள் அதாவது அந்தியேட்டி முதலியவற்றை உயிருடன் இருக்கும் பொழுது பின்னர் தங்களுக்கு மரணத்தின் பின் கிரியை எதுவும் செய்யத்தேவையில்லை என்று நாம் கேள்விப் பட்டிருக்கின்றோம். காசியாத்திரை சென்று வந்தவர்கள் சிலர் தங்கட்கு மரணத்தின் பின் கிரியை எதுவும் செய்யவேண்டாமென்று முன்னமே கூறியதால் அவர்களுக்கு உறவினர்கள் கிரியைகள் செய்யாது விட்ட சில சம்பவங்களையும் நாம் கேள்விப்பட்டுள்ளோம்.

இவை முற்றிலும் பிழையான கருத்தாகும். அப்படி ஒருமுறை நாம் எந்த நூலிலும் இருப்பதாக அறியவில்லை. ஆனால் புண்ணிய நதிகளில் திர்த்தமாடி பிண்டதானம், தர்ப்பணம் செய்தால் பிதிர்களுக்கு திருப்தி உண்டாகும் என நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

வட இந்திய முத்தித்தலங்களில் ஒன்றாகிய காயாவில் பிதிர்களுக்கு பிண்டம் போடுவது வழக்கம். அங்கு மூன்று இடங்களிற் பிண்டம் போடுவார்கள். அங்குள்ள புரோகிதர்கள் இனிமேல் நீங்கள் உங்கள் பெற்றோருக்குப் பிண்டம் போடத் தேவையில்லை என்று கூறுவது உண்டு. ஆனால் இதுவும் நூலாதாரம் அற்றதே.

தாய் தகப்பன் இறந்த ஒருவருடத்திற்குள் தலயாத்திரை செய்தல் கூடாது. சுபகாரியங்களும் செய்தல் கூடாது. இதிலுள்ள சகல காரியங்களையும் செய்ய இயலாதவர்கள் தன் உள்ளத்தை ஒரு நிலைப்படுத்தி ஆத்மசாந்தியை வேண்டி இறைவனைத் தியானம் செய்தல் வேண்டும்.

**இக்கட்டுரை அபரக்கிரியாவிதி, சோமசம்பு, பத்ததி, சைவபூஷணம் ஆகிய நூல்களிலிருந்தும் சைவக்கிரியைகள் பற்றி வெளிவந்த பிற நூல்களிலிருந்தும் தொகுத்து எழுதப்பட்டது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லறம் எது? துறவறம் எது?

ஒரு மனிதனுக்கு இரண்டு கால்கள் போல, சமுதாயத்திற்கு இல்லறமும் துறவறமும் விளங்குகின்றன. அன்பின் அடித்தளத்தில் அமைவது இல்லறம். அருளின் அடித்தளத்தில் அமைவது துறவறம்.




அன்பும் அறமும் கொண்டது இல்லறம். அருளும் அறமும் கொண்டது துறவறம். நல்ல இல்லற வாழ்க்கை, படிப்படியாகத் துறவு மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனொளி

ஆன்மீக சிற்றிதழ் 9



ஆசிரியர்
திருமலை சுந்தா

• வர லைக்ஷ்மி
விரத பூஜை

20/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துன்பமே வைராக்கியத்தின் ஆழத்தைச் சோதித்தறிகிறது**

**அட்டைப்படம் : சிசு**



அன்பு செய் ஆனந்தித்திரு

# சிவனொளி

172, பிரதான வீதி, திருக்கோணமலை

**சிற்றிதழ் –9**

**2009 – ஆடி**

**இதழில்....**


- ஸ்ரீ வரலக்ஷ்மி விரத மகிமை
- ஸ்ரீ மஹாலக்ஷ்மி அஷ்டகம்
- பூர்வாங்க பூஜைகள்
- நிவேதந மந்திரங்கள்
- பிரதான பூஜை
- அங்க பூசை
- ஸ்ரீ லக்ஷ்மி அஷ்டோத்தர சத நாமாவளி


**நற்றுணையாவது நமசிவாயவே**



# ஆசிரியரின்....

சிவனொளி சிற்றிதழ் - 9 உங்கள் கரங்களில் தவழுகின்றது. 'சிவனொளி' நடாத்திய 'சைவ சமய' பொது அறிவுப்போட்டியின் மூலம் ஆன்மீக உள்ளங்களை சந்திக்க முடிந்தது.

பரிசுகள் பெற்ற செல்வி. மகாலிங்கம் திரிசாந்தி, செல்வி மோகனதாஸ், லக்சனா, செல்வி சர்வாத்மனி, உதயசங்கர் ஆகியோரின் ஆன்மீக தேடல் எம்மை பிரமிக்க வைக்கின்றது.

ஸ்ரீ வரலக்ஷ்மி விரத பூசை பற்றிய சுருக்கமான விளக்கங்கள் பக்கங்களை அலங்கரிக்கின்றன.

உங்கள் கடிதங்களுக்கு எங்களின் நன்றிகள். மறு இதழில் அறிவோம் - அறிந்தவற்றை பேசுவோமே!

அச்சு: அஸ்ரா பிரின்டர்ஸ்
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ வரலக்ஷ்மி விரத மகிமை

**சூதபௌராணிகர் சொல்கிறார் :**

தேவர்கள் வசிக்கும் கைலாஸ பர்வத சிகரத்தில் பரமசிவன் பார்வதியுடன் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருக்கிறார். அச்சமயம் பார்வதி, "நாதா, நான் தங்களை ஜெயித்துவிட்டேன்" என்றார். இப்படி இருவருக்கும் வாக்குவாதம் முற்றியது.

அப்போது அங்கிருந்த சித்திரநேமி என்ற கணதேவதையை இருவரும் மத்யஸ்தம் கேட்க, அவன் பக்ஷபாதத்தால், பரமசிவன்தான் வெற்றி கொண்டார் எனக் கூறினான். அதற்கு பார்வதி அவன் மீது கோபம் கொண்டு "நீ பொய் சொன்னதால் குஷ்டரோகியாகி ஒளியிழந்து தவிப்பாயாக" என்று சபித்தாள்.

இதற்குப் பரமசிவன் வருந்தி "தேவி இந்த சித்திரநேமி எப்பொழுதும் பொய் என்பதே பேசாதவன். அவன் உண்மையைத்தான் கூறினான். நீ அவனை வீணாகச் சபித்து விட்டாயே! அவன் மீது நீ அருள் கூர்ந்து அவன் சாபத்தை அகற்றுவாயாக" என்று அவளை வேண்டினார்.

அதற்கு மனமிரங்கிய பார்வதி எப்பொழுது அழகிய தடாகதீரத்தில் தேவகன்னிகைகள் புண்ணியமான ஒரு விரதத்தை அனுஷ்டிப்பார்களோ, அப்பொழுது உன் சாபம் நீங்கும் என்று கூறினாள். உடனே கீழே சாய்ந்து விட்டான். பிறகு சித்திரநேமி, சில தினங்களில் ஒரு தடாகக் கரையில் குஷ்டரோகியாகி அங்கு வாசம் புரிந்து வந்தான். ஒரு நாள் அங்கே வந்த தேவப் பெண்களைக் கண்டான். தேவி பூஜையில் ஈடுபட்ட அந்தப் பதிவிரதைப் பெண்கள் தேவியை வணங்கி வழிபடுவதைக் கண்டு, அம்மையீர் தாங்கள் செய்யும் பூஜை யாது? இதை நான் செய்யலாமா? நான் பார்வதியின் சாபத்தால் குஷ்டரோகியாகித் துன்புற்றிருக்கிறேன். என் துன்பம் நீங்கும் வழியைத் தாங்கள் கூறியருள வேண்டும் என்று வேண்டினான்.


அப்ஸரப் பெண்கள் கூறியதாவது : நாங்கள் இன்று வரலக்ஷ்மி விரதம் என்னும் விரதத்தை அனுஷ்டிக்கிறோம். இது திவ்யமானது. கோரும் வரங்களை அளிக்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியது. சூரியன் கடகத்தில் இருக்கும் போது, அதாவது கங்கையும் யமுனையும் சேரும் காலத்தில் வெள்ளிக்கிழமை அன்று முறைப்படி மாலக்ஷ்மியைப் பற்றியதான இந்த விரதத்தைத் தொடங்க வேண்டும்.

தங்கத்தினால் நான்கு கைகளுடன் லக்ஷ்மியின் பிரதிமையைச் செய்ய வேண்டும். வீட்டைத் தோரணங்கள், கோலங்கள் முதலியவைகளால் அலங்கரிக்க வேண்டும். வீட்டின் கிழக்குத் திக்கில், முக்கியமாக ஈசானிய மூலையில், ஒருபடி அரிசியைப் பூமியில் பரப்பி அதன் மீது ஒரு கலசத்தை வைத்துத் தீர்த்தத்தை நிரப்ப வேண்டும். பொன்னையும், பழங்களையும், தளிர்களையும் அதன் மீது வைத்து புதிய வஸ்திரத்தைச் சுற்ற வேண்டும். அந்தக் கலசத்தின் மீது லக்ஷ்மியின் பிரதிமையை வைத்து முறைப்படி பூஜை செய்ய வேண்டும்.



இவ்வாறு தேவகன்னிகைகள் செய்த இந்தப் பூஜையை சித்திரநேமி இமைகொட்டாமல் பார்த்துவந்தான். ஹோமப் புகையை நுகர்ந்ததாலும், நெய்த்தீபத்தைக் கண்டதாலும் அவனுடைய குஷ்ட நோய் தீங்கித் தங்க நிறம் பெற்றான்.

இவ்வாறு மன அமைதியுடன் இந்த விரதத்தை மேற்கொண்டு ஐந்து வகையான தானம் செய்து கதையைக் கேட்க வேண்டும். பிறகு மௌனமாக இருந்து ஐவகை ஆராத்திகளைச் செய்து பூஜிக்க வேண்டும்.

பிறகு பிராம்மணனுக்கும், ஸன்னியாஸிக்கும், தெய்வத்திற்கும், பிரம்மச்சாரிக்கும், சுவாஸினிக்கும் முறையே ஐந்து வகையான தானங்களைச் செய்தான். அதன் பின், தேவிக்கு நமஸ்காரம் செய்து தன் இருப்பிடம் சென்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு கைலாஸம் சென்று பார்வதீ பரமேஸ்வரரை வணங்கி அவரருகில் நின்று "தேவி வரலஷ்மீயின் அருளால் தங்கள் திருவடியைக் காணும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது". என்று கூறி வணங்கினான். அப்பொழுது பரமசிவன் "இன்று முதல் நீ இந்தக் கைலாசத்தில் ஸகல போகங்களையும் அனுபவித்துக் கொண்டிருப்பாயாக. பிறகு இந்த விரதத்தின் மகிமையால் வைகுந்த லோகம் சேருவாய்" என்றார். முன்பு பார்வதியும் ஸத்புத்திர லாபத்திற்காக இந்த விரதத்தை பெண்கள் அனுஷ்டிப்பார்களாக. மற்றும், குண்டினம் என்ற நகரத்தில் சாருமதி என்ற பெண் இந்த வரலக்ஷ்மீ விரதத்தை உபதேசிக்கப் பெற்று, ஆடி மாதம் சுக்ல பக்ஷ பூர்ணிமையுடன் கூடிய வெள்ளிக்கிழமை அன்று தேவியை வரித்து ஸகல பாக்கியங்களையும் பெற்றாள்.

விக்கிரமாதித்தன் நந்தனிடமிருந்து ராஜ்ஜியத்தைப் பெற்றான். மனைவி இல்லாத நந்தன் இந்த விரதத்தைச் செய்து அழகிய மனைவியை அடைந்தான். அவன் மனைவியும் பிள்ளைப் பேற்றுக்காக விரமிருந்து உலகைக் காக்கும் மகனை அவள் பெற்றாள். இப்படிப் பலர் அனுஷ்டித்தால் அதுமுதல் இந்தச் சிறந்த வரலக்ஷ்மீ விரதம் இவ்வுலகில் பரவியது.

எனவே ஆடி மாதம் சுக்ல பக்ஷத்தில் இரண்டாவது வெள்ளிக்கிழமை அன்று வரலக்ஷ்மீயை மகிழ்விக்கக் கூடியதான இந்த ஸம்பத் விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். லக்ஷ்மீயை மகிழ்விக்கும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கும் பெண்மணி இவ்வுலகில் ஸகல போகங்களையும் அனுபவித்த பின் வைகுந்தம் சேருவாள்.

எல்லா சுக்ல பக்ஷத்திலும் எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மஹாலக்ஷ்மியை முறைப்படி பூஜித்த பின் சுவாஸினி சுமங்கலி பூஜை செய்தால், வாழ்நாள் முழுவதும் தனம், ஆரோக்கியம் முதலிய ஸம்பத்துக்கள் எல்லாம் உண்டாகும். ஸந்தானம் விரத்தியாகும். சுமங்கலியாக வெகுகாலம் வாழ்வார்கள்.

இந்த வரலக்ஷ்மீ விரத மகிமையைப் படிப்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் வரலக்ஷ்மியின் அருளால் தனதான்ய ஸம்பத்துக்கள் உண்டாகும்.

விநாயகர் வழிபாடு செய்து கும்பத்தில் ஸ்ரீ வரலக்ஷ்மீயை ஆவானம் செய்யவும்.

சுபம்

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மஹாலக்ஷ்மி அஷ்டகம்

நமஸ்தேஸ்து மஹாமாயே ஶ்ரீபீடேஸூரபூஜிதே ।
சங்க சக்ர கதாஹஸ்தே மஹாலக்ஷ்மி நமோஸ்துதே ॥

நமஸ்தே கருடாரூடே கோலாஸூர பயங்கரி ।
ஸர்வ பாபஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே ॥

ஸர்வஜ்ஞே ஸர்வ வரதே ஸர்வ துஷ்ட பயங்கரி ।
ஸர்வ துக்க ஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே ॥

ஸித்தி புத்தி ப்ரதே தேவி புக்தி முக்தி ப்ரதாயிநி ।
மந்த்ர மூர்த்தே ஸதா தேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே ॥

ஆத்யந்த ரஹிதே தேவி ஆதி சக்தி மகேஸ்வரி ।
யோகஜே யோக ஸம்பூ தே மஹாலக்ஷ்மி நமோஸ்துதே ॥

ஸ்தூலஸூக்ஷ்ம மஹா ரௌத்ரே மஹா சக்தி மஹோதரே ।
மஹா பாப தேவி மகாலக்ஷ்மீ நமோஸ்த்துதே

பத்மாஸந ஸ்த்திதே தேவி பரப்ரஹ்ம ஸ்வரூபிணி ।
பரமேசி ஜகந்மாதா மஹாலக்ஷ்மி நமோஸ்துதே ॥

ஸூவேதாம்பரதரே தேவி நாநாலங்கார பூஷிதே ।
ஜகத் ஸ்திதே ஜகந்மாதா மஹாலக்ஷ்மி நமோஸ்துதே ॥

மஹாலக்ஷ்மியஷ்டக ஸ்தோத்ரம் படேத் பக்தி மான்யநர : ।
ஸர்வஸித்தி மவாப்நோதி ராஜ்யம் ப்ராப்நோதி ஸர்வதா ॥

ஏககாலே படேந் நித்யம் மஹாபாப விநாசநம் ।
த்விகாலம் ய படெந் நித்யம் தநதாந்ய ஸமந்வித ॥

த்ரிகாலம் ய பதேந் நித்யம் மஹாசத்ரு விநாசநம் ।
மஹாலக்ஷ்மீர் பவேந் நித்யம் ப்ரஸந்தா வரதா ஸூபா ॥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூர்வாங்க பூஜைகள்

பூஜாரம்பம்

**(முதலில் "சிவாயநம" என்று சொல்லித் திருநீறு அணிக, பின்னர் கையில் புஷ்பம் அக்ஷதை எடுத்துக் கொண்டு, கீழ்க்கண்ட மந்திரம் சொல்லிக் குட்டிக் கொள்ளவும்.)**

சுக்லாம்பரதரம் விஷ்ணும் ஸஸிவர்ணம் சதுர்புஜம் \
ப்ழஸந்த வதநம் த்யாயேத் ஸர்வ சிக்நோப ஸாந்தயே \ \

என்று பிரார்த்திக்கவும்.



**தவேத லக்நம் ஸுதிநம் ததேவ**
**தாராபலம் சந்த்ரபலம் ததேவ**
**வித்யாபலம் தைவபலம் தவேத**
**லக்ஷ்மீபதே தேங்க்ரியுகம் ஸ்மராமி**

என்று சொல்லி மோதிர விரலில் பௌத்திரம் அணிக.

**ப்ராணாயாமம்**

ஓம் பூ :- ஓம் பு வ : ஓம் ஸுவ :- ஓம் மஹ :- ஓம் ஜந :- ஓம் தப :- ஓம் ஸத்யம் - ஓம் தத்ஸவிதுர் வரேணியம் - பர்கோ தேவஸ்ய தீ மஹி தியோ யோ ந : ப்ரசோதயாத் - ஓமாப : ஜ்யோதீரஸ : அம்ருதம் ப்ரஹம பூர்புவஸ்ஸுவரோம்

**ஸஹ்கல்பம்**

மமோபாத்த ஸமஸ்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீ பரமேஸ்வர - ப்ரீயர்த்தம், கரிஷ்யமாணஸ்ய கர்மண : நிர்விக்நேந பரிஸமாப்த்யர்த்தம் ஆதௌ விக்நேஸ்வர பூஜாம் கரிஷ்யே\

**I. ஆஸந பூஜை**

கட்டை தர்ப்பையை காலுக்கு கீழே வைக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. கண்டா பூஜை**

ஆகமார்த்தம் து தேவாநாம் கமநார்த்தம் து ரக்ஷஸாம் \
கண்டாரவம் கரோம்யாதௌ தேவதாஹ்வாந லாஞ்ச்சநம் \\
(மணியை அடிக்கவும்)

**3. விக்நேஸ்வர பூஜை**

**(மஞ்சள் பிள்ளையார் செய்து வைத்து, கையில் புஷ்பம் அக்ஷதை எடுத்துக் கொண்டு)**

கணாநாம் த்வா கணபதிகும் ஹவாமஹே
கவிம் கவீநாம் உபமஸ்ரவஸ்தமம் \
ஜ்யேஷ்ட ராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பதே
ஆந : ஸ்ருண்வந்நூதிபிஸ் ஸீத ஸாதநம் \\

அஸ்மிந் ஹரித்ராபிம்பே மஹாகணபதிம் த்யாயாமி மஹா கணபதிம் ஆவாஹயாமி

| | | |
|---|---|---|
| மஹாகணாதிபதயே | ஆஸநம் | ஸமர்ப்பயாமி |
| மஹாகணாதிபதயே | அரக்யம் | ஸமர்ப்பயாமி |
| மஹாகணாதிபதயே | பாத்யம் | ஸமர்ப்பயாமி |
| மஹாகணாதிபதயே | ஆசமநீயம் | ஸமர்ப்பயாமி |
| மஹாகணாதிபதயே | ஔபசாரிகஸ்சாநம் | ஸமர்ப்பயாமி |
| மஹாகணாதிபதயே | ஸ்நாநாநந்தரம் ஆசமநீயம் | ஸமர்ப்பயாமி |
| மஹாகணாதிபதயே | வஸ்த்ரார்த்தம் அஹதாந் | ஸமர்ப்பயாமி |
| மஹாகணாதிபதயே | யக்ஞோபவீதார்த்தம் அக்ஷதாந் | ஸமர்ப்பயாமி |
| மஹாகணாதிபதயே | கந்தாந் தாரயாமி | ஸமர்ப்பயாமி |
| மஹாகணாதிபதயே | கந்தஸ்யோபரி அக்ஷதாந் | ஸமர்ப்பயாமி |
| மஹாகணாதிபதயே | அலங்கரணார்த்தம் அக்ஷதாந் | ஸமர்ப்பயாமி |
| மஹாகணாதிபதயே | ஹரித்ரா குங்குமம் | ஸமர்ப்பயாமி |

புஷ்பை : பூஜாமஜ (புஷ்பம், அக்ஷதையால் மஞ்சள் பிள்ளையாருக்குப் பூஜை செய்க)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | ஸுமுகாய | நம: | ஓம் | லம்போதராய | நம : |
| ஓம் | ஏகதந்தாய | நம: | ஓம் | விகடாய | நம : |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | கபிலாய | நம: | ஓம் | விக்நராஜாய | நம : |
| ஓம் | கஜகர்ணகாய நம: | | ஓம் | கணாதிபாய | நம : |
| ஓம் | தூமகேதவே | நம: | ஓம் | வக்ரதுண்டாய | நம : |
| ஓம் | கணாத்யக்ஷாய | நம: | ஓம் | ஸூர்ப்ப கர்ணாய | நம : |
| ஓம் | பாலசந்த்ராய நம: | | ஓம் | ஹேரம்பாய | நம : |
| ஓம் | கஜாநநாய | நம: | ஓம் | ஸ்கந்த பூர்வஜாய | நம : |

ஓம் மஹாகணாதிபதயே நம : நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

தூபார்த்தம், தீபார்த்தம் அக்ஷதாந் ஸமர்ப்பயாமி

(வெற்றிலை, பாக்கு, பழம், வெல்லம், நிவேதனம் செய்க)

## நிவேதந மந்திரங்கள் :

ஓம் பூர்புவஸ்ஸூவ : தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோதேவஸ்ய தீமஹி, தியோ யோ ந : ப்ரசோதயாத் \ தேவஸவித : ப்ரஸூவ \ ஸத்யம் த்வர்த்தேந பரிஷிஞ்சாமி

அம்ருதமஸ்து அம்ருதோபஸ்தரணமஸி ஸ்வாஹா – ஓம் ப்ராணாய ஸ்வாஹா, ஓம் அபாநாய ஸ்வாஹா, ஓம் வ்யாநாய ஸ்வாஹா, ஓம் உதாநாய ஸ்வாஹா, ஓம் ஸமாநாய ஸ்வாஹா, ஓம் ப்ரஹ்மணே ஸ்வாஹா.

ப்ரஹ்மணிம ஆத்மாம்ருதத்வாய மஹாகணாதிபதியே
குடகண்ட, கதளீபல நிவேதநம் ஸமர்ப்பயாமி.
மத்யே மத்யே பாநீயம் ஸமர்ப்பயாமி. (உத்தரணியில் தீர்த்தம் எடுத்து விடுக)

அம்ருதாபிதாநமஸி – உத்தராபோஸநம் ஸமர்ப்பயாமி
(உத்தரணியில் தீர்த்தம் எடுத்து விடுக)
தாம்பூலம் ஸமர்ப்பயாமி (உத்தரணியில் தீர்த்தம் எடுத்துத் தாம்பூலத்தில் விடுக) (கற்பூரம் ஏற்றுக)
நீராஜநம் ஸமர்ப்பயாமி,
நீராஜநாநந்தரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி.
(உத்தரணியில் தீர்த்தம் எடுத்து விடுக).

- பிறரது பாராட்டுக்கும்; பழிக்கும் செவிசாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரார்த்தனை

வக்ரதுண்ட மஹாகாய ஸூர்யகோடி ஸமப்ரப \
அவிக்நம் குரு மே தேவ ஸர்வகார்யேஸு ஸர்வதா \\

(ப்ரதக்ஷிணமும் நமஸ்காரமும் செய்க)

கணபதி ப்ரஸாதம் ஸிரஸா க்ருஹ்ணாமி

(கணபதி ப்ரஸாதத்தை சிரஸில் தரித்துக் கொள்க)

### ப்ராணாயாமம்

ஓம் பூ : ஓம் புவ : – ஓம் ஸுவ :– மஹ :– ஓம்ஜந :– ஓம் தப : ஓம் ஸத்யம் – ஓம் தத்ஸவிதுர்வரேண்யம் – பர்கோ தேவஸ்ய தீமஹி – தியோ யோ ந : ப்ரசோதயாத் – ஓமாப :– ஜயோதீரஸ அம்ருதம் ப்ரஹ்ம – பூர்புவஸ்ஸுவரோம்.

## பிரதான பூஜை

[காலம் :– சிராவண (ஆடி அல்லது ஆவணி) மாதம் பௌர்ணமிக்கு முன் வரக்கூடிய வெள்ளிக்கிழமையன்று சுமங்கலிகள் இந்த விரதத்தை அனுஷ்டித்து, வரலக்ஷமிக்குப் பூஜை செய்க. அன்றைய தினம் வீட்டைப் பசுஞ் சாணத்தால் மெழுகிக் கோலமிடுக. ஒரு மண்டபம் அமைத்து, அம்மண்டபத்தில் முதலில் ஒரு அடி சச்சதுரமாக நெல்லைப் பரப்பி, அதன் மீது ஒரு தாம்பாளத்தில் அரிசியைப்பரப்பி, அதன்மீது ஒரு வெள்ளி, அல்லது செப்புக் குடத்தை வைத்து அதை அரிசி அல்லது ஜலத்தால் நிரப்பி, மாவிலைக் கொத்து, தேங்காய் வைத்து, சந்தனம் அக்ஷதை புஷ்பங்காளால் அலங்காரம் செய்து, அந்த கலசத்திற்கு மேலே தேவியின் பிரதிமையை வைத்து பூஜை செய்க. அன்றைய தினம் பூஜையில் வைத்த நோன்புக்கயிற்றை வலது கையில் அணிக.]

### பூஜாரம்பம்

ஸுக்லாம்பரதம் விஷ்ணும் ஸஸிவர்ணம் சதுர்ப்புஜம் \
ப்ரஸந்த வதநம் த்யாயேத் ஸர்வ விக்நோப ஸாந்தயே \\



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ப்ராணாயாமம்



ஓம் பூ : ஓம் புவ : ஓம் ஸுவ :- ஓம் மஹ :-
ஓம் ஜந :- ஓம் தப :- ஓம் ஸத்யம் :- ஓம் தத்ஸவிதுர்
வரேண்யம் - பர்கோ தேவஸ்ய தீமஹி - தியோ யோ ந,
ப்ரசோதயாத் - ஓமாப :- ஜ்யோதீரஸ :- அம்ருதம்
ப்ரஹ்ம - பூர்ப்புவஸ்ஸுவரோம்.

## ஸங்கல்பம்

மமோபாத்த ஸமஸ்த துரிக்ஷயத்வாரா ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் ஸுபே ஸோபநே முஹூர்த்தே ஆத்ய ப்ரஹ்மண: த்விதீய பரார்த்தே, ஸ்வேத வராஹகல்பே, வைவஸ்வத மந்வந்தரே, அஷ்டாவிம்ஸதிதமே, கலியுகே, ப்ரதமே பாதே, ஜம்பூத்வீபே, பாரதவாடஷே பாரதகண்டே, மேரோ: தக்ஷிணே பார்ஸ்வே, ஸகாப்தே, அஸ்மிந் வர்த்தமாநே வ்யாவஹாரிகே, ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணாம் மத்யே...... நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயநே வர்ஷருதௌ... மாஸே ஸுக்லபக்ஷே ......... ஸுபதிதௌ ப்ருகு வாஸர யுக்தாயாம்....... நக்ஷத்ர யுக்தாயாம், ஸுப நக்ஷத்ர ஸுபயோக ஸுபகரண ஏவங்குண விஸேஷண விஸிஷ்டாயாம்...... ஸுபதிதௌ, அஸ்மாகம் ஸ்குடும்பாநாம் க்ஷேமஸ்தைர்ய வீர்ய விஜய - ஆயுஷ்மத் ஸுருப ஸுகுணாநேக ஸுபுத்ராவாப்த்யார்த்தம், தீர்க்க ஸௌமாங்கல்ய - அவாப்த் யர்த்தம், அரோக த்ருடகாத்ரதா ஸித்யர்த்தம், வரலக்ஷமீ ப்ரஸாத ஸித்யர்தம் யதாஸக்தி த்யாந - ஆவாஹநாதி ஷோடஸோபசாரை வரலக்ஷமீ பூஜாம் கரிஷ்யே \ ததங்கம் கலஸ பூஜாம் கரிஷ்யே \\

## விக்நேஸ்வர உத்யாபதம்

"அப உபஸ்ப்ருஸ்ய" (உத்தரணி ஜலத்தால் கையைத் துடைத்துக்கொண்டு)

விக்நேஸ்வரம் யதாஸ்த்தாநம் ப்ரதிஷ்டா பயாமி : ஸோபநார்த்தே க்ஷேமாய புநராகசமநாய.

*என்று சொல்லி மஞ்சள் பிள்ளையார் மீது புஷ்பம் அக்ஷதை சமர்ப்பித்து வடக்குப்பக்கமாகப் பிள்ளையாரை நகர்த்துக.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குரு த்யாநம்**

குருர் ப்ரஹ்மா குருர் விஷ்னு : குருதேவோ மஹேஸ்வர : \
குருஸ் ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம : \\

த்யாநமும் ஆவாஹநமும்
(கையில் புஷ்பம் அக்ஷதை எடுத்துக் கொண்டு)

லக்ஷ்மீம் க்ஷீரஸமுத்ரராஜ தநயாம் ஸ்ரீரங்க தாமேஸ்வரீம் தாஸீபூத
ஸமஸ்த தேவவநிதாம் லோகைக தீபாங்குராம் \
ஸ்ரீமந்மந்த கடாக்ஷலப்த விபவாம் ப்ரஹ்மேந்த்ர கங்காதராம் த்வாம்
த்ரைலோகடயகுடும்பிநீம் ஸரஸிஜாம் வந்தே முகுந்தப்ரியம் \\
யா ஸா பத்மாஸநஸ்தா விபுலகடிதட பத்மபத்ராயதாக்ஷி
கம்பீராவர்த்தநாபி : ஸ்தநபரநமிதா ஸுப்ர வஸ்த்ரோத்தரீயா \
லக்ஷ்மீர் திவ்யைர் கஜேந்த்ரை மணிகண கசிதை :
ஸ்நாபிதா ஹேமகும்பை நித்யா நித்யம்ஸா நித்யம்ஸா பத் மஹஸ்தா
மம வஸது க்ருஹே
ஸர்வ மாங்கள்ய யுக்தா \\

பத்மாஸநாம் பத்மகராம் பத்மமாலா விபூஷிதாம் \
க்ஷீரவர்ணஸமம் வஸ்த்ரம் ததாநம் ஹரிவல்லபாம் \\
பாவயே பக்தியோகேத கலஸேஸ்மின் மநோஹரே \
அஸ்மிந் கலஸே வரலக்ஷ்மீம் த்யாயாமி \\

பாலபாநு ப்ரதீகாஸே பூரணச்த்ர நிபாநநே \
ஸுத்ரெஸ்மிந் ஸுஸ்திதா பூத்வா ப்ரயச்ச பஹீளாந் வராந் \\
தோரம் ஸ்தாபயாமி \\

(கையில் கட்டிக் கொள்ளப் போகும் நோன்புச் சரட்டை புஷ்பம் முடித்து கலஸத்திற்கு அருகில் வைக்கவும்)

ஸர்வமங்கள மாங்கள்யே விஷ்னுவக்ஷஸ்த்தலாலயே \
ஆவாஹயாமி தேவித்வாம் அபீஷ்ட பலதா பவ \\
**அஸ்மிந் கலஸே வரலக்ஷ்மீம் ஆவாஹயாமி**

● கறந்த பாலில் மறைந்து உறையும் நெய் போல பரமாத்மா ஒவ்வொரு ஜீவனிடத்தும் வாழ்கின்றான்.
— உபநிஷதம் —

● தன் மீது நம்பிக்கை வைத்திருப்பவர்களுக்கு இறைவன் தகப்பனாகவும், தோழனாகவும் இருந்து அனுதினமும் உறவாடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அங்க பூஜை

| | | | |
|---|---|---|---|
| வரலக்ஷ்ம்யை | நம: | பாதௌ | பூஜயாமி |
| மஹாலக்ஷ்ம்யை | நம: | குல்ப்பௌ | பூஜயாமி |
| இந்திராயை | நம: | ஜங்க்கே | பூஜயாமி |
| சண்டிகாயை | நம: | ஜாநுநீ | பூஜயாமி |
| க்ஷீராப்தி தநயாயை | நம: | ஊரு | பூஜயாமி |
| பீதாம்பர தாரிண்யை | நம: | கடிம் | பூஜயாமி |
| ஸாகரஸம்பவாயை | நம: | குஹ்யம் | பூஜயாமி |
| நாராயண ப்ரியாயை | நம: | நாபிம் | பூஜயாமி |
| ஜகத்குக்ஷ்யை | நம: | குக்ஷிம் | பூஜயாமி |
| விஸ்வஜநந்யை | நம: | வக்ஷ | பூஜயாமி |
| ஸௌஸ்தந்யை | நம: | ஸ்தநௌ | பூஜயாமி |
| கம்புகண்ட்யை | நம: | கண்டம் | பூஜயாமி |
| ஸௌந்தர்யை | நம: | ஸ்கந்தௌ | பூஜயாமி |
| பத்மஹஸ்தாயை | நம: | ஹஸ்தாந் | பூஜயாமி |
| பஹுப்ரதாயை | நம: | பாஹூந் | பூஜயாமி |
| சந்த்ரவதநாயை | நம: | வக்த்ரம் | பூஜயாமி |
| சஞ்சலாயை | நம: | சுபுகம் | பூஜயாமி |
| பிம்போஷ்ட்யை | நம: | ஓஷ்டம் | பூஜயாமி |
| அநகாயை | நம: | அதரம் | பூஜயாமி |
| ஸௌகபோலாயை | நம: | கபோலௌ | பூஜயாமி |
| பலப்ரதாயை | நம: | பாலம் | பூஜயாமி |
| நீலாலகாயை | நம: | அலகாந் | பூஜயாமி |
| ஸிவாயை | நம: | ஸிர: | பூஜயாமி |
| ஸர்வமங்களாயை | நம: | ஸர்வாண்யங்காநி | பூஜயாமி |

## ஸ்ரீ லக்ஷ்மீ அஷ்டோத்தரசத நாமாவளி

| | | | |
|---|---|---|---|
| ஓம் ப்ரக்ருத்யை | நம: | ஓம் ஸ்வதாயை | நம: |
| ஓம் விக்ருத்யை | நம: | ஓம் ஸௌதாயை | நம: |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் வித்யாயை நம:
ஓம் ஸர்வபூதஹிதப்ரதாயை நம:
ஓம் ஸ்ர்த்தாயை நம:
ஓம் விபூத்யை நம:
ஓம் ஸௌரப்யை நம:
ஓம் பரமாத்மிகாயை நம:
ஓம் வாவே நம:
ஓம் பத்மாலயாயை நம:
ஓம் பத்மாயை நம:
ஓம் ஸௌசயே நம:
ஓம் ஸ்வாஹாயை நம:
ஓம் காந்தாயை நம:
ஓம் காமாக்ஷ்யை நம:
ஓம் க்ரோதஸம்பவாயை நம:
ஓம் அநுக்ரஹப்ரதாயை நம:
ஓம் புத்தயே நம:
ஓம் அநகாயை நம:
ஓம் ஹரிவல்லபாயை நம:
ஓம் அஸோகாயை நம:
ஓம் அம்ருதாயை நம:
ஓம் தீப்தாயை நம:
ஓம் லோகஸோகவிநாஸிந்யை நம:
ஓம் தர்மநிலயாயை நம:
ஓம் கருணாயை நம:
ஓம் லோகமாத்ரே நம:
ஓம் பத்மப்ரியாயை நம:
ஓம் பத்மஹஸ்தாயை நம:
ஓம் பத்மாக்ஷ்யை நம:
ஓம் பத்மஸௌந்தர்யை நம:
ஓம் பத்மோத்பவாயை நம:

ஓம் தந்யாயை நம:
ஓம் ஹிரண்மய்யை நம:
ஓம் லக்ஷ்ம்யை நம:
ஓம் நித்யபுஷ்டாயை நம:
ஓம் விபாவர்யை நம:
ஓம் அதித்யை நம:
ஓம் தித்யை நம:
ஓம் தீப்தாயை நம:
ஓம் வஸீதாயை நம:
ஓம் வஸௌதாரிண்யை நம:
ஓம் கமலாயை நம:
ஓம் சதுர்ப்புஜாயை நம:
ஓம் சந்த்ரரூபாயை நம:
ஓம் இந்திராயை நம:
இந்துஸீதலாயை நம:
ஓம் ஆஹ்லாதஜநந்தையை நம:
ஓம் புஷ்ட்யை நம:
ஓம் ஸிவாயை நம:
ஓம் ஸிவகர்யை நம:
ஓம் ஸத்யை நம:
ஓம் விமலாயை நம:
ஓம் விஸ்வஜநந்யை நம:
ஓம் துஷ்டயை நம:
ஓம் தாரித்ர்யநாஸிந்யை நம:
ஓம் ப்ரீதிபுஷ்கரிண்யை நம:
ஓம் ஸாந்தாயை நம:
ஓம் ஸௌக்லமால்யாம் பராயை நம:
ஓம் ஸ்ரியை நம:
ஓம் பாஸ்கர்யை நம:
ஓம் பில்வநிலயாயை நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் பத்மமுக்யை நம:
ஓம் பத்மநாபப்ரியாயை நம:
ஓம் ரமாயை நம:
ஓம் பத்மமாலாதராயை நம:
ஓம் தேவ்யை நம:
ஓம் பத்மிந்யை நம:
ஓம் பத்மகந்திந்யை நம:
ஓம் புண்யகந்தாயை நம:
ஓம் ஸுப்ரஸந்நாயை நம:
ஓம் ப்ரஸாதாபிமுக்யை நம:
ஓம் ப்ரபாயை நம:
ஓம் சந்த்ரவதநாயை நம:
ஓம் சந்த்ராயை நம:
ஓம் சந்த்ரஸஹோதர்யை நம:
ஓம் வஸுப்ரதாயை நம:
ஓம் ஸுபாயை நம:
ஓம் ஹிரண்யப்ராகாராயை நம:
ஓம் ஸமுத்ர தநயாயை நம:
ஓம் ஜயாயை நம:
ஓம் மங்களாயை நம
ஓம் தேவ்யை நம:
ஓம் விஷ்ணு வக்ஷஸ்த்தல ஸ்திதாயை நம:
ஓம் விஷ்ணுபத்ந்யை நம:
ஓம் ப்ரஸந்நாக்ஷ்யை நம
ஓம் நாராயண ஸ்மாஸ்ரி தாயை நம:

ஓம் வராரோஹாயை நம:
ஓம் யஸஸ்விந்யை நம:
ஓம் வஸுந்தராயை நம:
ஓம் உதாராங்காயை நம:
ஓம் ஹரிண்யை நம:
ஓம் ஹேமமாலிந்யை நம:
ஓம் தநதாந்யகர்யை நம:
ஓம் ஸித்தாயே நம:
ஓம் ஸ்த்ரைணஸௌம் யாயை நம:
ஓம் ஸுபப்ரதாயை நம
ஓம் ந்ருபவேஸ்ம கதாநந் தாயை நம:
ஓம் வரலக்ஷ்ம்யை நம:
ஓம் தாரித்ர்ய த்வமஸிந்தையை நம:
ஓம் தேவ்யை நம:
ஓம் ஸர்வோபத்ரவ வாரிண்யை நம:
ஓம் நவதுர்க்காயை நம:
ஓம் மஹாகாள்யை நம:
ஓம் ப்ரஹ்ம விஷ்ணு ஸிவாத்மிகாயை நம:
ஓம் த்ரிகாலஜ்ஞாந ஸம்பந் நாயை நம
ஓம் புவநேஸ்வர்யை நம

ஸ்ரீ வரலக்ஷ்ம்யை நம : நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

---

- பிறருக்கு நீ கொடுப்பது பிச்சை
  ஆனால் நீ பெறுவதோ பேரின்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தோரக்கரந்தி பூஜை**

(சரட்டில் உள்ள 9 முடிச்சுக்களில் ஒவ்வொன்றையும் புஷ்பம் அக்ஷதை இவைகளால் பூஜிக்கவும்)

| | | | |
|---|---|---|---|
| கமலாயை | நம: | ப்ரதம க்ரந்திம் | பூஜயாமி |
| ரமாயை | நம: | த்விதீய க்ரந்திம் | பூஜயாமி |
| லோக மாத்ரே | நம: | த்ருதீய க்ரந்திம் | பூஜயாமி |
| விஸ்வ ஜநநடயை | நம: | சதுர்த்த க்ரந்திம் | பூஜயாமி |
| மஹாலக்ஷ்ம்யை | நம: | பஞ்சம க்ரந்திம் | பூஜயாமி |
| க்ஷீராப்தி தந்யாயை | நம: | ஷஷ்ட க்ரந்திம் | பூஜயாமி |
| விஸ்வஸாக்ஷிண்யை | நம: | ஸப்தம க்ரந்திம் | பூஜயாமி |
| சந்த்ரஸோதர்யை | நம: | அஷ்டம் க்ரந்திம் | பூஜயாமி |
| ஹரிவல்லபாயை | நம: | நவம க்ரந்திம் | பூஜயாமி |

ஸர்வமங்கள மாங்கள்யே ஸரவபஸ ப்ரணாஸிநி \
தோரகம் ப்ரதிக்ருஹ்ணாமி ஸுபரீதா பவ ஸர்வதா \\

**(என்று சொல்லிக் கயிற்றை கையில் எடுத்துக் கொண்டு)**

நவ தந்து ஸமாயுக்தம் கந்தபுஷ்ப ஸமந்விதம் \
பத்நீயாம் தக்ஷிணே ஹஸ்தே தோரகம் ஹரிவல்லபே \\

**(என்று சொல்லிக் கயிற்றை வலது கையில்கட்டிக் கொள்க)**

**(சுமங்கலி பூஜை செய்க)**

## கடவுளின் கருணையைப் பெறுவதற்கு உரிய வழி

**கேள்வி:** கடவுளின் கருணையைப் பெறுவதற்கு உரிய வழி?

**பதில் :** நாம் மற்றவர்கள் மீது கருணை காட்டுவது தான், நாம் இறைவனின் கருணையைப் பெறுவதற்குரிய வழியாகும். நாம் பிறரிடம் அன்பு காட்டுவது தான், நாம் இறைவனின் அன்பைப் பெறுவதற்குரிய வழியாகும். நாம் பிறரிடம் கருணையுடன் நடந்து கொண்டால் தான் இறைவனி நம்மீது கருணையுடன் நடந்து கொள்வான்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீகச் சிற்றிதழ் - 10

# சிவனொளி



ஆசிரியர் திருமலை சுந்தா

10/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களை மானுட
நேயத்துடன்
நேசிப்பவன் தான் மனிதன்
- துறவி -

அட்டைப்படம் : சிசு



அன்பு செய்
ஆனந்தித்திரு

# சிவனொளி

172, பிரதான வீதி, திருக்கோணமலை

சிற்றிதழ் –10

2009 – ஆவணி

## இதழில்....


- ஆவணி மாதம்
- வாகனங்கள் காட்டும் தத்துவங்கள்
- திருக்கோவிலில் செய்யத் தகாதவைகள்
- முடி காணிக்கை
- மத மாற்றம்
- மூன்று குருமார்கள்
- ஆன்மீக வினாவிடை


நற்றுணையாவது
நமசிவாயவே

## ஆசிரியரின்....

சிவனொளி சிற்றிதழ் - 10 மலர்ந்துள்ளது. வாசகர்களின் ஆதரவு எம்மை பிரமிக்க வைக்கின்றது.

உங்கள் இஷ்ட தெய்வத்திடம் பிராத்தனை செய்யுங்கள். ஆரோக்கியம் - நம்பிக்கை - மன அமைதி - பக்தி - பகுத்தறிவு - பற்றின்மை ஆகியவற்றிற்கு வேண்டுங்கள்.

'சிவனிடம்' நம்பிக்கை வையுங்கள் மன சுத்தத்துடன் ஐந்து நிமிடமாவது அமர்ந்திருந்து உங்களின் வேண்டுதல்களை கூறுங்கள்.

நம்புங்கள். நம்பியவர்களுடன் சிவன் என்றும் துணை வருவார். வெற்றி-தோல்வி அனைத்தையும் அவரிடம் விட்டு விடுங்கள்.

எல்லா வளமும் சிவன் தருவார். இது சத்தியமான உண்மை.

மறு இதழில் உங்கள் கருத்து அணைப்போடு சந்திப்போமே!

அச்சு: அஸ்ரா பிரின்டர்ஸ்
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய விரதம்

## ஆவணி மாதம்

### ஆவணிச் சதுர்த்தி (ஆவணி மாதம் வளர்பிறை 4ம் நாள்)

ஆவணி மாதத்துப் பூர்வ பக்கச் சதுர்த்தி விநாயகப்பெருமான் திருவவதாரம் செய்த தினமாகையால் விநாயக விரதத்திற்கும் வழிபாட்டிற்கும் சிறந்தநாளாகும்.

### விநாயக சதுர்த்தி விரதம்

மாதந்தோறும் வரும் வளர்பிறைச் சதுர்த்தித் திதி விநாயகர் விரதத்திற்குச் சிறந்த நாளாகும். ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தியில் அனுட்டிக்கப்படும் விநாயக சதுர்த்தி விரதம், மற்றும் விரத பலனிலும் பார்க்கக்கூடுதலான பலனை நல்கும் எனச்சமயநூல்கள் சாற்றுகின்றன. அந்நாளில் இளம்பிறைச் சந்திரனைப் பார்க்கலாகாது. பகலில் உபவாசம் இருந்து ஆலய தரிசனம் செய்த பின், இரவில் கொழுக்கட்டை மோதகம் முதலியன விநாயகருக்கு நிவேதித்து உண்ணலாம். அந்நோன்பு நோற்பவர் விநாயகரை அறுகம் புல்லால் அர்ச்சிப்பது அளவிறந்த பலனைக் கொடுக்கும். இத்தினத்தில் விரதம் அனுட்டித்து உள்ளன்போடு வழிபடுவோர்க்கு விநாயகர் திருவருள் கடாட்சம் கிடைக்கும் என்பது உறுதி. அதுபோல் தேய்பிறையில் வரும் சதுர்த்தியைச் சங்கடகர சதுர்த்தி என அழைத்து விரதமிருப்பர்.

### ஆவணிச் சதுர்த்தசி

ஸ்ரீ நடராஜப் பெருமானின் ஆறு அபிஷேகங்களில் இத்தினத்தில் நடைபெறும் அபிஷேகமும் ஒன்றாகையால் இத்தினம் நடேசர் தரிசனத்திற்குச் சிறந்ததாகும்.

### ஆவணி மூலம்

மாணிக்கவாசக சுவாமிகளுக்காக சுந்தரேஸ்வரப் பெருமான் மதுரை மாநகருக்கு எழுந்தருளி அருள் பாலித்த தினம் இதுவாகும். அதாவது, மாணிக்க வாசக சுவாமிகளைப் பாண்டிய மன்னன் சிறையிலிட்டுத்தண்டனை விதித்த சமயம் சுவாமியவர்களை விடுவிப்பதற்காகச் சிவபெருமான் காட்டிலுள்ள நரிகளைப் பரிகளாக்கிக் கொண்டு வந்து அவரைச் சிறையினின்றும் மீட்டது ஆவணி மாத மூல நட்சத்திரத் தினமாகும். இதன் காரணமாக இத்தினம் பிட்டுக்கு மண் சுமந்த விழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

### ஆவணி ஞாயிறு

எல்லா மாதங்களிலும் ஞாயிறு வருகின்ற போதிலும் ஆவணி மாதத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமை சூரிய விரதத்திற்கும் வழிபாட்டிற்கும் சிறந்ததாகும். இம்மாதத்தில் சூரிய பகவான் சிங்கராசியில் பிரவேசிப்பதால் ஞாயிற்றுக்கிழமை முக்கியத்துவம் பெறுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனங்கள் காட்டும் தத்துவங்கள் - 1

சில வாகனங்கள் வேறு பொருள்களையும் காட்டுகின்றன. ஒவ்வொரு மூர்த்திக்கும் சிறப்பாக ஒவ்வொரு வாகனம் உண்டு. ஒரு மூர்த்தியே பல வாகனங்களில் வருவதும் வழக்கம். பல மூர்த்திகளும் ஒரு மூர்த்திதானே!

## சில வாகனங்களின் பொருள்களைக் கீழ்க்காண்க

### இடபம் (எருது)



1. நான்கு கால்கள் நான்கு அந்தக்கரணங்கள் இவை சக்தியில் ஒடுங்கி சக்தி ஞானம் தோன்றும் - இஞ்ஞானம் பசு ரூபமாகிய பசு போதம்: இப்பசு ஞானத்திக்கு மேலான பதி ஞானத்திலே விளங்குபவர் சிவபெருமான்.

02. சமம், விசாரம், சந்தோஷம், சாது, சங்கம் ஆகிய நான்கு குணங்களும் தரும் தேவதையின் நான்கு குணங்கள் : அவை கால்களாகும் : அத்தரும தேவதை தூய வெண்மையானது. அத்தரும தேவதையையே வாகனமாகக் கொண்டு அருள் செய்வர்.

03. ஒரு காலத்தில் தர்மதேவதையும் விஷ்ணுவும் வேண்டிக் கொண்டபடியால், அவைகளையே வாகனமாகக் கொண்டார் என்றும் கூறுவர் புண்ணிய வடிவான இடபத்தின் மீமே சிவபெருமான் காட்சி கொடுக்கின்றார் என்பது பிரத்தியட்சம், பொறுமையே எருது என்றுஞ் சொல்வர்.

### மூஷிகம் (பெருச்சாளி, மூங்சுறு, எலி எனப்படும்)

01. இது சிறப்பாக விநாயகருக்குரியது : கயமுக அசுரன் மூஷிகமாய் வர, அருள்செய்து, அவனை அடிமை கொண்டு வாகனமாக்கியது.

02. விநாயகர் ஓங்கார வடிவம் அதனுள் பேரண்டங்கள் அடங்கும் அவைகளை அடக்கியிருக்கும் பெரிய வடிவினை உடையவர். சிறிய மூஞ்சுறுவும் தாங்கக்கூடிய அவ்வளவு சிறிய வடிவினராயும் அமையவல்லவர்.


03. ஆன்மா அளப்பெரிய பெருமையுடையது: அவ்வாறே நுண்மையுடையது: உடல் சிறியதாய் இருந்தாலும், உள்ளிருக்கும் ஆன்மா சிறியதல்ல : யானை உருவான பெரியவடிவத்தையும் அது தாங்க முடியும் : இன்னும் பலவாறும் கூறுவர்.

- தொடரும் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோயிலில் செய்யத்தகாதவைகள் - 2



- ஆடையால் உடம்பை மூடிக்கொண்டு இறைவனை வணங்குதல். இதனால் மூன்று பிறப்பில் ஊமையாகவும் பின் ஏழு பிறப்புக்களில் தரித்திரனாகவும் வாழ்வான் என நூல்கள் கூறுகின்றன.
- ஆசாரமில்லாது நடமாடுதல், விபூதி மற்றும் பிரசாதங்களை கீழே சிந்துதல்.
- ஒரே முறை பிரகாரத்தில் வலம் வருதல்.
- எச்சில் உமிழ்தல், மலசலம் கழித்தல்.
- நித்திரை செய்தல், கால்களை நீட்டிக்கொண்டிருத்தல்.
- மயிர் கோதி முடிதல், சூதாடுதல், தகாத வார்த்தைகள் பேசல்
- பாதரட்சை இட்டுக் கொள்ளுதல், கைதொலைபேசியில் கதைத்தல்.
- வீண்வார்த்தை பேசுதல், பொய்பேசுதல் இரைந்து சிரித்தல்.
- பிறரைத் துன்புறுத்தல், விளையாடுதல்.
- சுவாமிக்கும் பலிபீடத்திற்குமிடையே வணங்குதல்.
- அபிஷேக காலத்திலும், நிவேதன காலத்திலும் வணங்குதல், வலம் வருதல்
- திருவிளக்கு அணையக் கண்டும் தூண்டாதிருத்தல்.
- காம எண்ணங் கொள்ளல், அதன் வழி செல்லல்.
- கம்பளி ஆடை அணிதல் , நவ நாகரீக உடைகளை அணிதல்.
- இறைவனுக்கு நிவேதியாததை உண்ணுதல், தாம்பூலம் தரித்தல், புகைத்தல்
- விக்கிரகத்தைத் தொடுதல் – மலர் சாத்தி பூசித்தல்.
- தூபி, துவஜஸ்தம்பம் (கொடிமரம்), பலிபீடம், இடபம், விக்கிரகம் முதலியவற்றின் நிழலை மிதித்தல்.
- உற்சவம் கொண்டருளும் போது அவ்விடத்தை விட்டு உள்ளே போய் வணங்குதல்.
- வழிபடுவோருக்கு இடையூறு கொடுக்கும் வகையில் நடந்து கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முடி காணிக்கை

நம் புராணங்களில் இறைவனின் அருள் வேண்டி தவம் செய்த சிலர், தங்கள் உடல் உறுப்புகளை வெட்டி சமர்த்து, அதன்பின்பு இறைவனின் அருள் பெற்ற செய்திகளும் உண்டு.

இதே போல் பக்தன் பக்தியின் மேலீட்டால் தன் முடியையும் இறைவனுக்கு வழங்குகிறான்.

இங்கு முடி' என்பதை ஏதோ இழுக்கான சொல்லாக, பொருளாக நினைக்க கூடாது. இங்கு பக்தன் இறைவன் மீது கொண்ட பக்தியை மட்டுமே நாம் காண வேண்டும்.

இறைவனின் அருள் வேண்டியும், நேர்த்திக்கடன் என்னும் முறையிலும், தன் நோயை நீக்கிய, தன் உயிரைக் காத்த இறைவனின் அருளை எண்ணி தன் உயிரையே கொடுக்கும் முறையில் பக்தன் தன் உடம்பின் தலையாய (முக்கியமான) தலைமுடியை இறைவனுக்குச் சமர்ப்பிக்கிறான்.

இதில் 'இறைவனுக்கு அளிப்பதில் அழகை விட இறைவன் அருளே முக்கியம்' என்ற ஐதீகம் அடங்கியுள்ளது.

'என் சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம் என்பது பழமொழி.

நம் தலைக்கு மேல் கம்பீரமாக விளங்குவது முடிதான். எவ்வளவுதான் அழகும், நிறமும் ஒருவனுக்கு இருந்தாலும், அவன் தலை முடியில்லாமல் மொட்டையாக வழுக்கை 'முடி' என்பதைச் சிறப்பிக்கும் வகையில் தான் அரசனின் கிரீடத்தை 'முடி' என்று அழைத்து வந்தார்கள். அரசனுக்குரிய மரியாதை அந்த முடிக்கும் அவனது செங்கோலுக்கும் உண்டு என்பதை நம் இலக்கியங்கள் காட்டுகின்றன.

மலையின் மிக உயர்ந்த சிகரம் 'முடி' எனப்படும். இதிலிருந்து சிறப்புக்குரியது 'முடி' என்பது தெளிவாகும்.

'மொட்டை அடித்தல்' என்பது 'பக்தன் முழுமையாகத் தன்னை இறைவனிடம் கொடுத்தல்' என்ற உட்பொருளைக் கொண்டிருக்கிறது.

எனவேதான் தலைமுடி அனைத்தையும் இறைவனுக்குக் காணிக்கையாக்குவது 'முடி காணிக்கை' எனப்படுகிறது.

இறைவனின் அருள் வேண்டியும், தனக்கோ அல்லது தனக்கு உற்றவருக்கோ நேர்ந்த துன்பத்தி லிருந்து காக்கும்படி இறைவனை வேண்டி வழங்குவது தான் 'நேர்த்திக்கடன்' எனப்படும் முடி காணிக்கையாகும்.

இறைவனுக்கு முடியினைத் தருவதாக மனதால் எண்ணியது 'ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வேண்டுதல் கடன்' ஆகிறது. கடன் என்பது உடனடியாகக் கொடுக்க வேண்டிய ஒன்று என்பதை நினைவூட்டுகிறது.

இறைவனுக்குத் தங்கள் முடியைக்காணிக்கையாதக் கொடுத்து சிகையின் அழகைக் குறைத்து, அதன் மூலம் பக்தர்கள் 'நான்' என்னும் அகந்தையைப் போக்கிக் கொள்கிறார்கள்; போக்கிக்கொள்ள வேண்டும்.

முடி களைந்தால் குளித்த பிறகுதான் வீட்டுக்குள் வரவேண்டும் என்று சொல்வார்கள்; தூய்மைக் குறைவு என்று சொல்வார்கள். ஆனால் இறைவனுக்குக் காணிக்கையாக இவ்வாறு முடி களைவது தூய்மைக் குறைவாகாது என்பார்கள்.

'தங்களிடம் உள்ள தீயவொழுக்கங்களை முழுமையாக நீக்குவதன் அடையாளமாகவே பக்தர்கள் மொட்டை அடித்துக் கொள்கிறார்கள், என்றும் ஒரு கருத்து உண்டு.

முருகப் பெருமான் மாங்கனிக்காகத் தாய் தந்தையரிடம் கோபம் கொண்டு பழநியில் எழுந்தருளினார். அப்போது பெருமான் ஆண்டிக் கோலத்தில் கோவணம் தரித்து மொட்டைத் தலையுடன் காட்சி தந்தார். எனவே அந்தப் பெருமானைப் பின்பற்றி அவரது அருளை வேண்டுபவர்கள் பழனியில் மொட்டை அடித்து முருகப் பெருமானின் திருவருளை வேண்டுகிறார்கள்.



**வேணி தானம்:**

பெண்களுக்கு அழகு தருவது அவர்களது தலைமுடிதான்.

பெண்களின் முடி குழல், தொங்கல், பனிச்சை, சுருள் (குழல், அளகம், பனிச்சை, துஞ்சை) என்று நான்கு வகைப்படும். மயிரை உச்சியில் முடிவதால் முடி எனவும், சுருட்டி முடித்தலால் சூழ் எனவும், மயிரை முடிந்து தொங்கிவிடுவதால் தொங்கல் எனவும், பின்னிவிடுவதால் பனிச்சை எனவும், பின்னே செருகுவதால் சுருள் எனவும் கூறுவார்கள் (பிங்கல நிகண்டு)

பெண்களுக்கு அழகு சேர்க்கும் இந்தக் கூந்தலைப் பொதுவாகப் பெண்கள் கழிப்பதோ, மழிப்பதோ இல்லை. கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகளும் கூடும் அலகாபாத் திருவேணி சங்கமத்தில் மட்டும் பெண்கள் கூந்தலைச் சிறிதவு அளிப்பது சம்பிரதாயமாக இருந்து வருகிறது. இது 'வேணி தானம்' எனப்படும். "இங்கு போடும் கூந்தல் தண்ணீரில் மிதப்பதில்லை; நீரல் அமிழ்ந்துவிடும்" என்கிறார்கள்.

இப்போது திருப்பதி, பழனி போன்ற தலங்களில் பெண்கள் தங்கள் கூந்தலை மழித்தும் சிறிதளவு கழித்தும் வருகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மதமாற்றம்

பலாத்காரத்தினாலோ, பணத்தைக் காட்டியோ பொதுமக்களை இழுக்கும் மதங்களைப் பறறி இங்கே கேள்வியில்லை.

பலவிதமான சமூக சேவைகளை, உதவிகளைச் செய்துவிட்டு, உடனே "ஞானஸ்நானம் செய்து வைக்கிறேன்!" என்று ஒருமதம் இழுத்தால், பாமர மக்கள் அதில் வசியப்பட்டுத்தான் போவார்கள். முக்கியமாகப் பஞ்ச காலத்தில் கிறிஸ்தவ மதம் வளர்ந்தது என்று இதனால்தான் சொல்வதுண்டு.

இப்படியே அடிப்பிடிக் கட்டாயமாக இஸ்லாத்தைப் பரப்பிய போது தன்னிச்சையில்லாமலும் கூட்டம் கூட்டமாகப் பலர் அதில் சேர்ந்ததாகச் சொல்வதுண்டு. இங்கேயும் கூட தத்துவத்திற்காகப் பொதுமக்கள் ஒரு மதத்தில் சேர்ந்துவிடவில்லை என்ற மட்டில் நிரூபணமாகிறது.

-ஸ்ரீ காஞ்சிப்பெரியவர் -

## சிறந்த குரு – சிறந்த சீடன்



குரு புதிதாக எதையும் வரவழைப்பதில்லை. அவர் சீடனின் முன்னேற்றத்துக்குத் தடையாக இருப்பவைகளை நீக்குகிறார். தடைகளை நீக்குவதே அவருடைய அருள். மறைப்பு நீங்கினால் ஆத்மானுபவம் தானே ஏற்படுகிறது.

ஆனால் அதன் முழுப் பயனை சீடன் பெறுவதற்கு, 'தான் வேறு; தனது குருநாதர் வேறு' என்ற மனப்பான்மையைத் துறக்க வேண்டும். அவ்வாறு செய்யக் கூடியவனே சிறந்த சீடனாக உயர்வு பெறுகிறான்.

முதலில் குருநாதன் உடல் அளவால் கொள்ளும் பழக்கங்களைப் பார்த்துச் செல்லும் சீடன், பழகப் பழக, தானும் குருவும் உடலைக் கடந்த ஒரே ஆத்மஸ்வரூபம் என்று உணர்கிறான். அதுவே ஆத்தானுபூதி. இந்த நிலையை அடைந்தவனே உண்மையான, உயர்வு பெற்ற சீடன்.

எவரது முன்னிலையில் பரிபூரண அமைதி நிலவுகிறதோ, அவரே குரு என்று அறிந்து கொள்ள வேண்டும். அவரிடம் பக்தியும் நம்பிக்கையும், கௌரவ புத்தியும் அவரை அணுகுபவர்களுக்கு இயல்பாகவே உண்டாகும்.

'தனக்கு எதுவும் தெரியாது' என்ற பணிவுடன் குருவை எந்தச் சீடன் சரணடைந்து அவரிடம் தன்னை ஒப்படைக்கிறானோ, அவன் நிச்சயமாக நல்ல நிலையை எய்துவான்.

-ரமண மகரிஷி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று குருமார்கள்

ஓர் ஊரில் ஒருவர் இருந்தார்.

அவர் சூபி ஞானி, பெயர் ஹாசன். அவருக்கு மிகவும் வயதாகிவிட்டது. அவருடைய முதுமைக் காலத்தில் அவரிடம் சிலர் வந்தார்கள்.

ஞானியிடம் பேசிக்கொண்டிருந்தபோது அவர்கள், "உங்கள் குரு யார்?" என்று கேட்டார்கள்.

ஞானி நிமிர்ந்து உட்கார்ந்து, "எனக்கு ஆயிரக்கணக்கான குருமார்கள் உண்டு.... அவர்கள் எல்லோரையும் பற்றி நான் சொல்வதென்றால் காலம் போதாது. ஆனால் முக்கியமான மூன்று பேரைப் பற்றி மட்டும் நான் உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார். மேற்கொண்டு அவர் சொல்ல ஆரம்பித்தார்.

அந்த மூன்று பேர்களில் ஒருவன் – ஒரு திருடன்.

நான் ஒரு சமயம் ஒரு பாலைவனம் வழியாகச் சென்று கொண்டிருந்தேன். அப்போது வழி தவறி ஒரு கிராமத்திற்குச் சென்றுவிட்டேன்.

அது இருட்டு நேரம். நடுராத்திரி. ஊரே உறங்கிப் போயிருந்தது.

அந்த நேரத்தில் ஓர் ஆள் மட்டும் ஒரு வீட்டுச் சுவற்றில் ஏதோ செய்து..... உள்ளே நுழைய முயற்சி செய்து கொண்டிருந்தான். நான் அவனிடம் சென்று, "நான் இன்றைக்கு இந்தக் கிராமத்தில் எங்கே தங்க முடியும்?" என்று கேட்டேன்.

அதற்கு அவன், "இந்த ராத்திரி வேளையில் அது மிகவும் சிரமம்... ஒரு திருடனோடு உங்களால் தங்க முடியுமானால் நீங்கள் என்னோடு தங்கலாம்!" என்றான்.

நான் அவனுடன் ஒரு மாதம் தங்கியிருந்தேன்.

ஒவ்வொரு நாள் இரவும் அவன், "இப்போது நான் என்னுடைய



வேலைக்குப் போகிறேன். நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்!" என்று கூறிவிட்டுச் செல்வான்.

அவன் திரும்பி வந்ததும் "இன்றைக்கு உனக்கு ஏதாவது கிடைத்ததா?" என்று கேட்பேன்.

அதற்கு அவன், "இன்றிரவு ஒன்றும் கிடைக்கவில்லை. நாளைக்கு மறுபடியும் முயற்சி செய்வேன்!" என்று சொல்வான்.

அவன் ஒருபோதும் நம்பிக்கை இழந்ததே கிடையாது. எப்போதும் மகிழ்ச்சியாகவே இருந்தான். நானும் நீண்ட காலமாக தியானம் செய்துகொண்டே இருந்தேன்... ஆனால் ஒன்றுமே நடைபெறவில்லை.

–நீதிக்கதை –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் நான் என்ன செய்தேன் தெரியுமா? மனம் வருந்தினேன்... நம்பிக்கை இழந்து விடுவேன். அதுபோன்ற சமயங்களிலெல்லாம் அந்தத் திருடனுடைய விடாமுயற்சிதான் என் நினைவுக்கு வரும்.

என்னுடைய இரண்டாவது குரு–ஒருநாய். ஒரு சமயம் எனக்கு மிகவும் தாகமாக இருந்தது....

ஒரு நதியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தேன்...

அப்போது அங்கு ஒரு நாயும் வந்தது. அதற்கும் தாகம். அது ஓடி வந்து ஆற்றைப் பார்த்தது. நாயின் நிழல் ஆற்றில் தெரிந்தது. அதைப் பார்த்து நாய் பயந்துவிட்டது. அதாவது, அது தன் சொந்த உருவத்தையே கண்டு பயந்தது..... அதைப் பார்த்துக் குரைத்தது... திரும்பி ஓடியது... ஆனாலும் அதற்குத் தாகம் அதிகமாக இருந்ததால் அது மறுபடியும் திரும்பி வந்தது... இப்படி சில தடவை செய்தது... இருந்தாலும் கடைசியில் அது தண்ணீரில் குதித்தது. அப்படி குதித்தவுடனே அதனுடைய உருவம் மறைந்துவிட்டது.

அதைப் பார்த்து நான் என்ன புரிந்துகொண்டேன் தெரியுமா? எவ்வளவு தான் பயம் இருந்தாலும்கூட ஒருவன் தைரியமாகக் காரியத்தில் இறங்க வேண்டும்' என்று புரிந்து கொண்டேன். இந்தப் போதனை எனக்கு அந்த நாயிடமிருந்து கிடைத்தது!

என்னுடைய மூன்றாவது குரு ஒரு சின்னக்குழந்தை நான் ஒரு சமயம் ஒரு நகரத்திற்குச் சென்றேன்.

அங்கு ஒரு குழந்தை எரிந்து கொண்டிருந்த ஒரு மெழுகுவர்த்தியை எடுத்துக்கொண்டு வந்தது.

நான் அந்தக் குழந்தையிடம் வேடிக்கையாக, "பாப்பா! இந்த மெழுகுவர்த்தியை நீயாகவே கொளுத்தினாயா?" என்று கேட்டேன்.

அதற்கு, "ஆமாம்!" எனறு குழந்தை பதில் கூறியது.

"சரி.. இந்த மெழுகுவர்த்தி இதற்கு முன்பு எரியாமல் இருந்தது.... இப்போது எரிகிறது.... இந்த மெழுகுவர்த்திக்கு வெளிச்சம் எங்கிருந்து வந்தது என்று எனக்குக் காட்ட முடியுமா?" என்று வினவினேன். அதற்கு அந்தக் குழந்தை சிரித்தபடியே மெழுகுவர்த்தியை ஊதி அணைத்து விட்டு,"இப்போது இந்த மெழுகுவர்த்தின் வெளிச்சம் போனதைப் பார்த்தீர்கள். அது எங்கே போயிற்று என்று எனக்குச் சொல்லுங்கள்!" என்று என்னிடம் கேட்டது.

அந்தக் குழந்தை அப்படி கேட்டதும், என்னிடமிருந்த ஆணவம் அழிந்து போயிற்று. நான் படித்ததெல்லாம் இந்த விநாடியிலேயே சுக்கு நூறாகி விட்டது... என்னுடைய முட்டாள்தனத்தை நான் உணர்ந்தேன்!

மேற்கூறிய விவரங்களை அந்த ஞானி தன்னிடம் வந்தவர்களுக்கு விளக்கமாகக் கூறினார்.

அதனால் நாம் இன்னாரிடமிருந்து தான் இதைக் கற்றுக்கொள்ள வேண்டும். என்பதில்லை. யாரிடமிருந்தும் வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய எதையும் கற்றுக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆன்மீக வினாவிடை

**கேள்வி:** சிவபெருமானின் அம்மையப்பன் கோலத்தின் சிறப்பு என்ன?

**பதில்:** பக்தர்களுக்கு அருள் புரியும்போதெல்லாம் இறைவன் அம்மையப்பனாகவே வருகிறான். அம்மையப்பன் உருவத்தில் அருள் புரியும் பாங்கு அம்மைக்கே உரியது.

**கேள்வி:** தியானம் பற்றி இரண்டு வரியில்..?

**பதில்:** சூரியன் உதிப்பதால் புறஇருள் நீங்குவது போல, இறைவனைத் தியானிப்பதால் அக இருள் நீங்கும்.

**கேள்வி:** விதியை மதியால் வெல்ல முடியுமா?

**பதில்:** உண்மையைச் சொல்வதென்றால், நாம் பலவாறு முயற்சிகள் செய்தாலும் விதியே வெற்றி பெறுகிறது. இறைவனிடம் உண்மையாகச் சரண் புகுவதன் மூலம் விதியை மாற்றிக்கொள்ள முடியும்.

**கேள்வி:** மற்றவர்கள் துன்பப்படுவதைப் பார்த்து சந்தோஷப்படுபவர்களும் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** மற்றவர் துன்பத்தில் மகிழ்ச்சி கொள்வது ஒரு வினோதமான நோய். இதில் சிக்கிய யாரும் வாழ்ந்ததில்லை. அத்தகையவர்கள் தங்கள் வாழ்க்கையைத் தாங்களே இருளுக்கு இழுத்துச் செல்கிறார்கள்.

அன்பும் அறமும் கொண்டதாக மனித வாழ்க்கை அமைய வேண்டும். துன்பப்படுபவர்களுக்கு உதவும் நல்ல உள்ளங்களை இறைவன் நேசிக்கவும், ஏற்றுக் கொள்ளவும் செய்கிறான்.

**கேள்வி:** "தெய்வங்களின் பெயரால் மிருகங்களைப் பலியிடக்கூடாது" என்று கூறிய முதல் சமயத் தலைவர் யார்?

**பதில்:** "ஆடு, மாடு, குதிரை போன்றவற்றை யாகங்களில் பலியிடுவது தவறு" என்று முதன் முதலில் வாய்விட்டுச் சொல்லி, வெளிப்படையாகக் கண்டித்தவர் புத்தரே ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி:** மனிதன் இறைவனை நினைக்காமல் இருப்பதற்கு காரணம்?

**பதில்:** சிற்றின்ப நாட்டமும் உலகப்பற்றும் மனிதனை இறைவனை மறக்கச் செய்துவிடுகின்றன.

**கேள்வி:** சீவக சிந்தாமணி உலகிற்கு வழங்கும் முக்கிய செய்தி என்ன?

**பதில்:** சிந்தாமணி முழுவதும் 'ஊழ்வினை காரணமாகவே பிறப்பும், இறப்பும் அமைகின்றன என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது



**கேள்வி:** 'விஷ்ணு' என்ற சொல்லுக்கு என்ன அர்த்தம்?

**பதில்:** 'எங்கும் நிறைந்திருப்பவர்' என்பது பொருள்.

**கேள்வி:** 'தாளாண்மை' என்ற சொல்லின் பொருள் என்ன?

**பதில்:** 'முயற்சி உடைமை' என்பது பொருள்

எந்தச் செயலைச் செய்தாலும் அந்தச் செயலில் ஆர்வம், சத்தியம், தர்மம், இறைவன் தொண்டு என்ற எண்ணம் ஆகியவை இருக்க வேண்டும்.

# குழந்தையின் மகிழ்ச்சி

ஒரு வீட்டின் முற்றத்தில் ஒரு குழந்தை விளையாடிக்கொண்டிருந்தது. வெயிலில் தெரிந்த தனது நிழலைப் பிடிக்க அது முயற்சி செய்து பார்த்து தோல்வியடைந்தது.



நிழலைப் பிடிக்க குழந்தை முன்னால் நகரும் போதெல்லாம் நிழலும் விலகிச் சென்றதால், குழந்தை ஏமாற்றமடைந்து அழ ஆரம்பித்தது.

குழந்தையின் அழுகைக்கான காரணத்தை அறிந்த தாய், அதன் வீண் முயற்சியை அதற்கு விளங்கப் வைக்க முடியவில்லை.

**– நீதிக்கதை –**

அந்தச் சமயத்தில் அங்கு ஒரு சாது வந்தார். அவர் குழந்தை அழுவதன் காரணத்தைக் கேட்டறிந்து, "நான் குழந்தையைச் சமாதானப்படுத்துகிறேன்" என்றார். அவர் குழந்தையின் கையை எடுத்து அதன் தலைமீது வைத்தார். உடனே நிழலைப் பிடித்து விட்டதாக நினைத்த குழந்தை மகிழ்ச்சியால் சிரித்தது.

இதைப்போலவே ஒரு குருவின் துணையுடனேயே நாம் அறிவைப் பெற்று அவரின் வழி காட்டுதலுடன்தான் ஆன்மிக லட்சியத்தை அடைய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீகச் சிற்றிதழ் - [illegible]

# சிவனொளி



ஆசிரியர்

திருமலை சுந்தா

10/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோபத்தில் ஆரம்பிக்கும்
எதுவும்
அவமானத்தில் முடிகிறது
- துறவி -**

அட்டைப்படம் : கல்பனா



அன்பு செய்
ஆனந்தித்திரு

# சிவனொளி

172, பிரதான வீதி, திருக்கோணமலை

**சிற்றிதழ் – 11**

**2009 – புரட்டாதி**

**இதழில்....**


- நவராத்திரி
- புரட்டாதி மாதம்
- சரஸ்வதி
- சிவலிங்க பிரதிஷ்டையின் சிறப்பு
- உருத்திராக்கம்
- ஆதிசங்கரரின் வாதம்
- கேட்டவரம்
- அழியாத ஆத்ம வஸ்து


**நற்றுணையாவது
நமசிவாயவே**

## ஆசிரியரின்....

சிவனொளி சிற்றிதழ் - 11 உங்கள் கரங்களில் மலர்ந்துள்ளது. பத்து ரூபாய்க்கு எங்களின் தேடல்கள் உங்களை பிரகாசமாக்கு மென்று திடமாக நம்புகின்றோம்.

'வாசிக்கின்ற பழக்கம் - குறைந்து போகும் இக் காலத்தே 'சிவனொளி' பலரின் பாராட்டுதல் களுடன் தொடர்ந்தும் வெளிவருவதை நினைக்கும் போது நெஞ்சம் இனிக்கின்றது? வாசகர் ஒருவரின் கருத்து நினைவுக்கு வருகின்றது.

நவராத்திரி காலமிது கௌரிநோன்பும் இம்மாதத்தில் தொடங்குகின்றது.

சிவலிங்க பிரதிஷ்டையின் சிறப்பு உருத்திராக்கம், ஆதிசங்கரின் வாதம், -கேட்ட வரம்- அழியாத ஆத்மவஸ்து கட்டுரைகள் பக்கங்களை அலங்கரிக்கின்றன. மறு இதழில் பேசுவோமே.

அச்சு: அஸ்ரா பிரிண்டர்ஸ்
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி

**உலக அன்னையாகிய உமாதேவியை வழிபடும் பண்டிகை நவராத்திரியாகும்.**

இது புரட்டாசி மாதம் பூர்வபக்ஷ பிரதமை திதி முதல் (சுக்லபட்ச முதல் நாள்) ஒன்பது நாட்கள் கொண்டாடப்படும். பத்தாம் நாள் விஜயதசமி – கலைமகள் விழாவாகும்.

## 'ராத்தி'ரியின் சிறப்பு

பகலிலில் செய்யும் பூஜைகள் இறைவனுக்கும், இரவில் செய்யும் பூஜைகள் இறைவிக்கும் உரியவை என்பது பொதுவான வழக்கம்.

ஆனால் நவராத்திரியின் ஒன்பது நாட்களிலும் பகலிலும் இரவிலும் செய்யும் பூஜைகள் தேவிக்கே நடைபெறுகின்றன.

நவராத்திரியின் போது ஹோமங்களைப் பகலிலும், அர்ச்சனையை இரவிலும் செய்வார்கள்.

அமாவாசையன்று பூஜைப் பொருள்களை சேமித்து, உபவாசம் இருந்து பிரதமையன்று காலை விக்னேஸ்வர பூஜையை ஆரம்பிக்க வேண்டும்.

## நவதேவியர்

இந்த ஒன்பது நாட்களிலும் முப்பெரும் தேவியர்களான துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரையும் வழிபடுவார்கள்.

முதல் மூன்று நாட்கள் வெற்றியைத் தர வேண்டி வீரத்திற்கான துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்கள் செல்வத்துக்கு அதிபதி யான லட்சுமியையும், கடைசி மூன்று நாட்கள் கல்விக் கடவுளாகிய சரஸ்வதியையும் வணங்குகிறோம்.

அடுத்த நாள் விஜயதசமி ஆகும். அன்று மாணவர்கள் புத்தகங்கள் அடுக்கியும், தொழிலாளர்கள் தங்கள் தொழிற் கருவிகளை வைத்தும் வழிபடுவார்கள்.

சைலபுத்தரி, பிரம்மச்சாரிணி, சந்திரகாண்டி, கூஷ்மாண்டி, ஸ்கந்தமாதா, காத்யாயினி, கால ராத்திரி, மகாகௌரி, சித்திதா என்று நவ துர்க்கையாக ஒன்பது நாட்களும் நவராத்திரி கொண்டாடப்படுகிறது

ஒன்பது நாட்களும் பூஜிக்க முடியாதவர்கள் அஷ்டமி, நவமி ஆகிய மூன்று தினங்களிலும் பூஜித்தால் ஒன்பது நாட்களிலும் தேவியைப் பூஜித்த பலனை அடையலாம் என்பர்.

## கன்னியர் பூஜை

ஒன்பது நாட்களிலும் ஒன்பது கன்னிரைச் சக்தியாகக் கருதி பூஜிக்க வேண்டும். அந்தக் கன்னியர் 2 வயது முதல் 10 வயதுக்குள் இருக்க வேண்டும்.

முன் காலத்தில் முதல் நாள் 2 வயது குழந்தையில் ஆரம்பித்து வரிசைப்படி 9 நாட்களிலும் பூஜித்து வந்தனர். இவர்களைத் தினம் ஒருவராகவோ அல்லது முதல் நாள் தொடங்கி ஒவ்வொன்று அதிகமாகவும் பூஜிப்பது மிகவும் விசேஷம். அப்போது அவர்களைத் தேவியரின் அம்சமாகவே பாவித்து ஆராதிப்பார்கள். குமாரி, திருர்த்தி, கல்யாணி, ரோகிணி, காலிகா, சண்டிகா, சாம்பவி, துர்க்கை, சுபத்திரை என்ற பெயர்களுடன் கன்னியர்கள் நவராத்திரியின் போது பூஜிக்கப்படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாதம்

## நவராத்திரி விரதம்



புரட்டாதி மாதம் வளர்பிறைப் பிரதமை முதல் நவமி முடியவரும் ஒன்பது நாளும் கும்பத்திலே பூசைசெய்து தேவியை அனுட்டிக்கும் விரதமாம். இதில் வரும் அட்டமிக்கு மகா அட்டமி என்றும் நவமிக்கு மகா நவமி என்றும் பெயர். இதனால் இதை மகா நோன்பு அல்லது மகர் நோன்பு என்று என்று சொல்லிக் கொண்டாடுவர். இது தேவி உபாசகர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் விரதமாகும். இந்த ஒன்பது இரவுகளிலும், முதல் மூன்று நாட்களிலும் வீரத்தை வேண்டித் துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்களிலும் செல்வத்தை வேண்டித் திருமகளையும் இறுதி மூன்று நாட்களும் கல்வியை வேண்டிக் கலைமகளையும் நினைந்து பூசித்து விரதம் அனுட்டிப்பர். நோன்பு நோற்பவர்கள் பிரதமையில் எண்ணெய் முழுக்காடி நோன்பைத் தொடங்க வேண்டும். இவ்விரதம் அனுட்டிப்போர் முதல் எட்டுநாளும் ஒருபொழுது உணவு உட்கொண்டு ஒன்பதாவது நாளான மகாநவமியில் உபவாசம் இருத்தல் உத்தமம். இந்நோன்பு நாட்களில் அபிராமி அந்தாதி, குமரகுருபரரின் சகலகலா வல்லிமாலை போன்ற பாடல்கள் பாராயணம் செய்யத்தக்கன.

## புரட்டாதிச் சனி

பொதுவாகச் சனிக்கிழமை சனீஸ்வர வழிபாட்டிற்கான நாளாக இருந்த போதிலும் புரட்டாதி மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் அனுட்டிக்கப்படும் விரதமும் வழிபாடும் மேலான பலனைத் தர வல்லனவாகையால் இத்தினம் சனீஸ்வர வழிபாட்டிற்குச் சிறப்பான நாளாகும். இத்தினத்தில் கறுப்பு எள் பொட்டளமாக கட்டி மண்சட்டியில் வைத்து நல்லெண்ணெய் விட்டு எரித்து வழிபடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேதார கௌரி விரதம்**

இவ்விரதம் புரட்டாதி மாத வளர்பிறை அட்டமி அல்லது நவமி அல்லது தசமித் திதியில் ஆரம்பமாகி ஐப்பசி மாதத் தேய்பிறை சதுர்த்தசியில் (14ம் நாள்) முடிவுறுகின்றது. இருபத்தொரு நாட்களைக் கொண்ட மஹோன்னத விரதம் இதுவாகும். உமாதேவியார் சிவ பெருமானை நோக்கி சிவபூஜை செய்து அர்த்த நாரீஸ்வரப் பேற்றினைப் பெற்ற விரதமாகையால் இது கேதார கௌரி விரதம் என்று சொல்லப்படுகின்றது. மணமாகிய பெண்கள் தங்கள் மாங்கல்யம் தொடர்ந்தும் மங்கலமாக இருக்க வேண்டும் என்றும், மணமாகாத கன்னிப் பெண்கள் நல்ல மாங்கல்ய வாழ்வை வேண்டியும் இதனை அனுஷ்டிப்பர்.

மங்களகரமான வாழ்க்கையை வேண்டி ஆண்களும் இந்த விரதத்தை அனுட்டிப்பதுண்டு. விரதம் ஆரம்பமான நாளிலிருந்து இருபத்தொரு இழைகளைக் கொண்ட நூலில் நாள்தோறும் ஒவ்வொரு முடிச்சுக்களாக இடப்பட்டு இறுதி நாளன்று அந்த நூலை கோயில் குருக்களைக் கொண்டு ஆண்கள் தமது வலது கையிலும், பெண்கள் தமது இடது கையிலும் அணிந்து கொள்வர்.

**மகாளயம்**

மகாளய பட்சம் புரட்டாதி அமாவாசையன்று முடிவடையும், அதற்கு முந்திய பதினைந்து நாட்களாகும். இது பிதிர்களை நினைத்து அவர்களுக்குச் செய்யப்படும் தானமாகும். பிதிர்களை நினைத்து மாதந்தோறும் தானம் செய்ய முடியாதவர்கள் இந்தக் காலத்தில் தானங்களைச் செய்வதால் பன்னிரண்டு மாதங்களிலும் செய்த பலனைக் கொடுப்பதாகும். மகா + ளயம் – பிதிர்கள் பூமிக்கு வரும் நாள் இதுவாகும்.

**புரட்டாதி பூர்வ பக்க சதுர்த்தசி**
**(புரட்டாதி மாதம் வளர்பிறை 14ம் நாள்)**

நடராஜப் பெருமானின் ஆறு அபிஷேகங்களில் இத்தினத்தில் நடைபெறும் அபிஷேகமும் ஒன்றாகும். இத்தினம் நடேசர் தரிசனத்திற்குச் சிறந்த நாளாகும்.

நன்றி:
**இந்து மக்களுக்கு ஒரு கையேடு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி



ஸ்ரீநாதர் என்பவர் போத்தன்னாவின் உறவினர். அவர் அரசவையில் செல்வாக்குப் பெற்றிருந்தார். அவர் போத்தன்னாவிடம், "நீங்கள் அரசனைக் குறித்து ஒரு பிரபந்தம் பாடி செல்வம் பெற்று, உங்கள் வறுமையைப் போக்கிக் கொள்ளுங்கள்" என்று வேண்டினர்.

ஆனால் போத்தன்னா அரசவைக்கு வரமறுத்தார். எனினும் அவர் தமது வீட்டிற்கு வந்திருந்த ஸ்ரீநாதரையும், அவருடைய பரிவாரங்களையும் விருந்துண்டு செல்லும்படி கேட்டுக் கொண்டார்.

ஆனால் போத்தன்னாவின் வீட்டிலோ வறுமை தாண்டவமாடியது. அவரிடம் விருந்து படைப்பதற்கேற்ற பொருளும் வசதியும் இவ்லை. கலைமகளைப் பூரணமாக நம்பியவர் கைவிடவில்லை!

ஆயகலைகளுக்கு அரசி போத்தன்னா வீட்டின் அடுக்களைக்கு எழுந்தருளினாள்! தானே விருந்துக்குரிய அனைத்தையும் அங்கு வரவழைத்தாள். தான் திரை மறைவில் இருந்து பதார்த்தங்களை ஒவ்வொன்றாகப் போத்தன்னாவின் மனைவியிடம் கொடுத்தாள். அவள் அவற்றை விருந்தினருக்குப் படைத்து மகிழ்ந்தாள். அங்கு அறுசுவை விருந்தை எதிர்பாராத விருந்தினர்கள் பிரமித்துப் போனார்கள்.

விருந்து முடிந்த பிறகு ஸ்ரீநாதர் போத்தன்னாவிடம் விடைபெற்றுப் புறப்படுவதற்குத் தயாரானார். அப்போது மீண்டும் கவிஞரை மன்னனிடம் வருமாறு ஸ்ரீநாதர் அழைத்தார்.

அவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது திரை மறைவில் விக்கி அழும் குரல் கேட்டது. அங்குச் சென்று பார்த்த போத்தன்னா திடுக்கிட்டார்.

சமையல் செய்ய வந்த சரசுவதிதேவி கண்ணீர்விட்டு அழுதுகொண்டிருந்தாள்!

"கவிஞரே! போத்தனா! நீங்கள் ஹீநாதருடன் அரசனிடம் சென்று என்னை விற்கப் போகிறீர்களா?" என்று கலைமகள் கண்ணீர் மல்கக் கேட்டாள்.

"அம்மா! இப்போது இருப்பதைவிட மிகவும் மோசமான வறுமை என்னை வந்தடைந்தாலும் உன்னை ஒரு போதும் விற்கமாட்டேன். இது உறுதி" என்றார் போத்தனா. அப்போதுதான் கலைவாணியின் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

புலமையையும் கலைத்திறமையையும் விலைபேசி விற்கக் கூடாது என்பதை அறிவுறுத்தவே கலைமகள் இந்தத் திருவிளையாடலை நடத்தினாள் என்று சொல்லவும் வேண்டுமோ?

தமிழ்நாட்டில் சரஸ்வதிக்கென்று ஒரு தனிக்கோயில் பேரளத்தை அடுத்த கூத்தனூரில் இருக்கிது. இவளை, 'ஆற்றங்கரைச் சொற்கிழத்தி' என்று ஒட்டக்கூத்தர் போற்றியுள்ளார்.

தமிழ்நாட்டில் சைவ சமய மடங்களைச் சேர்ந்த ஆதீன கர்த்தர்களில் சிலர் 'வித்துவான்' என்ற பட்டத்தை விரும்பிப் போட்டுக் கொள்கிறார்கள்.

அதுபோலவே சந்நியாசிகளில் ஒரு பிரிவினர் 'சரஸ்வதி சுவாமிகள்' என்றும் 'பாரதி சுவாமிகள்' என்றும் பெயர் தாங்குவதைப் பார்க்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவலிங்க பிரதிஷ்டையின் சிறப்பு

சிவபெருமானுக்குத் திருக்கோயில் கட்டுபவன் நூறு தலைமுறையிலுள்ள தன பிதுர்க்களைச் சிவபதவி அடையச் செய்வான். சிவலிங்க பிரதிஷ்டை செய்வித்தவன் சிறந்த முக்தி அடைவான்.

சுருங்கல்லால் சிவாலயம் எடுப்பித்தவன் அந்தக் கற்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் ஆயிரம் ஆண்டுகள் சிவலோகத்தில் வசிப்பான்.

சிவலிங்க பிரதிஷ்டை செய்தவனைப் பார்த்து ஒருவன் தானும் சிவலிங்க பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்ற விருப்பம் கொண்டால், அப்போதே பரம புண்ணியனாகித் தான் செய்த பாவங்களையெல்லாம் ஒழித்து முக்தி அடைவதற்குரிய தகுதியைப் பெற்று விடுவான்.

இரத்தினங்களால் செய்யப்பட்ட சிவலிங்கத்தை வழிபட்டால் லக்ஷ்மி கடாக்ஷம் உண்டாகும்.

உலோகத்தால் செய்யப்பட்ட சிவலிங்கத்தை வழிபட்டால் தர்மங்கள் வந்தடையும்.


பவளத்தால் செய்யப்பட்ட சிவலிங்கத்தைப் பூஜித்தால் நிலையான செவப்பேறு உண்டாகும்.

மண்ணால் செய்யப்பட்ட சிவலிங்கத்தைப் பூஜிப்பவர்கள் விரும்பியதையெல்லாம் பெறுவார்கள். கல்லினால் செய்யப்பட்ட சிவலிங்கத்தை அர்ச்சிப்பவர்கள் நினைத்தற்குரிய சித்திகளை அடைவார்கள்.

நன்றி

– சிவபுராணம் –







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உருத்திராக்க வகைகள்

உருத்திராக்கத்தில் பல வகைகள் உண்டு. அவை பல நிறங்களிலும் அளவுகளிலும் கிடைக்கின்றன. ஒரு முகம் கொண்ட உருத்திராக்கம் முதல் 21 முகங்கள் கொண்டவை வரை பல அளவுகளில் கிடைக்கின்றன. அவை 14 மி.மீ தொடக்கம் 40 மிமீ. வரையான பருமன்களில் கிடைக்கின்றன. அவற்றின் சராசரி பருமன் 20 மி.மீ எனலாம் உருத்திராக்க மணிகளின் நடுவே துவாரம் ஒன்று உள்ளது. அதனுள் பொதிந்துள்ள மென்மையான பஞ்சு போன்ற பொருளைச் சுலபமாக அகற்றிவிட்டு மாலையாகக் கோர்த்துக் கொள்ள முடியும்.

புராணங்களில் ஒன்று முதல் 38 வரையான முகங்கள் கொண்ட உருத்திராக்கம் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருந்தும் 22 முதல் 38 வரையான மணிகள் தற்காலத்தில் கிடைப்பதாகத் தெரியவில்லை 1–14 வரையான முகங்களைக் கொண்ட உருத்திராக்கங்கள் சாதாரணமாக் எங்கும் கிடைக்கக்கூடியவை. இவற்றிற்கு மேலதிகமாக மேலும் சில விசேடமான அரியவகை உருத்திராக்கங்களும் உள்ளன. கௌரிசங்கர், கணேஷ், சவர், திரிஜோதி போன்ற வகைகளும் உள்ளன. உருத்திராக்க மணிகளைச் சர்வ சாமானியமானவை எனக் குறைவாக மதிப்பீடு செய்து விட முடியாது. ஆன்மிகவாதிகளுக்கு அவை மதிப்புமிக்க அரும்பெரும் பொக்கிஷமாகவும், அலங்காரக் பிரியர்களுக்கு விலையுயர்ந்ததும் பெறுமதி மிக்கதுமான பொருளாகவும் திகழ்கின்றன.

அவைகளில் 1 –14 வரையுள்ள முகங்களைக் கொண்டவைகளையும், கணேஷ், கர்ப்பகௌரிசங்கர், கௌரிசங்கர் போன்றவற்றையும் குறைவான விலையில் வாங்க முடியும். அதாவது இலங்கை நாணயத்தில் ரூபா 100 முதல் 20,000 வரை விலை போகின்றது. 15 – 21 முகங்களையுடைய மணிகளும், திரிஜோதி என்ற அபூர்வ வகை மணிகளும் மிகவும் கூடிய விலை கொண்டவையாகக் காணப்படுகின்றன. ரூபா 25,000 தொடக்கம் 400.000 ரூபா வரை ஒரு மணியின் விலை உள்ளதாகத் தெரியவருகின்றது.

ஒவ்வொரு முகத்தின் அமைப்பின் அளவிற்கு ஏற்றவாறு அதே எண்ணிக்கை உடைய விதைகள் அதன் உள்ளே இருக்கும். ஒரு முக உருத்திராக்கத்தின் உள்ளே ஒரேயொரு விதை மட்டும் இருக்கும். அது போலவே பத்து முகத்தினுள்ளே பத்து விதைகள், இருபத்தொரு முகமணியிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்தொரு விதைகள் இருக்கும் ஒவ்வொரு முகமணியும் ஒவ்வொரு தேவதையின் அனுக்கிரகமும், ஒவ்வொரு கிரகத்தின் ஆட்சியின் கீழும் உள்ளனவென்பர்.

| உருத்திராக்க முகம் | அனுக்கிர தேவதை | ஆட்சி புரியும் கிரகம் |
|---|---|---|
| ஒரு முகம் | சிவன் | சூரியன் |
| இரண்டு முகங்கள் | அர்த்த நாரீஸ்வரர் | சந்திரன் |
| மூன்று முகங்கள் | அக்கினி | செவ்வாய் |
| நான்கு முகங்கள் | பிரம்மா | புதன் |
| ஐந்து முகங்கள் | காலாக்கினி உருத்திரன் | வியாழன் |
| ஆறு முகங்கள் | கார்த்திகேயன் | வெள்ளி |
| ஏழு முகங்கள் | மஹாலட்சுமி | சனி |
| எட்டு முகங்கள் | விநாயகர் | ராகு |
| ஒன்பது முகங்கள் | துர்க்கை | கேது |
| பத்து முகங்கள் | மகாவிஷ்ணு | எதுவுமில்லை |
| பதினொரு முகங்கள் | அனுமான் | எதுவுமில்லை |
| பன்னிரண்டு முகங்கள் | சூரிய பகவான் | சூரியன் |
| பதின்மூன்று முகங்கள் | இந்திரன் | வெள்ளி |
| பதினான்கு முகங்கள் | அனுமான் | சனி |
| பதினைந்து முகங்கள் | பசுபதி | எதுவுமில்லை |
| பதினாறு முகங்கள் | சீதாராமன் | எதுவுமில்லை |
| பதினேழு முகங்கள் | விஸ்வகர்மா | எதுவுமில்லை |
| பதினெட்டு முகங்கள் | பூமாதேவி | எதுவுமில்லை |
| பத்தொன்பது முகங்கள் | நாராணயணர் | எதுவுமில்லை |
| இருபது முகங்கள் | விஸ்வசுசாசது நாராயணர் | எதுவுமில்லை |
| இருபத்தொரு முகங்கள் | ஓங்காரம் | எதுவுமில்லை |
| கௌரிசங்கர் | சிவனும் பார்வதியும் | சந்திரன் |
| கணேச உருத்திராக்கம் | விநாயகர் | |
| திரிஜோதி | திரிமூர்த்திகள் | |
| கர்ப்ப கௌரி | பார்வதியும் மகன் விநாயகரும் | |

உருத்திராக்கத்தை இந்துக்கள் மாத்திரமன்றி பௌத்தர்களும் புனிதமான பொருளாக கருதுகின்றனர். கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் கூட உருத்திராக்க மணிகளான செபமாலையைத் தியானத்தின் போதும், நாம உச்சாடனம் செய்யும் போதும் பாவிப்பதைக் காணலாம். மேற்கு நாட்டவர்கள் கூட உருத்திராக்க மணிகளைத் தங்கம், வெள்ளி, பிளாட்டினம் போன்ற உலோகங்களில் பதித்து ஆபரணங்களாக்கி அணிகின்றனர்.

–சித்திதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிசங்கரரின் வாதம்

ஆதி சங்கரர் இந்து மதங்களை ஒருங்கிணைக்க பாரததேசம் முழுவதும் சுற்றி வந்தார். அந்தக் கட்டத்தில் அமரசிம்மன் என்ற ஒரு மகா அறிஞரை சந்திக்க நேரிட்டது. இவர், சமண சமயத்தின் மீது நல்ல ஆழ்ந்த அறிவுபெற்றவர். அதே நேரத்தில் சரஸ்வதிதேவியின் அருளையும் அடைந்தவர். இவர் இந்து தர்மங்களை கண்டிப்பதைக் கண்டு ஆதிசங்கரர், வாதம் செய்தார். இருவருக்கும் வாதம் ஆரம்பமாயிற்று.

அமரசிம்மன் ஆதிசங்கரரிடம் என்னிடம் வாதம் செய்வதாக இருந்தால் இருவருக்கிடையிலும் ஒருதிரை இருக்க வேண்டும். திரைக்கு உப்புறமிருந்து நான் உங்களிடம் வாதம் செய்வேன் என்று கூறினார். ஆதிசங்கரரும் ஒப்புக் கொண்டார்.

அமரசிம்மன், ஒரு குடத்தில் சரஸ்வதிதேவியை, இருக்கச் செய்ய ஆதிசங்கரர் கேட்ட அத்தனை கேள்விகளுக்கும் திரைக்கு அந்தப்பக்க மிருந்து பதில் வந்து கொண்டே இருந்தது. ஞானத்தால் நடந்ததை அறிந்த சங்கரர், சரஸ்வதியைதுதிக்க, திரை அறுந்து விழுந்தது. அமரசிம்மனால் இப்போது பதில் சொல்ல இயல வில்லை.



மனம் வருந்திய அமரசிம்மன் தாம் எழுதிய சமணநூல்களை தீயிலிட்டு கடைசியாக 'அமரகோசம்' என்ற நூலுடன் தீயில் குதிக்கத் தயாரானான். ஆதிசங்கர் அமரசிம்மனை தடுத்து நிறுத்தினார். இப்போதும் அமரசிம்மனின் புகழை 'அமரகோசம்' என்ற அற்புதநூல் பறைசாற்றி வருகிறது.

– காத்யாயினி –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்ட வரம்

- சசிபாரதி -

தேவலோகத்தில் சிவபெருமான் உமையுடன் உலக ஜீவராசிகளின் விண்ணப்பங்களுக்காகத் தம் செவிப்பறைகளைத்தீட்டி வைத்துக் கொண்டிருக்கும் வேளை, மனமுருகி வேண்டுவார்க்கெல்லாம் வேண்டுவன அருளி அல்லல் தீர்த்து ஆனந்தத்தில் மூழ்கும் காலை.

அப்பப்பா, எத்தனை எத்தனை வகை வேண்டுதல்கள்! வேண்டுவார் வேண்டுவதை ஈசனல்லவா இறைவன்? அத்தனை கோடி வேண்டுதல்களையும் இறைவன் மிகமிக நுணுக்கமாக அவதானித்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அந்நேரம்....

பூமியிலிருந்து அம்பெனப்பாய்ந்து வந்த ஒரு குரல் இறைவனின் செவிப்பறைகளைத் துளைத்து, சிந்தையைக் குழப்பி, அவரை வியப்பில் ஆழ்த்தியது.

தேவி தடுமாறினாள்.

அந்த வேண்டுதலை மீண்டும் நிதானமாகக் கவனிக்கின்றனர் சிவனும் உமையும், ஆம், அந்த வேண்டுதல் பூமியிலிருந்துதான் வருகிறது. ஒரு மனிதனின் குரல் அது.

சிவன் தேவியை நோக்கினார்.

தேவியோ நாயகனைப் பார்த்து விழித்தாள்.

வெகு நேரம் இறைவனும் நாயகியும் அப்படி ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர்.

தேவி பதறினாள்.

இறைவன் துடித்தார்.

தன் பக்தனின் குறை உணர்ந்து தீர்க்க முடியாமல் திணறினார் இறைவன், தன் பதியின் கலக்கம் கண்டு தவித்தாள் இறைவி. 'அந்த மனிதன் வேண்டும் பொருளென்ன'


நாம் அதை படைத்தது எப்போ பிரபு - பார்வதி.

பூமியிலிருந்து இன்னமும் அந்தக் குரல் இறைவனின் காதைத் துளைத்துக் கொண்டேயிருக்கிறது.

சர்வேஸ்வரனும் உலகமாதாவும் அந்த மனிதனுக்காக இரங்கி - உருகிக் கொண்டிருக்கின்றனர்.

"தெய்வமே, எனக்கு வேறொன்றும் வேண்டாம் நான் கேட்பதெல்லாம்,

"பணம், பணம், பணம்!"



-குறுங்கதை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியாத ஆத்ம வஸ்து



ஐரோப்பிய சீடர்களுடன் ஒரு முறை எகிப்துக்கு ஆன்மீகப் பயணம் செய்தார். விவேகானந்தர்.

எகிப்தின் தலைநகர் கெய்ரோ வீதியில் தன் சீடர்களுடன் பேசிக்கொண்டே சென்று கொண்டிருந்தார்.

பேச்சின் தாகத்தில் செல்லும் பாதை மறந்து ஒரு இருளான இடத்திற்கு வந்து விட்டார்கள்.

குப்பை, சாக்கடை, துர்நாற்றம் நிறைந்த இடமது ஒரு பாழடைந்த வீடும் இருந்தது.

அரைகுறை ஆடைகளுடன் அழகான பெண்கள் சுவாமிகளின் கண்களை மொய்த்தார்கள்.

பெண்களின் சிரிப்பொலியும், வா, வாவென்ற சிங்கார அழைப்பும் அவர்களை முறைதவறிய பெண்கள் என சுவாமிகளுக்கு உணர்த்தியது.

மேல்நாட்டு சீடர்கள் சுவாமிஜியை வேறு பாதையில் அழைத்துச் செல்ல எத்தனித்தார்கள்.

சுவாமிஜி அந்த நெறிமுறை தவறிய பெண்கள் இருந்த பாழடைந்த வீட்டுப் பக்கம் நடந்தார்.

சுவாமிஜியைக் கண்டதும் கூச்சலும், குழப்பமும் அடங்கி அமைதி நிலவியது.

அந்த பாவப்பட்ட பெண்களுக்காக சுவாமிஜியின் உள்ளம் அழுதது. "**அழியாத ஆத்ம வஸ்து** தாங்கள் என்பதை மறந்து **உடலையே ஆத்மா** என்று நினைத்து விட்டார்கள். அதனால் தான் இந்த இழிந்த நிலை இவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது"

சுவாமிஜி பேச முடியாமல் அழுதார். அவரது கண்ணீர் அந்த பெண்களை திகைக்க வைத்தது.

அவர்களின் கண்களிலும் கண்ணீர் கசியத் தொடங்கியது.

அவர்கள் பேச முடியாமல் சுவாமிஜியை நோக்கி கரங்களை மட்டும் தலைமேல் வைத்து வணங்கத் தொடங்கினார்கள்.

-பானு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீகச் சிற்றிதழ் - (12)

# சிவனொளி



ஆசிரியர்
திருமலை சுந்தா

10/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமை தான்
பெரிய பிரார்த்தனை
- புத்தர் -

அட்டைப்படம் : ஆலன்



அன்பு செய்
ஆனந்தித்திரு

# சிவனொளி

172, பிரதான வீதி, திருக்கோணமலை

சிற்றிதழ் –12
2009 – ஐப்பசி

இதழில்....


- அன்னை விமலாஜியின் நன் முத்துக்கள்
- கிணறு தோண்டும் போது...
- கிழமைகளின் தோற்றம்
- விக்கிரமாதித்தனும் என் முப்பத்திரண்டும்
- உருத்திராக்கம்
- விநாயகர் சதுர்த்தி


நற்றுணையாவது
நமசிவாயவே



## ஆசிரியரின்....

சிவனொளி சிற்றிதழ் - 12 மலர்ந்துள்ளது. "அன்னை விமலாஜியின் நன் முத்துக்கள்" மனதை தனித்துவமான ஆன்ம ஈடேற்றத்திற்கு உங்களை இட்டுச் செல்லும்.

கிணறு தோண்டும்போது - கிழமைகளின் தோற்றம் - இப்படி அறிந்து கொள்ள பல தகவல்கள் தந்துள்ளோம். "உருத்திராக்கம்" பற்றி இந்து மதத்தின் பார்வை என்ன? படியுங்கள்.

விநாயக சதுர்த்தியின் மகிமை பற்றி ஆர்.மகாதேவன் எழுதியுள்ளார்.

நான்.... என்னால்... என்னுடைய என்ற எண்ணங்கள் மறந்து 'நாம்' என்று சிந்திப்போமே!

அடுத்த இதழில் ஆன்மீக சிந்தனையோடு பரிபூரண சுதந்திரம் பெற்ற மனிதராக நாம் வாழ்ந்தால் பேசுவோமே! !

அச்சு: அஸ்ரா பிரின்டர்ஸ்
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்துவமான ஆன்ம ஈடேற்றத்திற்கு வித்திட்ட தத்துவஞானி அன்னை விமலாஜியின் நன்முத்துக்கள்



### 1. உயிருள்ளபோதே இறக்கலாம்

பிறப்பதும், வாழ்வதும், இறப்பதும் பிரிக்க முடியாவண்ணம் பின்னிப் பிணைந்திருக்கின்றன. வாழ்க்கையின் பெரிய அதிசயம் ஒன்று உண்டு. அதுதான் உடலில் உயிர் இருக்கும் பொழுதே "இறக்கப்" பழகுவது. அப்படிப் பழகிக் கொண்டால், பின் நீங்கள் வாழ்க்கையில் ஒரு சுதந்திரப் பறவைதான்! எப்படி இறப்பது? எனக்குள் புதைந்து அடிமனத்தளவில் மண்டியிருக்கும் மனப்புண்களை, வடுக்களை, ஞாபகங்களை ஆறிக் காயவிட்டால் என்ன? வாழ்நாள் முழுவதும் அவற்றைச் சுமக்க வாழ்நாள் முழுவதும் அவற்றைச் சுமக்க வேண்டுமா? தீங்கிழைக்கப்பட்டமை, மனப் புண்கள் ஏற்பட்டமை உண்மைதான். ஆனால் அவை பற்றிய ஞாபகத்தை, எண்ணங்களை மறக்க விடாமல் அசை போடுவது என்மனம் தான்! என் மனமே என்னைத் தாக்குகிறது.

நற்செய்தி என்னவென்றால், ஏற்பட்ட தீங்குகளையும் மனப் புண்களையும் மறக்கவைக்கும் பாரிய சக்தி எனக்குள் இருக்கிறது. அச் சக்தியைத் தூண்டி விட்டால் உயிருள்ளபோதே நாம் "இறக்கலாம்", "சுதந்திரமாக இருக்கலாம்."

### 02. உண்மையாய் வாழ்வது

உண்மையைப் பேசப் பயிலலாம். உண்மையை கடைப்பிடிக்க முயற்சி செய்யலாம். இவற்றை விட மிக அவசியமானது உண்மையாய் வாழ்வதே எனது தினசரி வாழ்க்கையில் உண்மையாய் வாழ்வதே.

பாருங்கள்! ஒன்றைப் பயிலும்போதும், கடைப்பிடிக்கும் போதும் நாம் முயற்சி எடுத்து, உதட்டளவிலும் செயலளவிலும் இயந்திரம் போல் செயல்படுகிறோம்.

ஆனால் உண்மை என்ன என்பதை ஆழ்ந்து உணர்ந்து அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டால் உண்மை தானாகவே உங்களுக்குள் ஒரு மாற்றத்தைக் கொண்டு வரும். சிந்தனை, பேச்சு, செயல் ஆகியவற்றில் ஒரு தெளிவும் உறுதியும் தானாகவே மலரும்"

அதுதான் உண்மையாய் வாழ்வது என்பதன் அர்த்தம்.

## 3. சுதந்திரம்

பந்தம் எமது உள் சுதந்திரத்தைப் பாதிக்கும் சங்கிலிகள். இவற்றுள், எமது நாளாந்த பழக்க வழக்கங்கள் பெரியதொரு பந்தம். இவை எமது உள் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகின்றன. முடக்கி விடுகின்றன.

சுதந்திரம் என்றால் என்ன? உளரீதியாக ஒருவரிலும் சார்ந்து இருக்காமையே சுதந்திரம். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டால் மற்றவரில் சாரும் மனப்பான்மை அகன்று விடும்.

## 4. உன்னையே நீ அறி

என்னைப் பற்றி நான் சகல கோணங்களிலிருந்தும் அறிய முற்பட வேண்டும். சமுதாயத்திற்காக நான் அணியும் வண்ண முகமூடிகளை அகற்றி ஒரு வித ஒளிப்பு மறைப்புமின்றி என்னையே நான் முதன் முறையாகஉண்மையாகப் பார்ப்பது – ஆஹா! அதிலிருக்கும் ஆனந்தம்.

இது ஒரு முழுநேர வேலை. ஒவ்வொரு நிமிடமும் விழிப் புணர்ச்சியுடன் என்னை வைத்திருக்கும் வேலை இது!

எனக்குள் ஒளிந்திருக்கும் ஒருத்தியை/ஒருவனை நான் முதன் முறையாக பார்க்கிறேன்.... அறிகிறேன்.

## 5. துறவறம்

மனதின் அதிகாரத்தை, அதன் அழுங்குப் பிடியை ஏற்காமல் இருப்பதே துறவறம். வீடுகளையும் உடைமை களையும் மனைவியையும் பிள்ளை களையும் மக்களையும் பரிந்து, குகைகளைத் தேடி ஓடுவது துறவறமல்ல.

உலகம் எமக்கு வெளியே இல்லை. நாமே உலகம் நாமே சமுதாயம்.

எனவே உள்முகமாகத் திரும்பி உன்னைப்பார். அதன் பிடியிலிருந்து அதன் அதிகாரத்திலிருந்து விடுபடுவதே துறவறம்.

## 6. இதுவே வாழும் வழி!

வாழ்க்கையில் எதையுமே ஆழ்ந்து உணர்ந்து புரிந்து கொண்டால் காலதாமதம் இன்றி உடனேயே அதனை என் செயலில் பரிணமிக்க விட வேண்டும். உண்மையாக வாழ்வதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்துப் பயந்து, ஒதுங்காமல் நான் செயற்பட வேண்டும். எனது புரிந்துணர்வுக்கும், எனது செயற்பாட்டிற்கும் இடையிலான கால இடைவெளியைச் சுருக்கி ஒன்றைப் புரிந்து கொண்ட உடனேயே நான் செயலில் இறங்கினால், எனக்குள் ஒரு வித விழிப்புணர்வு ஏற்படுவதை உணர்வேன்.

எனவே, யாரையுமே சாராமல், உங்களுக்கு உள்ளேயுள்ள புரிந்துணர்வு என்ற விளக்கைத் தூண்டி அது தரும் ஒளியில் வாழுங்கள்.

### 7. சமூக சேவை

நாம்வெளி உலகில் காணும் சமூக, பண, அரசியல், இனப்பிரச்சினைகள் யாவும், தனிமனிதனுடைய, உள ரீதியான பிழைகளையே பிரதிபலிக்கின்றன.

மற்றவர்களுடன், அன்புடன், சமாதானத்துடன், ஒற்றுமையுடன் வாழ எமக்குத் தெரியாது. இதன் காரணமாகவே நீதி இன்மை, சுயநலம், வலோத்காரம் வெளியலகில் பீறிட்டு வெளிப்படுகின்றன................ எனக்குள் கோபதாபங்கள், எரிச்சல், பொறாமைகள், குரோதங்கள், நெஞ்சக் கொந்தளிப்புகள் புதைந்து இருக்கின்றனவா? அப்படியாயின், உளரீதியாக அவற்றை முழுமையாக, அழித்து, சுத்தமாக்க முடியுமா? உள்ளத்தைப் புனிதமாக்க முடியுமா? முடியும்.

அதுவே சமுதாய சீர்திருத்தத்திற்கு நான் ஆற்றக் கூடிய மிகப் பெரிய சேவையாகும்.

### 8. காதல் கடிதங்கள்

நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் சவால்களும், வாழ்க்கையின் உண்மையான தன்மையை (நிலையை) எமக்கு உணர்த்துகின்றன. சமுத்திரத்தில் ஏற்படும் சிறுஅலைகளோ அல்லது பேரலைகளோ அல்லது புயல்களோ நீரின் உண்மையான தன்மையை எனக்கு உணர்த்துகின்றன. அல்லவா?

அதுபோலவே, வாழ்க்கைச் சமுத்திரத்தின் அலைகள் தான் மனித உறவுகள். ஒவ்வொரு உறவும் ஒரு சவாலை வெளிப்படுத்துகின்றது. நீங்கள் சத்தியத்தைக் கடைப்பிடித்து யாரிலும் சாராமல், சிந்தனைத் தெளிவுடன், சுதந்திரமாகச் செயல்படும்பொழுது, வாழ்க்கையில் பல சவால்கள் ஏற்படவே செய்யும். இந்தச் சவால்களை தெய்வம் எனக்கு அளித்த காதல் கடிதங்கள் என்று நான் ஏற்றுக் கொகள்கிறேன். மன அமைதியுடன், தெளிவான சிந்தனையுடன், உணர்ச்சி வசப்படாமல், இச்சவால்களின் உள் அர்த்தத்தை உணர்ந்து, உறுதியாக மகிழ்ச்சியுடன் செயல்படுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணறு தோண்டும்போது கவனிக்க வேண்டியவை......

புதிய வீடு வாங்கும் போது அல்லது புதிய நிலத்தை வாங்கி அதை தோண்டி நிமித்தம் பார்க்கையில் தென்படும் பொருட்களில் நல்லவற்றை சுப சல்லியம் என்றும் தீயவற்றை அசுப சல்லியம் என்றும் கூறுவார்கள். சில நூல்களில் சில மாறுதல்கள் தென்படுகிறது. சில இடங்களில் கிணறு தோண்டும் போதும் சல்லியம் பார்க்கும் பழக்கம் உண்டு.

எலும்புத் துண்டுகள் தென்பட்டால் வளர்க்கும் மிருகங்களுக்கு வியாதி உண்டாகும்.

மாறு பட்ட உலோகங்கள் தென்பட்டால் வாகனத்தாலோ, கருவிகளாலோ காயம் உண்டாகும்.

மண்டை ஓடு அல்லது ரோமம் தென்பட்டால் மரணத்துக்கு சமமான கண்டம் உண்டாகும்.

அடுப்புக்கரி தென்பட்டால் பொருட்கள் கொள்ளைபோகும்.

பூமியின் கீழ் சாம்பல் அகப்பட்டால் தீயினால் பெரும்பொருள் இழப்பு உண்டாகும்.

சாம்பலுடன் இரும்பும் காணப்பட்டால் சிறைவாச பயம் உண்டாகும்.

தங்கம் வெள்ளி போன்ற உலோகங்கள் மேன்மையைத் தரும்.

நெல்லின் உமி தென்பட்டால் பொருளாதார லாபத்தைத் தரும்.

பாம்பு அல்லது அதற்கு சமமான விஷ ஜந்துக்களின் பற்கள் தென்பட்டால் துன்பங்கள் தொடரும்.

சில நூல்களில் இதற்கு மாறுதலாகவும் சொல்லப்பட்டுள்ளது.

இவற்றை ஜோதிடர்கள் அல்லது வாஸ்து பார்ப்பவர்கள் யூகித்து அறிந்து பலன் சொல்ல வேண்டும். இவை இருக்கக்கூடிய திசையையும், ஜோதிடர் பிரசன்னத்தால் அறிய முடியும். பொதுவாகவே பூமி வாஸ்து சாஸ்திரப்படி சுவாசித்துக் கொண்டே இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளவும்.

அதனால் வசிக்கக்கூடிய பூமியில் சுவாசிக்க தடைபடக்கூடிய பொருட்களை, போடாமல், புதைக்காமல் இருப்பது நன்மை தரக்கூடும் என்று சொல்லப்பட்டுள்ளது. தற்போது மட்காத பேப்பர், பிளாஸ்டிக் போன்றவற்றை பூமிக்குள் புதைப்பதையும் அசுப சல்லியமாக எடுத்துக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே இதுபோன்ற மட்காத பொருட்களை உபயோகிப்பதைக்கூடிய வரை தவிர்ப்பது நன்மை. அந்தக் காலத்தில் பூஜைக்குரிய பாத்திரங்களாக கூட மரம், மண், வெண்கலம், பித்தளை, செம்பு, கூடை, தட்டு கிண்ணம் போன்றவற்றை உபயோகப்படுத்தினார்கள்.

பிளாஸ்டிக் பொருட்களில் பூஜை பொருள் எடுத்து வருவதும், சுவாமி பூஜைக்குரிய பழம், பூ, பிரசாதங்கள் பிளாஸ்டிக் கிண்ணங்களில் வைத்து பூஜிப்பதையும் தவிர்க்கலாம்.

பனை ஓலை, மூங்கில் போன்றவற்றில் வைத்து எடுத்துச் செல்லும் சுவாமி வழிபாட்டுக்குரிய பொருட்கள் உயர்ந்த பலனைத் தரும் என்பதை அறியவும்.

அல்லது, புதிய துணியால் ஆன பை அல்லது நன்கு துவைத்து உலர்ந்த துணிப்பை போன்றவற்றையும் சுவாமி பூஜைக்குரிய பொருட்களை எடுத்துச் செல்ல உபயோகப்படுத்தலாம்.

* * * * * * * * * * * * * * * *

# கிழமைகளின் தோற்றம்

வாரத்துக்கு ஏழு நாட்கள் என்றும், ஏழு நாட்களும் ஏழு பெயர்கள் கொண்ட கிழமையாகவும் அழைக்கப்பட்ட வருகின்றன. இப்போது உள்ளது போல் வாரத்துக்கு ஏழு நாட்கள் என்பது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்காக முன்பு இல்லை. வாரத்தை பற்றிய கணிப்பும் இருக்கவில்லை.

அப்போதெல்லாம் மாதங்கள் தான் நடைமுறையில் இருந்தன. நாட்களை பிரித்தறிய வேறுமுறை இருந்தது. நாகரீகம் வளர, வளர மனிதன் நகரங்களை உருவாக்கினான். சமுதாய வாழ்க்கையை அமைத்துக் கொண்டான். கொடுக்கல், வாங்கல், வாணிபம், சமய சார்பான வழிபாடுகள் இவற்றுக்காக தனித்தனி நாட்களை ஒதுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. சில இடங்களில் பத்து நாட்களுக்கான பணி அட்டவணை தயாரிக்கப்பட்டு குறிப்பிட்ட தினங்களில் அந்தந்த வேலைகளை கவனித்து வந்தார்கள். மற்ற இடங்கிளல் ஏழு அல்லது ஐந்து தினங்களுக்கான அட்டவணையை ஏற்படுத்திக் கொண்டனர். பாபிலோனியாவில் ஏழாவது தினம் சிறப்பு நாளாக கருதப்பட்டது. எகிப்தியர்களும் ஏழுநாள் வாரமுறையை பின்பற்றினர்.

எகிப்தியர் சூரியன், சந்திரன் மற்றும் ஐந்து கிரகங்களின் பெயர்களால் ஏழு கிழமைகளுக்கும் பெயர் வைத்தனர். ஞாயிறு–சூரியனுக்குரிய தினம், திங்கள்–சந்திரனுக்குரிய தினம் செவ்வாய்–மார்ஸ் என்னும் செவ்வாய் கிரகத்திற்கு உரியதினம். புதன்–மெர்குரி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என்னும் புதன் கிரகத்திற்கும் உரியதினம், வியாழன்–ஜூபிடர் என்னும் வியாழன் கிரகத்திற்கு உரிய தினம், வெள்ளி–வீனஸ் என்னும் வெள்ளி கிரகத்திற்கு உரியதினம், சனி–ஸாடர்ன் என்னும் சனி கிரகத்திற்கு உரிய தினம் ஆகும். ரோமானியர்களும் இதே முறையை பின்பற்றினர்.

இப்போதைய வார நாட்கள் ஆங்கிலத்தில் உள்ள சாக்ஸன் என்கிற இனத்தின் முறைப்படி வந்தன. இந்த இன மக்கள் தமது தேவதைகளின் பெயரால் வார தினங்களுக்கு பெயர் சூட்டினர். ஞாயிறு, திங்கள் முதலிய தினங்களை அவர்கள் தங்களின் தேவதைகளான ஸூன்னன் தேக், மோனான் தேக், டிவேஸ் தேக், வோடேன் தேக், தோர் தேக், பரிக் தேக், ஸாடர்ன் தேக் என்ற பெயரில் அழைத்தனர். இதுவே, ஆங்கில கிழமைகளாக லேசான மாற்றத்துடன் பின்பற்றப்பட்டன. ஸூன்னன் தேக்–ஸண்டே, மோனான் தேக்–மன்டே, டிவேஸ் தேக்–டியூஸ்டே, வோடேன் தேகி–வென்னஸ் டே, தோர் தேக்–தேர்ஸ்டே, பரிக் தேக்–பிரை டே, ஸரடர்ன் தேக்–சாட்டர் டே என்று மாறியது.

தமிழில் எகிப்திய முறைப்படி செவ்வாய் முதல் சனி வரையுள்ள கிழமைகள் ஐந்து கிரகங்களின் பெயராலும் ஞாயிறு, திங்கட்கிழமைகள், சூரிய, சந்திரர்களின் பெயராலும் வழங்கப்படுகிறது.

ஒரு காலத்தில் சூரிய உதயம் முதல் அஸ்தமனம் ஆகும் வரையுள்ள காலத்தை ஒரு நாள் என்று கணக்கிட்டனர். ரோமானியர்கள் தான் நள்ளிரவில் இருந்து அடுத்த நள்ளிரவு வரை உள்ள காலத்தை ஒரு நாள் என்றனர். இதே முறைதான் இப்போது உலகம் முழுவதும் பின்பற்றப்படுகிறது.

## விக்கிரமாதித்தனும் எண் முப்பத்திரண்டும்



சிறந்த அறிவாளியாகவும், பக்தனாகவும் இருந்த சகல ஜீவராசிகளின் நயன பாஷைகளையும் அறிந்தவனாய் புகழ் பெற்றிருந்த விக்கிரமாதித்தனுக்கு எண் 32ன் ஆதிக்கம் வலுத்திருந்தது. விக்கிரமாதித்தன்........

32. குணங்களும், லக்ஷணங்களும் பொருந்தியவனாய் இருந்தான்.
32. ஆயுதங்கள் அணிந்தவனாய்
32. விதவிதமான மேள தாளங்களை எப்போதும் முழங்கச் செய்தானாம்.
32. படிகள் கொண்ட இந்திரனால் கொடுக்கப்பட்ட சிம்மாசனத்தில் வீற்றிருந்தான்.
32. பதுமைகள் அதில் இருந்து கதைகள் கூறின.

– எஸ். லீலா –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருத்திராக்கம் 3

கிரக தோஷ நிவர்த்திக்காக நவரத்தினங்களை மாலையாகக் கோர்த்து அணிவர். சிலர் அவற்றை மோதிரங்களிலோ, தோடுகள் தொங்கட்டான்களிலோ, பெண்டன்களிலோ, கைச்சங்கிலிகள் காப்புகளிலோ பதித்து அணிவதும் உண்டு. அப்படியான கிரக தோஷ நீக்கம் செய்வதில் நவரத்தினங்கள் மந்திர, தந்திர சக்திகள் எதிலும் பார்க்க உருத்திராக்க மணிகளில் அதிகூடிய சக்தி பொதிந்துள்ளது என வேதாகமங்கள் கூறுகின்றன.

பலவிதமான







நோய்களைப் போக்கக் கூடிய சக்தி உருத்திராக்கத்தில் உள்ளதாக வேத நூல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் தோன்றுகின்ற மின்காந்த சக்திக்கு நரம்புத்தொகுதியில் ஏற்படுகின்ற மாறுபாடான செயற்பாடுகளை ஒழுங்குபடுத்திச் சமநிலைப்படுத்தும் சக்தி உள்ளதாக ஆயுர்வேத, சித்த வைத்திய வாகடங்களில் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. குருதி ஓட்டம், குருதி அழுத்தம், மன அழுத்தம், மனோ விகாரம், மாறுபாடான சிந்தனை யோட்டம் போன்ற சீரற்ற தன்மைகளை சமச்சீர்படுத்தக்கூடிய தன்மை உருத்திராக்கத்திற்கு உண்டென்று கூறுவர்.

உருத்திராக்க மணிகளை அவித்தெடுத்த நீரைச் சில நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தலாமெனவும், அம்மணிகளை அரைத்தெடுத்த சூரணத்தை சுடுநீரில் கலந்து மருந்தாக அருந்தலாமெனவும், கூறப்படுகின்றது. ஒவ்வொரு முகம் கொண்ட மணிகளும் ஒவ்வொரு வகையான நோய்களைக் குணமாக்குமெனவும் சொல்வர். ஆனால், இதை உள்ளே அருந்துவதனால் நோய்கள் தீர்க்கப்படும் என்னும் வாதம் பூரணமாக நிரூபணம் ஆகாத நிலையில் சர்ச்சைக்குரிய ஒரு விடயமாகவே இன்னும் உள்ளதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

உருத்திராக்க மணிகளை ஆண், பெண் சாதி, சமய, சாகிய பிரதேச வேறுபாடுகளின்றி எவரும் அணியலாம். இருந்தும் எட்டு வயதிற்குக் குறைவான குழந்தைகள் எவ்வகையான உருத்திராக்கத்தை அணிவதையும் இந்து மதம் அங்கீகரிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திராக்கத்தை அணிவதிலும், பாதுகாப்பதிலும் அனுசரிக்க வேண்டிய சில விதிமுறைகளை இந்து மதம் வகுத்துள்ளது. இந்த விதி முறைகளை அனுசரித்து உருத்திராக்கத்தை அணிவதனால் பல நன்மைகளை அனுபவிக்க முடியுமெனவும், கடைப்பிடிக்கத் தவறினால் அனுபவிக்க நேரிடும் எனவும் இந்து மதம் விளக்குகின்றது.

1. உருத்திராக்கத்தைச் சுத்திகரித்து, மந்திர உச்சாடனம் செய்து அதற்கு உருவேற்றிய பின்னர், நெய்த்தீபம், தூபம் காண்பித்துப் பிரார்த்தனை செய்த பின்னர் அணிய வேண்டும். அணிவதற்கு நற்சுசக தினங்களான திங்கள் அல்லது வியாழக்கிழமைகளில் அதை அணிய ஆரம்பிக்க வேண்டும்.

2. அதைக் காலையில் அணிந்தவுடனும், நித்திரைக்குப் போகும் முன்னர் மாலையைக் கழற்றிய பின்னரும் "உருத்திராக்க மந்திரத்தை" 9 முறை உச்சாடனம் செய்ய வேண்டும்.

3. தூக்கத்தின்போது உருத்திராக்கம் அணிந்திருக்கக் கூடாது.

4. உருத்திராக்கத்தைப் பூஜை அறையைத் தவிர வேறு இடங்களில் வைக்கக்கூடாது.

5. மரண வீட்டிற்கோ, பிரசவம் நடைபெற்ற வீட்டிற்கோ உருத்திராக்கம் அணிந்து செல்லக்கூடாது.

6. உயிரற்ற சடலத்தின் மீது உருத்திராக்கம் சார்த்தக்கூடாது.

7. மயான பூமிக்கு எச்சந்தர்ப்பத்திலும் உருத்திராக்கத்தை எடுத்துச் செல்லக்கூடாது.

8. பெண்கள் மாதவிலக்குக் காலங்களில் அணியக்கூடாது.

9. உடலுறவு கொள்கின்ற சமயங்களில் உருத்திராக்கம் அணிந்திருக்கக்கூடாது.

10. சுட்டு விரலாலோ அல்லது சுண்டு விரலாலோ உருத்திராக்கத்தைத் தீண்டக் கூடாது.

11. நீராடித் தூய்மை செய்யப்படுவதற்கு முன்னர் "உருத்திராக்கத்தைத் தீண்டக்கூடாது. மலசலங் கழித்தபின்னர் ஆசன வாயில்களையும் கைகளையும் சுத்தமாகக் கழுவ வேண்டும்.

12. உருத்திராக்கத்தை காலத்திற்குக் காலம் துப்பரவு செய்து தீபம் காட்டிப் பாதுகாக்க வேண்டும்.

13. உருத்திராக்கம் அணிபவர்கள் தாவர போசனம் உண்பவர்களாக இருப்பதுடன் கேடு விளைவிக்கும் மதுபானம், போதைவஸ்துப் போன்றவற்றையும் அருந்தக்கூடாது.

14. உருத்திராக்கம் அணிந்துள்ளவர் எஞ்ஞான்றும் உண்மை பேசுபவராக, நேர்மையானவராக, ஒழுக்க சிலராக வாழ வேண்டும். ஒழுக்கக் குறைபாடுடைய நபர்கள் (உருத்திராக்கப் பூனைகள்) தீப்பயன்களையே சந்திக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரிடும் என்பது உண்மை

15. உருத்திராக்கம் அழற்சியான தன்மை கொண்டது அதன் அழற்சியைத் தாங்க முடியாது சிலருடைய தேகத்தில் ஒவ்வாமையின் அறிகுறிகள் தோன்றக்கூடும். அப்படியான நபர்கள் அதை அணிவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அவர்கள் உருத்திராக்கத்தைப் பூஜை அறையில் வைத்து வணங்கலாம்.

16. உருத்திராக்கம் அணிபவர்கள் தினமும் சிவாலயங்களுக்குச் சென்று வணங்குவதனால் இறையருளும், மன நிறைவும் கைவரப்பெறுவது திண்ணம்.

உருத்திராக்கத்தை முறையாகப் பேணிப்பாதுகாத்தால் நீண்ட காலத்திற்கு பாவிக்க முடியும். பல தலைமுறை களுக்குப் பாவிக்க முடியுமென்றும் கூறப்படுகின்றது. சிலவகை உருத்திராக்க மணிகள் அதிகமாகக் காணப்படுவதால் போலியான மணிகளும் விற்பனைக்கு வந்துள்ளன. விற்பன்னர்களான சில கைவினைஞர்கள் சாதாரண மரத் துண்டங்களில் உருத்திராக்கம் போலவே கடைந்தெடுத்து வர்ணங்கள், சாயங்கள் பூசி நிஜமான உருத்திராக்கமென ஏமாற்றி விற்றுவிடுகின்றனர். உண்மையில் அவற்றால் எதுவித பயனும் கிட்டாது. உருத்திராக்க மணிகளை வாங்கும் பொழுது அவதானமாகப் பரீட்சித்து வாங்க வேண்டும்.

– ஆலன் –

# விநாயக சதுர்த்தியின் மகிமை

விநாயகர் வழிபாட்டிற்கு ஏற்ற நாள் வெள்ளிக்கிழமை. அதிலும் வைகாசித் திங்கள் வளர்பிறையில் வரும் முதல் வெள்ளிக்கிழமையில் தொடங்கி ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் தொடர்ந்து நோன்பு (விரம்) இருப்பது நலம். கிழமைகளில் எப்படி வெள்ளிக்கிழமை முக்கியமானதோ அப்படியே திதிகளுள் சதுர்த்தி திதி விநாயகருக்கு மிகவும் பிடித்தமான நாள்.

மாதந்தோறும் வளர்பிறை நாளில் சதுர்த்தி நோன்பு இருக்கலாம். இதில் முக்கியமானது ஆவணி மாத வளர்பிறை நாளில் வரும் சதுர்த்தி தான் "பிள்ளையார் சதுர்த்தி" ஆகும். இந்த சதுர்த்தி விழா நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. அன்றுதான் விநாயகருக்குச் சிறப்பான வழிபாடுகள், விழாக்கள் எல்லாம் நடைபெறும்.

### பிள்ளையார் சுழி

எதையும் எழுதத் துவங்குவோர் தாம் மேற்கொள்ளும் செயல் செம்மையாக முடிய வேண்டும் என்பதற்குப் பிள்ளையாரின் துணைவேண்டி இச்சுழியினைப் போடுகிறார்கள். பிள்ளையாரின் வடிவம் ஓங்கார வடிவம். அந்த ஓங்கார எழுத்து மருவிப் பிள்ளையார் சுழியாயிற்று என்பார் சிலர். ஒலிவடிவமும், வரிவடிவமும் சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாகிறது. ஒலி வடிவைக் குறிப்பது வட்டம் '0' வரிவடிவைக் குறிப்பது கோடு. இந்த இரண்டும் சேர்ந்துதான் பிள்ளையார் சுழியாயிற்று. ஒலிவடிவம் 'நாதம்' என்றும் வரிவடிவம், 'விந்து' என்றும் சொல்லுவார்கள். உயிரும் உலகமும் உண்டாக இவ்விரண்டும் வேண்டும். இந்த எண்ணங்களெல்லாம் சேர்ந்து உள்ளத்தை அசைக்க உள்ளம் நம்முடைய கையை அசைக்க உருவாவதான் பிள்ளையார் சுழி.

**உருவின் தத்துவம்**

யானைத் தலையும் பெருவயிரும் மனித உடலும் ஐந்து கைகளும் கூடிய ஒரு விந்தையான வடிவம் பிள்ளையார் வடிவம். பிள்ளையாருக்கு இடையில் கீழே மனித உடம்பு. இடைக்கு மேல் கழுத்துவரை தேவ உடம்பு: மேலே விலங்கின் தலை. ஒரு கொம்பு ஆண் தன்மையையும் மற்றொன்று பெண் தன்மையும் குறிக்கும். யானைத் தலை அஃறிணை தெய்வ உடம்பு உயர்திணை. இவற்றை உற்று நோக்கி ஆராய்ந்தால் பிள்ளையார் தேவராய், மனிதராய், விலங்காய், ஆணாய், பெண்ணாய், உயர்திணையாய், அஃறிணையாய் விளங்குகிறார் என்ற உண்மை புலப்படும்.

**ஐந்து திருக்கைகள்**

கும்பம் ஏந்திய கை ஆக்குந் தொழிலையும், மோதகம் ஏந்திய கை காத்தல் தொழிலையும், அங்குசம் ஏந்திய கை அழித்தல் தொழிலையும், பாசம் ஏந்திய கை மறைத்தல் தொழிலையும், தத்தம் ஏந்திய கை அருளல் தொழிலையும் புரிகின்றன. இப்படியாக ஐந்தொழில் புரிந்து உயிர்களுக்கு அருள்புரிகின்றார் விநாயகர் என்பதைக் காட்டவே விநாயகருக்கு ஐந்து திருக்கைகள் அமைந்துள்ளன.

**விநாயகருக்கு பிடித்தமான பண்டங்கள்.**

மோதகம், அப்பம், அவல், பொரி, கடலை, கரும்பு, மா, பலா, வாழைப் பழங்கள், நாவற்பழம், விளாங்கனி, தேங்காய், இளநீர், அவரை, துவரை, சுண்டல், சுழியம், பிட்டு, பொங்கல், எள்ளுருண்டை, வடை, பாயாசம், அப்பளம், தேன், கற்கண்டு, சர்க்கரை, திணைமாவு, பால், பாகு முதலியனவாகும்.

**விநாயகருக்கு படைக்கலன்**

அங்குசம், சக்தி, அப்பு, வில், கேடயம், நாகபாசம், சூலம், மழு, கோடாரி, சங்கம், குந்தாலி.

**விநாயகருக்கு உகந்த இலைகள்**

முல்லை இலை, கரிசலாங்கண்ணி, வில்வஇலை, ஊமத்தை இலை, இலந்தை இலை, வெள்ளறுகம் புல் வேருடன், வன்னி இலை, நாயுருவி இலை, கிண்டங்கத்திரி இலை, அரளி இலை, எருக்கு இலை, மருதை இலை, விஷ்ணு கிரந்தி இலை, மாதுள இலை, தேவதாரு இலை, மருவு இலை, அரசு இலை, ஜாதிமல்லிகை இலை, தாழை இலை, அகத்திக்கீரை முதலியன.

ஆர். மகாதேவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினக்குரல்

## மஞ்சரி



திருமலை சுந்தாவுடன்
ஓர் சந்திப்பு

- ஞாயிறு தினக்குரல் 23 டிசம்பர் 2007 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலை சுந்தாவுடன் ஓர் சந்திப்பு

'எதை எழுத, எதை எழுதாமல் விட.... மனதை அரித்த எழுத்தில் வராத எத்தனையோ கதைகளை நாளாந்தம் பலருக்குச் சொல்லி வருகின்றேன். எழுதுவதை விட இது எனக்கு திருப்தி தருகின்றது. இவ்வாறு கூறுகின்றார் முப்பத்தேழு வருடகாலமாக ஈழத்தமிழ் எழுத்துலகில் பிரகாசித்துவரும் திருமலை சுந்தா.

**'போர்வை இலக்கியம் படைக்க என்னால் முடியாது. அதற்காக அடுப்படி இலக்கியமும் என்னால் முடியாததொன்று. எந்தவொரு பிரச்சனைக்கும் வேலியோரத்து தலையாக நான் இருக்க விரும்பவில்லை. என் உள்ளுணர்வுப் போராளி எனக்கு சம்மதம் தரும் வரை அடக்கியே வாசிக்க வேண்டியவனாக தற்போது இருக்கின்றேன்.**

*"எந்தவொரு பிரச்சனைக்கும் வேலியோரத்து தலையாக நான் இருக்க விரும்பவில்லை*

**கேள்வி: தமிழ் எழுத்துத்துறையில் உங்களின் பிரவேசம் பற்றிக் கூறுவீர்களா?**

பதில்: 1971 இல் எனது இருபதாவது வயதில் 'என்னை அழைக்கின்றாள்' என்ற சிறுகதை மூலம் எழுத்துலகில் காலடி எடுத்து வைத்தேன். 250 சிறுகதைகளுக்கு மேல் எழுதி உள்ளேன். இலங்கையில் வெளிவந்த அனைத்து பத்திரிகைகள், சஞ்சிகைகளின் எனது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.

**கேள்வி : எழுத்துத் துறையில் உங்களுக்கு ஊக்கமளித்த சஞ்சிகைகள் பற்றி கூறுவீர்களா?**

**பதில்:** சுதந்திரன் என்னை நன்கு பயன்படுத்தியது. எழுத்துச் சுதந்திரத்தை எனக்கு அளித்தது. இலக்கிய விமர்சனம், அரசியல் கட்டுரைகள், இன எழுச்சிக்கான கவிதைகள், குறுங்கதைகள், சிறுகதைகள், இதேபோல் சுடர் சஞ்சிகையும் என்னை நன்கு பயன்படுத்தியது. நேர்காணல் கண்டோம். கருத்தறிந்தோம். திருவாளர் பொதுசனம் – புத்தக விமர்சனம் கவிதைகள் என சுடர் சஞ்சிகையில் என்னை சுதந்திரமாக நடமாடவிட்டவர் கோவை மகேசன். பல சிறு கதைகள் பரிசு பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் "அரசமரம்" என்ற கதை கனதியாக பல விமர்சகர்களால் விமர்சிக்கப்பட்டது.

ஆரம்ப காலத்தில் என் எழுத்துக்களுக்கு 'சிரித்திரன்' சஞ்சிகை பிரசுரகளம் அமைத்துத் தந்தது. சிறுகதைகள் பல சிரித்திரனில் வெளிவந்தன. 1977இல் சிரித்திரனில் வெளிவந்த 12 கதைகளைத் தொகுத்து **'வேள்வி' என்ற சிறுகதைத் தொகுப்பினை** சிரித்திரன் பிரசுரமாக வெளியிட்டது. இதுவே எனது முதலாவது நூல். திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் மன்ற வெளியீடான சிவநெறி சஞ்சிகை என்னுடைய பல சிறுகதைகளை 'நெறிக்கதைகள்' என்ற தலைப்பில் வெளியிட்டது. அத்துடன், 'நாளையைத் தேடும் மனிதர்கள்' என்ற எனது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பினையும் அவர்களது புத்தக வெளியீட்டு அமைப்பான அன்பர் நிதியத்தின் மூலம் வெளியிட்டது. கட்டுரைகள், மண்டபவாசல் கேள்வி பதில் பகுதி, நேர்காணல் ஆகிய துறைகளிலும் என் படைப்புகள் சிவநெறி சஞ்சிகையில் இடம் பெற்றன.

கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு வடக்கு கிழக்கு எழுத்தாளர்களுடைய நல்ல தரமான ஆக்கங்களை அச்சிட்டு வெளியிடும் திட்டத்தின் கீழ் மார்கழி 1995இல் எனது பதினெட்டு சிறுகதைகளை தொகுத்து 'விழியோரத்துக் கனவுகள்' என்ற சிறுகதை தொகுதியினை வெளியிட்டது.

வெளியிட்டு விழாவினை பெரு இலக்கிய விழாவாக எடுத்து பத்தாயிரம் ரூபாய் பெறுமதியான நூல்களை தந்து கௌரவித்தது.

**போர்வை இலக்கியம் என்னால் படைக்க முடியாது. அதற்காக அடுப்படி இலக்கியமும் என்னால் முடியாதென்று**

பத்திரிகைகள், சஞ்சிகைகள் எனது கதைகளை விரும்பி பிரசுரம் செய்திருந்தாலும் புத்தக பிரசுர தகுதியினை மாகாண அமைச்சு தந்ததை பெருமையாக நினைக்கின்றேன். இது எனது மூன்றாவது சிறுகதைத் தொகுதி ஆகும்.

'அபியுக்தன்' என்ற சஞ்சிகையில் நிமிடக் கதைகள் பல எழுதியுள்ளேன். அதன் ஆசிரியராக இருந்த எச்.எம்.பி முகைதீன் என்னை நன்கு ஊக்கப்படுத்தி எழுத வைத்தார். ஒரு தொகுப்பு போதும் அளவிற்கு அபியுக்தனில் வெளியான





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிடக்கதைகள் இன்றும் என்னிடம் உள்ளன. தேசாபிமானி மற்றும் குமரன் சஞ்சிகைகளில் எனது கவிதைகள் நிறைய பிரசுரமாகின. மல்லிகை சஞ்சிகையில் என் சிறுகதைகள் பிரசுரமாகின. குங்குமம், பூமாலை, நட்சத்திர மாமா, மதனன், கலாவல்லி, பூரணி ஆகிய சஞ்சிகைகளில் ஏராளமான எனது ஆக்கங்கள் பிரசுரமாகின. வீரகேசரி, தினபதி, ஈழமணி, ஈழநாடு, திசை தினக்குரல், தினமுரசு, சிந்தாமணி, தினகரன் ஆகிய தின மற்றும் வார இதழ்களில் என் சிறுகதைகள், கவிதைகள் நிறைய வெளியாகின. புதுமை நெஞ்சம் மாத சஞ்சிகையின் கலை, இலக்கிய விமர்சனக் குழுவின் அமைப்பாளராக இருந்தேன். இலக்கிய வாழ்க்கையில் எண்ணற்ற கவியரங்குகள், சிறுகதை அரங்குகள், பட்டி மன்றங்கள் ஆகியவற்றில் பங்குபற்றியுள்ளேன்.

**கேள்வி: எழுத வேண்டும் என்ற ஆசை எவ்வாறு உங்களுக்கு ஏற்பட்டது?**

பதில். ஆசை என்று சொல்ல முடியாது. ஒரு உணர்வு என்று சொல்லலாம். என் எதிரே நான் காணும் அவலங்களை எதிர்க்க என்னால் முடியாது என உணரும் போது என்னை எதிர்க்க ஒரு போராளி என்னுள் உருவாகின்றான். அவனே என்னை வதைக்கின்றான். ஆக்கினை பண்ணுகின்றான். அதற்கு நான் என் பேனையினை ஆயுதமாக்கினேன் அந்தப் போராளிகளை சாந்தப்படுத்த அந்த அவலங்களைத் தீர்க்க என் பேனை மை தாளில் ஈரம் காயும் போது அவன் என்னை உருவாக்கி, உருவாக்கியே கொண்டிருந்தான்.

கவிதையோ சிறுகதையோ குறுங்கதையோ எந்த இலக்கிய வடிவமாக இருந்தாலும் அவையெல்லாம் மானுடம் பேசுபவையாக இருக்க வேண்டும். என்பதை மட்டுமல்ல உன்னையே நீயே ஒவ்வொரு நாளும் சுய விமர்சனப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதையும் அவன் உணர்த்தி இருக்கின்றான்.

என் தந்தையை நினைத்துப் பார்க்கின்றேன். தன் வாழ்வில் அவர் பட்ட அவலங்களை கண்ணீரோடு சொல்லும் போது, நான் என்னைச் சுற்றி இருப்பவர்கள் வேதனைகளால் வாடும் போது, என்னால் எப்படி இருந்திருக்க முடியும்? என் பேனா, என் எழுத்து எனக்கு ஆத்ம பலத்தையும்

**ஈழத்து விமர்சகர்களின் பார்வைக்கு எட்டாத எனது கதைகளுக்கு நானே விமர்சன நூலொன்றை எழுத ஆசைப்படுகின்றேன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எனது கதை மாந்தர்கள் நிஜங்கள். இன்றும் என்னுடன் உலா வருபவர்கள். என் கதைகளில் நானும் கதா பாத்திரமாகியுள்ளேன்.**

மனிதனாக வாழ வேண்டிய வழிகளையும் சொல்லி இருக்கின்றதே பொறுமை நேர்மை இவை இரண்டும் இருந்தால் நீ தான் மனிதன் என்பதை என் எழுத்து நாளாந்தம் சொல்லிச் சொல்லி என்னை எழுத வைத்தது. இன்று பத்திரிகைகளுக்கு எழுதுவது இல்லை என்றாலும் கதை சொல்லியாக வாழுகின்றேன். நான் எழுத்தாளனாக சாவேன் என்பதை நினைக்கும் போது நீங்கள் குறிப்பிட்டீர்களே அந்த ஆசை அதுவாகத்தான் இருக்குமோ?

**கேள்வி: நீங்கள் இப்பொழுது எழுதுவது குறைவு. உங்கள் உள்ளுணர்வுப் போராளி என்ன செய்கின்றான்?**

**பதில்:-** நான் பத்திரிகையில் எழுதுவதுதான் குறைவு. காரணம் உடல்நலக்குறைவு மட்டுமல்ல, அந்த உள்ளுணர்வுப் போராளிக்கு உண்மை தெரியும். அவனே என்னை ஆற்றுப்படுத்தி வைத்திருக்கின்றான். எதை எழுத? எதை எழுதாமல் விட? எழுத பல உண்டு. எழுதினால் உண்மையாக எழுத வேண்டும். நேர்மையான எழுத்தாக இருக்க வேண்டும். அப்படி இப்போது எழுத முடியுமா? என்னால் முடியாது. எழுதுபவர் எழுதட்டும் என்னென்னவோ எழுதுகின் றார்கள். பல தடவைகள் படித்தும் பலரிடம் கருத்துக் கேட்டும் மண்டையைச் சொறிய வேண்டியுள்ளது. அவர்களது எழுத்தில் ஏதோ ஒன்று இருக்கின்றது. ஆனால், அதனைப் படிக்கும் வாசகனுக்குப் புரிய வேண்டுமே. அது அவர்களுக்கு மட்டும் தெரிந்தால் போதுமா? மக்களிடம் படித்ததை மக்கள் புரியக் கொடுக்க வேண்டும். அது இல்லாமல் போர்வை இலக்கியம் படைக்க என்னால் முடியாது அதற்காக அடுப்படி இலக்கியமும் என்னால் முடியாததொன்று.

போரியல் தமிழர் வாழ்வு சம்பந்தமான இலக்கிய தரங்கொண்ட தகவல்கள் இதயத்தை அடைத்து நிற்கின்றன. கதை சொல்லியே காலமும் கரைகின்றது. இது எனது இயலாமை என்பது எனக்குத் தெரிந்தாலும் என் உள்ளுணர்வுப் போராளி எனக்கு சம்மதம் தரும்வரை அடக்கியே வாசிக்கவேண்டியவனாக இருக்கின்றேன். இன்று எத்தனையோ இளம் எழுத்தாளர்கள் நன்றாக எழுது கின்றார்கள். அவர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதில் நான் இல்லை என்பது எனக்கு கவலையே.

**கேள்வி: நீங்கள் இன்று இலைமறைகாயாக எழுத்துத் துறையில் இருக்கின்றீர்கள். காரணத்தை அறியலாமா?**

**பதில்:** அப்படிச் சொல்ல முடியாது. என் காலத்தில் என்னோடு எழுதியவர்கள் என்னை நினைவில் வைத்திருப்பார்கள் என்று எனக்கு நம்பிக்கை உண்டு. பொதுவாக மேடை போட்டு, குழுவட்டம் எனது எண்ணக்கருவை, வாழும் மாந்தரை, என்னால் கூற முடிந்த முடிவுகளை ஏற்படுத்த சிறுகதையே எனக்குத் துணையாக நின்றது.

எனது கதை மாந்தர்கள் நிஜங்கள். இன்றும் என்னுடன் உலாவருபவர்கள் என் கதையில் நானே கதா பாத்திரமாகியு முள்ளேன். எந்தவொரு பிரச்சனைக்கும் வேலியோரத்து தலையாக நான் இருந்ததில்லை. பங்காளியாக மாறியே கதை சொன்னேன்.

எனது அனுபவங்கள், இழப்புகள்,

**என் எழுத்து வாழ்வு, மானுடம் - சிவனொளி - சுகமா - சிட்டு - சிற்றிதழ்கள் மூலம் சுகந்தருகின்றது.**

அமைத்து, மாலை மரியாதை விமர்சனம் எழுத வைத்து, இவற்றை விரும்பாதவன் நான்.

எனக்குள்ளே ஒரு வட்டம் போட்டுக் கொண்டு எனது இலக்கியக் களத்தை போக்கை எனக்குள்ளேயே ஆக்கிக் கொண்டதாலும் நான் இலைமறைகாயாக இருப்பதாக தெரியலாம்.

**கேள்வி: தங்களின் ஆரம்ப கால சிறுகதை மற்றும் இலக்கியப் பணி பற்றிக் கூறுவீர்களா?**

**பதில்:-** என்னைப் பொறுத்தவரை சகல துறைகளிலும் கால் பதித்தாலும் என்னை ஆட்கொண்டது சிறுகதை இலக்கியம் தான். வேதனைகள், உணர்வுகள் எல்லாம் வெடித்தெழும் போது என்னால் முடிந்தவொன்று சிறுகதைகள் தான். எனது முதல் சிறுதைத் தொகுதியான 'வேள்வி' சிரித்திரன் பிரசுரமாக வெளிவந்தபோது எழுத்துத்துறையில் கற்றுக்குட்டியாக இருந்தேன். என்னுள் மறைந்திருந்த ஏதோவொன்றை இனங்கண்டு 'வேள்வி' சிறுகதைத் தொகுதியை வெளிக்கொணர வைத்தவர் சிரித்திரன் ஆசிரியர் சுந்தர் ஐயாவும் கே.ஆர்.டேவிட் ஐயாவுமே. இதை என்னால் மறக்க முடியாது. நீர் நல்லா எழுதுகிறீர். எழுது உன்னுள் புதிய சிந்தனைகள் புதைந்திருக்கிறது என வ.அ. இராசரத்தினம் ஐயா அன்றைய வெளியீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாவில் கூறிய வார்த்தைகள் என்னை எழுதத் தூண்டியது. ஒரு கதைக் கருவை வரும் பாத்திரங்களுக்கு ஏற்ப மாற்றியே மாற்றியே கதை எழுதி இருக்கின்றேன். ஒவ்வொரு கதையையும் ஆழமாக விமர்சித்து எழுதப்போனால் அதுவே பெரிய நூலாகிவிடும். எத்தனை வரலாறுகள், சரித்திரங்கள், காலச்சுவடுகள் புதிதாக ஏதும் செய்யாது இதையே செய்தால் நல்லது என எனக்குத் தோன்றுகின்றது. ஈழத்து விமர்சகர்களின் பார்வைக்கு எட்டாத எனது கதைகளுக்கு நானே விமர்சன நூலொன்றை எழுது ஆசைப்படுகின்றேன்.

**கேள்வி: திருகோணமலை எழுத்தாளர்களின் படைப்புகளில் திருகோணமலைக்கென்று ஒரு பேச்சு வழக்கு சரியாக புலப்பட வில்லையே?**

**பதில்:** உண்மைதான். எனது பல கதைகளில் கிண்ணியா, மூதூர் ஆகிய பிரதேச மக்களின் பேச்சு வழக்கையும் நகர சுத்தித் தொழிலாளர்களின் பேச்சு வழக்கையும் பல இடங்களில் பயன்படுத்தி யுள்ளேன். இருந்தாலும் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாதிரி இல்லை. நகரப் பகுதியில் பல ஊர்களைச் சேர்ந்தவர்கள் கலந்து வாழ்வதால் பேச்சு வழக்கு என்பது அழிந்து போனதொன்றே என நினைக்கின்றேன்.

**கேள்வி: திருகோணமலையிலிருந்து வெளிவந்த 'சிவநெறி' சஞ்சிகை யுடனான தொடர்பு பற்றி கூறுவீர்களா?**

பதில்: சிவநெறி சஞ்சிகையை மறக்க முடியாது. சிறுகதைகளை எழுத மென்மேலும் தூண்டிய ஏணி அது. எழுத்துச் சுதந்திரத்தை எனக்குப் பூரணமாகத் தந்தார்கள். சமய சஞ்சிகை என்றாலும் சமயப் போர்வையில் வாழ்வியல் அவலங்களை இன அழிப்பின் வேதனைகளை உணர்வுபூர்வமாக எழுதினேன் போர்வை போர்த்தாலும் போர்வைக்குள் என்னைக் காட்டிக்கொண்டே எழுதினேன். நல்ல வரவேற்பைப் பெற்றன. நான் நெறிக்கதைகளை ஒவ்வொரு இதழிலும் எழுதினேன். ஏனைய அம்சங்களை அதில் எழுதும் பூரண சுதந்திரம் எனக்குத் தரப்பட்டது. சுதந்திர எழுத்தாளனாக சிவநெறியில் உலவினேன் என்றால் மிகையாகாது. சிவநெறி தற்போது வெளிவராது போனாலும் அது செய்த சமய, இலக்கிய பங்களிப்பை எவராலும் குறைத்து மதிப்பிட முடியாது. அதன் ஆசிரியராக இருந்த சி. குருநாதன் திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் மதிப்பார்ந்த பொதுச் செயலாளராக இருந்த செ.சிவபாதசுந்தரம் ஆகியோரின் முயற்சி யால் அம்மா பதிப்பகம் வெளியீடாக அந்த நூல் வெளிவந்தது. கடைசியாக வெளிவந்த சிவநெறி சஞ்சிகையில் ஆசிரியராக பணி யாற்றினேன். அவ்வாய்ப்பு எனது உழைப்பின் உயர்வே என எண்ணுகின்றேன்.



**கேள்வி. தங்களின் அம்மா பதிப்பகத்தின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புத்தக வெளியீடுகள் பற்றிக் கூறுவீர்களா?**

**பதில்:** எனது தாயார் 1999இல் காலமானார். அவருக்கு நினைவுக்கல்வெட்டு வேண்டும் என்று உறவினர்கள் கூறினார்கள். 13 கவிஞர்களைக் கொண்டு அம்மாவின் இழப்புக் குறித்து கவிதைகளை எழுது வித்து வெளியிட்டேன். கவிஞர் தாமரைத் தீவான் தலைமையில் 'அம்மா கவியரங்கம்' நடத்துவித்தேன் அம்மா கவிதைத் தொகுதியாகி விட்டது. இதனைப் படித்தபலர் என்னை வித்தியாசமான கல்வெட்டுகளை எழுத அணுகினார்கள். பிறகென்ன, அம்மா பதிப்பகம் உருவானது. தாமரைத்தீவானின் ஐம்பாலெம்பது, குறளமுதம், சிறுவிருந்து திருமலை சுந்தாவின் சடங்கு நாலையைத் தேடும் மனிதர்கள், நான்...... அவள்....... ச. விஜயநீதனின் 'மெய்வல்லுனர் விளையாட்டு பயிற்சி கோட்பாடு' சிவஸ்ரீ குமார விக்னேஸ்வரக் குருக்களின் 'சிவபேத ரூபங்கள் அம்மா பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டன. இன்னும் சில நூல்கள் வெளியிடப் படவுள்ளன.

**கேள்வி:- தங்களின் தற்போதைய எழுத்து வாழ்க்கை பற்றிக் கூறுவீர்களா?**

**பதில்:** எழுத்து வாழ்க்கை எனக் குறிப்பிட்டீர்கள், உண்மை தான் எழுத்திலும் ஒரு வாழ்வு இருக்கின்றது என்பதை இப்போது உணர்கின்றேன். உடம்பில் தெம்பு இருக்கும்போது உழைப்பு மூலதன மாகின்றது. நோய்கள் வந்து சூழும் போதும் அந்த தெம்பு இல்லாலாத போதும் வாழ்வின் உழைப்புப் பற்றி யோசிக்கும் போது விரக்தி ஒன்றே தோன்றும். அந்த விரக்தியினைப் போக்கி என் எழுத்து வாழ்வு இன்று சுகந்தருகின்றது. ஏன் இதனைக் கூறுகின்றேன் என்பதை நீங்கள் அறிந்தே ஆக வேண்டும். கல்வெட்டு இதழ் தொகுப்பாளனாக என் எழுத்து என்னை மாற்றியுள்ளது. உறவுகளுக்காக இதைச் செய்யப் போய் இதில் ஒரு ஆத்ம திருப்தியும் எனக்குண்டு. அழிந்து போகவிருக்கும் பழைய தமிழ் வடிவங்களை புதிதாக்குகின்றேன். எழுத்திலே இல்லாத சமயச் சடங்குகளுக்கு புத்தக வடிவம் கொடுக்கின்றேன். நோய் சம்பந்தமாக அறிவூட்டும் தகவல்களைத் திரட்டி எழுதுகின்றேன். நான் சுவைத்த பழந்தமிழ் இலக்கியங்களை சிறு சிறு கல்வெட்டு இதழ்களாக்குகின்றேன். எது எது நான் வாழும் சமூகத்திற்குத் தேவையோ அவற்றை யெல்லாம் தேடித்தருகிறேன். இவ்வகையில் 'சடங்கு' எனக்கு திருப்தி தந்த நூலாகும். என் எழுத்து வாழ்வும் மகிழ்ச்சியுடன் கழிகின்றது.

இவ்வாறு கூறும் திருமலை சுந்தா சிறந்த பேச்சாளன். கவிஞன், எழுத்தாளன், புத்தக வெளியீட்டாளன் மற்றும் இந்து ஆலயங்களின் கும்பாபிஷேக மலர்கள், தேர்த்திருவிழா மலர்களின் தொகுப்பா ளனாகவும் விளங்குகின்றார்.

நேர்காணல்: சி. குருநாதன்
படப்பிடிப்பு: தீபன்ராஜா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'திருமலை சுந்தா' எழுதி வெளியிட்ட நூல்கள்





"வேள்வி"
சிறுகதை தொகுப்பு
சிரித்திரன் – பிரசுரம்
25.08.1978





"அம்மா கவிதைகள்"
கவிதை தொகுப்பு
அம்மா பதிப்பகம்
தை 1998



"விழியோரத்து கனவுகள்"
சிறுகதை தொகுப்பு
கல்வி பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு
மார்கழி – 1995



"நாளையைத்தேடும் மனிதர்கள்"
சிறுகதை தொகுப்பு
அம்மா பதிப்பகம்
தை – 1999




"சடங்கு"
கட்டுரைத் தொகுப்பு
அம்மா பதிப்பகம்
21.04.2007



"நான்.....
அவள்....."
குறுங்கதைகள் – 64
அம்மா பதிப்பகம்
11.01.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வுக்குறிப்பு

## "திருமலை சுந்தா"

முழுப்பெயர் : சின்னத்துரை, சுந்தரலிங்கம்

புனைப்பெயர் : "திருமலை சுந்தா"

எழுத்தாக்கங்களுக்கு உபயோகித்த பெயர்கள் : சிசு. இ.சி. சுந்தரலிங்கம், ஜாவிது, ஆலன், இராவணன், நிலாகரன் வள்ளிமைந்தன் பண்டிதர் பரந்தாமன் இன்னும் பல

பெற்றோர்கள் : தகப்பன் : இளையதம்பி சின்னத்துரை

தாய் : சின்னத்துரை வள்ளிநாயகம்

பிறப்பு : இடம் : 11.3.1951 திருக்கோணமலை

சகோதரி : திருமதி பரராஜசிங்கம் தனலட்சுமி (திருக்கோணமலை)

கல்வி : க.பொ.த (உயர்தரம்) அறிவியல், இ.கி.ச. இந்துக்கல்லூரி திருக்கோணமலை.

தொழில் : தகப்பன் வழிவந்த விவசாயம் வியாபாரம்

திருமணம் : 1980 மாசி 9

மனைவி : ஜெயலெட்சுமி .சு

மகள் : பிரியந்தி.தி B.Sc

எழுதத் தொடங்கிய காலம் : 1971 - மித்திரன் 'என்னை அழைக்கின்றாள்' சிறுகதை

சிறுகதைகள் விபரம் : ஈழத்தில் வெளிவந்த அனைத்து பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் 250 சிறுகதைகளுக்கு மேல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் தந்தவர்களும் சஞ்சிகை பத்திரிகைகளும்

- சிரித்திரன் சி. சிவஞானசுந்தரம்
- கோவை மகேசன் (சுதந்திரன்)
- எஸ்.டி. சிவநாயகம் (சிந்தாமணி)
- எச்.எம்.பி. முகைதீன் (அபியுக்தன்)
- ஜீவா நாவுக்கரசன் (பூமாலை)
- சி. குருநாதன் (சிவநெறி)

: சுதந்திரன் சிரித்திரன் சுடர், அபியுக்தன், வீரகேசரி, சிந்தாமணி, தினகரன், சிவநெறி, பூமாலை இன்னும் பல

எழுதி வெளியிட்ட நூல்கள்:

1. 'அம்மா' கவிதைகள் (அம்மா பதிப்பகம்)
2. நாளையைத் தேடும் மனிதர்கள் (அம்மா பதிப்பகம்) சிறுகதைகள் (அன்பர் நிதியம்) இந்து இளைஞர் மன்றம், திருக்கோணமலை.
3. விழியோரத்துக் கனவுகள் சிறுகதைகள் (வடகிழக்கு மாகாணம் கல்விஅமைச்சு)
4. வேள்வி (சிறுகதைத்தொகுதி) (சிரித்திரன் பிரசுரம்)
5. சடங்கு. (கட்டுரைத்தொகுதி) (அம்மா பதிப்பகம்)
6. நான்.....அவன் (குறுங்கதைகள்) (அம்மா பதிப்பகம்)

எழுதி வெளியிடாத நூல்கள்:

1. அலைகடல் ஓயாதோ (நாவல்)
2. யாரோவின் கவிதைகள் (கவிதைத்தொகுதி) (அச்சில்)
3. ஓடிப்போனவன் (நாவல்) (அச்சில்)
4. சிட்டு (கவிதைத்தொகுதி)
5. எழுதப்படாத விமர்சனம் (சுய விமர்சனம்)

ஆசிரியராக இருந்து வெளியிட்ட சஞ்சிகைகள் :

மானுடம், சிவனொளி, சுகமா, சிட்டு, (சிற்றிதழ்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன) சிவநெறி - புதுமைநெஞ்சங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு குறிப்பு : கல்வெட்டு புத்தகங்களின் தொகுப்பாசிரியர்

<u>பரிசு பெற்ற கதைகள்</u>

1. அரசமரம்
2. அந்த நாலுபேர்
3. நாளையைத் தேடும் மனிதர்கள்
4. அவன் பெரியவனாகி விட்டான்
5. அடிநாக்குக்குள் கரித்துண்டுகள்

இன்னும் பல: கும்பாபிஷேகம் தேர் சிறப்பு மலர்களின் தொகுப்பாசிரியர்

வெளியீட்டகம் பதிப்பாளர் : **'அம்மா பதிப்பகம்' மூலம் வெளியிட்ட நூல்கள்**

1. அம்மா கவிதைகள் கவிதை- 'திருமலை சுந்தா'
2. ஐம்பாலைம்பது கவிதை- 'தாமரைத்தீவான்'
3. வள்ளுவர் அந்தாதி - கவிதை- 'தாமரைத்தீவான்'
4. சிறுவிருந்து - கவிதை 'தாமரைத்தீவான்'
5. நாளையைத் தேடும் மனிதர்கள்- சிறுகதைத்தொகுதி - 'திருமலை சுந்தா'
6. சடங்கு - கட்டுரை 'திருமலை சுந்தா'
7. நான் .....அவள்.- (குறுங்கதைகள்) திருமலைசுந்தா
8. மெய்வல்லுனர் - விளையாட்டு பயிற்சி கோட்பாடு விளையாட்டுத்துறை கட்டுரைகள் - ச. விஜயநீதன்
9. 'சிவரூபபேதங்கள்' - ஆன்மீக கட்டுரைகள் சிவஸ்ரீ விக்கினேஸ்வரக் குருக்கள்
10. மானுடம் - 2009 சிற்றிதழ்களின் தொகுப்பு - 'திருமலை சுந்தா'
11. சிவனொளி - 2009 சிற்றிதழ்களின் தொகுப்பு - 'திருமலை சுந்தா'

பதவி : ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேதவிஸ்வநாதசுவாமி சிவன் கோவில் திருக்கோணமலை அறங்காவலர். 'புதுமைநெஞ்சங்கள்' கலை இலக்கிய விமர்சகர் குழு அமைப்பாளர்.

பங்களிப்பு : சமூகம் - கலை இலக்கியம் - அரசியல் ஆன்மீகம் - விளையாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனொளி

2009 சிற்றிதழ்களின்
தொகுப்பு



சிவனொளி
ஆன்மீக சிற்றிதழ்

ஆசிரியர்
திருமலை சுந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org